ஐம்பது ஆண்டு நிறைவுச் சிறப்பு வெளியீடு

# சங்கத்தமிழ்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

1992

060
கொழும்
SL/PR.

ஐம்பது ஆண்டு நிறைவுச் சிறப்பு வெளியீடு

# சங்கத்தமிழ்

*பதிப்பாசிரியர்*

பொதுச் செயலாளர்

கொழும்புத் தமிழ்ச் சங்கம்

1992

முதற் பதிப்பு : 1992

நூல் : சங்கத்தமிழ்

ஆசிரியர் : பொதுச் செயலாளர்

வெளியீடு : கொழும்புத் தமிழ்ச்சங்கம்

பதிப்புரிமை : சங்கத்திற்கு

அச்சகம் : ஸ்ரார்லைன் பிறிண்டேர்ஸ், கொழும்பு 14.

விலை :

*First Edition* : 1992

*Title* : CHANKA THAMIL

*Author* : General Secretary

*Publishers* : Colombo Thamil Sangam

*Copyrights* : Reserved

*Printers* : Starline Printers, 213, Grandpass Road, Colombo 14.

*Price* :

150

மாண்புமிகு அமைச்சர்

# தொண்டமான்

## அவர்களின் வாழ்த்து

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தோன்றிய காலகட்டத்தில், இரண்டொரு ஆண்டுகள் இளையதாகத் தோன்றிய ஒரு ஸ்தாபனம் தான் கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக அது தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் போற்றத்தக்க வகையில் நற்பணி ஆற்றி வந்திருக்கிறது.

கொழும்பில் தமிழ்பேசும் மக்களுக்கான ஒரு பண்பாட்டுக் கல்வி நிலையமாகவும் இது அரசாங்கப் பதிவு பெற்றிருப்பது பாராட்டத்தக்கதாகும். உயர் கல்வி பயிலும் தமிழ் மாணவர்களுக்கு வகுப்புகளை நடாத்திக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் கல்வித் துறையில் நல்ல மதிப்பைப் பெற்றிருக்கிறது.

பெரும் கல்விமானாக விளங்கிய திரு. கே. எஸ். அருள்நந்தி, கொழும்பு வர்த்தகப் பிரமுகரான திரு. கே. மதியாபரணம், அரச நிர்வாகத் துறையில் பெயரும் புகழும் பெற்று விளங்கிய திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை போன்றவர்கள் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் கடந்த காலத் தலைவர்களாக விளங்கினார்கள். இவர்கள் எல்லோரும் என் நண்பர்கள் என்ற வகையில், கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சியை நான் நன்கு அறிந்திருக்கிறேன். பல நிகழ்ச்சிகளில் பங்கு பற்றியிருக்கிறேன்.

கொழும்புத் தமிழ்ச் சங்கம் தனது பொன்விழாவைக் கொண்டாடவிருப்பது எனக்கு மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது.

இச்சங்கம் மேன்மேலும் உயர்ச்சியுற்று, சீரும் சிறப்பும் பெற்று, தமிழ் மொழியையும், தமிழ் இலக்கியங்களையும், தமிழர் தம் பண்பாட்டினையும் வளர்க்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

**சௌமியமூர்த்தி தொண்டமான்**
இ. தொ. கா. தலைவர்,
சுற்றுலாத்துறை, கிராமக் கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர்

கொழும்பு,
*15.03.1993*

# அமைச்சர்கள், அறிஞர்கள் கருத்துரைகள்

சுவாமி விபுலாநந்தர் ஒரு புருஷர். அவரது நூற்றாண்டு விழாவை ஏற்பாடு செய்த கொழும்புத் தமிழ்ச் சங்கம் மிகவும் பாராட்டத்தக்கது. தமிழ்ச் சங்கத்தின் பணிகள் வளர ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றேன்.

சுவாமி ஆத்மகனானந்தா
தலைவர், இராமகிருட்ண மிசன், கொழும்பு 6

24.04.92

கொழும்புத் தமிழ்ச் சங்கம் சிறந்த பணிகள் ஆற்றிவருவது கண்டு மகிழ்ந்தேன். தமிழ்ச் சங்கம் வாழ்க, வளர்க, வெல்க.

இரா. நெடுஞ்செழியன்
நிதி அமைச்சர், தமிழ்நாடு

21.12.81

கொழும்புத் தமிழ்ச் சங்கம் பழமையானது. புதுமைகளைச் செய்து கொண்டிருப்பது. சங்கத்தை ஆரம்பித்த மூத்த தலைமுறையின் தமிழ் உணர்வை நினைக்குந்தோறும் நெஞ்சு பெருமிதம் அடைகின்றது. வரலாற்றில் இடம்பெற்று விட்டது சங்கத்தின் கதை. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் உள்ள அனைவரும் தமிழ் வாழும்வரை நிலைத்து நிற்பார்கள். தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் ஈர்க்கும் வண்ணம் திட்டமிட்டு இச்சங்கம் செயலாற்றி வருகிறது.

செ. இராசதுரை
பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

20.03.1982

கொழும்புத் தமிழ்ச் சங்க நிருவாகத்தினரை வாழ்த்துகின்றேன். இவர்களது தமிழ்த் தொண்டு என்றும் ஓங்குக.

ஏ. ஆர். மன்சூர்
வணிகத்துறை அமைச்சர், கொழும்பு

08.07.92

மிகச் சிறந்த பணி. இளைய சமுதாயத்தினர் விபுலாநந்த அடிகளாரின் பலதுறைப் பெருமைகளை அறிந்து கொள்வதற்குக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் எடுத்த விழா உறு துணையாகும். நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் மாணவ மாணவிகள் விழாவில் பங்குபற்றியது மிக மகிழ்ச்சிக்கு உரியது.

பி. பி. தேவராஜ்
இந்து சமய கலாசார இராசாங்க அமைச்சர், கொழும்பு 2

29.04.82

தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவ வேண்டும் என்ற இலட்சியத்தை நோக்கிப் பணி புரியும் தமிழ்ச் சங்கத்துக்கு எனது பாராட்டு.

மாண்புமிகு எம். எஸ். செல்லச்சாமி
கைத்தொழில் இராசாங்க அமைச்சர்
பொதுச் செயலாளர், இலங்கைத் தொழிலாளர் காங்கிரசு.

27.12.92

யப்பானிய, தமிழ்ப் பழமையான இலக்கியங்களை ஒப்பிட்டு யப்பான் கக்குசுன் பல்கலைக்கழக மொழித்துறை ஆய்வாளர் திருமதி மனோன்மணி சண்முகதாஸ் எழுதிய ''மன்யோசு காதற் காட்சிகள்'' என்னும் நூலை பதிப்பித்துள்ளமையிட்டு எனது பாராட்டுக் களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். தங்கள் விழாச் சிறப்புற நடைபெறவும் ஆய்வு முயற்சி கள் பல புதுப்புது விடயங்களை வெளிக் கொணரவும் எனது நல்லாசிகளைத் தெரிவித் துக் கொள்கின்றேன்.

அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர், பா.உ.
முஸ்லிம் சமய, பண்பாட்டலுவல்கள் இராசாங்க அமைச்சர்

24.11.1992

வைரவிழா காண வாழ்த்து

கொழும்புத் தமிழ்ச் சங்கமும் இந்து கலாசார அமைச்சும் பெரும்பாலும் ஒரே சேவை களையே செய்து வருகின்றன. சேவையாற்றிய காலங்கள்தான் வேறுபடுகின்றன. அமைச்சு இருக்கலாம், இல்லாமலும் போகலாம். ஆனால் 50 ஆண்டுகள் அரும்பணிகள் ஆற்றித் தமிழ் மக்களின் நெஞ்சங்ளெல்லாம் நிறைந்திருக்கும் தமிழ்ச் சங்கத்தின் பணி தொடர்ந்து கொண்டேயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

எமது அமைச்சு பத்து பன்னிரண்டு ஆண்டு காலமே தமிழ்ச் சமய சமூக இலக்கியப் பணிகளில் ஈடுபட்டு வருகிறது. ஐம்பது ஆண்டு கால அனுபவமும் சேவை முதிர்ச்சியும் கொண்ட தமிழ்ச் சங்கம் எமது அமைச்சுச் சேவைகளின் ஒவ்வொரு அங்கங்களிலும் பாரிய பங்கு கொண்டு வருவது பற்றி நாம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம். மிகச் சிறப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் தமிழ்ச் சங்கம் நன்கு தழைத்தோங்கி வைர விழாவையும் காண வேண்டுமென்பதே எனது விருப்பமுமாகும்.

க. தயாபரன்

*29 திசெம்பர், 1992* செயலாளர், இந்துசமய கலாசார இராசாங்க அமைச்சு

9th December, 1985.
Colombo.

*It was a previledge to come to the Colombo Tamil Sangam ceremonies for presentation of books from the Government of Tamil Nadu to the Sangam.*

*I wish the Tamil Ssngam of Colombo all success in its endeavours and well being.*

J. N. Dixit,

*9–12–1985* *High Commissioner for India.*

***It is a wonder how Tamils even in such stress and plight persue their goals in great dedication. I am really very proud to see such an organisation as Tamil Sangam. Therefore I wish this cultural organisation will prosper and rise even more in dynamism in the coming future.***

N. Kygys,
Education Unit,
British High Commission.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் சொற்பொழிவு நடத்தக் கிடைத்தமையைப் பாராட்டு கின்றேன். இச்சங்கத்தின் அபிவிருத்தியை எதிர்பார்ப்பதோடு புத்த பெருமானின் ஆசிகள் உரியன.

வலேபட கஸ்ஸபதேரோ
58, விபுலசேனா மாவத்தை, மருதானை

தமிழ் மொழியைத் தமிழ்ப் பண்பாட்டை எடுத்துக் காட்டும் இலக்கியத்தை வளர்க்கும் சிறந்த பணியில் ஈடுபட்டிருக்கும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் என்றென்றும் வளர்ந்து வாழ்க. நின் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துகின்றேன்.

பேராசிரியர், ம. முஹம்மது உவைஸ்,
**27.11.1992** பாணந்துறை.

# பதிப்புரை

தமிழ் மொழி வளர்ச்சிக்காக இந்நாட்டில் பல துறைகளிற் பணி புரியும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் அனைவரதும் நன்மதிப்பைப் பெற்று விளங்குகிறது. தமிழ்ச் சங்கம் என்னும் அமைப்பு பண்டைத் தமிழர்களின் உயரிய பண்பாடுகளுள் ஒன்றாகும்.

ஆண்டுத் திருநாள்கள், அறிஞர்கள் பிறந்த நாள்கள் ஆகியவற்றை ஆண்டுதோறும் போற்றுதல் போலப் பொது அமைப்புகளின் தொடக்க நாள்களையும் போற்றுதல் மரபாக உள்ளது.

இச்சங்கத்தின் ஐம்பது ஆண்டு நிறைவு போற்றத்தக்க ஒன்று ஆகும். இதற்காக ஆண்டு முழுவதும் அறிஞர்களின் சிறப்புச் சொற்பொழிவுகளும் நாடளாவிய வகையாக இளம் வயதினர்க்கு நாவன்மை, தமிழ்த்திறன், கவிதை, இசை ஆகிய தேர்வுகளும், வளர்ந்தவர்க் காக ஆய்வுக் கட்டுரைத் தேர்வுகளும் நூலாக்கத் தேர்வுகளும் ஒழுங்கு செய்யப்பெற்றன. இத்தேர்வுகள் அனைத்தும் சங்க காலத்தைக் கருவூலமாகக் கொண்டிருந்தன. உயரிய சங்ககால இலக்கியங்களையும் பண்பாடுகளையும் அனைவரும் அறிந்து பயன்பெற வழிப் படுத்தல் இதன் நோக்கம் ஆகும்.

ஐம்பது ஆண்டுப் பணிகளை நிலைபெறச் செய்தற்குச் சிறப்பு வெளியீடு வெளியிடுதல் மரபாக உள்ளது. அறிஞர்களது கட்டுரைகள், கவிதைகள் ஒரு நூலும், ஐம்பதாண்டு நிகழ்வுகள் ஒரு நூலும், நிகழ்ந்த சொற்பொழிவுகள் ஒரு நூலும் ஆக மூன்று சிறப்பு நூல்களை வெளியிட ஆட்சிக்குழு அனுமதித்தது. இவ்வெளியீடுகள் சங்கத்தின் வருங் காலத்தை வளர்ப்பன. முதலில் இச்சிறப்பு நூல் வெளிவந்துள்ளது. இந்நூலில் அறிஞர் களின் கட்டுரைகளும் கவிதைகளும், பரிசில் பெற்ற மாணவர்களின் கட்டுரைகள் கவிதை களும், பரிசில் பெற்ற ஆய்வுக் கட்டுரைகளும், சங்கத்தமிழகத்திற்கும் இலங்கைக்கும் தொடர்பை உணர்த்தும் கட்டுரைகளும், இச்சங்கத்தின் ஐம்பதாண்டு வரலாற்றுப் பணிகள் பற்றிய கட்டுரையும், சங்கத்தின் தொடக்க காலம் பற்றிய அறிக்கைகளும், இச்சங்கத்தின் இன்றைய பணிகள் பற்றிய குறிப்புகளும், பெரியோர்களின் வாழ்த்துரைகளும் இந்நூலில் அமைந்துள்ளவை. இவை அனைத்தும் அரிய கருவூலங்கள் ஆகும்.

மிகச் சிறு கால அளவில் இச்சிறப்பு நூல் உருவானது. சிறந்த கட்டுரைகள், கவிதைகள் வழங்கிய அறிஞர்களுக்கும், உதவி வழங்கிய தலைவர், துணைச் செயலாளர், பொருளாளர் ஆகியவர்களுக்கும், நூலை வெளியிட ஆதரவு வழங்கிய ஆட்சிக் குழுவினர்க்கும், பல்வேறு பணிகளுக்கு மத்தியில் உரிய உதவியைத் தந்து இந்நூலைச் சிறப்புற அமைத்து அச்சிட்டு உதவிய கொழும்பு ஸ்ரார் லைன் அச்சகத்தினருக்கும் உறுதுணையாக உதவிய இறை வனுக்கும் இச்சங்கத்தின் மேலானநன்றியும் பாராட்டுகளும் உரியன ஆகும்.

**தமிழவேள் க. இ. க. கந்தசுவாமி**
பொதுச் செயலாளர்,
கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

*சங்க அகம்,*
*7, 57 ஆம் ஒழுங்கை,*
*கொழும்பு 6,*
***24.03.1993***

## கடவுள் வாழ்த்து

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்

வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல்

இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு

பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் ஒழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்

*(திருக்குறள்)*

## தமிழ்மொழி வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
வாழிய வாழிய வே

வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும்
வண்மொழி வாழிய வே

ஏழ்கடல் வைப்பினும் தண்மனம் வீசி
இசைகொண்டு வாழிய வே

எங்கள் தமிழ்மொழி எங்கள் தமிழ்மொழி
என்றென்றும் வாழிய வே

சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கச்
சுடர்க வையக மே

*(மகாகவி பாரதியார்)*

# பொருளடக்கம்


| | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | (1) | தமிழும் தமிழ்ச் சங்கங்களும் ... ... ... | 03 |
| | (2) | பண்டைத் தமிழ்ச் சங்கங்கள் ... ... ... | 06 |
| 2. | | சிறப்புக் கட்டுரைகள் | |
| | (1) | ''காப்பியர் நூலில் கவின்மிகு சிந்தனைகள்'', செந்தமிழ்ச் செல்வர், ''தமிழ் மாருதம்'' ஆசிரியர், முனைவர் ச. சாம்பசிவனார், மதுரை ... | 08 |
| | (2) | ''சங்க இலக்கியங்களும் மனிதாபிமான சிந்தனைகளும்'', பேராசிரியர் சி. தில்லைநாதன், பேராதனைப் பல்கலைக்கழகம் ... | 13 |
| 3. | | வாழ்த்துப் பாடல்கள் | |
| | (1) | திரு. செ. குணரத்தினம் (தமிழ்த்துறைவன்), தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம் ... ... ... | 19 |
| | (2) | புலவர் வி. விசுவலிங்கம், மட்டக்களப்பு ... ... | 21 |
| 4. | | சிறப்புக் கட்டுரை | |
| | (3) | ''அரிச்சுவடி அமைப்பில் ஆன்மஞான வைப்பு'', கலாநிதி க. செ.நடராசா, கனடா ... ... | 28 |
| 5. | | வாழ்த்துப் பாடல்கள் | |
| | (3) | கவிஞர் ''திமிலை மகாலிங்கம்'', மட்டக்களப்பு ... ... | 28 |
| | (4) | கவிமாமணி க. த. ஞானப்பிரகாசம், நெடுந்தீவு ... ... | 29 |
| | (5) | பண்டிதர் அ. ஆறுமுகம், தலைவர், வட்டுக்கோட்டைத் தமிழ்ச் சங்கம் | 30 |
| | (6) | தமிழ்மணி, புலவர், தொல்புரக்கிழார் நா. சிவபாதசுந்தரனார் ... | 31 |
| | (7) | செல்வன் சந்திரசேகரன் சசிதரன், வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம் ... ... ... ... | 31 |
| 6. | | பரிசில் கட்டுரைகள் | |
| | (1) | செல்வி கே. இரத்தினசோதி, இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு ... | 32 |
| | (2) | செல்வி சர்மின்தாஜ் சனூன், ஸ்ரீசண்முக வித்தியாலயம், திருகோணமலை | 35 |
| | (4) | செல்வி வே. சசிகலா, திம்புள்ள அரசினர் தமிழ் வித்தியாலயம், பத்தனை | 37 |
| | (5) | செல்வன் சந்திரசேகரன் சசிதரன், வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம் ... ... ... ... | 40 |
| 7. | | பரிசில் பெற்ற கவிதைகள் | |
| | (1) | செல்வி வாசுகி குணரத்தினம், கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு | 43 |
| | (2) | செல்வன் ச. மணிமாறன், யாழ் இந்துக் கல்லூரி ... ... | 45 |
| | (3) | செல்வி எம். ஸே. பாத்திமா நஸ்ரின், பாத்திமா மகளிர் தமிழ் மகா வித்தியாலயம், புத்தளம் ... ... ... | 47 |
| 8. | | பரிசில் பெற்ற ஆய்வுக் கட்டுரைகள் | |
| | (1) | 'திருமுறை இலக்கியங்களும் சங்க இலக்கிய மரபுகளும்' செல்வி வயிரமுத்துவிசயலட்சுமி, ஆசிரியை, கார்மேல் பாத்திமாக் கல்லூரி | 50 |
| | (2) | ''மகாகவி பாரதியார் இலக்கியங்களும், சங்க இலக்கிய மரபுகளும்'', திருமதி இராதா ஞானரத்தினம், கார்மேல் பாத்திமாக் கல்லூரி ... | 60 |
| | (3) | 'சங்ககால அகத்திணை புறத்திணை மரபுகளில் உள்ள பண்பாட்டு இயல்புகள்,' திருமதி க. லோகிதராசா, கார்மேல் பாத்திமாக் கல்லூரி ... | 67 |
| 9. | | பண்டைத் தமிழ்ச் சங்கங்களும் இலங்கையும் ... ... | 87 |
| 10. | | கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் வரலாறும் பணிகளும் ... ... | 88 |

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு''

(திருக்குறள்)

# தமிழ் மொழியும் தமிழ்ச் சங்கமும்

உலக மொழிகளுட் தொன்மை—இயற்கையான இலக்கண அமைவு—காலங் கடந்து நிலைத்தல்—இலக்கியவளம்—அறநெறிப்பண்பு ஆகிய சிறப்புகள் பல பெற்று உயர்மொழியாகத் தமிழ்மொழி விளங்குகின்றது. இன்று மக்கள் நாயகத்தின் இயல்புகளுள் ஒன்றாக அமைந்து அரசியல், சமூகம், சமயம், கலை ஆகிய துறைகளிற் பயன் தருகின்றது சங்க அமைப்பு. உலகின் நாகரிக நாடுகள் சங்க அமைப்பை அறிந்து மேற்குறித்த துறைகளிற் பயன்படுத்தற்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் முதன் முதலாக அறிந்து மொழித்துறையில் அதனைப் பயன்படுத்திய பெருமை தமிழ் மொழிக்கே உரியது.

பண்டைய தமிழகச் சங்கம் தமிழ்மொழி வளம் பெற உதவியமையாற் தமிழ்ச் சங்கம் எனவும், சங்கத்தினாற் தமிழ்மொழி வளம் பெற்றதனாற் சங்கத்தமிழ் எனவும், தமிழ்ச் சங்கம் சிறப்பாக விளங்கிய அக்காலம் சங்ககாலம் எனவும் பெயர் பெற்றன. பண்டைக் காலத்திற் தமிழகத்திற் தமிழ்ச்சங்கம் இருந்ததைத் தமிழ் நூல்களும் வடமொழி இதிகாச, புராண நூல்களும், பேரறிஞர்களின் தமிழாய்வு நூல்களும் வலியுறுத்துகின்றன.

சிறப்புமிக்க பண்டைய தமிழ்ச்சங்கம் பற்றித் தமிழ் நூல்களில் விரிவான வரலாற்றுக் குறிப்புகள் இலவாயினும் இறையனார் களவியல் என்னும் தமிழ் நூல் உரையிற் பண்டைத் தமிழ்ச்சங்கங்களின் எண்ணிக்கை, அவை நிலவிய கால அளவு, சங்கங்களில் உறுப்பினராக விளங்கிய முதன்மைப் புலவர், அவைகளின் காவலரான அரசர், சங்க உறுப்பினர் தொகை, சங்கங்களில் நிலவிய நூல்கள் ஆகியவை பற்றி ஓரளவு குறிப்புகள் உள.

தமிழ்நாட்டைப் பண்டைக்காலத்திற் தமிழரசர் ஆண்டனர். அவர்கள் தமிழ்மொழிக்கும் தமிழ்ப் புலவர்க்கும் முதன்மையும் பெருமதிப்பும் கொடுத்துத் தம்மிலும் மேலாகப் போற்றினர். அரசரும் புலவரும் மக்களும் தமிழ்மொழியை உயிரினும் மேலாக மதித்தனர். தமிழரசரைப்போலத் தமிழ் மக்களும் தமிழ்ப் புலவரை மிக மேலாக மதித்தனர். தமிழ்ப் புலவர்கள் தொழில் புரிவகையால் பல்வேறு வகையினராயினும் தமிழ்மொழிப் பற்று தமிழ்ப் புலமை ஆகிய வகையால் உயர்ந்த தன்மையும் மேன்மையும் உள்ளவர். அக்காலத்தில் தமிழ் மொழியும் தமிழ் நாடும் பெருஞ் சிறப்பும் வளமும் வலிமையும் புகழும் பெற்று விளங்கின. சங்ககாலம் தமிழ்மொழியினதும் தமிழகத்தினதும் பொற்காலம்.

பண்டைக்காலத்திற் தமிழ்ச்சங்கங்கள் மூன்று இருந்தன. அவைகளுள் முதற்சங்கமும் இடைச்சங்கமும் முறையே கடல் கொண்ட தென்மதுரையிலும்—கபாடபுரத்திலும், கடைச் சங்கம் இன்றைய மதுரையிலும் இருந்தன. அகத்தியர், தொல்காப்பியர் முதல் நக்கீரர் வரை புலவர்கள் பலர் இச்சங்கங்களின் உறுப்பினர்களாக விளங்கினர். சங்கங்களை நிறுவி அவைகளின் காவலர்களாக விளங்கியவர்கள் அக்காலத்தின் தமிழரசர்களே ஆவர். அரசர்களும் புலவர்களாக விளங்கினர்.

மூன்று சங்கங்களிலும் இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழுக்குமான பல சிறந்த நூல்கள் எழுதப்பெற்றன. அவைகளுட்பல இன்று இல்லை. தொல்காப்பியம், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண் கீழ்க்கணக்கு முதலிய நூல்களும் மறைந்த நூல்களின் சில பாடல்களும் இன்று உள்ளன. சங்கங்கள் மூன்றாக அமைந்ததற்கும் நூல்கள் பல அழிந்தமைக்கும் அக்காலத்து நிகழ்ந்த கடல்கோள்களே காரணம் ஆகும்.

பண்டைத் தமிழ்ச்சங்கங்களுட் கடைச்சங்கம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டொடு முடிவுற்றது. ஆயின் முதற் சங்கத்தின் ஆரம்ப காலம் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் எனச் சிலரும் ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன் எனச் சிலரும் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன் எனச் சிலரும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் எனச் சிலரும் தெரிவித்துள்ளனர். கடைச்சங்கம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டொடு முடிவுற்றதற்குத் தமிழகத்திற்கு வெளியே இருந்த களப்பிரர் என்னும் வேற்றினத்தவர் தமிழக அரசுரிமையைக் கைப்பற்றியமையே காரணம் ஆகும்.

களப்பிரர் என்னும் வேற்றினத்தவர்களின் பின் பல்லவர் என்னும் வேற்றினத்தவர்களும் இவர்களின் பின் தமிழரான சோழ அரசர்களும் இவர்களின் பின் வேற்றினத்தரான விசயநகர நாயக்க அரசர்களும் இவர்களின் பின் ஐரோப்பியரான ஆங்கிலேயர்களும் தமிழகத்தை ஆட்சி புரிந்தனர்.

களப்பிரர் பல்லவர் நாயக்கர் ஆங்கிலேயர் ஆகியவர்கள் தம்மொழியையும் பண்பாடுகளையும் பரப்ப முயன்றனர். தமிழ்மொழிக்கும் தமிழ்ப் புலவர்களுக்கும் முதன்மையும் மதிப்பும் இவர்கள் கொடுத்திலர். இவர்களின் அரசியல் பண்பாட்டுத் தாக்கங்களினால் தமிழகத்தில் அமைதியின்மை நிலவியது. களப்பிரர்—பல்லவர் ஆட்சியில் தமிழகத்திற்கு வெளியே இருந்து சமண, பௌத்த மதங்கள் பரவினமையாற் சமய உணர்வு தமிழகத்தில் முதன்மை பெற்றது. சோழர் பெருங் கோவில்களை அமைத்தல் சமயப் பெரியார்களைப் போற்றுதல் ஆகிய சமயப் பெரும் பணிகளிலேயே ஈடுபட்டனர். மேற்குறித்த காரணங்களால் கி. பி. மூன்றாம் நூற்றாண்டின் பின் தமிழகத்திற் தமிழ்ச்சங்கங்கள் புத்துயிர் பெறவில்லை.

எனினும் குறுநில அரசர்களும் வள்ளல்களும் திருமடங்களும் தமிழ்மொழியையும் தமிழ்ப் புலவர்களையும் மதித்தும் ஆதரித்தும் வளர்த்தனர். கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் வச்சணந்தி என்னும் சமண முனிவர் ஒரு தமிழ்ச்சங்கத்தை நிறுவினார். அரச ஆதரவின்மையாலும் அச்சமயச்சார்பினாலும் இச்சங்கம் நிலைக்கவில்லை.

கி.பி. பதின்மூன்றாம் நூற்றாண்டில் ஈழத்தின் வடபாற் சுதந்திரத் தமிழரசை நிறுவிய யாழ்ப்பாண அரசர்கள் சமயப் பற்றுள்ளவராயினும் தமிழ்ப்பற்றும் உள்ளவர்கள். ஆதலின் அவர்கள் தமிழ்ச்சங்கம் ஒன்றை நல்லூரில் நிறுவித் தமிழ் வளர்த்தனர். அரச குடும்பத்தினரும் இச்சங்கத்திற் புலவர்களாக இருந்தனர். இரகுவமிசம் பரராசசேகரம் செகராசசேகரம் கைலாயமாலை போன்ற தமிழ் நூல்கள் இக்காலத்தில் எழுதப்பெற்றன. போர்த்துக்கேய இனத்தினர் நாட்டைக் கைப்பற்றும் வரை இச்சங்கம் நிலைத்திருந்தது. இது நாலாம் தமிழ்ச்சங்கம் ஆகும்.

கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையும் இந்தியாவும் ஆங்கிலேயர் ஆட்சிக்கு உள்ளாயின. ஆங்கில ஆட்சி சமய சமூக சுதந்திரங்களையும் சிறந்த கல்வி முறைகளையும் வழங்கினர். இவைகளாற் தமிழ்மொழி—சமயம்—பண்பாடு ஆகியவைகளை வளர்க்கும் பற்றும் ஆர்வமும் ஏற்பட்டன. ஆகவே யாழ்ப்பாணத்தில் சமயத்திற்கு எழுச்சியூட்டிய நாவலர் அவர்களின் தமையனார் மகன் கைலாயபிள்ளை அவர்களின் தலைமையில் கி.பி. 1898 ஆம் ஆண்டிலும், பாலவனத்தம் சமீன்தார் பொன்னுச்சாமித்தேவர் தலைமையில்

மதுரையில் 1902 ஆம் ஆண்டிலும் தமிழ்ச்சங்கங்கள் ஆரம்பமாயின. தமிழ்ப் பேரறிஞர்கள் இச்சங்கங்களில் அங்கம் வகித்தனர். தமிழ்ப்புலமை வகுப்புகளை நடத்திச் சான்றிதழ் வழங்குதல் தமிழ்ச் சஞ்சிகை நடத்துதல் தமிழ் ஆய்வு செய்து அவைகளை வெளியிடல் என்பன போன்ற பணிகள் மூலம் தமிழை வளர்த்தன.

இலங்கைத் தமிழறிஞர்கள் இலங்கை அரசின் ஆதரவோடு 1921 ஆம் ஆண்டில் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தை நிறுவித் தமிழ்ப் புலமைத் தேர்வுகளை நடத்தித் தமிழ் வளர்ச்சிக்கு எழுச்சி ஊட்டினர். யாழ்ப்பாணத் தமிழ்ச்சங்கம் நீடித்து நிலைக்கவில்லை. ஆனால் ஆரிய பாஷா விருத்திச் சங்கம் தன் பணியைத் தொடர்ந்து செய்து வருகிறது.

மதுரைத் தமிழ்ச்சங்கத்தைத் தொடர்ந்து தமிழ் நாட்டிற் கரந்தை, கோயமுத்தூர் ஆகிய நகரங்களிற் தமிழறிஞர்கள் தமிழ்ச்சங்கங்களை அமைத்துப் தமிழ்ப் பணிகளில் ஈடுபட்டனர். ஆங்கில ஆட்சியில் வாழ்க்கை வாய்ப்புகள் அதிகரித்தமையாலும் ஆங்கில ஆட்சி உலகிற் பல பகுதிகளிற் பரந்திருந்ததனாலும் தமிழ் நாட்டவர்களும் இலங்கையர்களும் தமிழ் நாட்டிற்கு அப்பால் இந்திய மாநிலங்களிலும் கடல் கடந்த பல நாடுகளிலும் அரச சேவை வணிகம் ஆகியவைகளுக்காகச் சென்று வாழ்ந்தனர். அவ்வாறு சென்றவர்களுட் தமிழ்ப் பற்றும் ஆர்வமும் உள்ளவர்களின் உழைப்பினாற் பம்பாய், டெல்லி, கல்கத்தா ஆகிய இந்திய மாநகரங்களிலும் இலண்டன், நியூயோர்க், சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, பிசி, மொறிசியசு ஆகிய கடல் கடந்த இடங்களிலும் தமிழ்ச்சங்கங்கள் அமைக்கப் பெற்றுள்ளன.

—"தமிழவேள்"—

---

கொழும்புத் தமிழ்ச் சங்கம் பல ஆண்டுகளாகத் தமிழ்ப்பணி புரிந்து வருவதை நானறிவேன். மொழிப்பற்றுள்ள நன்மக்கள் பலர் முன்னின்று இச்சங்கத்தை நடத்துகின்றனர். இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவர்க்கும் இச்சங்கம் மொழிப்பற்றை ஊட்டி வருகின்றது. பெரிதும் பாராட்டுதலுக்கு உரியது. இச்சங்கம் மேன்மேலும் வளர்ந்து அருந் தொண்டுகளைச் செய்து சிறப்படைய வேண்டுமென முழுமனதோடு வேண்டுகிறேன்.

திருச்சி 8
17.11.1968

கி. ஆ. பெ. விசுவநாதம்

கொழும்புத் தமிழ்ச்சங்கத்தில் இன்று இலக்கியம் பற்றிப் பேச வாய்ப்புப் பெற்றேன். மிக்க மகிழ்ச்சி. அழகிய இலங்கைத் தீவில் இனியமொழியான தமிழை வளர்க்கக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஆற்றிவரும் பணியை நானறிவேன். சங்கத்திற்கு எனது பாராட்டு.

சென்னை
15.04.69

ம. பொ. சிவஞானம்

---

# பண்டைத் தமிழ்ச் சங்கங்கள்

**"இறையனார் அகப்பொருள்'**
*உரை ஆசிரியர்*

''*தலைச்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம்*'' என் மூன்று சங்கம் இரீஇயினார் பாண்டியர்.

அவருள் தலைச்சங்கம் இருந்தார் அகத்தியனாரும் திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளும் குன்றமெறிந்த முருகவேளும் முரஞ்சியூர் முடிநாகராயரும் நிதியின் கிழவனும் என இத் தொடக்கத்தார் ஐந்நூற்று நாற்பத்தொன்பதின்மர். அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினார் என்பர். அவர்களாற் பாடப்பட்டன எத்தனையோ பரிபாடலும் முதுநாரையும் முதுகுருகும் களரியாவிரையும் என இத்தொடக்கத்தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பத்தியாண்டு சங்கம் இருந்தார் என்பது. அவர்களைச் சங்கம் இரீஇயினார் காய்சினவழுதி முதலாகக் கடுங்கோன் ஈறாக எண்பத்தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங்கேறினார் எழுவர் பாண்டியர் என்ப. அவர்கள் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை என்ப. அவருக்கு நூல் அகத்தியம்.

இனி இடைச்சங்கமிருந்தார் அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் இருந்தையூர்க் கருங்கோழி மோசியும் வெள்ளூர்க் காப்பியனும் சிறுபாண்டரங்கனும் திரையன் மாறனும் துவரைக்கோமானும் கீரந்தையும் என இத்தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு மூவாயிரத்து எழுநூற்றுவர் பாடினார் என்ப. அவர்களாற் பாடப்பட்டன கலியும் குருகும் வெண்டாளியும் வியாழமாலை அகவலும் என இத்தொடக்கத்தன என்ப. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் மாபுராணமும் இசைநுணுக்கமும் பூத புராணமும் என இவை. அவர் மூவாயிரத்து எழுநூற்றியாண்டு சங்கமிருந்தார் என்ப. அவரைச் சங்கமிரீஇயினார் வெண் தேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறாக ஐம்பத்தொன்பதின்மர் என்ப. அவருள் கவியரங்கேறினார் ஐவர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாடபுரத்து என்ப. அக்காலத்துப் போலும் பாண்டியனாட்டைக் கடல் கொண்டது.

இனிக் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவியாரும் சேந்தம்பூதனாரும் அறிவுடையரனாரும் பெருங்குன்றூர் கிழாரும் இளந்திருமாறனும் மதுரையாசிரியர் நல்லந்துவனாரும் மதுரை மருதனிளநாகனாரும் கணக்காயனார் மகனார் நக்கீரனாரும் என இத் தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நாநூற்று நாற்றொன்பதின்மர் பாடினார் என்ப. அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும் குறுந்தொகை நானூறும் நற்றிணை நானூறும் புறநானூறும் ஐங்குறு நூறும் பதிற்றுப்பத்தும் நூற்றைம்பது கலியும் எழுபது பரிபாடலும் கூத்தும் வரியும் சிற்றிசையும் பேரிசையும் என்று இத்தொடக்கத்தன. அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்து எண்ணூற்று ஐம்பதிற்றியாண்டு என்ப. அவர்களைச் சங்கமிரீஇயினார் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக்கிரப் பெருவழுதி ஈறாக நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருட் கவியரங்கேறினார் மூவர் என்ப. அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது உத்தர மதுரை என்ப''.

## பண்டைத் தமிழ்ச் சங்கங்கள் பற்றி முன்னை நூல்கள் தரும் குறிப்புகள்

''தொல்லாணை நல்லாசிரியர் புணர்கூட்டுண்ட புகழ்சால்
சிறப்பின் நிலந்தரு திருவின் நெடியோன்'' (மதுரைக்காஞ்சி 761—63)
''மூன்று வகைச்சங்கத்துச் சான்றோரும் அதுகூறார்'' (தொல். மரபியல்—பேராசிரியர் உரை)
''தென் தமிழ் நாட்டகன் பொதியில் திருமுனிவன் தமிழ்ச்சங்கம் சேர்கிற்பீரேல்''
(கம்பராமாயணம், நாடவிட்டபடலம், செய். 30).
''மதுராபுரிச் சங்கம் வைத்தும்'' (பாண்டியன் மெய்க்கீர்த்தி).
''சங்கத்தமிழ் மூன்றுந்தா?'' (ஔவையார்).
''உயர்மதிற் கூடலின் ஆய்ந்த ஒண்தீந்தமிழ்'' (திருக்கோவை).
''நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறி நற்கனகக்கிழி
தருமிக்கருளினோன் காண்'' (அப்பர் தேவாரம்).
''ஞானசம்பந்தன் உரைசெய் சங்கமலி செந்தமிழ்'' (ஞானசம்பந்தர்).
''அந்தண் மதுரைத் தொகை ஆக்கினானும்'' (ஞானசம்பந்தர்).
''சங்கமுத்தமிழ்'' (ஆண்டாள் பெரிய திருமொழி 3.4.10).

''மும்மைப் புவனங்களில் மிக்கதன்றே யம்மூதூர்
மெய்மைப் பொருளாம் தமிழ்நூலின் விளங்குவாய்மைச்
செம்மைப் பொருளாம் திருவார் திருவாலவாயில்
எம்மைப் பவந்தீர்ப்பவர் சங்கம் இருந்ததென்றால்''
(திருத்தொண்டர்—மூர்த்தி நாயனார் புராணம்).
''செந்தமிழ் நாடே,
சங்கப் புலவரும் தழைத்தினி திருக்கும்
மங்கலப் பாண்டி வளநாடு என்ப'' (பழம் பாடல்).

''சங்கத் தமிழ் தனக்கு அருள்வோனே'' (திருப்புகழ்).

''சங்கத்தார் பிணக்குத் தீர்த்த படலம்'' (திருவிளையாடற் புராணம்).

---

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் அருந்தொண்டு என்றும் வளர்ந்து ஈழத்திற்குப் பல நன்மைகள் வளர வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

சே. தனிநாயகம் அடிகளார்
08.05.77

கொழும்புத் தமிழ்ச் சங்கம் இலக்கியத்துறையிற் சிறப்பான பணியினைச் செய்கிறது. அருகிப்போயிருக்கும் தமிழ் நூல்களை ஆய்வுரைகள் எழுதுவித்து வெளியிடும் தொண்டு பாராட்டற்குரியது. இத்தகைய ஆக்கப் பணிகள் பலவற்றைக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் செய்ய மக்கள் ஆதரவு நிறையக் கிடைப்பதாக.

சு. வித்தியானந்தன்
பல்கலைக்கழகம், பேராதனை,
06.04.1975



# 'காப்பியர் நூலில் கவின்மிகு சிந்தனைகள்'

''செந்தமிழ்ச் செல்வர்'' ''தமிழாகரர்'' முனைவர்

**ச. சாம்பசிவனார்**

ஆசிரியர், ''தமிழ்மாருதம்'',

மதுரை.

## முன்னுரை

''காப்பியர்'' என்பது ஈண்டுத் தொல்காப்பியரையும், ''நூல்'' என்பது, அவர் அருளிய ''தொல்காப்பியம்'' என்னும் இலக்கண நூலையும் குறிக்கும். இந்நூலின்கண் காணத்தகும் அரிய கருத்துக்கள் பல; அவற்றுள் அறிவுக்கு விருந்தாகும் ''கவின்மிகு சிந்தனைகள்'' சில குறித்து ஒரு சிறிது விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கம்.

## பொருளதிகாரப் பெருமை

தொல்காப்பியம், ''எழுத்து, சொல், பொருள்'' எனும் மூன்று அதிகாரங்கள் கொண்டது. ''குறையிலா நிறைவு, அறிவுசால் செறிவு, நிரம்புவளம், வரம்பு இறவாமல் வரையறுத்து வடித்த முறைவனப்பு, மொழி வளர்ச்சிக்கு என்றும் தளர்ச்சிதராக் கட்டமைப்புக்களால் ஒப்புயர்வற்ற சிறப்பு வாய்ந்த இலக்கண நூல் தொல்காப்பியர் பெயரால் வழங்குகிறது. தமிழில் மட்டுமன்று, உலகில் நிலவும் பல மொழிகளில் பாராட்டப்பெறும் எல்லா இலக்கணங்களிலும் இல்லாத இயல்வளமும், எழிலும், பயனும், பண்பும் வாய்ந்தது. வேறெந்த மொழி நூலுக்கும் இல்லாத பழமையும் பெருமையும், அழகும் அருமையும் அமைந்தது. யவன அரித்தாட்டில், ஆரியப் பாணினி, பதஞ்சலி நூல்களுக்கு முன்னமே, அவர் நூல்களில் நிரம்பா வளமும் வரம்பும், வகுப்பியல் நெறிமுறைச் செறிவும், செப்பமும், இயல் எழிலும் நிறைந்து நிற்பது இது'' என்பது நர்வலர் ச. சோ. பாரதியார் கூற்று. (கலைக் களஞ்சியம் தொகுதி 6).

எழுத்து, சொல் இவ்விரண்டினும் ''பொருளதிகாரம்'' தனிச் சிறப்பினது. அகம், புறம் எனும் பாகுபாடுகள் கொண்ட இப்பகுப்பு, பிறமொழிகளில் காண்டல் அருமை என்பர் அறிஞர். ''புறப்பொருளை எடுத்துக்கொண்டால், அகப்பொருள் சம்பந்தமாக இருக்கும் அளவுக்குக்கூட, வடமொழிக்கும் தமிழுக்கும் ஒற்றுமை இல்லை. புறப்பொருள் பாகுபாடு, தமிழ் இலக்கியத்திற்கே பெரும்பாலும் உரிய ஒரு சிறப்பு என்றே கூறலாம்'' என்பது ஏ. வி. சுப்பிரமணிய ஐயர் கூற்று. (''தமிழ் ஆராய்ச்சியின் வளர்ச்சி''). இத்தகு பொருளதிகாரத்தைத் தமிழுலகிற்கு முதன் முதல் பதிப்பித்து வழங்கிய பெருமைக்குரியவர், **சி. வை. தாமோதரம் பிள்ளையாவார்.**

## தமிழும் தமிழ் வேந்தரும்

ஏறத்தாழ மூவாயிரம் ஆண்டுக்கு முற்பட்டதாகக் கருதப்படும் இத்தொல்காப்பியத்தில், ''தமிழ்'' என்னும் சொல்லே, எடுத்தாளப்பட்டுள்ளது என்பது எண்ணத்தக்கது.

''வடவேங்கடந் தென்குமரி
ஆயிடைத்
**தமிழ்**கூறு நல்லுலகத்து...........
**செந்தமிழ்** இயற்கை சிவணிய நிலத்தொடு.........''

என்பது தொல்காப்பியப் பாயிரம். இதன்கண், ''தமிழ்'' எனுஞ் சொல் ஆளப்பட்டிருத்தல் தெளிவு. ஆயினும் இதனைச் செய்தவர் பனம்பாரனார். ஆதலின் இதனைக் கருத்திற் கொள்ளாது விட்டுவிடலாம். நூலுக்குள்ளேயே தொல்காப்பியர்,

''தமிழென் கிளவியு மதனோ ரற்றே'' (தொல். எழுத்து: 386).

என்னும் நூற்பாவால், ''தமிழ்'' சுட்டுவர். ''வல்லினம் வருங்கால், தமிழ் என்னும் சொல் அவ் வலி மிகுதலேயன்றி, ''அக்கு'' என்னும் சாரியையும் பெற்ற முடியும்'' என்பது இதன் பொருள். ''தமிழ்க் கூத்து, தமிழ்ச் சேரி'' முதலானவற்றை இதற்குச் சான்றாகக் காட்டுவர் உரையாசிரியர்கள்.

தொல்காப்பியருக்கு முன்பிருந்தே இத் தமிழகத்தில் ''யாப்பு''ப் பயிற்சி மேலோங்கி யிருந்தது என்பதற்கு, அவர் யாத்த ''செய்யுளியலே'' சான்று. அதன்கண் வரும் ஓர் அரிய நூற்பா:

''பாட்டுரை நூலே வாய்மொழி பிசியே
அங்கதம் முதுசொலோ டவ்வேழ் நிலத்தும்
**வண்புகழ் மூவர் தண்**பொழில் **வரைப்பில்**
நாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்'' (செய்யுள்: 79).

இதில் வரும் ''**வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு**'' என்பது எண்ணுந்தோறும் எண்ணுந்தோறும் இன்பம் பயப்பது. தொல்காப்பியர் கூறும் ''யாப்பு'', தமிழகத்தில் வழங்குவது; தமிழர்க்கு உரியது. ''தமிழ்நாடு'' என்று சொல்லவந்த தொல்காப்பியர், ''**தண்டமிழ் வரைப்பு**'' எனத் தகுபுகழ்ச் சொல்லால் சுட்டுகின்றார். ''நாற்பெயர் எல்லை'' என்பது. இத் தமிழகத்தின் எல்லையைச் சுட்டுவது. ''நாற்பெயரெல்லை யகம் என்றது தமிழ்நாடென்றவாறு. வடவேங்கடம் தென்குமரியன்றிக் கிழக்கும் மேற்கும் கடலெல்லை'' என்பது பேராசிரியர் உரை. ''நாற்பெய ரெல்லை யகத்தவர்'' என்பதற்கு நச்சினார்க்கினியர் ''மலைமண்டலம் (சேரநாடு), சோழமண்டலம் (சோழ நாடு), பாண்டிய மண்டலம் (பாண்டி நாடு), தொண்டை மண்டலம் (தொண்டை நாடு) என்னும் நான்கு பெயருடைய தமிழ்நாட்டார் நடாத்தும்'' என்று உரை காண்பர்.

தொல்காப்பியர் காலத்தே, முடியுடை மூவேந்தராகிய சேர, சோழ, பாண்டியப் பெருமன்னர், இத் தமிழகத்தே, புகழொடு ஆண்டனர் என்பதும் இந் நூற்பாவினால் அறியத்தகும். ''வண்புகழ் மூவர்'' என்று இவர் கூறுவது சிந்திக்கத்தக்கது. இதற்கு உரை கூறவந்த பேராசிரியர், ''வளனுடைமையாற் புகழ் பெற்றார் என்றவாறு. அஃதாவது கொடுத்துப் பெறும் புகழ் எனக் கொள்க'' என்பர். இவ்வாறு பேராசிரியர் உரை கூறுதற்கும் காரணம் உண்டு.

தொல்காப்பியர், தம் ''புறத்திணையியலில், பின்வருமாறு கூறுவர்:

''....   ....   ....   உறுபகை
வேந்திடை தெரிதல்வேண்டி ஏந்துபுகழ்ப்
**போந்தை வேம்பே ஆர்** என வரூஉம்
மாபெருந் தானையர் மலைந்த பூ......'' (புறத்.: 5: 2—5).

இதற்கு, நச்சர், கொண்டுகூட்டுமுறையில், நயம்பட உரை எழுதுவர்: ''மா வரும் புகழ் ஏந்தும் பெருந் தானையர்'' என்றும், ''உறுபகை வேந்திடை தெரிதல் வேண்டிப் போந்தை வேம்பே ஆர் என மலைந்த பூ'' என்றும் கொண்டுகூட்டி, ''மாமுதலிய வற்றால் தமக்குவரும் புகழைத் தாங்கும் மூவேந்தருடைய பெரும்படையாளர், அப் புகழ் தான் உறும் படையிடத்து இன்ன வேந்தன் படையாளர் வென்றார் என்பதற்கு ஓர் அறிகுறி வேண்டிப் போந்தை வேம்பு ஆர் என்று கூறிச் சூடின பூ'' என்று விளக்குவார். ஈண்டுச் சுட்டப்படும், போந்தை என்பது பனம்பூ மாலையையும், வேம்பு என்பது வேப்பம் பூ மாலையையும், ஆர் என்பது ஆத்தி மாலையையும் சுட்டி, முறையே சேர, பாண்டிய, சோழப் பெருமன்னர்க்குரியன இவை என்பதையும் குறிக்கும்.

இவ்வகையில், தொல்காப்பியர் காலத்தே, நம தருமைத் தமிழ் மொழியும், நமக்கினிய தமிழ்நாடும், இவற்றை உரிமையாகக் கொண்ட தமிழ் மூவேந்தர்களும் பெற்றிருந்த உயர்வு புலனாகும்.

**தமிழர் அறிவுநலம்**

தொல்காப்பியர் காலத்தே தமிழர், ''எழுத்து, சொல், பொருள்'' இம்மூன்றிலும் போதிய அறிவு பெற்றவராயுமிருத்தல் வேண்டும் எனக் கருத இடமுண்டு.

நூலைத் தொடங்கவந்த தொல்காப்பியர்,

> ''அகர முதல் னகர இறுவாய்
> முப்பஃ தென்ப.....'' (எழுத்து: 1)

என்கின்றார். ''அகர, ஆகார, இகர, ஈகார.....'' என்றல்லவோ கூற வேண்டும்? அதனை விடுத்து, நூற்பாவுக்கே உரிய முறையில், ''சுருங்கச் சொல்லல்'' எனும் முறைப்படி, இவ்வாறு கூறினார் எனினும், இதன்கண் அமைந்த உள்ளீடும் ஒன்றுண்டு. இந்திய நாட்டைக் குறிப்பிட விரும்பும் ஒருவர், ''குமரி முதல் இமயம் வரை'' என்பர். அங்ஙனமாயின், குமரிக்கும் இமயத்திற்கும் இடைப்பட்ட மாநிலங்கள், தலைநகரங்கள், ஓடும் ஆறுகள், இருக்கும் மலைகள் இன்னவற்றையெல்லாம் மற்றவர் நன்கு அறிவர் என்பதுவே கருத்து. அது போன்றே, ''அகரம் முதல் னகரம் ஈறாக'' என்று தொல்காப்பியர் கூறுவாரானால், அவ்விரண்டிற்கும் இடைப்பட்ட எழுத்துக்களையும், அவற்றின் முறை, பிறப்பு, வகை, இன்ன பிறவற்றையும் பலரும் அறிந்திருத்தல் வேண்டும் என்பது பெறப்படும்.

பொருளதிகார முதற் நூற்பாவிலேயும் இவ்வாறே கூறுகின்றார் காப்பியர்:

> **''கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
> முற்படக் கிளந்த எழுதிணை என்ப'' (அகத்.: 1)

அகத்திணைகள் ஏழு. அவை: கைக்கிளை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் பெருந்திணை. இவற்றை இம் முறைப்படிக் கூறாமல், ''கைக்கிளை முதல் பெருந்திணை ஈறாக'' என்று மட்டுமே கூறினார். காரணம், இடைப்பட்ட நடுவண் ஐந்திணைகளைப்பற்றிப் பலரும் அறிவர் என்பதால்!

இவற்றால், தொல்காப்பியர் காலத்தில் எழுத்து முதலாயின பற்றிய பயிற்சி, பெரும் பாலோரிடையே இருந்திருத்தல் வேண்டும் எனத் துணிவது இழுக்கன்று.

அகப்பொருளை எடுத்து ஆள்வது, கூர்மையான கத்திமுனையில் நடப்பதுபோன்றது. செய்தி சுவையாகத்தான் இருக்கும். ஆனால் அதனைப் பிறர்க்குச் சொல்லும்போது மிகக் கவனம் தேவை. தொல்காப்பியர், இந் நுட்பத்தை மிக அருமையாக விதந்து ஓது கின்றார்.

''நான், ஒருத்தியைக் காதலித்தேன்; அவளும் என்னைக் காதலித்தாள். இருவரும் மற்றவர்க்குத் தெரியாமல் ஓரிடத்தே சந்திப்போம்; உரையாடுவோம்; விளையாட்டயர் வோம்; மகிழ்ச்சியுட் டிளைப்போம்'' என்று வைத்துக் கொள்வோம். இதனை, ஓர் இதழ் ஆசிரியரோ, செய்தியாளரோ ( Reporters ) கண்டுவிட்டாற்போதும்; மறுநாளே பெரிய எழுத்துக்களில் என்னைப் பற்றியும் என் காதலியைப் பற்றியும் படத்துடன் செய்தி வெளி வந்துவிடும். அப்படியானால் எங்கள் மனநிலை என்னாகும்? ஒருகால், தற்கொலைக்குங்கூட ஏதுவாகுமன்றோ? இன்று நாட்டில் நடக்கும் நிகழ்ச்சி இது!

இதனை நன்கு சிந்தித்த அருளாளர் தொல்காப்பியர், ஒரு விதி வகுக்கின்றார்:

''மக்க ணுதவிய வகனைந் திணையுஞ்
சுட்டி யொருவர் பெயர்கொளப் பெறாஅர்'' (அகத்.: 54).

என்பதே அவர் கூறும் விதி! ''அகப்பொருளைச் சொல்ல வருங்கால், அதன்கண் ஈடுபட்ட ஆண்—பெண் இவர்களின் இயற்பெயர் கூறலாகாது; ''ஒருவன்—ஒருத்தி'' என்றோ, ''கிழவன்—கிழத்தி'' என்றோதான் குறிப்பிடல் வேண்டும்'' என்பது இதன் பொருள். இஃது எத்துணை நாகரிகம்?

**மனைத்தக்க மாண்பு**

தொல்காப்பியர் காலத்தே, தமிழர் சமுதாயத்தில், பரத்தையர் ஒழுக்கமும் இருந்தது என்பதை மறுத்தற்கில்லை. ''புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல்'' என்று கூறியவர் ''ஊடல்'' என்பதொன்றையும் கூறியுள்ளார். தலைமக்களிடையே ஊடுதற்குப் பல கார ணங்கள் இருப்பினும், ''பரத்தையிற் பிரிவினால் உண்டாகும் ஊடலே பெருங் காரணம் எனலாம். ''பரத்தமை மறுத்தல், பரத்தை வாயில், காமக் கிழத்தியர்'' முதலாயின, தொல்காப்பியத்தில் வருவன. திருவள்ளுவர் ஒருவரே, ''வரைவின் மகளிர்'' என்னும் அதிகாரத்தில் பொருட்பெண்டிர் முயக்கத்தைக் கடுமையாகச் சாடியவர். அவர், ''அறம்'' பாடவந்தவராதலின் அங்ஙனம் கூறினார் எனலாம். தொல்காப்பியர், ''ஊடல்'' என்ப தொன்றைக் கூறினாலும், அதற்கு அடிப்படையாய் உள்ள ''பரத்தையிற் பிரிவை'' மறை முகமாகக் கண்டித்துள்ளார் என்றும் அமைதி கூறலாம். ''குறிஞ்சி'' முதலானவற்றிற்குப் பெரும்பொழுது, சிறுபொழுதுகளைக் கூறிய தொல்காப்பியர், ''ஊடலும் ஊடல் நிமித்த மும்'' உடைய ''மருதத்'' திணைக்குப் பெரும்பொழுது சுட்டாமல்,

''வைகுறு விடியன் மருதம்'' (அகத்.: 8)

எனச் சிறுபொழுது மட்டுமே கூறினார். ''ஊடல் கொள்ளுதற்கு இன்ன பெரும்பொழுது என்பது இல்லை'' என்று கருதினார் போலும்! ஆனால் சிறுபொழுது, ''வைகறை, விடியல்'' ஆம்! ''காலை'' நேரத்திற்கு முன்னதாக வருவன, வைகறையும் விடியலும். ''வைகறை'' என்பதற்கு ''இருள் கழியுங் காலம்'' என்பர் **சி. கணேசையர்**. இச் சிறு பொழுதைத் தொல்காப்பியர் கூறிய நுட்பம் எண்ணி இன்புறத்தக்கது.

இரவெல்லாம் பரத்தைபால் இன்பம் நுகர்ந்த தலைவன், தான் செய்தது பெருந் தவறு என்பதை உணர்கின்றான். எவரேனும் காணின், தனக்கும் தன் குடிக்கும் பழிநேருமே என்றும் எண்ணுகின்றான். எனவே, பிறர் அறியாவண்ணம், தன் மனையகத்திற்குத் திரும்ப, இவ் ''வைகறை''ப் போதே தகுதியானது என்றும் எண்ணுகின்றான். இதனைப் பேராசிரியர், பின்வருமாறு விளக்குவர்: ''பரத்தையிற் பிரிந்த தலைவன், ஆடலும் பாடலும் கண்டுங் கேட்டும் பொழுது கழிப்பிற் பிறர்க்குப் புலனாகாமல் மீளுங் காலம் அதுவாதலானும் தலைவிக்கும் கங்குல் யாமம் கழியாது நெஞ்சழிந்து ஆற்றாமை மிகுதலான், ஊடலுணர்தற் கெளிதாவதோர் உபகாரமுடைத் தாதலானும் வைகறை கூறினார்!''.

மற்றுமொரு காரணமும் உண்டு. பரத்தையிற் பிரிந்துவந்த தலைவன் மாட்டுத் தலைவி, ஊடுவாள் என்பது திண்ணம்! எத்துணைக் கற்பொழுக்கம்பூண்டவளாயினும் தன் கொழுநன், பரத்தைமை உடையவன் எனின், அதனைத் தாங்கிக்கொள்ள மாட்டாள். பொறுமையின் உச்சியில் நின்ற கண்ணகியும், தன் கணவன் கொலையுண்ணப்படுதற்கு முன், ''போற்றா ஒழுக்கம் புரிந்தீர்'' எனச் சம்மட்டி அடிகொடுப்பதைச் சிலம்பு பேசும். ஆதலின், பிறர் அறியாவண்ணம் தன் இல்லினுள் நுழைகின்றான் தலைவன்; அவன்மீது சினங்கொண்டு ஊடுகின்றாள் தலைவி. **அவ் இருவருக்கும் நிகழும் பூசல், பிணக்கு அல்லது வாய்ச்சண்டை ஆகியன புறத்தார்க்குப் புலனாதல் ஆகாது** என்று கருதியே தொல்காப்பியர், ''வைகறை விடியலை'' வைத்தார் எனல் வேண்டும்! அப்போது ''தலைவிகாலில் தலைவன் பணிந்து வணங்குதலும் உண்டு'' என்பர் காப்பியர். (தொல். பொருளியல்: 33).

**முடிவுரை**

தொல்காப்பியர் நூலை ஊன்றி நோக்கினால், தொட்டனைத்தூறும் மணற்கேணி போல இன்னும் பல ''கவின்மிகு சிந்தனைகள்'' தோன்றக்கூடும். அவை, மன்பதைக்கு வழிகாட்டும் எனலாம்!

---

இலங்கையில் இத் தமிழ்ச் சங்கத்திற் பல்லினத்தவரும் ஒருமையுள்ளத்தொடும் பயின்று பெருநலம் பெறுகின்றனர். தக்க ஒருவர் தமிழ் கற்பித்தார் கற்பிக்கிறார். தலைவர் செயலாளர் நூலகப்புலவர் உறுப்பினர் அனைவரும் ஒழுங்காக இத்தமிழ்ச் சங்கத்தைப் பேணி வருகின்றனர். கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபம் புதிதாய்த் தோன்றுகின்றது. எல்லாரும் அது நிறைவுறத்தக்க அளவு பேருதவி புரிந்து தமிழ்த் தொண்டு செய்து நிறைவை அடைதல் வேண்டும். தாய்மொழிக்குச் செய்யும் பணியே திருவருட் பணியாகத் திகழ்ந்து ஞானத்தை வளர்த்து நன்கு வாழ்விக்கும். வளர்க இத்தமிழ்ச் சங்கம். பெருகுக இதன் பணிகள். வாழ்க இச்சங்கத்தின் உறுப்பினர். எல்லாரும் வாழ்க.

மெய்கண்டாராதீனம்,
செங்கற்பட்டு மாவட்டம்
**59, நிபந்தகாரத் தெரு,**
காஞ்சிபுரம்

சிவம்
**25.04.72**

---

# சங்க இலக்கியமும் மனிதாபிமான சிந்தனைகளும்

—பேராசிரியர் **சி. தில்லைநாதன்**

தமிழ் இலக்கிய வரலாற்றினைப் பல்வேறு காலகட்டங்களாகப் பிரித்து நோக்குபவர்கள் அதன் தொடக்ககாலப் பகுதியினைச் சங்ககாலம் என்று குறிப்பிடுவர். அக்காலப் பகுதியை வரையறை செய்யுமிடத்துச் சில கருத்து வேறுபாடுகள் காணப்படுகின்றன வெனினும், கி.பி. மூன்றாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலப் பகுதியைச் சங்க காலம் எனப் பொது வாகக் கொள்ளலாம். தமிழ் பேசும் உலகின் பல்வேறு பகுதிகளையும், ஏறக்குறையப் பத்துத் தலைமுறைகளையும் சேர்ந்த சுமார் ஐந்நூறு புலவர்களின் செய்யுள்கள் சங்க இலக்கியம் எனக் கொள்ளப்படுகின்றன. அச்செய்யுள்களின் தொகுப்புக்களான எட்டுத் தொகையும் பத்துப் பாட்டும் மேற்கணக்கு நூல்கள் எனப்படும். எட்டுத் தொகையிலும் பத்துப் பாட்டிலும் இன்று காணப்படும் செய்யுள்கள், சுமார் ஐந்நூறு ஆண்டுக் காலப் பகுதிக்கு உரியனவெனக் கருதப்பட்டாலும், அதற்கு முன்னரே தமிழ் மக்கள் மத்தியிற் செய்யுளியற்றும் கலை வளர்ச்சி பெற்றிருந்ததென்பதற்குச் சான்றாக மிளிர்கின்றன.

மனித வாழ்வினையும் அதனையொட்டிய அனுபவங்களையும் அகம், புறம் என இரு வேறு வகையினவாகப் பிரித்தல் சாத்தியமாகுமோவென்பது கேள்விக்குரியது. ஆயினும், வளர்ச்சி பெற்றிருந்ததொரு செய்யுள் வழக்கிற்கிணங்க, உலகியல் வாழ்வு தழுவிய சங்க இலக்கியங்கள் அனைத்தும் அகம், புறம் என இருவகைப் படுத்தப்பட்டுள்ளன. ஒருவனும் ஒருத்தியும் சம்பந்தப்பட்ட உறவுகளையும் உணர்வுகளையும் வெளியிடுவன அகத்திணையுள் அடங்குகின்றன. அகம் தவிர்ந்த சமூக வாழ்வின் பல்வேறு அம்சங்களையும் கருப்பொரு ளாகக் கொண்ட செய்யுள்கள் புறத்திணையுள் அடங்குகின்றன.

சங்க இலக்கியங்களைப் பொதுவாக நோக்குமிடத்து, அவை தோன்றிய காலத்தின் சமுதாய வாழ்வினையும் அதனடியான அனுபவங்கள், சிந்தனைகளையும் பிரதிபலிப்பதனை அவதானிக்கவியலும். இனக்குழு வாழ்க்கை சிதைந்து நிலமானிய சமுதாயமும் அரசும் வளர்ச்சிபெறுவதை அவ்விலக்கியங்கள் காட்டுகின்றன. வீரயுகம் என்றழைக்கப்படும் அக் காலம் நிலமானியப் பகைமைகளும் பழிவாங்கல்களும் போர்களும் மிகுந்ததாகக் காணப் பட்டது. அப்படியான ஒரு காலப் பகுதியில் போர்வீரமும், பெற்றுக் கொண்ட செல்வங் களைச் சேர்ந்தவர்களோடு தாராளமாகப் பகிர்ந்துகொள்ளும் பண்பும் போற்றப்படும் என்பது சொல்லாமலே விளங்கும். போர்கள் இடம்பெறும்போது அவற்றை நடாத்த வீரர்கள் தயாராக இருக்க வேண்டும். அந்நிலையில் வீர உணர்வினைத் தூண்டிப் பேணும் தேவையினைப் புலவர்கள் நிறைவேற்றினர்.

அத்தகைய பல புலவர்கள் பலமும் அதிகாரமும் மிக்கவர்களை அண்டி வாழ்ந்து திருப்திப்படுத்துவதை மட்டும் குறியாகக் கொண்டிருக்கலாம். அன்றைய நிலைமைகளையும் வழமைகளையும் ஒட்டி நின்றும் அவ்வப்போதைய உணர்வுகளால் உந்தப்பட்டும் ஊன்றிய நலன்களால் ஆட்கொள்ளப்பட்டும் அவர்கள் செய்யுள்கள் செய்திருக்கலாம். ஆயினும்,

இன்று நாம் திரும்பிப் பார்க்கும்போது எமக்கு அர்த்தம் உடையனவும் பெறுமதிமிக்கனவும் போற்றத்தக்கனவுமான பல எண்ணக் கருத்துக்களையும் சில புலவர்கள் விட்டுச் சென் றுள்ளமையினை அவதானிக்கவியலும்.

எந்தக் காலத்திலும் நோக்காலும் நிலைப்பாட்டாலும் மாறுபட்ட கலைஞர்களை நாம் காணவியலும். அந்த வகையில், சங்க காலப் புலவர் அனைவரையும் ஒரே வகையினராகக் கொண்டு அவர்களது இயல்பும் நோக்கும் இதுதான் என அறுதியிட்டுக் கூறுவது பொருத்த முடையதாகத் தோன்றவில்லை. மேலெழுந்தவாரியாக நோக்குமிடத்துத் தானும் சிலரிடம் சுயநல உணர்வும் சிலரிடம் பொதுநல உணர்வும் மேலோங்கி விளங்குவதை அவதானிக்க வியலும். அரசரைத் திருப்திப்படுத்துவதையும் மகிழ்விப்பதையும் பிரதான நோக்கமாகக் கொண்ட புலவர்களையும் அரசர் பார்வையை அகட்டவும் பண்படுத்தவும் விழைந்தவர் களையும் இனங் கண்டுகொள்ள முடியும்.

வாழ்க்கை உண்மையை ஏற்று அதனோடு உடன்பட்டு நின்றவர்களுள் வாழ்வினை அனுபவிப்பதில் ஆர்வமிக்கவர்களும் வாழ்வினை வளம்படுத்துவதில் ஆர்வமுடையவர்களும் காணப்பட்டனர். கொலை, கொள்ளை, காமம், கள் முதலானவற்றின் மத்தியிலும் உயர்ந்த பல சிந்தனைகளின் விளை நிலமாகத் தமிழகம் மிளிர்ந்தது.

பண்பாடு என்றால் என்னவென்பதை விளக்கப் புகுந்த மத்யூ ஆர்னோல்ட், மக்கள் அறிந்தவற்றுள்ளும் சிந்தித்தவற்றுள்ளும் சிறந்தவற்றால் அறியப்படுவது அதுவென்றார். அந்தவகையில் சங்க இலக்கியங்களின் வாயிலாகத் துலங்கும் சிறந்த சிந்தனைகள் சிலவற்றை யும் விழுமியங்கள் சிலவற்றையும் தொட்டுக் காட்டுவதே இச்சிறு கட்டுரையின் நோக்க மாகும்.

தன் நலனை மட்டும் நோக்கும் ஒடுங்கிய உள்ளத்தராக முடிந்துவிடாது விசாலமான நோக்கில் ஏனையோரிடத்தும் ஆர்வமுடைமையினை வளர்க்க விழைவதே சிறந்த மானிட விழுமியமென்று போற்றப்படுவதாகும். ''பண்பெனப் படுவது பாடறிந் தொழுகுதல்'' என்று கலித்தொகை (133) யில் நல்லந்துவனார் கூறுவர். பாடறிந்து ஒழுகுதல் என்றால் உலக வழக்கினை அறிந்து அதற்கிணங்க ஒழுகுதல் என்று பொருள் கூறப்படும். பாடு என்பதற்குத் துன்பம் என்னும் பொருளும் உண்டாதலின், பிறரின் துன்பத்தை அறிந்து நடத்தல் என்றும் அதற்கு அர்த்தம் கொள்ளவியலும். '''சான்றோர் செல்வ மென்பது சேர்ந்தோர் புன்க ணஞ்சும் பண்பினை'' என்று நற்றிணை (210) யில் நல்வேட்டனார் கூறுவதும் இங்கு அவதானிக்கத்தக்கது. தம்மைச் சேர்ந்தவர்களுடைய துன்பத்தை அஞ்சும் பண்பினைச் சான்றோர் மெச்சுவர் என்ற கருத்து இங்கு புலப்படுத்தப்படுகிறது.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' எனத் தொடங்கும் புறநானூற்றுப் (192) புலவரான கணியன் பூங்குன்றனார், 'பிறப்பும் இறப்பும் நோதலும் தணிதலும் புதியவையல்ல' என்றும், 'வாழ்வு இனியதென்று ஒருவேளை மகிழ்வதும் இன்னாததென்று இன்னொரு வேளை வெறுத்தலும் இல்லை' என்றும், ''பெரியோரை வியத்தலுமிலமே சிறியோரை யிகழ்தலதனினு மிலமே'' என்றும் கூறுவதை ஊன்றி நோக்குமிடத்து உலக வாழ்க்கை இயல்பைப் புரிந்து கொண்ட அவரது சமநோக்குத் தெள்ளிதில் விளங்கும்.

'இன்பமும் துன்பமும் புணர்தலும் பிரிதலும் பகலையும் இரவையும் போன்றவை' என்று அகநானூற்றுப் (327) புலவன் ஒருவனும் கூறுகின்றான்.

''இன்பமும் ஓர்கணத் தோற்றம்—இங்கு
இளமையும் செல்வமும் ஓர்கணத் தோற்றம்;
துன்பமும் ஓர்கணத் தோற்றம்—இங்கு
தோல்வி முதுமை ஒருகணத் தோற்றம்'

என்று எமது காலத்து மகாகவி பாரதியும் கூறியிருப்பது இங்கு எண்ணிப் பார்க்கத்தக்கது. இன்பம் நேர்ந்தவிடத்து எக்களிப்பதும் துன்பம் நேர்ந்தவிடத்துத் துவண்டுவிடுவதும் தம்மிற் பெரியாரைத் தலைமீது தூக்குவதும் சிறியாரைக் காலின்கீழ் மிதிப்பதும் சாதாரண மக்கள் செயல்களாகும். இன்பம் துன்பம் பெருமை சிறுமை யாவற்றையும் ஒப்ப நோக்குவது உயர்ந்த நிலையாகும். போற்றக்கூடிய இலட்சிய நோக்காகவும் விழுமியமாகவும் அது கொள்ளப்படத்தக்கது.

பிறர் வாசற்படியில் நின்று இரக்காது அறம் வழுவாத வாழ்க்கையை நடாத்தப் பொருளினைச் சேர்ப்பது குறித்து அகநானூற்றுப் (155) புலவன் ஒருவன் பேசுகின்றான். இவ்வுலகில் அறநெறியிற் செல்லும் வண்டிக்கு முட்டுக்கட்டைகளாக இருப்பவை சினம். காமம், எல்லை மீறிய தாட்சண்யம், அச்சம், பொய், பேராசை, நன்மைகளை நாசம்பண்ணு மியல்பு, மூர்க்கம் முதலானவை என்று கூறும் பதிற்றுப்பத்துச் (22) செய்யுளும் அறவொழுக்கம் குறித்த சிந்தனையின் வெளிப்பாடாகவே கொள்ளப்படத்தக்கது.

நாடோ காடோ, மேடோ பள்ளமோ எதுவாயினும், நல்ல மக்கள் வதியும் இடம் நன்னிலமாக விளங்கும் என்ற ஒளவையார் (புறநானூறு 187) கூற்றும் மனித நலத்தையும் ஒழுக்கத்தையும் முதன்மைப்படுத்துவதாக உள்ளது. அரசன் ஒருவன்முன் எழுந்து நின்று அவனது தவறுகளைச் சுட்டுவதும் இவ்வாறு நடப்பதுதான் முறை என்று இடித்துரைப்பதும் இலேசான காரியமல்ல. என்றாலும், மக்கள் நலனைப் பேணவல்ல சிந்தனைச்சுடர்களை அவனுடைய உள்ளத்திலே தூண்டும் புலவர்களின் பொதுநலவேட்கை போற்றுதற் குரியதே. அந்தவகையில் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனை நோக்கி வெள்ளைக்குடி நாகனார் கூறிய வார்த்தைகள் (புறம். 35) விதந்து குறிப்பிடத்தக்கவை.

''நீதி வேண்டியவிடத்து அதனைப் பெற்ற மக்கள், மழை தேவைப்படும் காலத்து அதனைப் பெற்றவர்களுக்கு ஒப்பாவர். உனது வெண்கொற்றக் குடை வருந்தும் குடிமக்களைப் பாதுகாக்க வேண்டியதேயன்றி வெயில் மறைப்பதற்காகப் பிடிக்கப்படுவதில்லை. உனது படைகள் கொண்டு வரும் வெற்றிகள்கூட உழவுத் தொழிலால் விளைந்த உணவின் வழியாக வருவனவே. குறளை பேசுவோரது மொழிகளைச் செவியுறாது நீ உழவரை ஓம்பி அவ்வழி ஏழைக் குடிகளையும் பாதுகாப்பாயேயானால் பிறர் நின் அடியினைப் போற்றுவர்''.

பகைவர்கள் தன் அடிபோற்ற வேண்டும் என்ற வேட்கை மீதூரப் பெற்றவனாகச் சோழன் கிள்ளிவளவன் இருந்திருக்கலாம். அதற்கு வழி குடிகளை உணவளித்தும் முறை செய்தும் பாதுகாப்பதே என வலியுறுத்திய வெள்ளைக் குடி நாகனாரின் உள்ளம் மனிதாபிமானம் மிக்கது.

ஏனையவரிடத்து ஆர்வமுடைமையும் பிறர் துன்பம் பொறாது தான் பெற்ற செல்வத்தை அவர்க்கு உதவும் பண்பும் போற்றப்படுகின்றன. தலைவனது பிரிவு தாங்காது தவிக்கும் தலைவியொருத்தியை ஆற்றுவிக்கப் புகுந்த தோழி, ''புகழை விரும்பிய நெஞ்சினை யுடைய ஒப்புரவு மேற்கொண்ட ஒருவர் பெற்ற செல்வத்தைப் போல உன் மேனியிற் பரவிய பசலைநோயும் தங்காது அகன்றுவிடும்''. என்று கூறுவதை நக்கீரர் (குறுந்தொகை 143) காட்டுகிறார். புகழினை வேண்டுவோர் உபகாரம் செய்வது குறித்து அச்செய்யுள்

கூறுகிறது. ஆனால், கைமாறு எதனையும் கருதாது வழங்குவதன் சிறப்புப் போற்றப்படும் விதம் ண்ணி இறும்பூதெய்தத் தக்கதாக உள்ளது. கடையெழு வள்ளல்களில் ஒருவரான ஆய் என்பானை உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடுமிடத்து,

> ''இம்மைச் செய்தது மறுமைக் காமெனும்
> அறவிலை வணிக னாயலன்''. (புறம். 134)

என்கிறார். இப்பிறவியிற் செய்த புண்ணியம் மறு பிறவியிற் பயன்தரக் கூடும் என்பதைக் கருதி ஆய் கொடுக்கவில்லை. கொடுக்க வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியதால் அவன் கொடுத்தான். எதையும் திட்டமிட்டு எதிர்பார்க்காது கொடுக்கும் கொடை இன்னொரு கடையெழு வள்ளலான வையாவிக்கோப் பெரும்பேகனைப் பற்றிய ஒரு செய்யுளிலும் சிறப்பிக்கப்படுகிறது. தன் மறுமையை யன்றிப் பிறர் வறுமையை நோக்கிப் பேகன் கொடுத்த சிறப்பினைப் பரணரின் அச்செய்யுள் (புறம்—141) போற்றுகிறது. ஒப்புரவறிதல் பற்றிய அதிகாரத்தில் திருவள்ளுவர் ''கைம்மாறு வேண்டாக் கடப்பாடு'' பற்றிப் பேசுவர்.

அறிவுடையவர்களாக மக்கள் விளங்க வேண்டும் என்ற கருத்தும் சங்க காலத்தில் முக்கியத்துவம் பெற்றிருந்ததாகத் தெரிகிறது. ஊறு நேர்ந்தவிடத்து உதவியும் பொருள் கொடுத்தும் கற்றல் நன்றென்றும், ஒரு வயிற்றுப் பிறந்தோருள்ளும் கல்வியறிவு சிறந்தவனிடத்திலேயே ஒரு தாயும் கூடிய விருப்புடையளாவாள் என்றும், வயதில் முதிர்ந்தவனை யன்றி அறிவிற் சிறந்தவனையே அரசனும் மதிப்பான் என்றும், கீழ் நிலையில் உள்ள ஒருவனாயினும் அவன் க்ல்வியில் மேம்பாடடையுமிடத்து மேல் நிலையில் உள்ளோரும் போற்றுவர் என்றும் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் (புறம்—183) கூறுகிறான்.

சமுதாய நலன் பெருமளவுக்கு ஆட்சியின் தன்மையினைப் பொறுத்ததாக அமைவதால், பொதுநலம் பேணும் மனப்பாங்கினை ஆட்சியாளரிடத்து வளர்க்கும் வகையிற் புலவர் பெருமக்கள் முன்வைத்துள்ள கருத்துக்கள் இன்றும் பெறுமதி மிக்கனவாக மிளிர்கின்றன. குடிகளுக்குத் துன்பம் நேராது பாதுகாப்பதற்காகத்தான் அரசன் வெண்கொற்றக்குடையினை வைத்திருக்கிறான் என்று ஒரு புலவன் (புறம்—35) கூறுகிறான். குழந்தையைப் பேணுவது போல அரசன் நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்று இன்னொரு புலவன் (புறம்—05) சொல்கிறான். மன்னுயிர்களைத் தன்னுயிர்போலத் தழுவிக் காக்க வேண்டுமென்கிறார் (கலித்தொகை—143) நல்லந்துவனார். போருக்குச் செல்லுமிடத்தும் அறநெறி பேணும் பூட்கைமறம் குறித்துப் புறநானூறு (09) பேசுகிறது. அறநெறியை முதலாகவுடையதே அரசின் வெற்றியாகையினால், நம்மவரென்று தாட்சண்யமோ பிறர் என்று கண்டிப்போ இன்றி நடுநிலை நின்று முறைசெய்ய வேண்டுமென்பர் மதுரை மருதனிளநாகனார் (புறம்—55).

''முறையெனப்படுவது கண்ணோடா துயிர்வெளவல்''—அதாவது நமமவர் என்று தாட்சண்யம் காட்டாது அவர் செய்த குற்றத்துக்கேற்ப அவர் உயிர் கொள்ளுதல்—என்று வரையறை கூறுகிறது கலித்தொகை (133). தலைவனின் பிரிவாற்றாது கலங்கி நின்ற ஒரு தலைவியின் நிலையினை முறை தளர்ந்த அரசன் கீழுருந்த மக்களின் நிலைக்கு உவமிக்கிறார் (கலித்தொகை 34) பாலைபாடிய பெருங்கடுங்கோ.

அரசர் மக்களை வருத்தாதவகையில் வரி கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்தும் ஒரு புலவன் (புறம்—184) உணர்த்துகிறான். நெல் வயலில் யானை புகுந்து உண்டால் பெரும் பகுதி நெல் எவ்வாறு வீணாகுமோ அவ்வாறே குடிகளை வருத்தி அரசன் இறையீட்டப் புகுந்தால் பெரும் பகுதி வருமானம் ஒருவர்க்கும் உதவாது வீணாகும்.

பண்பும் அறிவும் மிக்க மனைவி மக்களும், கருத்தொருமித்த ஏவலாளரும், முறை தவறாத அரசனும், ஆன்றவிந்தடங்கிய சான்றோர் பலரின் சகவாசமும் வாய்க்கப்பெற்றமையே வயது முதிர்ந்த காலத்திலும் தன் முடி நரையாதிருந்தமைக்கான காரணங்கள் என்ற பிசிராந்தையர் (புறம்—191) செய்யுள் சுவாரஸ்யமானது. அமைதியான வாழ்க்கைக்கு அவசியமானவை என்று கருதியவற்றை அழகுற அவர் எடுத்துக் கூறினார்.

கண்டாரை மயக்கும் வசீகரமிக்க பெண்ணொருத்தியைக் கண்டு உள்ளம் பறிகொடுத்த இளைஞன், ''உன்மீதும் குற்றமில்லை. உன்னைப் புறத்தே வரவிட்ட உன் பெற்றோர் மீது தவறில்லை. மதங் கொண்ட யானையை எவ்வாறு பறையறைந்து எச்சரிக்காது நீர் நிலைக்குக் கொண்டு செல்லக்கூடாதோ அவ்வாறே நீயும் பறையறைந்தபின்னன்றி வெளியே செல்லக் கூடாது என்று விதிக்காத அரசனே தவறுடையான்''. (கலித்தொகை—56) என்கிறான். கபிலரின் கற்பனைச் சிறப்புமிக்க இச்செய்யுளில், பொது மக்களுக்கு ஏற்படும் தொல்லைகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அரசனது பொறுப்பு என்ற கருத்தும் வெளிப்படுகிறது.

பிணக்குகளை விசாரிக்கும் அறங்கூறவையம் பற்றி மாங்குடி மருதனார் கூறுவதை நோக்குமிடத்து நீதியைக் காப்பது குறித்த அக்கால அனுபவம் எமது சிந்தனையைத் தூண்டுகிறது.

> ''அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கிச்
> செற்றமும் உவகையும் செய்யாது காத்து
> ஞெமன்கோ லன்ன செம்மைத் தாகிச்
> சிறந்த கொள்கை அறங்கூ றவையமும்''.(மதுரைக்காஞ்சி—489—492

முறைகேட்டு வழக்காடும் இரு கட்சியினருக்கும் அவையம் நடுநிலை தவறாது என்ற நம்பிக்கை வேண்டும். அவையத்தார் நியாயம் வழங்குவார்களோ என்ற அச்சத்துக்கோ, தோற்றுவிடுவோமோ என்ற வருத்தத்துக்கோ விரும்பியதன் மேலான பற்றுக்கோ இடமேற்படல் ஆகாது. தண்டிக்க வேண்டும் என்பதிலோ அல்லது மகிழ்விக்க வேண்டுமென்பதிலோ ஆர்வமின்றி, அதாவது காய்தல் உவத்தல் இன்றி, துலாக்கோலொத்த நடுநிலையினை அவையத்தார் பேண வேண்டும். தலைமையமைந்த காவிதிப்பட்டம் கட்டிய அமைச்சர் பற்றித் தொடர்ந்து விவரிக்கையில், நல்லதும் தீயதும் கண்டு ஆய்ந்து அடங்கியவர்சுள் என்றும், அன்பையும் அறனையும் என்றும் காப்பவர்கள் என்றும், புகழும் செம்மையும் நிறைந்தவர்களென்றும், பழியினை அஞ்சியவர்களென்றும் மாங்குடிமருதனார் கூறுகிறார். ஆட்சியதிகாரிகள் எத்தகைய பண்பினராய் இருக்க வேண்டும் என்று அவர் கருதினார் என்பதைப் புரிந்துகொள்ள முடிகிறது.

பட்டினப் பாலையில் (206—212) காவிரிப்பூம் பட்டின வணிகரைப் பற்றிக் கூறவந்த கடியலூர் உருத்திரங்கண்ணனார், 'நடுநிலை தவறாத நன்னெஞ்சினர், வடுவினை அஞ்சுபவர்கள், தம் சொத்தைப் போலவே பிறர் சொத்தையும் பேணுபவர்கள், அவர்கள் கொள்வதை மிகைபடக் கொள்வதோ கொடுப்பதைக் குறைபடக் கொடுப்பதோ இல்லை' என்றெல்லாம் விவரிக்கிறார். நாணயமான வணிகர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது குறித்த அவரது கருத்து அவதானிக்கத்தக்கது.

அன்றைய சமுதாயத்தில் உழவுத் தொழில் மிக முக்கியமான இடத்தினை வகித்தது. படைகளால் வரும் வெற்றிதானும் உழவால் விளையும் உணவின்றிக் கிடையாது என்றும் உழவரை ஓம்புவதன் வாயிலாகவே ஏனைக் குடிகளையும் பாதுகாக்கவியலுமென்றும் வெள்ளைக்குடி நாகனார் (புறம்—35) கூறியதை ஏலவே பார்த்தோம். குடபுலவியனார் என்ற புலவர் கூறியிருப்பதும் நோக்கத்தக்கது. 'உடலுக்கு உணவு கொடுத்தாரே உயிர் கொடுத்தவ

ராவர்; உணவை முதலாக உடையது உடம்பு; உணவென்று சொல்லப்படுவது நிலத்தொடு கூடிய நீர்; அந்நீரையும் நிலத்தையும் புணர்த்தியவர்கள் உடம்பையும் உயிரையும் படைத்தவ ராவர்' என்று அவர் (புறம்—18) இயம்புகிறார். உயிர் வாழ்க்கைக்கு உணவு இன்றியமை யாதது என்பதையும் அவ்வுணவினை உற்பத்தி செய்யும் உழவுத் தொழிலின் மேன்மையை யும் அப்புலவர் அரசன் ஒருவனுக்கு நயம்பட எடுத்துக் கூறியுள்ளார்.

சிறந்த இலக்கியம் வாழ்க்கை இயல்புகளையும் மானிட உணர்வானுபவங்களையும் வெளியிடுவதோடு அமையாது, உயர்ந்த எண்ணங்களைத் தூண்டுவதாகவும் மனிதாபி மானத்தை வளர்ப்பதாகவும் அமைய வேண்டும். மனிதாபிமானம் என்பது மனிதனை மதிப்பதையும், அவனது நலனிலும் மேம்பாட்டிலும் ஆர்வம் கொள்வதையும், அமைதியான சமுதாய வாழ்வுக்கு அனுகூலமான சூழலை விருத்தி செய்வதையும் உள்ளடக்கியதாகும்.

மனிதனை மதித்து அவனது நலனை நாடுபவர்கள், 'எல்லோரும் வாழ வேண்டும், உலகம் இன்புற்றிருக்க வேண்டும்' என்று கருதுபவர்கள், தீயவற்றை ஒழிப்பதிலும் நல்ல வற்றை வளர்ப்பதிலும் ஆர்வம் கொள்வர். தீயவை விலக்கப்பட வேண்டுமென்பதில் ஒரு சங்கப் புலவர் கொண்ட வேட்கை புறநானூற்றுச் செய்யுள் ஒன்றன் வாயிலாக விளங்குகிறது. ''நல்லது செய்ய இயலாவிட்டாலும் தீயவை செய்தலைத் தவிருங்கள்; அதுதான் எல்லோ ராலும் புகழப்படுவது மட்டுமன்றி நல்ல வழியிற் செலுத்துவதுமாகும்''. (புறம்—195) என்கிறார் நரிவெரூஉத்தலையார் என்ற அப்புலவர்.

மனிதாபிமானத்தின் உயர்ந்த நிலை எனத்தக்கது பொதுநலத்துக்காக ஒருவர் தம்மை அர்ப்பணிக்கும் தன்மை. அவ்வாறு பிறர் பொருட்டு வலிய முயற்சிகளை மேற்கொள்பவர்கள் இருப்பதனாலேதான் இவ்வுலகமே இயங்குகிறதென்கிறார் இளம்பெருவழுதி.

> ''உண்டா லம்மவிவ் வுலகம்.........
> ..........................
> தமக்கென முயலா நோன்றாட்
> பிறர்க்கென முயலுந ருண்மை யானே''. (புறம்—182)

என்ற அவரது அடிகள் திரும்பத் திரும்ப நினைவு கூரப்படுவனவாக விளங்குகின்றன. பிறர் பொருட்டுப் பெருமுயற்சிகளை மேற்கொள்ளும் பெரியோர் எத்தகைய இயல்பினராய் இருப்பர் என்பதையும் இளம்பெருவழுதி அழகுற எடுத்தியம்புகிறார். இந்திரர்க்குரிய அமிழ் தமே கிடைத்தாலும் அவர்கள் அதனை ஏனையவர்களோடு பகிராது தனித்துண்ணமாட் டார்கள் என்றும், அவர்கள் சினமும் அயர்வும் அற்றவர்கள் என்றும், புகழுக்குரிய காரியத் துக்காக உயிரையும் கொடுக்கக் கூடிய அவர்கள் உலகம் முழுவதும் அதனால் கிடைக்குமாயி னும் பழிக்குரியதைச் செய்யார் என்றும் அவர் கூறுகிறார். பிறர் நலன் நாடி உழைக்கும் உணர்வினை இளம்பெருவழுதி தூண்டும் திறன் மெச்சத்தக்கது.

அரசர் முறைதவறாது மக்களை ஓம்புதல், நடுநிலை தவறாது நீதி வழங்குதல், தீயவற்றைத் தவிர்த்து நல்லவற்றைச் செய்தல், துன்பம் கண்டவிடத்து அதனைத் துடைத் தல், விருப்பு வெறுப்புக்கு இடந்தராமலும் பெருமை சிறுமை பாராட்டாமலும் உலகினைப் புரிந்துகொள்ளல், பலனை எதிர்நோக்காது பிறருக்கு உதவுதல், சினம் காமம் பேராசை சோர்வு முதலானவற்றை விலக்குதல், கல்வியறிவினை வளர்த்தல், தொழிலில் நாணயத்தைக் கடைப்பிடித்தல், பிறர்பொருட்டு வலிய முயற்சிகளை மேற்கொள்ளல் முதலானவை சம்பந்த மான உணர்வுகளையும் சிந்தனைகளையும் சங்கப் புலவர்கள் தூண்டியும் வளர்த்தும் உள்ளனர். அது மனிதாபிமானத்தின் விளைவானது மட்டுமன்று; மனிதாபிமானத்தை வளர்ப்பதுமாகும்.

# ஐம்பதுடன பல நூறு ஆண்டு வாழ்க

செ. குணரத்தினம், ("தமிழ்த்துறைவன்")
தலைவர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

1. அருள்நந்தி மூதறிஞன் கவிதை பாட
அறிஞர்குழாம் வாழ்த்திசைக்கத் தமிழர்நெஞ்சின்
இருள்கடியும் ஞாயிறென எங்கள்வாழ்வின்
ஏற்றமென எந்நாளும் இசைபரப்பித்
திருவருளின் செயலிதென ஐம்பான் ஆண்டு
தமிழ்சங்கம் தலைநகரில் உதித்ததாமால்
மருளகற்றி இன்னும்பன் நூறுகாலம்
வளர்சங்கம் தமிழ்ச்சங்கம் வாழ்கமாதோ.

2. ஆண்டது தொள் ளாயிரத்து நாற்பத்திரண்டு
அமைவுற்ற பங்குனிகாண் இருபத்திரண்டில்
காண்தகைமை பூண்முதலி பொன்னம்பலவன்
கருதினிய முதற்தலைமை கண்டுவக்க
பூண்அழகு பொற்பமைந்த அறிஞர்பல்பேர்
புகழ்த்தலைமை பூண்டுவழி வழியாய்நிற்க
ஆண்டுநலம் ஐம்பதுகாண் கொழும்பு நகர்
அழகுபயில் தமிழ்ச்சங்கம் அவனிவாழ்க.

3. கட்டிடமும் கவினழகும் நூலகமும்
கண்டுநிற்கும் கொழும்பமைந்த சங்கம்மேலும்
வட்ட நிலா பொழிகதிரின் வண்ணமென்ன
வளர்கீதக் கதிர்பரப்பி வையம்மீது
தொட்டதெலாம் பொன்னாகத் துறைகள்தோறும்
சூழ்புலமை ஆய்வுமிகத் துலங்கிநாளும்
பட்டிமன்றம் பலகண்டே தமிழ்வளர்த்துப்
பலநூறு ஆண்டுகண்டு பண்பால்வாழ்க.

4. சமூகநலம் திறமைகண்டு போற்றுமாண்பு
சமநோக்கு எம்மதமும் தழுவும்நீர்மை
விவேகமுறும் மாணவர்க்காய் நிதியுதவி
வேண்டுவார் வேண்டுவது விளைக்குமாற்றல்
புவிபேணும் இயற்கைவளம் மாசுறாது
போற்றுகின்ற உலகினுக்கு நல்லுதவி
இவையெல்லாம் காண்பதுடன் தமிழ்ச்சங்கம்
இன்னும்பல சேவைநலம் இயற்றிவாழி.

5. சங்கங்கள் பலகண்டு தமிழ்வளர்த்தல்
தங்களது பணியென்று தமிழர்சொல்வார்
எங்கெங்கு இருக்கினுமெம் தமிழர்நெஞ்சம்
இவ்வாய்மை மறத்தலிலை யென்றறிவோம்
பொங்குதமிழ் இன்பமெலாம் புவியிற்சூடிப்
பொற்காலம் மீண்டும்யாம் பெற்றோமென்று
செங்கமலத் தமிழ்ச்செல்வி பங்கயத்தாள்
சீரிளமைத் திறன்வியந்தே சிறந்துவாழி.

6. நூலறிந்தோர் நுண்ணறிவோர் புலமையாளர்
நுவலரிய தகைமைபெறு சான்றோர்நெஞ்சின்
பாலிருந்து பயில்தமிழே! இளமைமாறாப்
பைந்தொடியே! வள்ளுவனும் கம்பனென்ற
சீலமறி கவிவேந்தும் சிலம்பின்கோவும்
சிந்தைமகிழ் பாரதியும் வழுத்தும்நங்காய்!
கோலஎழில் மேன்மேலும் பொலிவுகூரக்
கொழும்புமகிழ் சங்கமிதைக் கூடிவாழி.

7. பேரறிஞர், வாய்மையொடு தலைமைதாங்கப்
பெட்பார்ந்த தமிழறிஞர் அரவணைக்க்
பாரறிந்த இடமெல்லாம் புகழேபூக்கப்
பண்பாளர் மோனத்தின் தவம்பலித்துக்
கார்மஃழயாய்த் தமிழ்ப்பயிரைக் காதலிக்கக்
கல்விநலம் புலமைநலம் கனிந்துநாளும்
சீர்அறிஞர் செங்கோலாய்த் தமிழர் வாழ்வின்
சிந்தையெலாம் இனித்துமகிழ் திருவேவாழி.

---

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தளராத தமிழ்ப் பணிகளைக் கண்டு இறும்பூதெய்தினேன். இச்சங்கத்தை நடாத்துகின்ற பெருமக்கள் மதிப்பிற்குரியவர்கள் பாராட்டற்குரியவர்கள். இவர்கள் பண்பாடும் அமைதிப் போக்கும் நெஞ்சை அள்ளுகின்றன. இவர்களுடைய தொண்டு வெல்லுவதாக.

இ. பாலசுப்பிரமணியம்
பேராசிரியர், சென்னைப் பல்கலைக்கழகம்
10.05.77

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் இலக்கியப் பணிகளுக்கு என்னுடைய பாராட்டுதல்கள்.

மு. மு. இஸ்மாயில்
நீதிபதி, உயர் நீதிமன்றம், சென்னை
18.05.76

---

# வாழ்த்துப்பா

## கொழும்புத் தமிழ்ச் சங்கம்

அரனருள் தமிழ் மொழி அறநெறி வாழ்க
ஆன்மிக நெறிதனி வாழ்க. ( —அர)

1. இலகெழில் உறுமுயர்கொழும்பு நன் னகரில்
ஏய்ந்திடு செழுந்தமிழ்ச் சங்கம்
அலகில் பல் பணிகள் தமிழ்மொழிக் காற்றி
ஆண்டுகள் ஐம்பது நிறைவே. ( —அர)

2. ஆண்டுபல் லாயிரம் ஆயினும் அன்னைதன்
ஆற்றலும் இளமையும் அகலாள்
வேண்டிய பல்கலை நவனொடும் அன்னை
மேதினி போற்றிட வாழ்க. ( —அர )

3. பழந்தமிழ் இலக்கிய மரபு வழாது
பாரினில் ஒளிர்தமிழ் அன்னை
வளந்தவறாது புதுமைகள் ஆய்ந்து
மனநிறை வொடுதினம் வாழ்க. ( —அர )

4. வள்ளுவர் கம்பர்இளங் கோமுதற்புலவர்
வளர்த்தநம் தமிழ் மொழி என்றும்
தெள்ளு தமிழ்ச்சுவை ஊட்டிநின் றுலகில்
திறனொடும் நீடூழி வாழ்க. ( —அர )

புலவர் **வி. சிவலிங்கம்**
**25, சிறில் லேன், தாண்டவன் வெளி,**
**மட்டக்களப்பு.**

---

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் புதிய மண்டபத்திலே எடுத்த முதலாவது விழாவிலே **உ**ரையாற்றுகிற வாய்ப்பு இன்று கிடைத்தது. சங்கத்தின் எதிர்காலப் பணி சிறக்கும் **என்**பதற்கு இன்றைய விழா எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. சங்கப் பணியைப் போற்றி **மே**லும் சிறப்படைய வாழ்த்துகிறேன்.

தங்கம்மா அப்பாக்குட்டி
'சிவத்தமிழ்ச் செல்வி'
தெல்லிப்பழை.
04.10.76

# அரிச்சுவடி அமைப்பில் ஆன்ம ஞான வைப்பு

—o—

கலாநிதி க. செ. நடராசா

அரிச்சுவடி என்பது, அரியின் சுவட்டை உடையது எனப் பொருள்படும். அரி என்பது காக்கும் இறைவனைக் குறிக்கும். எனவே, அரிச்சுவடி என்ற பதம், இறைவனின் சுவட்டை உடையதாக அமைக்கப்பட்ட ஒன்று என்ற பொருளைக் காட்டி நிற்கும். அந்தச் சுவட்டின் வழியே சென்றால், இறைவனை அடையலாம் என்பது ஆன்றோர் கருத்தாகும். அரிச்சுவடி கற்றால், இறை இலக்கியங்களையும், ஆன்ம ஞான நூல்களையுங் கற்று ஈடேற்றம்பெற வழி காணலாம் என்ற பொருள் அரிச்சுவடி என்ற பதத்தில் அடங்கியுள்ளது. அன்றியும், அரிச்சுவடி அமைப்பிலே அந்தத் தத்துவத்தைப் புகுத்தியிருப்பது, ஆன்றோர் அறிவின் திறனை எடுத்துக் காட்டுவதாகும்.

உயிர் எழுத்தும் மெய் எழுத்தும் என வகுத்து, உயிரும் மெய்யும் ஒன்று சேருமிடத்திலேயே இயக்கம் ஏற்படுகிறது என்றும், உயிர் தனித்து இயங்கினாலும், மெய் தனித்து இயங்குவதில்லை என்றும், உயிரின் முன்னேற்றம் உடலின் சேர்க்கையினால், விருத்தியாகிறது என்றும், மெய் நீங்கிய விடத்தும் உயிரின் இயக்கம் நீங்குவதில்லை என்றும், உயிரே ஆய்தம் என்ற இறைவனை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்றும் தமிழ் மக்கள் கொண்டிருந்த ஆன்ம தத்துவத்தை அரிச்சுவடி அமைப்பிலே அடக்கி வைத்திருக்கிறார்கள். ‘அகர முதல எழுத்தெல்லாம்’ என்பது, எழுத்துக்கள், எல்லாவற்றுக்கும் அகரம் முன்னாக உள்ளது என்பது மட்டுமன்றி, அகரமே எழுத்துக்களின் முதலாக—மூலமாக—உள்ளது. என்பதும் பொருளாகும். ஆதி பகவன் உலகுக்கு மூலப் பொருளாயிருத்தல் போல, அகரமே எழுத்துக்களின் உயிர். எல்லா எழுத்துக்களிலும் அகர ஒலி செறிந்திருக்கிறது. அகர உயிரே எழுத்துக்களுக்கு இயக்கத்தைக் கொடுக்கிறது. அந்த அகர உயிர் தோன்றியதும், ஆசை அணுகுகிறது என்ற குறிப்பைக் காட்டுவது, அகரத்தை அடுத்து நிற்கும் ஆகார ஒலியாகும். அந்த நிலையிலே உயிர் இன்பத்தை நாடுகிறது என்ற தத்துவத்தை இகர ஒலி குறித்து நிற்கும். இன்பத்தின் விருத்தி நிலையை ஈகார ஒலி காட்டும். இன்பத்தை நாடி நிற்கும் பற்றுள்ள உயிரைத் துன்பம் வந்து உறுத்துவதுமுண்டு என்ற உலகியல் உண்மையை அறிவுறுத்தி நிற்பது உகர ஒலியாகும். இ, ஈ என்பன இன்பத்தைக் குறிக்கும் சிரிப்பொலி போல, உ, ஊ என்பன நோவை அல்லது துன்பத்தைக் குறிக்கும் ஒலிகளாம். ஊகார ஒலி, மிக்க வேதனை நிலையைக் குறிப்பதாகும். ஆசை அண்மிய நிலையிலே நின்ற உயிர், இன்பத்தை நாடி ஏகும் போது, துன்பம் வந்து சேர்ந்ததும், என்ன காரணத்தால் இன்ப நிலையிலே துன்பம் வந்து சூழ்கிறது என எண்ணத் தொடங்குகிறது என்ற தத்துவத்தைக் குறிப்பது எகர ஒலியாகும். ஏகாரம் முதிர்ந்த விசார நிலையைக் குறித்து நிற்கும் ஒலி. எகர ஏகார ஒலிகள் வினாக் குறிப்பை உடையன என்பது தெளிவு. அடுத்துள்ள ஐகார ஒலி, அகர இகர ஒலிகளின் இணைவேயாகும். விசார நிலையை அடைந்த உயிர், ஆசையின் அரவணைப்பை விட்டகன்றால், இன்ப நிலையோடு இணைந்திருக்கலாம் என்ற தத்துவத்தை விளக்குவது ஐகார ஒலியாகும். ஒ, ஓ என்பன தேற்றப் பொருளை உடையன. தத்துவ விசாரத்தினால் உயிருக்குத் தெளிவு பிறக்கும் நிலையைக் குறிப்பன ஒ, ஓ என்ற ஒலிகளாகும். ஓ என்பது தெளிவு நிலையின் முதிர்வைக் குறிக்கும். தேற்றம் பெற்ற உயிர் (அ), பற்றற்ற நிலையிலே துன்பத்துடன் (உ) இணைந்துந்

துயருறா திருக்கலாம் என்ற உண்மையை விளக்க ஒளகார ஒலி வகுக்கப்பட்டது. அ, உ என்ற ஒலிகளின் சேர்க்கையே ஒள என்ற ஒலியாகும். ஐகார ஒளகார எழுத்துக்கள் இன்றியே அவ்வொலிகளைப் பிறப்பிக்கத் தக்க வாய்ப்பிருந்தும், அவற்றை ஆக்கிய தன் காரணம், அவை சுட்டும் தத்துவப் பொருளைக் காட்டுவதற்கே எனலாம்.

ஆசை அணைந்ததால் இன்ப துன்பங் களை அனுபவித்து இளைத்த உயிர், ஆசை யினின்று நீங்கினால் இன்ப துன்பங்களி னாற் பாதிக்கப்படாமல் அவற்றுடன் இணைந்தும் வாழலாம் என்ற ஞானத்தைப் பெற்று, இறைவனை அணுகிச் செல்லும் என்ற விளக்கத்தை ஊட்ட, உயிரின் முதிர் ச்சி நிலையைக் குறிக்கும் ஒள காரத்தை அடுத்து ஆய்தம் வைக்கப்பட்டுள்ளது. இந்த ஆய்தம் இறையின் தன்மையைக் குறிக்க, உயிருக்கும் மெய்யுக்கும் அப்பாற்பட்டதாக அமைக்கப்பட்டுள்ளது. அது உயிருமன்று, மெய்யுமன்று. இறையின் அருவுருவான வடி வத்தைக் குறிக்க அதற்குப் புள்ளி உருவங் கொடுத்திருக்கிறார்கள். ஏறக்குறைய 2,500 ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட தொல்காப்பியம் என்ற ஆதித் தமிழ் இலக். கண நூலில், எழுத்துக்களின் ஒலி வடிவங் கூறிய தொல்காப்பியனார், ஆய்தம் ஒன்றி னுக்கே ஒலி வடிவஞ் கூறாது வரி வடிவங் கூறியிருக்கிறார். 'ஆய்தம் என்ற முப்பாற் புள்ளி' என்று கூறுவதிலிருந்து, அது ஒலி வடிவு காட்டி உணர்த்த முடியாத ஒன்று என்று தெரிகிறது. படைத்தல், காத்தல், மறைத்தல் ஆகிய முத்தொழில் கொண்ட ஒரு பொருள் இறை என்ற உண்மையை விளக்க முப்பாற் புள்ளி உருக் கொண்ட ஓரெழுத்தாய் அதனை அமைத்திருக்கிறார் கள். அது ஆய்ந்துணர்ந்து அறியப்பட வேண்டிய ஒன்று; அதுவும் தம்முள்ளே தாம் ஆய்ந்து காண வேண்டிய ஒன்றாகும் என்ற தத்துவத்தைக் குறிக்கவே அதற்கு ஆய்தம் எனப் பெயரிட்டுள்ளனர். அது 'கடவுள்' என்ற சொல்லை ஒக்கும். எல்லாவற்றையும் கடந்து நிற்கும் பொருள் என்றும், எல்லா வற்றிலும் உள் உறைந்து நிற்கும் பொருள் என்றுங் கருத்தமையக் கடவுள் என்ற சொல் அமைந்திருத்தல் போலவே ஆய்தம் என்ற எழுத்தும் அமைந்துள்ளது. உயிருக் கும் மெய்யுக்கும் புறம்பாகவும், அவற்றிற்கு அன்னியமாக வன்றியும், உயிரின் இன்ப துன்ப அனுபவ முதிர்வில் ஞானத்தாற் காணப்படத்தக்கதாகவும் அமைந்திருப்பதே இறைத் தத்துவங் காட்டி நிற்கும் ஆய்தம் என்ற எழுத்தாகும்.

'அ' என்ற ஒன்றே மூல உயிரைக் குறிக் கும் எழுத்தாக அமைக்கப்பட்டுள்ளது. ஏனைய உயிர் எழுத்துக்கள் எனக் கூறப் படுபவை அம்மூல உயிரின் வெவ்வேறு வளர் ச்சி நிலைகளைக் குறிப்பவையாகும். உயிர் அனைத்தும் ஒன்றன் விரிவே என்ற தத்து வம் இதனாற் பெறப்படும். உயிரின் இலக்கு இறையினை அண்டுதல் என்பதனையும், இறை பலவாகத் தோன்றினும் உண்மையில் ஒன்றே என்பதனையும் ஆய்தம் அமைக்கப் பட்டிருக்கும் இடமும் முறையும் குறிப்பா கக் காட்டுவனவாம். உயிரின் விருத்தியி னைத் தமிழ் எழுத்தமைப்பிற் காட்டிய முறை, தமிழ் மக்கள் கொண்டிருந்த ஆன்ம ஞானக் கருத்தினை ஒட்டியதாக இருப்பத னைக் கண்டு வியப்பெய்தலாம்.

தமிழ் மெய்யெழுத்துக்களின் அமைப்பு முறையிலும் இதனையொத்த தத்துவநெறி விளங்கக் காணலாம். க், ச், ட், த், ப் என்ற ஐந்து வல்லெழுத்துக்களை அடுத்து ங், ஞ், ண், ந், ம் என்ற ஐந்து மெல்லெழுத் துக்களை முறையே சேர்த்தும், அவற்றின் பின் ய், ர், ல், வ், ழ் என்ற ஐந்து இடை யெழுத்துக்களைப் புறம்பாக அமைத்துங் காட்டியிருத்தல் உலகியல் ஞானத்தை ஒட் டியதாகும். குறித்த வல்லெழுத்து ஐந்தும் ஆணினத்தைக் குறிப்பனவாகவும், அவற் றின் இனமாய மெல்லெழுத்தைந்தும் மெல் லியர் இனத்தைக் குறிப்பனவாகவும், இடை யெழுத்தைந்தும் ஆணும் பெண்ணுமற்று அவ்விருபாற்கும் இடையாய அலியினத் தைக் குறிப்பனவாகவும் அமைக்கப்பட்டுள் ளன. மக்களுக்காகவே எழுத்தாகையால், உலகிலுள்ள முப்பாலின மக்களைக் குறிக் கும் பகுப்பினை மெய்யெழுத்துக்களின் அமைப்பிலே காட்டியிருக்கிறார்கள். ஆணும் பெண்ணும் இணையும் இன்மாகையால் மெல்லெழுத்தைந்தையும் அவற்றின் இன மாய வல்லெழுத்தைந்தின் அயலே முறை யாக அமைத்தும், அலியினம் அவற்றுடன்

இணையாததாகையால் அதனைச் சுட்டும் இடையினத்தை வேறாக அமைத்தும் உலகியல் நெறி புலப்படுத்தப்பட்டுள்ளது.

ஒவ்வொரு இனத்திலும் முதலில் ஐந்தைந்து எழுத்துக்களை அடுக்கி, இறுதியில் இனத்துக்கு ஒன்றாக ள், ற், ன் என்ற எழுத்துக்களை அமைத்திருக்கும் முறையும், பழந் தமிழ் மக்கள் கொண்டிருந்த தத்துவ ஞானக் கருத்தினை அடிப்படையாகக் கொண்டதேயாகும். மக்கள் மெய் பஞ்ச பூதங்களின் சேர்க்கையாலாகிப் புலப்படத் தக்க ஐந்து புலன் உறுப்புக்களைக் கொண்டுள்ளன என்ற தத்துவத்தை ஓட்டி, ஒவ்வொரு இனத்திலும் ஐந்து எழுத்துகள் வகுக்கப்பட்டுள்ளன. தெற்றெனப் புலப்படாது, ஓர்ந்துரை வேண்டிய ஆறாவது அறிவாய பகுத்தறிவுக்குக் காரணமான மனம் (புத்தி), ஆண், பெண், அலியாகிய ஒவ்வொரு இனத்துக்கு முண்டு என்பதைக் குறிக்க, 'ள்' என்ற ஆறாவது இடையின எழுத்தையும், 'ற்' என்ற ஆறாவது வல்லின எழுத்தையும், 'ன்' என்ற ஆறாவது மெல்லின எழுத்தையும் இறுதியிலே சேர்த்திருக்கிறார்கள். எனவே, ஆறாவது அறிவு ஒன்று மக்களுக்குண்டு என்பதும், அது அவர்களுக்குள்ள ஐயறிவுக்கு அப்பாற்பட்டது என்பதும், அது ஐயறிவின் வெளிப்பாட்டின் இறுதியிலே தோன்றுவது என்பதும் ள், ற், ன் என்ற மெய்யெழுத்துக்களின் அமைப்பிலுள்ள தத்துவப் பொருளாம். இத்தகைய மெய்கள் மீது உயிர் ஏறி, ஆசை பற்ற, இன்பம், உபத்திரவம், ஏன் எனும் விசாரம் ஆகிய நிலைகளையடைந்து, ஐ எனும் ஆசையின்கன்ற இன்ப இணைவு, ஓ எனும் தெளிவு, ஔ எனும் இன்பதுன்பச் சமநிலை முறையே பெற்று, மெய்யினீங்கி, ஆய்தம் எனும் தனிப் பொருளை அடையும் என்ற தத்துவம், உயிர்மெய் எழுத்துகளின் அமைப்பிலே பொதிந்து கிடப்பதை உணரலாம். அதனாலேதான் உயிர்மெய் எழுத்துக்களின் வரிசைகளிலே ஆய்தம் இணைக்கப்படவில்லை. அன்றேல், கஃள, ஙஃன, சஃள.......... என்ற எழுத்துக்களை அடுத்து கஃ, ஙஃ, சஃ......... என்று அமைந்திருக்க வேண்டுமல்லவா?

ந், ர், ழ் என்ற ஒலிகள் முன்னரேயிருப்ப, அவற்றை ஓரளவு ஒத்த ன், ற், ள் என்ற ஒலி பெற்ற எழுத்துக்களை அரிச்சுவடியின் இறுதியிலே சேர்த்தமைக்கு மற்றோர் காரணமுண்டு. ஒவ்வோர் இனத்திலும் ஆறாவது அறிவைக் குறிக்கும் ள், ற், ன் என்ற எழுத்துக்கள், அவ்வவ்வினங்களின் ஐயறிவைக் குறிக்கும் மெய்யெழுத்துக்களுக்குப் புறம்பாக அமைந்திருப்பினும், ஒலியில் ஓரளவு ஒற்றுமை காட்டி நிற்பது, மக்களது ஆறாவது அறிவு, அவரது ஐயறிவுக்கு முற்றும் அப்பாற்பட்டதுமன்று என்பதைக் காட்டுவதாகும். மெய்யெழுத்துக்களை முதலில் ஐந்தைந்தாக வகுத்திருப்பதற்கு மற்றோர் காரணம், மக்கள் மெய் முக்கியமாக ஐந்து பூதங்களையும், ஐந்து பொறிகளையும், ஐந்து புலன்களையும் கொண்ட சேர்க்கையே என்பதை உணர்த்துவதற்காகுமெனலாம். மக்கள் உடலையும் உயிரையும் அடிப்படையாகக் கொண்டெழுந்ததே தமிழ் மக்கள் கொண்ட சமய தத்துவக் கோட்பாடாகும். தமிழ் நாட்டிலெழுந்த கோயில் அமைப்பு முறையும், அக்கொள்கையை ஒட்டியே, மனித உடல் வடிவத்தில் ஆக்கப்பட்டுள்ளதாகும். கோபுர வாயில் பாதமாகவும், கொடித் தம்பம் குறியாகவும், பலிபீடம் வயிறாகவும், மகா மண்டபம் மார்பாகவும், முக மண்டபம் முகமாகவும், ஆதிமூலம் தலையாகவும், இரு வீதிகள் கரங்களாகவும் அமைந்த ஆலயத்திலே, இறைவனை ஆதிமூலமாய தலைத்தானத்திருத்தல், உடல்தோறும் இறைவன் உயிராக உள்ளான் என்ற தத்துவத்தை விளக்குவதாகும். தமிழ் எழுத்தமைப்பிலும் இத்தத்துவத்தை விளக்குவதற்காகவே, இறையம்சம் உற்ற உயிர், மெய்தோறுமேறி உயிர்மெய்யாய் விளங்குவதாகக் காட்டியிருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் கொண்டிருந்த சித்தாந்த சமய சாரத்தினை அவர்கள் வகுத்த எழுத்தமைப்பிலே புகுத்தி மறைபொருளாக வைத்திருப்பது, அவர்களது சமயக் கிரியை முறைகளுக்கு இணைந்ததாகவே அமைந்திரு திருக்கிறது. ஆதி தொட்டே தமிழர் சமுதாயத்தில் இருந்துவந்த இலிங்க அமைப்பு, முருக தத்துவம், நடராச வடிவம், திருநீறு, நிறைகுடம்..... ஆகிய போன்றவை ஆழ்

ந்த கருத்தினை உள்ளடக்கி, விசாரத்தினாலன்றி வெளிப்படுத்தாதன போலவே தமிழ் அரிச்சுவடி அமைப்பும் அமைந்திருக்கிறது. அருவுருவான இறைவனை வடிவம் வடிவமற்றதுமான இலிங்க அமைப்பிற் காட்டியுள்ளவாறு, அப்பரம் பொருளை அரிச்சுவடியிலே வடிவும் வடிவமற்றதுமான முப்பொருளின் கூட்டான தனிப்பொருளாகக் காட்டப்பட்டுள்ளது. அது உயிராகவும் மெய்யாகவும் வெளிப்படாது மறைபொருளாயிருக்கும் இலிங்கத்தின் ஆவுடையார், உட்புதைந்த மறு பாதியை ஒக்கும். அப்பாதியே நாம் ஆய்ந்துணர்ந்து அறிய வேண்டிய் ஆய்தம் ஆய பொருளாம். புலப்படத் தோன்றும் இலிங்கத்தின் மேற் பகுதியே உயிராகவும் மெய்யாகவும் பரிணமித்திருக்கும் இறையம்சத்தைக் குறிப்பதாயுள்ளது. அப்பகுதியே அரிச்சுவடியில் உயிர் எழுத்தாகவும், மெய்யெழுத்தாகவும், உயிர்மெய் எழுத்தாகவும் மலர்ந்திருக்கிறது. அது இம்மைக் குரியது; ஆய்தம் குறிக்கும் பகுதி மறுமைக்குரியது.

அண்ட சராசரம் அனைத்தும் அணுக்களின் ஈட்டத்தினால் ஆனவையே. அணு ஒவ்வொன்றும் நியூற்றோன் (Neutron) களின் ஈட்டமாகும். நியூற்றோன் ஒவ்வொன்றும் புறோற்றோன் (Protron), இலெக்றோன் ( Electron ) ஆகியவற்றின் சேர்க்கையாம். எனவே நியூற்றோன், புறோற்றோன், இலெக்றோன் ஆகியவற்றின் தொகுப்பே அண்ட சராசரத்து ஆதி அணு எனலாம். அந்த ஆதி அணுவைக் குறிக்கும் அடையாளமே ஆய்தம் (ஃ) என்ற முப்பாற் புள்ளி வடிவாம். ஒரு நியூற்றோனில், புறோற்றோனானது இலிங்க வடிவில் மேல் கீழாக இயங்கிக் கொண்டிருக்கும். இலெக்றோனானது இலிங்கத்தைத் தாங்கி நிற்கும் ஆவுடையாரின் வட்ட வடிவத்திலே புறோற்றோனைச் சுற்றி வந்து கொண்டிருக்கும். எனவே ஆதித் தமிழ் மக்கள் வகுத்து வணங்கி வந்த இலிங்க வடிவமானது, அண்டத்து மூல அணுவைக் குறிக்கும் அமைப்பெனலாம். அந்த மூல அணுவின் விரிவே அண்ட சராசரமாம்.

பழந்தமிழ் மக்களின் பரம்பரைத் தெய்வமயை முருகன் வழிபாட்டில் மலர்ந்த கந்தன் கதையிலும் இவ்வாறே பெருந்தத்துவப் பொருள் புதைந்திருக்கக் காணலாம். அங்கு முருகன் பரமாத்மாவைக் குறித்து நிற்க, வள்ளி சீவாத்மாவைக் குறித்து நிற்கும். சீவாத்மா ஐம்புல வேடரின் அவத்தையில் நீங்கி, அகங்காரமாகிய சூரனை ஒழிக்க வல்ல பரமாத்மாவை அடைய ஆற்றும் முயற்சியே கந்தபுராணக் கதையாம். அரிச்சுவடியிலே அகரம் சீவாத்மா—வள்ளி; ஆய்தம் பரமாத்மா—முருகன். உயிர், மெய்யிலேறி உலக அனுபவங்களைப் பெறுதலே உயிர்மெய் எழுத்துக்களின் குறிப்பு. அனுபவ முதிர்வில், மெய்யும் பொய்யாமென உணர்ந்து, மெய்யை விட்டகன்று உயிரானது எய்த முயலும் நிரந்தர மெய்ப் பதமே ஆய்தம். உடல் நிரந்தரமற்ற—பொய்யான மெய்; மெய்போலத் தற்காலிகமாக—மெய்ஞானம் மலரும் வரை—தோன்றுவது. அதனாலேதான் மெய்யெழுத்துக்கு ஒரு புள்ளி. நிரந்தர மெய்யான—பரமாத்மாவாய — ஆய்தத்துக்கு மூன்று புள்ளி. பொய்யாகும் உடலும் மெய்யின் இயல்பைக் காட்டி நிற்ப நிற்பதால் மெய்யெனப்பட்டது. உண்மை ஞானம் உதயமாகும்போது, ஒரு புள்ளியோடு அமைவது உண்மையான மெய்யன்று; முப்பாற் புள்ளி பெற்ற பரமாத்மாவே நிரந்தர மெய் என்னும் தெளிவு பிறக்கும். உடலிலும் பரமாத்மாவின் அம்சம் ஓரளவுண்டு என்பதைக் குறிப்பதற்காகவே, ஆய்தத்துக் குரிய முப்பாற் புள்ளிகளில் ஒரு புள்ளி மெய்யெழுத்துக்கு அளிக்கப்பட்டுள்ளது. பழந்தமிழ் எழுத்துக்களில் எகரமும் ஒகரமும் புள்ளி பெற்றிருந்தன எனத் தொல்காப்பியங் கூறும். உயிரானது விசார நிலையை எய்தும் போதும், அதனைத் தொடர்ந்து தேற்ற நிலையை அடையும் போதும் அதற்குத் தெய்வாம்சம் கூடுகிறது என்பது அதன் குறிப்பாகும். உயிரானது மெய்யிலேற, மெய்யெழுத்துக்குரிய புள்ளி மறைந்து விடுகிறது. அது, உயிர் உடலிலே சேர்ந்து வரும்போது, அவ்வுடலிலுள்ள தெய்வாம்சம் வெளிப்படையாக இல்லாது மறை பொருளாகி விடுகிறது என்பதைக் காட்டி நிற்கும். உயிர் உடல்மேற் செறியும் போது, உயிரம்சம் கரந்தும் மெய்யம்சம் பரந்தும் தோன்றுவதையொத்து, உயிரெழுத்து மெய்யெழுத்தில் ஏறிவரும் போது, மெய்யெழுத்தின் பகுதியே மிகுந்தும், உயிர்

எழுத்தின் பகுதி சுருங்கியும் அமைவதை அவதானிக்கலாம். அது, வெளிப்படையாக மெய்போலத் தோன்றுவது உடல் என்பதையும், அனுமானத்தாலன்றிக் கண்டு தெளிய முடியாதிருப்பது உயிர் என்பதையும் விளக்குவதாம். அதனாலேதான் உடலை மெய்யென்று கூறும் வழக்கமும் ஏற்பட்டிருக்கலாம்:

தமிழ்ச் சான்றோர் வகுத்த தாண்டவக் கோன் (நடராச) வடிவ அமைப்பிலும், இதனையொத்த தத்துவப் பொருள் பொதிந்து கிடக்கக் காணலாம். பரம்பொருளின் பஞ்ச கிருத்தியங்களை உருவகித்துக் காட்டும் அவ்வடிவில், ஊன்றிய கால் மாயா சக்தியாகவும், தூக்கிய கால் அருட் சக்தியாகவும் உணர்ந்து, ஆன்ம ஞானமடைய மாயா சக்திக் கால் தூக்கப்பட்டு (மாயையகன்று), அருட் சக்திக்கால் (தெய்வஅருள்) சீவாத்மா மீது பதியத் தக்கதாகக் கால் மாறி ஆடும் நடனங் காண முயலும் முயலகன் தவிப்பு, சீவாத்மா பரமாத்மாவை நாடியேகும் முயற்சியைச் சித்திரித்துக் காட்டுவதாகும். அதே கருத்து அரிச்சுவடி அமைப்பிலும் காட்டப்பட்டுள்ளது. அகரம் சீவாத்மா; ஆய்தம் பரமாத்மா. அந்தச் சீவாத்மா ஆய்தமாகிய பரமாத்மாவையடைய முயன்று பெறும் அனுபவங்களே உயிர்மெய் வடிவங்கள்.

பசுவின் கரிய மலத்தினை அக்கினியினாற் சுட்டு வெண்ணீறாக்கிய திருநீறு, ஆன்மாவாகிய பசுவின் ஆணவம், கன்மம், மாயையாகிய மலங்களைத் திருவருள் ஞான அக்கினியினாற் சுட்டு நீறாக்க வேண்டுமென்ற உட்கருத்தினை மக்களுக்குத் தினமும் அறிவுறுத்திக் கொண்டிருக்க வேண்டுமென்பதற்காக அணிந்து கொள்ளும் தத்துவத்தின் உட்கிடக்கை அரிச்சுவடியமைப்பிலுமுண்டு. அதில் அகரம் பசுவாகிய ஆன்மாவாகவும், ஆய்தம் திருவருட் பிளம்பாகவும், வல்லினம், மெல்லினம், இடையினமாக வகுக்கப்பட்ட மெய்யெழுத்துக்கள் ஆணவம், கன்மம், மாயையாகிய மும் மலங்களாகவும், உயிர்மெய்யெழுத்துக்கள் ஆன்மாவாகிய பசு ஆணவம், கன்மம், மாயையாகிய மும் மலங்கள் வசப்பட்டுப் பெறும் உலகியல் அனுபவமாகவும் அமையும்.

குடம் உடலாகவும், தேங்காய் தலையாகவும், ஐந்து மாவிலை ஐம்பொறிகளாகவும், குடத்தக நீர் உடலுறை உயிராகவும், குடத்தைச் சுற்றிக் கட்டப்படும் நூல் பந்த பாசமாகவுங் கருதி, மனித உடலமைப்பில் ஆக்கப்படும் கும்பத்து நீரைப் பலவித பூசையின் பின் இறையுரு மீது சேர்த்து, உயிரான்து உலக அனுபவங்களிலே தேறி ஆன்ம ஞானம் பெற்று இறையொடு கலக்கும் என்ற உண்மையைக் கும்பாபிடேக வைபவத்திற் பாவனை செய்து காட்டும் முறைக்கும், அகரம் உயிராகவும், மெய்யெழுத்துகள் ஐம்பொறியும் அறிவுங் கொண்ட உடலாகவும், உயிர்மெய்யெழுத்துக்கள் பந்த பாசங்களாகவும், ஆய்தம் இறையாகவுங் கருதிச் செய்யப்பட்ட அரிச்சுவடி அமைப்பு முறைக்கும் உள்ள நெருங்கிய ஒற்றுமையை உற்று நோக்கி உணர்ந்து கொள்ளலாம்.

இவ்வாறே பண்டைத் தமிழர் மேற்கொண்டிருந்த சமயக் கிரியை முறைகள் பலவற்றுக்கும், அவர்கள் வகுத்த அரிச்சுவடியமைப்புக்கும் நெருங்கிய தொடர்பும் ஒற்றுமையும் இருப்பதைக் காட்டலாம். உண்மையில் அவர்கள் கொண்டிருந்த சமய, ஞானக் கருத்தினை உள்ளடக்கியே அரிச்சுவடி எழுத்து முறையை வகுத்துக் கற்போருக்கு ஆத்ம ஞான தத்துவத்தைக், குறிப்பாக உணர்த்த முயன்றிருக்கிறார்கள். உயர்ந்த தத்துவ ஞானக் கொள்கைகளை மறைபொருளாக உரைப்பதே ஆன்றோர் மரபாகும். அதற்கிணையவே அரிச்சுவடியயமைப்பில் ஆத்ம ஞான வைப்புச் சூக்குமமாக இடம் பெற்றிருக்கிறது. தமிழ் எழுத்துக்கள் இறை தத்துவத்தை உணர்த்துவனவாகையாற்றான், 'எழுத்தறிவித்தவன், இறைவனாவன்' என்ற வாய்மொழி எழ ஏதுவாயிற்றெனலாம்.

இதே ஆத்ம ஞான தத்துவம் வடமொழி எழுத்துக்கும் இயைவதோ எனில், இல்லையென்றே சொல்ல வேண்டும். வடமொழியிலே உயிரெழுத்திலும் மெய்யெழுத்திலும் எழுத்துக்கள் தமிழ் மொழியை விடப் பல மேலதிகமாய் இருத்தலாலும், உயிரெழுத்துக்களிற் சில குறிலற்றனவாயிருத்தலாலும், ஆய்தம் என்றொன்றில்லை யாதலாலும், அதற்குச் சமமான விசர்க்கத்தின் வடிவு

முப்பாற் புள்ளியாயில்லாது இருபாற் புள்ளியாயிருத்தலாலும், விசர்க்கத்துக்குரிய புள்ளி மெய்யெழுத்துக்கில்லாததாலும், தமிழ் அரிச்சுவடியமைப்புக் காட்டும் ஆன்ம ஞான தத்துவம் வட மொழி எழுத்தாக்கத்துக்கு அமையாது என்று திடமாகக் கூறலாம். வட மொழி எழுத்தமைப்பு ஆரியரின் தனி ஆக்கமா அல்லது பிறிதொன்றைத் தழுவிச் செய்யப்பட்ட ஒன்றா என்ற சந்தேகத்தை அதன் பெயராய 'சம்ஸ்கிருத' (சம்—நன்கு, ஸ்கிருத—செய்யப்பட்டது) என்ற சொல்லே தூண்டி நிற்கிறது. வட மொழி எழுத்தமைப்பு ஆரியரின் தனி ஆக்கமென்றால், அவர்கள் வாழ்ந்த, புகுந்த பிற தேசங்களிளெல்லாம் ஆரியரின் சொற்பதங்கள் செறிந்திருத்தல் போல வடமொழி எழுத்தமைப்பும் பரந்திருக்க வேண்டும். அவ்வாறன்றி, வட மொழியாகிய சம்ஸ்கிருதம் இந்திய கண்டத்துக்கே உரியதாகையால், அதன் எழுத்தமைப்பும், ஆரியர், வருகைமுன் இந்திய தேசத்திருந்த பிற மொழி எழுத்தமைப்பை ஒட்டியே ஆக்கப் பட்டிருக்க வேண்டும். அன்றியும், சம்ஸ்கிருத எழுத்தின் பெயர் தேவ நாகரி என்றிருத்தலால், அது ஆதியில் இந்திய கண்டத்துப் பரந்திருந்த நாகரின் மொழி எழுத்துக்களைத் தழுவிச் செய்யப்பட்டுத் 'தேவ' என்ற அடையிட்டு நாகர் மொழி எழுத்திலிருந்து பிரித்தறியப்பட்டதாகத் தோன்றுகிறது. ஆரியர் இந்திய கண்டத்துட் புகுமுன், வட இலங்கை முதல் நேர்பாளம் வரை வாழ்ந்தவர்கள் நாகர் குலத்தவர். ஆகையால் வடமொழி எழுத்தமைப்பு ஆரியரின் தனி ஆக்கம் எனல் பொருந்துவதாயில்லை. எனவே, தமிழ்மொழி எழுத்தமைப்புப் பிரதிபலிக்கும் ஆன்ம ஞான தத்துவம், வட நாட்டாருக்கன்றித் தமிழ் நாட்டாருக்கே முன்னுரிமை உடையதாகும்.

---

கொழும்புத் தமிழ்ச் சங்கம் ஆற்றிவரும் அரும்பணிகள் பாராட்டற்குரியன. தலை நகரிலே வாழ் தமிழ்ப் பெருமக்களுக்கு இச்சங்கம் ஒரு வரப்பிரசாதமாகும். இதில் சமய இலக்கியச் சொற்பொழிவை ஆற்றும் வாய்ப்புக் கிடைத்ததையிட்டுப் பாராட்டுகிறேன். வாழ்க தமிழ்மொழி, வாழ்க தமிழ்ச் சங்கம்.

ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாத பரமாசார்ய ஸ்வாமிகள்
நல்லூர் ஆதீனம்.
05.03.77

'தமிழ்ச் சங்கத்தில் ஒரு பாதுகாப்பாளாராக இருந்தபோதிலும் இன்றுதான் இச்சங்கத்தின் ஒரு கூட்டத்திற்கு வர நேரிட்டது. தமிழ்ச் சங்கம் இவ்வளவு சிறந்த தொண்டு செய்வது என்று எனக்கு இதற்கு முன் தெரியவில்லை. தமிழ்ச் சங்கத்திற்குத் தமிழராகிய எல்லோரும் தங்களுக்கு இயன்ற உதவி புரிவது அவர்கள் கடமையாகும். தமிழ்ச் சங்கம் வாழ்க. (என்னுடைய தமிழில் பிழைகள் இருக்கலாம். அதை மன்னிக்க வேண்டும். அதற்குக் காரணம் நான் தமிழ்ச் சங்கம் நடத்தும் வகுப்புகளுக்கு வராததே).

சோ. நடேசன், கியூ.சி., கொழும்பு
28.12.80

---

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

# பொன் விழா வாழ்த்து

விருத்தம்

1. திருமருவு கூடல்நகர்ச் சங்கத் தன்று
   செவ்வேளும் புலவர்களுஞ் சேர்ந்தி ருந்தே
அருள்பரவு பாற்கடலின் அமுதம் வென்ற
   அருந்தமிழின் விருந்தயர்ந்தே யள்ளித் தந்தா;
திரைகடல்சூழ் ஈழமணித் தேவி தன்னின்
   சென்னியென மின்னியொளிர் கொழும்பில் இன்று
பொருவரிய தமிழ்ச்சங்கத் தாயர் பூண்ட
   நன்விழாதாம் புடமிட்ட பொன்வி ழாவே.

2. 'தூயனவே துணிந்துவிட்டாற் பழிதான் வந்து
   தொடராதே' யெனவுரைத்த கம்பன் வாக்கை
ஆயபெருஞ் சுருதிவாக் கெனவே கொண்டு
   ஐம்பான்நல் லாண்டுகளும் அயரா தந்த
நாயன்மார் அருளாளர் ஞானி யோரின்
   நன்னெறிகள் கடைப்பிடித்து நயத்தே யாற்றும்
நேயதமிழ்த் தாயர்பணிக் கீடு முண் டோ?
   நிலவுதமிழ்ச் சங்கமே நீடு வாழி.

3. இறையருளாற் தோன்றியவிச் சங்கம் வாழும்
   இலங்கைத்தமி ழகமன்றி யுலக மெங்கும்
கறையிலரும் புகழ்நிலவின் கதிர்ப ரப்பிக்
   கற்றோரும் மற்றோருங் களிக்கும் வண்ணம்
முறைதவறா மனுநீதி கட்டுப் பாடு
   முதற்கடமை கண்ணியத்தின் முடியில் நின்று
நிறைகலையின் பலதுறையில் நிகழ்த்துந் தொண்டு
   நிலமாதுக் கணிசெய்யும் நிகரில் தொண்டே.

4. ஆண்டுதொறும் வருகின்ற கலைவி ழாக்கள்
   ஆன்றோரை நினைவுறுத்தும் அணிவி ழாக்கள்
ஈண்டுவரு மாணவர்கள் புலவர் தங்கள்
   இதயமலர் விரிபரிசின் இன்வி ழாக்கள்
தூண்டுபெரும் அறிவுவளர் நூல கத்தின்
   தூயநலப் படிப்பகத்தின் துணைவி ழாக்கள்
வேண்டுவன எவையெவையோ அவற்றை யெல்லாம்
   விரும்பியளி நின்பெருமை விளம்பற் பாற்றோ!

5. 'பனைநூறு' வெனுநூலைப் படைத்த பொன்னம்
பலத்தாரே முதற்றலைவர்ப் பணியைத்தொடங்க
நினைவூறு பலநூல்கள் நெஞ்சை யள்ள
நிவந்தளித்த நடராசர் போன்றோர் வளர்க்க
அணையாத தீபமெனக் குணரத் தினமாம்
அண்ணலொடு ''தமிழ வேள்'' இந்நாட் காக்கத்
துணையாக நின்றருளும் பரம்பொ ருட்கே
தோத்திரமேற் தோத்திரமே தொடர்ந்து வாழ்க.

நெடுந்தீவு,
21.11.1992

கவிமாமணி க. த. ஞானப்பிரகாசம்

---

# தலைநகரில் விழா எடுக்கும் தமிழ்ச் சங்கம் வாழியவே

**'திமிலை மகாலிங்கம்'**. மட்டக்களப்பு

திக்கெல்லாம் தமிழ் மணக்கத்
திகழொளியாய்ப் பரிணமிக்க
மக்களுள்ள திசையெல்லாம்
வாழிய செந் தமிழென்றே
ஒக்க இசை எழுந்திந்த
உலகமெலாம் அலைதவழ
செக்கிழுத்த சிதம்பரனும்
செந்தமிழால் கவிபாடி
நெக்குருக மூவேந்தர்
நிலம்பிளந்த வரலாறும்
எக்குடியும் எக்குலமும்
எவ்வுலகும் தொழுதேத்தும்
மக்கள் குரல் திருக்குறளை
வடித்தெடுத்த வள்ளுவனும்
சிலம்புக்கோர் அதிகாரம்
செப்புவித்த இளங்கோவும்
கலங்கரையின் விளக்காகிக்
கண்மூடி வாழ்ந்திருந்த
நலங் காணாத் தமிழ்க் குலத்தின்
நடுநிசியைக் குலைத்துவிட்ட
இலங்கு புகழ்ப் பாரதியின்
எழில் தோற்றம் உலவிவர
நல்வழியும் நன்னெறியும்
நமக்களித்த புலவர்பலர்
அவ்வைப் பிராட்டி
அழகுதமிழ் நக்கீரன்
புகழேந்தி காளமேகம்,
புலவர் வரிசையிலே
அனைவோரும் பவனிவர
அந்தஒலி செந்தமிழர்
வாழ்வை வதக்கிவிடும்
வரலாற்று ஈனமெல்லாம்
தொலைக்கட்டும்; புத்தொளியே
துலங்கட்டும்; மிடியெல்லாம்
அடியோடு அகலட்டும்;
அனைவர்க்கும் சமமாக
முடிபுனைந்த தமிழணங்கு
முகம் மலர மனங்களெனும்
அரியணையில் இனித்திருந்து
அரசோச்சும் நாள் வரட்டும்;
எழுங்குரலின் ஓசையினில்
எல்லாத் திசைகளிலும்
உள்ள தமிழர்
உள்ளத்து உணர்வுகளும்
பரிணமிக்க இன்னலிடை
பரிதவிக்கும் மனங்களுக்கும்
கொழும்புத் தமிழ்ச் சங்கம்
குரலாக அமையட்டும்;
எண்ண அலைகள்
எழுப்புகின்ற அதிர்வினிலே
பேணத் தமிழ் அணங்கு
வதனம் மலரட்டும்;
வாழிய செந்தமிழ் வாழ்க
வாழிய நற் றமிழர் குலம்
வாழிய இத் தமிழ்ச் சங்கம்
பல்லாண்டு வாழியவே.

# பற்பல நூற்றாண்டு விழாக் கண்டு வாழ்க!

இலங்கை நாட்டின் தலைநகரில்
இனிய தமிழும் பண்பாடும்
துலங்கும் கலையும் தமிழினமும்
சுடர ஐம்ப தாண்டுகளாய்
நலங்கொள் பணிகள் ஆற்றிவரும்
நலஞ்சேர் கொழும்புத் தமிழ்ச்சங்கம்
கலங்காக் கதிரைத் திண்மலைபோல்
கதித்து நிலைநின் றோங்குகவே.

கல்வி பண்பா ட்டறநிலையக்
காப்பு நூல்கள் வெளியீடு
பல்வி தத்தொண் டாற்றிவரும்
பரந்து நோக்கம் படைத்துள்ள
நல்ல கொழும்புத் தமிழ்ச்சங்கம்
நாடும் இனமும் தமிழ்மொழியும்
எல்லா விதத்தும் உயர்வுபெற
இயன்ற பணிகள் ஆற்றுகவே.

இனத்தால் இடத்தால் அரசியலால்
எதிரா னோரும் தமிழ்மொழியால்
இணைக்கும் உயர்பண் பாடுடைய
இனிய நல்ல நிறுவனமாய்
அனைத்து நாட்டு அறிஞரதும்
அன்பைப் பாராட்டினைப்பெற்ற
கனத்த கொழும்புத் தமிழ்ச்சங்கம்
கடவு ளருளால் வாழுகவே.

ஐம்ப தாண்டுப் பணிநிறைவை
அடைந்த பேற்றால் களிகொண்டு
பொன்வி ழாக்கண் டுவகையுறும்
புகழ்சேர் கொழும்புத் தமிழ்ச்சங்கம்
நன்று வைர விழாமுத்து
விழாபற் பல்நூற் றாண்டுவிழா
என்றும் சீரார் விழாக்கண்டு
இனிது வாழ்க வாழுகவே.

**பண்டிதர் அ. ஆறுமுகம்**
தலைவர்,
வட்டுக்கோட்டைத் தொகுதித் தமிழ்ச் சங்கம்.

# வாழ்த்துப்பா

## பொன் விழாக் கண்டாய் போற்றி

தென்றிசை வரையிற் பிறந்த
 தெய்வத் தமிழ் மொழியைக்
குன்றிசைத் தீபமென்னக்
 கோலமாய் வளர்த்து நின்ற
மன்றமே, தமிழ் மாதின்
 மங்கலச் சின்னமே யுன்றன்
பொன் விழாவைக் கண்டு
 பொங்குதே யுள்ளம்.

அகத்தியர் வளர்த்த மொழி
 அருங்கலை சிறந்த மொழி
மகத்துவமான மொழி
 மாட்சிமை பெற்ற மொழி
இகத்தினில் இதுவரை
 இருந்ததோ பல சங்கம்
அகத்தியம் அவற்றில் நீயும்
 அடங்குவை அகிலம் மீதில்!

மொழிவளம் பேணி நின்றாய்
 முழுமதி யென்னத் திகழ்கின்றாய்
எழிலுறு கலை கல்வி
 எந்தையர் கலாச்சாரம்
பொழிலுறப் பொங்கி நிற்கப்
 பூண்டனை பணிகள் பல!
விழியுறு ஒளியதனை
 விண்சுடரென ஈந்தாய்!

மலையுறு மொழியாமெங்கள்
 மணித்தமிழ் வளர்த்தாய் போற்றி
தலைநகர் தனிலமைந்து
 தமிழிசை ஆர்த்தாய் போற்றி
கலையுறு சுடரென்னக்
 காசினி திகழ்ந்தாய் போற்றி
நிலைபெறு பொன் வாழ்வு
 நிலமதில் கண்டாய் போற்றி!

6.1.93

**சந்திரசேகரன் சசிதரன்,**
வநதாருமூலை மத்திய மகா வித்தியாலயம்

---

## சங்க இலச்சனைச் செய்யுள்

**வெண்பா**

சங்கொடு தாமரையும் சான்ற பலஏடும்
பாங்கான சின்னமாய்ச் சீருறுவோம்—பொங்கலைவாய்
வங்கம் பலவழக்கால் பட்டினமாம் வாழ்கொழும்பே
தாங்கிய தொல்சங்கத் தாம்.

3.7.92

**புலவர் நா. சிவபாதசுந்தரனார்**
''தொல்புரக்கிழார்''

# சங்க காலம் தமிழின் பொற்காலம்

**செல்வி கே. இரத்தினசோதி**
*இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு.*
*நாவன்மை உயர் நிலை முதற் பரிசில் பெற்றவர்*

**ஞா**னம் ஒரு குடும்பம், மக்கள் ஒரு குடும்ப உறுப்பினர். ஆள்வோரும் ஆளப் படுவோரும் வேறல்லர் என்ற பரந்த அடிப் படை நோக்கம் கொண்டது சங்க காலம். பண்பட்ட சமூகத்தின் நிலைக்களமாகச் சங்க காலம் விளங்கியது. உயரிய பண் பட்ட சமூகத்திலிருந்தே உன்னத இலக்கி யங்கள் தோன்றும்; காலங்கள் கடந்தும் அவை நிலைத்திருக்கும். அத்தகைய இலக் கியங்களே தமது காலத்தைய பண்பினை என்றும் உணர்த்தி நிற்கும்.

இந்த வகையில், முதல் மூன்று நூற் றாண்டுகளைக் கொண்ட சங்க காலம் தமி ழின் பொற்காலம் என்பதை அக்காலத்தில் எழுந்த இலக்கியங்களே, இன்று எமக்குச் சான்று பகருகின்றன. மண்ணின் வளத் தைப் பொறுத்தே பயிரின் செழிப்பும் அமையும். அது போன்றே, மாந்தர் தம் வாழ்க்கை வளத்தினைப் பொறுத்தே அவ் வக்கால இலக்கியங்களும் தோற்றம் பெறும் இதனை அடிப்படையாகக் கொண்டு தமி ழர் தம் முழுமையான வரலாற்றுக் காலங் களை எடுத்து நோக்கின், சங்க காலம் தமிழின் பொற்காலம் என்பதனை மிகத் தெளிவாகக் கண்டு கொள்ள முடிகின்றது. அக்கால கட்டத்தில் எழுந்த எட்டுத் தொகை, பத்துப் பாட்டு என்னும் மேற் கணக்கு நூல்களே இதற்குச் சான்றாகின் றன.

மன்னர் தம் ஆட்சி முறை, மக்களது முரண்பாடற்ற உயரிய குறிக்கோளைக் கொண்ட வாழ்க்கை முறை, உயரிய உளப் பண்பு, பிறமொழிக் கலப்பில்லாத, மக்க ளது வாழ்க்கையைக் கருப்பொருளாகக் கொண்ட இலக்கியங்களின் தனித்துவம், அறிவும் திருவும் இணைந்த உயரிய அறி வாளரின் வழிகாட்டல, பொருளாதாரத் தன்னிறைவு, வெளிநாட்டு வளத்தொடர்பு அனைத்தும் ஒருங்கிணைந்த பொற்கால மாகச் சங்க காலம் அமைந்தது. அதன்பின் வந்த காலங்கள் அனைத்தினதும் ஆணி வேராக, உயிர் மூச்சாக இக்காலம் விளங் கியது எனின் அது மிகையாகாது.

அனைத்துக்கும் முன்னோடியாய் அமைந்த சங்க காலம் எந்த வகையில் தமி ழின் பொற்காலமாய் விளங்குகின்றது என் பதைநாம் சற்று ஆழ்ந்து நோக்குவோம்.

ஒரு நாட்டின் ஆட்சி நலமுடன் இயங் கும் போதுதான் அந்நாடு வளர்ச்சியும் தன்னிறைவும் பெற்றுத் துலங்கும். அத் தகையதொரு நிலையைச் சங்க காலத்தில் காண முடிகிறது. அக்காலத்தில், மக்கள் கருத்திற்கேற்ற ஆட்சிமுறை நிலவியது. குழு நிலையிலிருந்து மாற்றம் பெற்ற குழுத் தலைவர்கள், சிற்றரசர்கள், அரசர்கள் அனைவரும் மக்களுக்காகவே ஆட்சி செய் தனர். அக்கால கட்டத்தில், அரசனில்லாத நாடு உயிரற்ற உடம்பு போலக் கருதுமள விற்கு முக்கியத்துவம் பெற்றது. ''மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்'' என்ற கருத்து புறநானூற்றில் கூறப்படுகிறது. குடிகளுக்காகவே அரசாட்சி என்பது அரசர் களது கருத்தாயிருந்தது. குடிகளின் கருத் தறிந்து அதற்கு இசைவாக நடப்பதற்கு ஐம்பெருங்குழு, எண்பேராயம் எனும் இரண்டு பேரவைகள் அவர்களுக்குத் துணை யாக இருந்தன. இத்தகைய மேம்பட்ட ஆட்சி நிலவிய காலத்தில், நாடு வளம் பெற்றது. வாழும் மக்களும் மொழியும் நலம் பெற்ற இக்காலம் ஒரு பொற்கால மாகப் பொலிந்தது.

தமிழின் செழுமை, அதன் வளர்ச்சி இக் காலத்தில் உன்னத நிலைபெற்றது. இக் காலத்தை ஆண்டவர்கள் தமிழர்; தமிழ் உணர்வில் மேம்பட்டு நின்ற அவ்வரசர்கள் தமிழில் ஆழ்ந்த ஈடுபாடும், புலமையும், மிக்கவர்களாயிருந்தனர். ஆட்சி முறையோ உயரிய நோக்கினைக் கொண்டது. மன்ன ரும் புலவரும் சங்கம் அமைத்துத் தமிழ் வளர்த்து இருந்தனர். இதன்போது பொன் னான இலக்கியங்கள் தோன்றின என்று சொல்லவும் வேண்டுமா?

செல்வத்துட் சிறந்த செல்வம் கல்விச் செல்வம். சங்க காலத்தில் அந்தச் செல்வம் அனைவருக்கும் வழங்கப்பட்டது. கல்விக்கு முதன்மை கொடுக்கப்பட்டது. மன்னர் முதல் மக்கள் வரை அனைவரும் எவ்வித வேறுபாடுமின்றிக் கல்விச் செல்வத்தைப் பெற்றிருந்தனர். மன்னருக்கு எத்துணை சிறப்பும் மதிப்பும் இருந்ததோ அதைவிட மேலாகப் புலவர்கள் மதிக்கப்பட்டனர். மறத்திற்கும் மேலாக அறத்திற்கு முதலிடம் கொடுக்கப்பட்டது. இதுவே சங்க காலம் ஒரு பொற்காலம் என்பதை எமக்கு வலி யுறுத்துகின்றதல்லவா? இதற்கு எடுத்துக் காட்டாகச் சில சம்பவங்களை நோக்கு வோம். அதியமான் ஔவைக்கு அருநெல் லிக்கனி கொடுத்தமை. மோசி கீரனர்க்கு சேரலாதன் கவரி வீசியமை போன்றன இதனை நிறுவும். தொண்டமானிடம் ஔவை தூது சென்றமை, வரி கொள் முறையைப் பிசிராந்தையார் அறிவுடை நம்பிக்கு அறிவுறுத்தியமை போன்றனவும் சிறந்த சான்றுகள். அரசர்கள், தாம் புல வர்களால் பாடப்படுவதைப் பெரும் பேறா கக் கருதினர். பொருட் செல்வத்தினைவிட அருட் செல்வத்துக்கு இருந்த மதிப்பும் பெருமையும் இதனால் புலனாகின்ற னவல்லவா?

இத்தகைய நிலைதான் உச்ச நிலை. அறிவும் திருவும் இணைந்து தமிழை வளம் படுத்தின. எடுத்துக் காட்டாக, இக்காலத் தில் தான் பூரிக்கோ, மாறன்வழுதி, இளம் பெருவழுதி, பெருங்கடுங்கோ, அறிவுடை நம்பி, நெடுஞ்செழியன், நல்லுருத்திரன் போன்ற புவிச் செல்வம் படைத்த அரசர் கள் கவிச் செல்வம் படைத்த புலவர்களாக வும் இருந்திருக்கிறார்கள். மேலும், காவ லர்க்கும் பாவலர்க்கும் இடையே உளம் ஒன்றிய நட்பு நிலை காணப்பட்டது. இவையே தமிழ் நன்கு வளம்பெற, தமிழின் பொற்காலமாகச் சங்க காலம் திகழ வழி கோலியது.

சங்க காலத்தில் அறுநூறுக்கும் மேற் பட்ட புலவர்கள் இருந்து தமிழ் வளர்த் திருக்கிறார்கள். இவர்கள், உள்ளுணர்விற்கு முக்கியத்துவம் கொடுத்து இயற்கையழகும் வாழ்க்கையின் யதார்த்தமும் இணைந்த பாடல்களை யாத்தனர். இக்காலப் புலவர் கள் மரம், செடி, கொடிகளின் தன்மையும், விலங்குகளின் வகையும், உயிர்களின் இயல் பும், உலகின் அனைத்து இயல்பு நிலையும் உணர்ந்த பெரும் அறிவியல் களஞ்சியங் களாக விளங்கின.

பாடல் திறன், யாப்பு அமைப்பு, உவமை, உள்ளுறை உவமை என்பவற்றில் இக்கால இலக்கியங்கள் ஏனைய காலங்களுக்கில்லாத தனிச்சிறப்பும் பெற்று நிற்கின்றன. ஞானத் தையே ஐந்திணையுள் அடக்கி, இடத்தை வரையறுத்து, உணர்வுகளை அகம், புறம் என வகுத்துச் செல்லும் வளமுடையன சங்ககால இலக்கியங்கள். உலகின் பல்வேறு இலக்கியங்கள் தோன்றிய காலங்களோடு ஒப்பிடும்போது சங்ககால இலக்கியம் தொன்மை மிக்கது; சிறப்பு மிக்கது. செயற் கைப் போலியோ, சொற்சாலமோ இல் லாது மக்களது வாழ்க்கையை உள்ளது உள்ளபடியே நாடகப் பண்போடு எடுத்துக் கூறும் வளமையும் செழுமையும் மிக்கது. மனித உணர்வினைக் காதல், வீரம் என்ற இரு நிலைகளினூடாக, மாண்புற உணர்த் தும் உயரிய படைப்புகள் சங்ககால இலக் கியங்கள். வாழ்வின் அனைத்து நிலைகளை யும் எடுத்துக் காட்டும் கருத்துக் கருவூல மாக விளங்கும் இவ்விலக்கியங்கள் யாவும் பொற்கால இலக்கியங்களே.

பெண்களுக்கு மதிப்பளிக்காத எந்தத் தேசமும், நாடும் என்றும் பெருமை அடைந் ததில்லை. எந்தக் காலத்திலும் அடையப் போவதுமில்லை. பெண்மை போற்றப்பட்ட காலமே பொற்காலம். அந்த வகையில், பெண்மையைப் போற்றி மதித்த காலம்

சங்க காலம். பெண்களுக்குச் சம அந்தஸ்த்துக் கொடுக்கப்பட்ட காலம் அது. எடுத்துக்காட்டாக, ஔவையார், ஒக்கூர் மாசாந்தியார், காக்கை பாடினியார், ஆதி மந்தியார், நல் வெள்ளியார், வெள்ளி வீதியார் என முப்பதிற்கும் மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் புலமைச் செவ்வியராய்த் தமிழை அழகு செய்தனர். இதிலிருந்து சங்க காலம் ஒரு பொற்காலம் என்பது மிகத் தெளிவாக உறுதியாகின்றது.

எனவே, மேலை நாட்டு இலக்கியங்கள் போலல்லாது, நீதிக்காகக் கூறுவது போன்றும் அல்லாது இன்பத்தை ஊட்டுவது என்றநிலையுமின்றி இரண்டையும் இணைத்துக் கலந்து தரும் அற—இன்ப இலக்கியங்களாக விளங்கும் சங்க கால இலக்கியங்கள், சங்க காலம் தமிழின் பொற்காலம் என்பதனை எமக்கு நிரூபித்து நிற்கின்றன. ஏனைய காலங்களோடு ஒப்பிடும்போதுசங்க காலம் தனித்துவமான பண்பினையும் அனைத்துக் காலங்களின் வழிகாட்டியாகவும் நின்று தமிழின் பொற்காலமாக விளங்குகின்றதென்பது தெளிந்த உண்மை.

---

## பொன் விழா வாழ்த்து

**நேரிசை வெண்பா**

தண்ணார் கொழும்புத் தமிழ்ச் சங்கம்
பண்ணார்ந்து பொன் விழாப் பாங்குடனே—விண்ணோர்
புகழ்தந்த வேளருளால் பூதலத்தில் என்றும்
தக்வுடனே வாழ்க தழைத்து

சென்னை. 15.2.93

அன்பன்
**இருபானந்தவாரி**

---

நாலாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டுக்காக யாழ்ப்பாணம் வந்த இந்திய நாட்டுத் தமிழ் அறிஞர்களுக்குக் கொழும்புத் தமிழ்ச் சங்கம் அளித்த வரவேற்பில் நாங்களும் கலந்து கொண்டோம். சங்கத்தாரின் அன்பும் ஆர்வமும் எமக்குப் பெரு மகிழ்ச்சி தந்தன. எங்கள் இனிய வாழ்த்துக்கள்.

கலாநிதி சாலை இளந்திரையன்,
கலாநிதி சாலினி இளந்திரையன்,
தில்லிப் பல்கலைக்கழகம்.

அயலகத்தில் அரும்பணி ஆற்றுகின்றது இச்சங்கம். இங்குள்ள தமிழர்க்குக் காவலகமாகவும் ஆவலகமாகவும் இது விளங்குவதாக. அக்கரையில் துறையும் இக்கரையில் துறையும் இருந்தால்தான் போக்குவரத்து நடைபெற இயலும். இச்சங்கம் இக்கரைத் துறையாகப் பணிபுரிவதாக.

தி. முருகரத்தினம்
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
03.06.82

# சங்க காலம்

## செல்வி சர்மின்தாஜ் சனூன்

*ஸ்ரீசண்முகவித்தியாலயம், திருகோணமலை.*

*தமிழ்த்திறன் உயர்நிலை எழுத்துத் தேர்வில் முதற் பரிசில் பெற்றவர்*

முடியுடை மூவேந்தர் ஆட்சியிலும், குறுநில மன்னர்களின் ஆளுமையிலும், கடையேழு வள்ளல்களின் கருணையிலும், அகத்தும் புறத்தும் மாறுபாடில்லாத பாவலரின் பண்பிலும் தமிழகம் சிறப்புற்றிருந்தகாலம் சங்க காலம்.

வடக்கே வேங்கட மலையையும்,தெற்கே குமரி முனையையும் எல்லையாகக் கொண்டதே சங்க காலத் தமிழகம். அக்காலச் சமுதாயம் யவன தேசத்துடன் வணிகம் செய்வதில் ஈடுபட்டிருந்தது. இந்த வணிகம், விருத்தியடைய முசிறி, தொண்டி, கொற்கை, புகார் எனும் துறைமுகப் பட்டினங்கள் தோன்றின.

அக்காலத் தமிழர்கள் காதலையும் போரையும் தம்மிரு கண்களாகப் போற்றினர். அக்கால மக்களுக்கும் அரசருக்கும் இடையே நெருங்கிய தொடர்பு ஏற்பட்டு இருந்தது. இதனால் அந்நியர்களின் தலையீடும், படையெடுப்புகளும் அங்கு நிகழவில்லை. மன்னன் ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்று பரந்த மனப்பாங்கு உடையவனாகத் திகழ்ந்தான். அக்காலத்தின் புவிச் செல்வம் மிக்க புரவலர்கள் கவியென்னும் கலைச் செல்வ மிக்கவர்களாகக் காணப்பட்டனர். மாறன் வழுதி, இளம் பெருவழுதி, பெருங்கடுங்கோ, அறிவுடை நம்பி போன்றோர் இதற்குச் சான்று பகர்கின்றார்கள்.

மூன்று சங்கங்களாகச் சங்க காலம் பிரிக்கப்பட்டது. அவை முதல், இடை, கடை ஆகியவைகளாகும்.

பிறநாட்டுப் படையெடுப்போ, பஞ்சமோ ஏற்படாததால் அன்று தமிழகம் பசுமை நிறைந்த நாடாகக் காணப்பட்டது.

அக்கால நிலப் பகுதியைப் புலவர்கள் குறிஞ்சி,முல்லை, மருதம், பாலை, நெய்தல் என ஐவகை நிலங்களாகப் பிரித்தனர்.

முதலில் எடுத்தால் மலையும், மலை சார்ந்த இடமும் குறிஞ்சி எனப்பட்டது. இங்கே வேட்டையாடலை ஆண்கள் தமது தொழிலாகக் கொண்டனர். கன்னியர் தினைப்புனம் காத்து நிற்பர். வேட்டை ஆடச் சென்ற ஆண்களும், இளங் கன்னியரும் ஒருவரை ஒருவர் கண்டு காதல் கொள்ளவும், அக்காதற் பயிரை அவர்கள் வளர்க்கவும் ஏற்ற இடமாக இக்குறிஞ்சி உகந்ததாகையால் புணர்தல் ஒழுக்கம் குறிஞ்சிக்கு உரியது ஆயிற்று.

அடுத்து முல்லை எனப்படுவது காடும் காடு சார்ந்த இடமும் ஆகும். தமது மந்தைகளை எதிரிகளிடம் இருந்து காக்கத் தமது நிலங்களின் எல்லைப் புறங்களிற் பாடி வீடு அமைத்துத் தாம் வரும் நாள் இதுவெனத் தனது தலைவியிடம் குறித்து விட்டுச் செல்வார்கள். ஆகவே தலைவி அந்நாளை நினைத்து வாடி இருப்பாள். ஆகவே இருத்தல் ஒழுக்கம் முல்லைக்கு ஆயிற்று,

வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம் எனப்பட்டது. இங்கு தலைவன் தனது வேலைகளை முடித்து விட்டு இன்பக் கலைகளான ஆடல் பாடல்களில் வல்ல பாணர்களும் பரத்தையர்களும் வாழும் இடம் சென்று இரவிற் பெரும்பகுதியை அங்கேயே கழிப்பர். இதனை மனைவி விரும்பாது, ஊடல் கொள்வாள். ஆகவே மருதத்திற்கு ஊடல் ஒழுக்கம் உரியது ஆயிற்று.

பாலை நிலத்து ஆண்கள் போருக்காகவும் பொருள் தேடுதற்காகவும் தலைவியைப் பிரிந்து செல்வர். இதனால் பிரிதல் பாலைக்கு உரியது ஆயிற்று.

கடலுக்கு மீன் பிடிக்கச் சென்ற தலைவன் உரிய நேரத்திற்கு வராமல் விடின் தலைவியும் மற்றவர்களும் துன்பமுற்று இரங்குவர். ஆகவே இரங்கல் ஒழுக்கம் நெய்தலுக்கு உரித்தானது. இவ்வாறு சான்றோர் வரையறுத்து, வகுத்து, தொகுத்துப் புலனெறி வழக்கை ஏற்படுத்தினர்.

அக்காலப் பகுதியில் மறத்தை விட அறத்திற்கே உயர்வு கொடுக்கப்பட்டது. ''மன்னன் எவ் வழியோ மக்களும் அவ்வழி'' என அக்கால மன்னனுக்கும் மக்களுக்கும் இடையே தொடர்பு இருந்தது.

மேலும் அக்காலப் பகுதியில் சமயங்கள் சம்பந்தமாக எவ்வித பிரச்சனைகளோ பூசல்களோ சண்டை சச்சரவுகளோ ஏற்படவில்லை. ''எம்மதமும் சம்மதம்'' என்ற வகையில் அனைவரும் கைகோர்த்து இன்பமுடன் வாழ்ந்தனர். அக்காலச் சமுதாயம் தன்னிறைவுச் சமுதாயமாகக் காணப்பட்டது. அதாவது தமக்கு வேண்டிய பொருட்களைத் தாமே உற்பத்தி செய்தனர்.

சங்கத் தமிழர்கள் பூக்களாலும், அணிகளாலும் தம்மை அலங்காரம் செய்வதில் பெரு விருப்புடையவர். இதிலும் குறிஞ்சி நிலத்தவர் வெட்சி மலரையும், மருத நிலத்தவர் உழிஞை மலரையும், பாலை நிலத்தவர் வாகை மலரையும், வஞ்சிப் பூவை முல்லை நிலத்தவரும், தும்பைப் பூவை நெய்தல் நிலத்தவரும் சூடினர். இப்பூக்களை அவர்கள் தமது போருக்குப் போகும் போதும் சூடிக் கொண்டு செல்வர். இதனால் தான் அவ்வவ் நிலங்களுக்கு அவர்கள் சூடிய பூக்களின் பெயரே புறத்திணை ஒழுக்கங்கள் எனச் சான்றோர் வகுத்த புலனெறி வழக்குச் சான்று பகர்கின்றது.

அக்காலப் புலவர்கள் மக்களின் வாழ்வைக் கருவாக வைத்து அகம், புறம் என இரண்டாகப் பிரித்துப் பாக்களை இயற்றிப் பாடினர்.

அக்கால மக்கள் இயற்கையை வணங்குபவர்கள்.

இங்கு புலவர்களே மன்னனிலும் மேலானவர்களாகக் காணப்பட்டனர். இவர்கள் புகழுக்குரியவரை அன்றி வேறு எவரையும் பாராட்டிப் பாடமாட்டார்கள். இதனால் அரசர்கள் புலவர்களுக்கு உணர்ச்சி ஊட்டும் வகையில் தமது ஆட்சியை நடாத்தினார்கள். இதனால் கவரப்பட்ட புலவர்கள் அவர்களுக்குப் பாமாலை சூடினார்கள்.

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தகாலமே சங்க காலம். வட நாட்டுச் சமயங்களின் தாக்கங்களோ கலாச்சார அம்சங்களின் பாதிப்புக்களோ ஏற்படாத தூய தமிழரின் நாகரிகம் மிளிர்ந்த காலம் அக்காலம். இச் சங்க காலம் கி.மு. முதல் மூன்று நூற்றாண்டுகளையும், இற்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கிறித்தவ சகாப்தத்தின் முன் பின் அறுநூறு ஆண்டு காலப் பகுதியையுமே குறிக்கும்.

காலங்கள் பல கழியலாம்; சூழ்நிலையும் மாறலாம்; ஆனால் அன்றும், இன்றும், இசைந்தமைந்து தற்காலத் தன்மை கொண்டமைக்கு அச் சங்க காலச் சூழலே ஏதுவாகும்.

---

திங்களோடும் செழும்பரிதிக் கண்களோடும் விண்ணோடும் உடுக்களோடும் தோன்றிய உலக முதன் மொழியாம் தமிழுக்கு அரிய பல பணிகள் ஆற்றிப் புகழ் சிறந்து நிற்கும் கொழும்புத் தமிழ்ச் சங்கம் உலகத் தலைவர் அனைவருடைய பாராட்டுக்கும் உரியதாகும். இதன் வளர்ச்சியோடு தங்களை இணைத்துக் கொண்டுள்ள தலைவர், செயலாளர், நிருவாகப் பொறுப்பில் இருக்கும் அனைத்துப் பெரியவர்கட்கும் என் மனம் கனிந்த வணக்கம்.

சிலம்பொலி சு. செல்லப்பன்
சென்னை

**23.01.92**

# சங்க காலம்

**செல்வி வே. சசிகலா**

*திம்புள்ள அரசினர் தமிழ் வித்தியாலயம், பத்தன.*

*மொழித்திறன் உயர்நிலை எழுத்துத் தேர்வில் பரிசில் பெற்றவர்*

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தமையால் சங்க காலம் எனப்பட்ட இயற்கை நெறிக் காலமான முதலாம் நூற்றாண்டு தொடக் கம் மூன்றாம் நூற்றாண்டு வரையிலான காலப் பகுதியில், அறிவொழுக்கங்களிற் சிறந்த ஏறத்தாழ ஐந்நூறு புலவர்கள் தோன்றித் தமிழை வளர்த்தனர். சங்ககாலம் தமிழின் பொற்காலமாகும். சங்ககாலத்தில் கபிலர், பரணர், ஔவையார் போன்ற புல வர்கள் 'தாரகை நடுவண் தண்மதி' போலத் தோன்றிச் சிறந்து விளங்கினர். ஆண்பாற் புலவர்களும் பெண்பாற் புலவர்களும், சங்க காலத்தில் தோன்றியது இன்னுமொரு சிறப்பாகும். அக்காலத்திலே மூவேந்தரின் ஆட்சியும் குறுநிலமன்னர்களின் ஆட்சியும் நடைபெற்றது. கடையேழு வள்ளல்கள் காணப்பட்டனர். உ—மாக பாரி, காரி, பேகன், ஆய், எழினி, அதியமான் என் போரைக் கூறலாம். சங்க காலத்திலே புல வர்கள் மன்னருக்குரிய பெருமதிப்பையும் மக்களின் பேரன்பையும் பெற்றிருந்தனர். ''யாரும் ஊரே யாவரும் கேளிர்'' என்ற உளப்பாங்குடைய புலவர்கள் மன்னரை அறநெறியில் செலுத்தும் நண்பராகவும், எவ்விடத்திலும் உண்மையை எடுத்துக் கூறும் அஞ்சா மனதிண்மையும் உடையவர் களாகவும் காணப்பட்டனர். மன்னருக்கும் புலவர்களுக்குமிடையே நெருங்கிய தொட ர்பு காணப்பட்டது. தனக்கு நெல்லிக்கனி யீந்த அதியமான் இறந்தபோது ஔவை யார் நெஞ்சுருகிப் பாடியதும், பாரி உயிர் நீத்தபோது அதன்பின் தான் உயிர்வாழ விரும்பாத கபிலர் வடக்கிருந்ததும், கும ணன் நாடிழந்து காட்டிலே வதியு நாளில் பெருந்தலைச் சாத்தனார் சென்றிரப்பத் தன் தலையைக் கொய்யுமாறு குமணன் வாள் கொடுத்ததும், கோப்பெருஞ்சோழன் உயிர்நீத்த போது தான் உயிர் வாழ விரும் பாத பிசிராந்தையார் உயிர் துறந்ததுமா கிய நிகழ்ச்சிகள் மன்னருக்கும் புலவருக்கு மிடையேயிருந்த பெருமதிப்பைக் காட்டு கின்றன.

''வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத்
தமிழ்கூறு நல்லுலகத்து''

என வரையறுத்துக் கூறப்பட்ட தமிழ் நாட் டிலே முச்சங்கங்கள் காணப்பட்டன. முதற் சங்கம் தென் மதுரையிலும் இடைச்சங்கம் கபாட புரத்திலும் கடைச் சங்கம் மதுரை யிலும் இருந்து தமிழை வளர்த்து வந் தன. முதலிரு சங்கங்கள் கடல் கோள் களினால் அழிவுற்றன. கடைச் சங்கம் அழி வுற்ற போது, அதிலே எஞ்சியிருந்த நூல் களைப் புலவர்கள் எட்டுத்தொகையாகவும் பத்துப் பாட்டாகவும் வகுத்தனர். மிகக் குறுகிய அடிகளைக் கொண்ட நூல்கள் எட்டுத்தொகை என்றும் நீண்ட அடிகளைக் கொண்ட நூல்கள் பத்துப் பாட்டு எனவும் கொள்ளப்பட்டன. நற்றிணை, குறுந் தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, பதிற்றுப்பத்து, பரிபாடல், அகநானூறு, புறநானூறு என்பன எட்டுத்தொகை நூல் களாகும். இவற்றுள் நற்றிணை, குறுந் தொகை, ஐங்குறுநூறு, கலித்தொகை, அக நானூறு என்பன அகத்திணை நூல்களாகும். அகத்திணை என்பது தலைவனுக்கும் தலை விக்கும் இடையில் ஏற்படும் தூய காதலைப் பெயர் சுட்டாமல் பாடுவதாகும். அகத் திணை நூலாகிய கலித்தொகையில் தூய காதல் வழக்கத்தைப்பற்றிப் பாடியபோது அதில் கைக்கிளை பெருந்திணை மரபு பாடப்படுகிறது. இது கலிப்பா என்ற பா வகையினால் பாடப்பட்டுள்ளது. இது மற்

றைய நூல்களிலிருந்து வேறுபட்ட தன்மையை உடையதால் இதனைப் பிற்கால நூல் என ஆய்வாளர் கூறுகின்றார்கள். ஐங்குறுநூறு என்ற நூல் ஐந்து திணையைப் பற்றி முறையே நூறு நூறு பாடல்களைக் கொண்டுள்ளது. குறுந்தொகை என்பது எட்டுத் தொகை நூல்களில் மிகவும் குறுகியதாகும். புலவர்கள் மக்களின் வாழ்க்கையை இலக்கியமாகப் படைத்தார்கள். இவற்றை அவர்கள் சித்தரிப்பதற்காக மூன்று அம்சங்களைக் கையாண்டனர். இவை முதல், கரு, உரி என்பதாகும். முதல் என்பது ஐவகை நிலமாகிய குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவும் பெரும்பொழுது, சிறுபொழுது எனப் பிரிக்கப்பட்ட பொழுதும் அடங்கும். கரு என்பதில் அந்நிலத்துக்குரிய பறவைகள், விலங்கினங்கள், இசைக் கருவிகள் என்பன அடங்கும். உரி என்பது அந்நிலத்துக்குரிய ஒழுக்கங்களாகும். குறிஞ்சி நிலத்திற்குப், ''புணர்தல்'' ஒழுக்கமும், முல்லைநிலத்திற்கு ''இருத்தல்'' ஒழுக்கமும், மருத நிலத்திற்கு ''ஊடல்'' ஒழுக்கமும், நெய்தல் நிலத்திற்கு ''இரங்கல்'' ஒழுக்கமும், பாலை நிலத்திற்குப் ''பிரிதல்'' ஒழுக்கமும், கொள்ளப்படும்.

அன்பின் ஐந்திணைக்குப் புறம்பாகக் கைக்கிளை, பெருந்திணை என்பன இருக்கின்றன. கைக்கிளை என்பதனைத் தொல்காப்பியர் 'கைக்கிளை உடையது ஒரு தலைக் காமம்' எனக் கூறுவர். இதனை இடைக்கால இலக்கண நூலான அகப்பொருள் விளக்கம்.

''காமஞ் சாலா இளையோள் வயின்
ஏமஞ் சாலா இடும்பை எய்தி''

எனக் கூறுகிறது. பெருந்திணை என்பது பொருந்தாக்காமம் ஆகும். இது காலங்கடந்த காதலாகும். இதனை ஒரு ஆய்வாளர் ''அன்பின் ஐந்திணை அளவான காதல்; பெருந்திணை என்பது மிகுந்த காதல். இதுவும் அன்பின் ஐந்திணை போல் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு ஒழுக்கமாகும்'' எனக் கூறுகிறார்.

புறத்திணை என்பது அரசரின் வீரம், கொடை, பொருள்தேடல் என்பன போன்ற விடயங்களும் பெயர்ச் சுட்டிய அகத்திணைப் பாடல்களும் இதில் அடங்கும். எட்டுத் தொகையில் புறநானூறு பதிற்றுப்பத்து, பரிபாடல் என்பன புறத்திணை நூல்களாகும். புறநானூற்றில் நிலையாமை, கொடை, வீரம், வெற்றி என்பவை கூறப்படுகின்றன. திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, கூத்தராற்றுப் படை, பட்டினப்பாலை, நெடுநெல்வாடை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு, மதுரைக் காஞ்சி என்ற நூல்களில் பட்டினப் பாலை, முல்லைப்பாட்டு, குறிஞ்சிப்பாட்டு என்பன அகத்திணை நூல்களாகும். அகத்திணையில் அடங்காத ஒழுக்கமாகப், பாடாண்திணை, காஞ்சித்திணை என்பன கருதப்படும். பாடாண்திணை என்பது பாடத்தக்க ஆண்களின் சிறப்பினைக் கூறுகிறது. காஞ்சித்திணை ஆண்பாற்காஞ்சி, பெண்பாற்காஞ்சி என இரு வகைப்படும். ஆண்பாற்காஞ்சி என்பது போர்க்களத்தில் வீர மரணம் எய்தும் ஆண்களைப்பற்றியும் பெண்பாற்காஞ்சி என்பது போர்க்களத்தில் இருக்கும் உடல்களைப் பாதுகாக்கும் வீர மகளிர் பற்றியும் பாடப்படுகின்றன. புறத்திணை ஒழுக்கங்களாகக் குறிஞ்சி—வெட்சி, முல்லை—வஞ்சி, மருதம்—உழிஞை, நெய்தல்—தும்பை, பாலை—வாகை கொள்ளப்படும்.

மன்னருக்கும் மக்களுக்குமிடையே சங்க காலத்தில் நெருங்கிய தொடர்பு காணப்பட்டது. இதனை அக நானூறு என்ற நூல்

''குடி தழுவிக் கோலோச்சுதல்''

எனப் பாடுகிறது. மக்கள் இன்பமான வாழ்க்கையை வாழ்ந்து வந்தனர். மன்னனும் மக்களுக்குக் கை சிவக்கச் சிவக்க வாரிக் கொடுத்தான்

சங்ககால யாப்பு வகை அகவற்பா, வஞ்சிப்பா என்பதாகும். சங்க கால இலக்கியத்தின் பண்பு உள்ளுறை உவமைகள் காணப்படல், சொற்செறிவும் பொருட் சுருக்கமும் காணப்படல், நாடகப்பாங்கு காணப்படல், மக்களின் வாழ்க்கையானது இயற்கையோடு இணைந்த வாழ்வாகக் காணப்படல், செய்யுள் அமைதியானது தனிப் பாடல்களாகக் காணப்படல், சொல்லமைதி யானது தூயதமிழ்ச் சொற்களாகக் காணப்படல், இறுக்கமான மரபுகள் காணப்பட்டமை (பெயர் சுட்டும், பெயர் சுட்டா மரபுகள்) சமயங்கள் வளர்ந்தமைக்குரிய ஆதாரங்கள் எதுவும் இல்லை. ஆனால் சில நூல்கள் தெய்வங்களை மக்கள் வணங்கியதாகச் சான்று பகருகின்றன. சங்க காலம் பொருளாதார ரீதியாகவும் கலாச்சார ரீதியாகவும் மக்களின் வாழ்க்கை ரீதியாகவும் ஒரு பொற்காலமாகும். தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சியிலும் சங்க காலம் ஒரு பொற்காலமாகக் கருதப்படுகிறது. எனவே சங்க காலம் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு காலமாகும்.

---

கொழும்புத் தமிழ்ச் சங்கம் தமிழுக்கு ஆற்றிவரும் பெருந் தொண்டை அறிந்து மிக மகிழ்கின்றேன். அது மேன் மேலும் வளர்ந்து நற்றொண்டு ஆற்ற எல்லாம் வல்ல சிதம்பர நடராசப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

ஐ. ஆனந்த நடராச தீட்சிதர்
தமிழ்ப் பேராசிரியர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
22.04.91

ஐம்பதாவது ஆண்டு நிறைவில் பண்ணிசை வளர்க்கும் பணியில் கொழும்புத் தமிழ்ச் சங்கம் மேற்கொள்ளும் தொண்டு பாராட்டுக்குரியது. இந்நிகழ்ச்சியில் பங்கு கொண்டு பரவசமானேன். வாழ்க நும்பணி.

க. வேலாயுதபிள்ளை
மருத்துவ கலாநிதி,
தலைவர், கொழும்பு விவேகானந்த சபை
06.02.1993

# சங்க காலம்

**சந்திரசேகரன் சசிதரன்**

*வந்தாறுமூலை மத்திய மகா வித்தியாலயம்.*

*தமிழ் மொழித்திறன் எழுத்துத் தேர்வில்ப் பரிசில் பெற்ற கட்டுரை*

''தொான்று நிகழ்ந்ததனைத்தும் உணர்ந் திடும் சூழ் கலை வாணர்களும் இவள் என்று பிறந்தவள் என்றுணராத இயல்பினளாம் எங்கள் தாய்'' என்று தமிழ்த் தாயின் தனிப் பெருமையைச் சாற்றிப் போந்தான் மகாகவி பாரதி. இத்தகு தமிழ்த் தாயின் இலக்கிய வளர்ச்சிப் பாதையின் கால் கோளாகத் திகழ்வது சங்க காலமே ஆகும். தமிழ் இலக்கியமோ, கரை காண முடியாத மா சமுத்திரம்; அதற்குக் கரையிட முனைவது, ஆகாயத்திற்கு அரண் எழுப்புதற்கு ஒப்பான செயல். பஃறலைப் பட்ட வெள்ளிய திரைகளும் ஆர்ப்பரிக்க, அரும்பெருந் திரவியங்களான நித்திலங்கள் பலவும் நிறைந்து, நீண்டு கிடக்கின்ற தமிழ்ச் சாகரத்தின் கலங்கரை விளக்கமே சங்க காலம் ஆகும். தமிழ் இலக்கியத்தின் மணி முடியாய், அதன் சீரான பயணத்தில் நெடிதுயர்ந்த கோபுரமாய் நின்று விளங்கும் சங்க காலத்தின் மாண்போ அளப்பரியது. இப் பொற் காலத்தின் பொற்பையும், புகழையும் இக் கட்டுரையின் வாயிலாக நோக்குவோம்.

''கன்னித் தமிழ் மகளின் தொட்டிற் காலம்'' என்று சான்றோர் மொழியும் சங்க காலமானது, கிறித்துவுக்குப் பின் முதல் மூன்று நூற்றாண்டுகளையும் உள்ளடக்கிய காலப் பகுதியாகும். இக்காலத்தே மூவேந்தராட்சி முறை வழுவாது நடைபெற்றது. சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவேந்தர்களும் அறநெறி பிழைக்காது, அன்பு தழைக்க ஆண்டு வந்தனர். வஞ்சி, உறையூர், மதுரை என்னும் முப்பெரு நகரங்களும் கலைக் கூடங்களாக விளங்கின. செங்கோற் சிறப்பினால் எங்கணுமே வசியும் வளனும் பொங்கின; செல்வங்கள் மலிந்தன, அரசியல் அழகினால் அறம் அலர்ந்தது; அன்பு பெருகியது. வீரமும், விவேகமும் மிக்க மன்னவரின் ஆட்சி முறையினால் நாடு பல துறைகளிலும் சிறந்தோங்கியது. கலையினைக் கண்ணெனப் போற்றிப் புலவர்களை ஏத்தினர் வேந்தர். இதனால் தமிழ் வளர்ந்தது. கொடையும், படையும் குறைவிலா மன்னர் பெருமக்கள் புலமையை மதித்தனர்; புலவர்களை அன்பொழுக ஆதரித்தனர். தமிழுக்காய்த் தம தின்னுயிரையும் தத்தமளிக்கச் சித்தமாயிருந்த அரசர்களால் நாடு முழுவதும் நற்றமிழ் வளர்ந்தது.

''சங்கத் தமிழ்' என்ற சிறந்தொரு அடைமொழி எம்மொழிக்கு மாத்திரமே கிடைத்துளது. சங்கமென்றால் கூடலைக் குறிக்கும். பண்டைக் காலத்தில் புலமையும், புதுமையும் கொண்ட அறிஞர்கள், பாலுடன் தேன் கலந்தன்ன பண்புடன் பலவற்றையும் ஆய்ந்து அறிவுச் செல்வத்தை ஆக்கி வைத்தனர். இதற்கு அறிஞரும், அறவோரும் கூடி அமைக்கும் அமைப்பான சங்கமென்பதே அக்காலத்துக்கும், அருமருந்தன்ன தமிழ் மொழிக்கும் சிறப்புப் பெயர்களாயின. இக் காலத்தில் முதற் சங்கம், இடைச் சங்கம், கடைச் சங்கமென்னும் முச்சங்கங்கள் முறையே மதுரையிலும், கபாட புரத்திலும் அமைக்கப் பெற்று இருந்தமிழ் பெருக்கின. இரு தமிழ்ச் சங்கங்களும் கடல்கோள் காரணமாக மறைய, கடைச் சங்கம் மதுரையில் நிறுவப் பட்டுத் தமிழ் வளர்த்ததென்பது வரலாறு. முதற் சங்கத்திலே அருந் தமிழ் முனிவர் அகத்தியர், முரஞ்சியூர் முடி நாகராயர் முதலிய புலவர்களும், இடைச் சங்கத்திலே தொல்காப்பியர், வள்ளூர்க் காப்பியர் முதலான புலவர்களும், கடைச் சங்கத்திலே கபிலர், பரணர், நக்கீரர் முதலான புலவர்களும் இருந்து தமிழ் வளர்த்தனர்.

இதனாற்றான் 'சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த காலம்' என்ற தனிச் சிறப்பினைச் சங்க காலம் தனதாக்கிக் கொண்டது. 'தமிழாண்ட காலம்', 'தமிழ் வளர்த்த பொற் காலம்' என்றெல்லாம் சான்றோர் திருவாயால் போற்றப்படுகின்றது. எந்த வொரு இலக்கியமும், அவை எழுந்த காலத்தைப் பிரதிபலிப்பது இயல்பு. இதனாலன்றோ இலக்கியங்கள் 'சமுதாயத்தின் நிலைக் கண்ணாடி' என்ற சிறப்பைப் பெறுகின்றன. சங்க இலக்கியங்களும், அக்காலத்து மக்கள் வாழ்க்கையையே ஆதாரமாகக் கொண்டெழுந்துள்ளன. சங்கப் புலவர்கள் மாந்தர் வாழ்வையே மையமாகவும், பாடு பொருளாகவும் கொண்டுள்ளனர். சங்க காலம் ஒரு சமுதாய நிலைக் கண்ணாடி எனில் மிகையில்லை. பண்டை நாளிற் தமிழ் நாடு பல வகை நிலப் பிரதேசங்களாய்ப் பிரிந்து கிடந்தது. மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி எனப் பட்டது; வனமும், வனஞ் சார்ந்த இடமும் முல்லை என அழைக்கப்பட்டது; வயலும், வயல் சார்ந்த இடமும் மருதம் எனக் கூறப் பட்டது; கடலும், கடல் சார்ந்த நிலமும் நெய்தல் என்று சொல்லப்பட்டது; வளமற்ற வரண்ட நிலம் பாலை எனப் பகரப் பட்டது. இவ்வாறாக ஐவகை நிலங்களும் அமைந்து கிடந்தன.

முன்னாளில் மக்கட் கூட்டத்தைக் குறிக்கப்பட்ட திணை என்னும் பதம் சங்க காலத்தில் மாந்தரின் ஒழுக்கத்தைச் சுட்டுவதாயிற்று. இவ்வழி ஒவ்வொரு நிலத்திற்குரிய ஒழுக்கமும் திணை என்ற சொல்லுடன் இணைந்து வழங்கியது. மக்கள் வாழ்க்கையை மையப் புள்ளியாகக் கொண்டெழுந்த சங்க இலக்கியங்கள் எட்டுத்தொகை, பத்துப் பாட்டு என அறிஞரால் வகுக்கப் பட்டன. இப் பனுவல்கள் பதினெண் மேற்கணக்கெனவும் கூறப்பட்டன.

சங்க காலத்து வாழ்வொழுக்கங்கள் 'அன்பினைந்திணை' என்ற அழகிய மகுடத்தின் கீழ் அமைந்தன. இவ்வொழுக்கங்களே அக்கால இலக்கியத்தின் அடிநாதமாயின. குறிஞ்சி நிலமோ மலைவளம் மிக்கது. ஆங்கு அரிவையர் காவற் பரணமைத்துத் தினைப் புலங் காத்தனர்; ஆடவரோ வேட்டையில் நாட்டங் கொண்டிருந்தனர். இவ்விரு பாலாரும் கண் கலந்து, நெஞ்சம் இணைந்து கூடுவதால் குறிஞ்சி நிலத்தொழுக்கம் புணர்தலாயிற்று.

செழிப்புள்ள நிலங்கட்கிடையே பரந்து கிடந்த நிலம் பாலை. இங்கு வாழ்ந்த ஆடவரின் தொழில் வழிப்பறிக் கொள்ளையாம். சூறையாடுதலின் பொருட்டுத் தன் காதலியைத் தலைவன் பிரிதலுண்டு. இதனிமித்தம் இந்நிலவொழுக்கம் பிரிதலாயிற்று.

காடு சார்ந்த முல்லையிலே தலைவன் தம் மந்தைகளைக் காத்தற் பொருட்டுப் பாடி வீடமைப்பது வழக்கம். இவ்வாறு பாடி வீடு செல்லும் தம் நாயகர் வரும் வரையும் வழி பூத்தவராய்த் தலைவியர் காத்திருப்பர். இதனால் இந்நிலம் இருத்தலெனும் ஒழுக்கத்தைப் பெற்றது.

'கொடு மேழி நசையுழவர்' குடியிருக்க, பழனம் பரந்த நிலம் செழிப்பு வாய்ந்த மருதம். இந்நிலத்தில் அளவற்ற செல்வம் மலிந்தது; வளங்கள் நிறைந்தன; இதனால் ஆடவர் இரவு வேளைகளில் பரத்தையரை நாடி இன்பம் பெற்றனர். இதன் காரணமாகத் தலைவியர் நாயகரோடு ஊடினர். இதன் வழி மருதம் ஊடல் எனும் ஒழுக்கம் கொண்டது.

கடலும், கடல் சார்ந்த நிலமும் நெய்தல். இங்கு கடலில் தொழில் மேற்கொள்ளப் புறப்பட்ட ஆடவரை, அந்தி வந்தடைந்தும் காணாத காதலியர் நாயகரை நினைந்து இரங்கினர். இதனால் நெய்தல் இரங்கலை ஒழுக்கமாய்ப் பெற்றது.

அன்பினைந்திணை தவிரக் கைக்கிளை, பெருந்திணை என்னும் அக ஒழுக்கமும் வழங்கி வந்தது. இம் மரபுகள் அகத்திணைக்கு உரியனவாம். போர், வீரம், கொடை முதலானவை புறப்பொருளின்பால் அடங்குவன. இவையும் வஞ்சி, வெட்சி, தும்பை, உழிஞை, வாகை, பாடாண், காஞ்சி என எழுவகைப்படுவன.

சங்கப் புலவர்கள் மதி நலம் மிக்கவர்கள்; சந்தர்ப்பமறிந்து தமிழ் செய்தவர்கள். தமக்கெனத் தனிப் பண்புகள் கொண்டவர்கள். இன்ன பொருளை இன்னவாறு அமைக்க வேண்டுமென்ற மரபு பிறழாது இலக்கியஞ் செய்தனர். காதல், வீரம் முதலான பண்புகளைச் சங்கப் புலவர் அமைத்துக் காட்டும் செவ்விய முறை, வியத்தலுக்கும், நயத்தலுக்கும் உரியது. அறிவும், அழகுணர்ச்சியும் மிக்க புலவர் இயற்கைக் கோலங்களை எழிலுறச் சித்தரித்தாலும், மக்கள் வாழ்வினுக்கே முதன்மை கொடுத்தனர். முதல், உரி, கரு முதலான விசேட பண்புகள் சங்கச் செய்யுள்களிற் பொருந்த அமைந்துள்ளன. உள்ளத் தெளிவும், உலகியலறிவும், குழந்தை மனமுங் கொண்ட புலவர் பெருமக்கள் உவமை, உள்ளுறை யுவமை ஆகிய உத்திகளைக் கொண்டு உள்ளுந் தோறும் உவகையளிக்கும் வண்ணம், செய்யுள்களை ஆக்கியுள்ளனர். அகப்பாடல்கள் புல நெறி வழக்கிலும், புறப் பாடல்கள் தன் கூற்று வழக்கிலும் அமைந்துள்ளன.

சங்க காலத்துப் புலவர்களுள் தாரகை நடுவண் தண்மதி ஒத்தவர் அகத்தியர். அழகுத் தமிழ் மகளை வளர்த்த பெருமான். தொல்காப்பியந் தந்த தொல்காப்பியனாரும், வள்ளூர்க் காப்பியனாருஞ் சிறந்த புலவர்கள். திருமுருகாற்றுப் படையும், நெடுநல் வாடையும் தந்த நக்கீரனார் நற்றமிழ்ப் புலவர். குறிஞ்சிப் பாட்டளித்த கபிலர் மற்றும் பரணர் ஆகியோரும் அருந் தமிழ்ப் புலவர். பெண்பாற் புலவர்களுள் ஔவையார், காக்கை பாடினியார்,வெள்ளி வீதியார் முதலானோர் சிறந்த புலமை மிக்கோர்.

சங்க காலமானது புலவர்களின் பொற்காலம்; வில்லேருழவர் சொல்லேருழவரைப் பணிந்து நின்ற காலம். ஔவைக்கு அருங் கனியளித்த அதிய மானும், கோப்பெருஞ் சோழனுக்காய் உயிர் துறந்த பிசிராந்தையார், பொத்தியார் ஆகியோரும், அரசரும் புலவரும் எத்துணை நண்பு பூண்டொழுகினர் என்பதற்கு எடுத்துக் காட்டுக்கள். பாண்டியன் நெடுஞ்செழியன், கிள்ளிவளவன், இளம் பெருவழுதி முதலான வேந்தர்களும் புலமை பெற்றிருந்தனர். புலவர்க்குப் பொன்னும் பொருளும் வாரி வழங்கும் பேகன், பாரி முதலிய 'கொடை மடம்' மிக்கவர்களும் வாழ்ந்து, சங்க காலத்துக்குச் சான்றாண்மை ஈர்ந்தனர்.

சங்க காலத்துச் சமய நிலையானது குறிப்பாலுணர்த்தப்படுகிறது. 'நுதல் விழி நாட்டத்து இறைவன்', 'நீல மேனி வாலிழை பாகத்து ஒருவன்' என்னும் பெயர்கள் இறைவனைக் குறிக்கின்றன. பரிபாடல் என்னும் பக்தி இலக்கியம் அக்காலச் சமய நிலையைத் தெளிவுபடுத்துகிறது. கொற்றவை வழிபாடு, நடுகல் வழிபாடு முதலியன இடம் பெற்றுள்ளன.

ஒரு சேர நோக்கும் போது, சங்க காலம் அரசியல், பண்பாடு, இலக்கியம் முதலான பல்துறைகளிலும் ஒரு பொற்காலமென்றே கொள்ள வேண்டியுளது. முத்தமிழும் சங்கம் கொண்டு வளர, தமிழ் மகள் சங்கப் பலகையில், சதிராட, செங்கோல் வழுவா மன்னர்கள் ஆட்சி செய்ய, எண்டிசையும், நானிலமும் இருந் தமிழ் ஒலித்திடும் வகையில் புலவர் தமிழ்பாட, தமிழின் பொற்காலமாய்ப் பொலிவு பெறுகின்றது சங்க காலம். நாமும் சங்க காலத்தைச் சங்கம் வைத்துப் போற்றுதும், வாரீர்!

# கவிதை எழுத்துத் தேர்வுப் பரிசில் கவிதைகள்

**செல்வி வாசுகி குணரத்தினம்,**

*கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு.*

*கவிதை உயர்நிலை எழுத்துத் தேர்வில் முதற் பரிசில் பெற்றவர்.*

—O—

## (i) எனது உயர்வு உள்ளல்

*எனது மனம் அழுகிறது!*
*எதை நினைத்தோ துடிக்கிறது!*
*தினம் தினமும் உயர்கிறது—மனம்*
*திசை கெட்டு அலைகிறது!*

*உயர உயர நினைக்கிறது!*
*உயர விதி தடுக்கிறது!*
*சுயமை கொண்ட எனது மனம்—சிறு*
*கணப் பொழுதில் விழுகிறது!*

*உயர்ந்த எண்ணம் மனதில் இல்லை!*
*உண்மை சொல்லும் திறனும் இல்லை!*
*அயர்ந்த போது அழுகை தொல்லை—இதை*
*அறிந்த மனம் உயர்வதில்லை!*

*ஒழுக்கம் வந்தால் உயர்வு வரும்!*
*ஒரு போதும் உயர்வு தரும்!*
*வழக்கம் போல உளம் நினைக்கும்—அதனால்*
*வழி தவறித் தினம் நடக்கும்!*

*வகை தேடி அலையும் உளம்!*
*வாழத் தினம் நடிக்கும் களம்!*
*பகை கூடி வந்த தினம்—உளம்!*
*பறக்கிறது உயரத் தினம்!*

## (ii) அன்றொரு நாள்

*அன்றொரு நாள் நல்ல நேரம்*
*அமுது உண்ணத் தமிழன்னை*
*என்னோடு வாவென்று*
*எனையழைத்தாள் மகிழ்ந்து விட்டேன்!*

*இப்படியோர் நல்ல காலம்*
*எனக்குக் கிடைக்குமென்று*
*சொப்பனமும் காணவில்லை*
*துணிந்து விட்டேன் செல்வதற்கு!*

*இப் புவியில் வந்துதித்தேன்*
*இலங்கையின் கிழக்கினிலே*
*செப்பினேன் மழலைமொழி*
*செந்தமிழில் நா திறந்து!*

*அற்புதமாய் நான் இன்று*
*அருந்தமிழுக்கு மகளானேன்!*
*எப்போதும் எனது உளம்*
*என் தாயை வாழ்த்தி நிற்கும்!*

*வாழ வைத்த என் தாயை*
*வீழ நான் விட மாட்டேன்!*
*ஏழ்மை வந்து என்னிடத்தில்*
*என் தாயை வாழ வைக்கும்!*

## (iii) முயலும் ஆமையும்

*ஆமைக்கும் முயலுக்கும்—இன்று*
*அடிதடியாம் என்று*
*அயலவர்கள் சொன்னார்கள்!*
*இடிந்து விட்டேன் இது கேட்டு.*

*இருவருமே புத்திசாலிகள்தான்—ஏன்*
*இடிபட்டார்? தெரியவில்லை!*
*ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்தார்கள்*
*ஒன்றுமே புரியவில்லை! இன்று.*

*பாய்ந்தது முயல் தவறா—ஆமை*
*பதுங்கியது தவறுதானா!*
*வாய்த்தது வேளை என்று*
*வசதி பார்த்ததன் தவறா!*

*ஆமை பாவம் என்று—முயல்*
*அடங்கியது தவறுதானா!*
*யாரை நாம் கேட்கிறது*
*நடப்பதெல்லாம் நடக்கிறது!*

இடையிலே ஒரு செய்தி—இந்த
அரைவட்டப் போட்டியிலே
மடைத்தனம் செய்தவர்கள்
மக்கள் தானாம்! ஏற்கலாமா?

## (iv) சூழலைக் காப்போம்

வாழப் பிறந்து விட்டோம்!
வாழும் வழி தெரிந்து கொண்டோம்!
வளத்தை அறிந்து கொண்டோம்!
வழக்கத்தை மாற்றி விட்டோம்!

பச்சை மரஞ் செடியையெல்லாம்
பட்ட மரம் ஆக்கி விட்டோம்!
இச்சையிலே அவற்றை எல்லாம்
இல்லாமல் செய்து விட்டோம்!

தொழில் நுட்பம் தேவை என்றோம்!
தொல்லைகளை வாங்கிக் கொண்டோம்!
ஒழிந்திடும் வறுமை என்றோம்!
ஒன்றுமே நடக்கக் காணோம்!

சுற்றி வந்த ஆசையினால்
சூழலையே கெடுத்து விட்டோம்!
மற்றவற்றை நினைக்காமல்
மடைத்தனமாய் இருந்து விட்டோம்!

இனிய நாளை இழந்து விட்டோம்!
இழப்புக்களை ஏற்று நின்றோம்!
துணிவு கொண்டு இனிமேல் நாம்
சூழலைப் பாதுகாப்போம்!

## (v) சங்க காலம் தமிழின் பொற்காலம்

கலை வளர்த்த தமிழ்நாடு
கன்னித் தமிழ்த் தாய்க்குச்
சிலை வைத்த காலம்
சரித்திரத்தில் பொற்காலம்!

சங்கங்கள் மூன்று வைத்துத்
தமிழ்த் தாயை அதில் வைத்து
எங்களுக்குச் சுவை தந்த
இனிய பொற்காலம்!

சங்கம் வளர்த்த தமிழ்
சரித்திரத்தில் தங்கத் தமிழ்!
பங்கம் இல் தமிழ்!
பழந்தமிழ் சங்கத் தமிழ்!

எட்டுத் தொகை தந்து!
எதுகை மோனை நயம் தந்து!
கொட்டும் தமிழமுதம்
குவலயத்தில் பொற்காலம்!

அகவாழ்வும் புறவாழ்வும்
அவசியம் என்பதனை
அன்றே சொல்லி வைத்த
அருமருந்து சங்கத் தமிழ்!

---

எனது சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழா கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் சிறப்பாக நடந்தேறியது. சகல வகையிலும் ஒத்துழைப்புத் தந்த கொழும்புத் தமிழ்ச் சங்கத்துக்கு மனமினித்த நன்றி.

உடுவை தில்லை நடராசா
கலாசார விளையாட்டுத்துறை அமைச்சு,
திருகோணமலை
04.02.1991

## செல்வன் ச. மணிமாறன்

யாழ் இந்துக் கல்லூரி
கவிதை முதனிலை எழுத்துத் தேர்வில் முதற் பரிசில் பெற்றவர்

—o—

### (i) சங்க காலப் புலவர்

1. மாற்றில்லாத் தங்கமெனும்
மாண்புடைய எந்தமிழைத்
தூற்றிடுவோர் யாருமின்றித்
துணிவுடனே புகழ்பரப்பிச்
சாற்றினரே நந்தமிழர்
சங்கத்துத் தேன்புலவர்
ஏற்றிடுவோ மவர் புகழை
எல்லோரும் பாடிடவே

2. அன்னைத் தமிழிற்கு
அழகான இலக்கணங்கள்
தொன்மைக் காலத்தே
செய்திட்ட புலவனது
நன்மைத் திறம்பற்றி
நாவெல்லாம் தமிழாக
என்னால் பாடிடவே
என்றென்றும் முடியாதே

3. நக்கீரனெனும் புலவன்
நன்றாகத் தமிழ்செய்தான்
அக்காலம் தமிழிற்கு
அழகான பொற்காலம்
இக்காலம் வரைதமிழில்
இடம் பிடித்த இளம்காளை
அக்கீரன் புகழ்பாட
ஆராலும் முடியாதே

4. இகம் போற்றும் ஈழத்து
இன்தமிழன் பூதந்தேவன்
அகப்பாடல் பலவற்றில்
அன்னைக்கு அணிசெய்தான்
செகம் போற்ற நற்கவிதை
செய்திட்டான் நிறைவாக
இகமுள்ள வரை தமிழில்
இருந்திடுமாம் அவன்பெயரே

5. அழகான மங்கையவள்
ஔவையெனும் தமிழ்க்கன்னி
பழகு தமிழ்ப் பனுவல்கள்
பலவற்றைப் பாடினளே
இள மங்கை இவள் தகைமை
இனிமையுடன் பாடிடவே
வளமான குரலுடைய
வனக்குயிலும் போதாதே

### (ii) வாழ்த்துதும்

1. முத்தன்ன நாண நகை
மூவுலகும் நிறைபெருமை
பித்தென்றே தமிழ்ப்புலவர்
பின்னாலே சென்றிடவே
தத்திமிதி திமிதியென
தனியழகாய் நடைபயிலும்
சத்தான தமிழவளைச்
சகம்போற்ற வாழ்த்துதும்

2. அன்னத்தின் நடையழகு
அழகான சொல்லழகு
வன்னத்திலே வெள்ளை
வனப்பினிலே குமரி
என்னத் திகழ்ந்துலகில்
எம்மவரைக் கவர்ந்திருக்கும்
கன்னித்தமிழ் உன்னைச்
கனிவாக வாழ்த்துதும்

3. கல்விக்குக் கலையரசி
கனிவுடனே பெற்றவளே
வில்நுதலே விழியழகி
விரிகடலின் நித்திலமே
நல்லறிஞர் நாவினிலே
நடனங்கள் புரிபவளே
எல்லோரும் ஏற்றிடவே
என்றென்றும் வாழ்த்துதும்

4. வண்ணத் தமிழ்த்தோகை
வடிவரசியென உனையே
எண்ணிப் பல புலவர்
என்றென்றும் தவமிருப்பர்
கண்ணில் ஒளி கொடுப்பாய்
கற்றவர்க்குப் புகழ்கொடுப்பாய்
பெண்ணே பெரும் நிதியே
பெருமையுற வாழ்த்துதும்

5. என்றென்றும் பதினாறாய்
எப்படிநீ யிருக்கின்றாய்
இன்றுவரை எம் நாவில்
இளமையுடன் சிரிக்கின்றாய்
பொன்றிடவே காலமேதும்
பெண்மயிலே உனக்கில்லை
என்றாலும் என் ஆசை
ஏற்றமுற வாழ்த்துதும்

## (iii) சங்க காலம் தமிழின் பொற்காலம்

1. உலகெல்லாம் தமிழோசை
உறவைத்த ஒருகாலம்
நிலவொத்த குளிர்தமிழை
நினைப்பவரை அழைத்தன்று
அலகில்லாத் தமிழிற்கு
அருஞ்சங்கம் அமைத்தார்கள்
பலகாலம் தமிழ் செய்த
பொற்காலம் அக்காலம்

2. இயல்பான உணர்வதனை
இனிமையுடன் பாடிடவே
இயல்வகையில் இருயாப்பை
இக்காலம் பெற்றதுவே
கயலொத்த கண் தமிழே
கனவகை வளமூட்டிப்
புயல் வேக வளர்ச்சியினைப்
புரிந்திட்ட ஒரு காலம்

3. அகமென்றும் புறமென்றும்
அருந்தமிழில் இருபிரிவாம்
அகமென்று அருங்காதல்
அமைப்பினையே எனக்குணர்த்தி
அகமற்ற புறவழியே
அரும் வீரம் பலசொல்லிச்
செகம் போற்ற இவ்வுணர்வே
செய்திட்ட பொற்காலம்

4. சங்கத்துத் தமிழென்றால்
தனித்துவமே யதற்குண்டு
தங்கத்து நகையென்றால்
தனிமதிப்பு அதற்குண்டு
சிங்கத்துத் தமிழ் மறவர்
சீரியநற் கதைதனையும்
அர்த்தத்திற் குறைவுபடா
அருமாதர் காதலையும்

5. இன்தமிழில் கவிசெய்து
இன்றுவரை வாழவைத்த
நன்மைநிறை அக்காலம்
நாமெல்லாம் நலமுடனே
தொன்மைநிறை பெருமையுடைத்
தமிழ்த்தாயை போற்றிடவே
இன்னிலையை அவட்களித்த
ஈடில்லாப் பொற்காலம்

---

தமிழ்ச் சங்கம் ஆக்க இலக்கியத் துறையில் நிறையத் தொண்டு செய்து வருகிறது. அச்சகம் ஒன்று நிறுவும் சாத்தியக் கூறு பற்றியும் ஆராய வேண்டும் என்பது என் ஆசை.

சோ. பத்மநாதன்
விரிவுரையாளர், பலாலி ஆசிரியகலாசாலை
15.12.1986

## எம். ஜே. பாத்திமா நஸ்ரின்
*பாத்திமா மகளிர் மகா வித்தியாலயம், புத்தளம்*

—o—

## (i) சங்க காலப் புலவர்கள்

*தமிழே!*
*உன்னைப் பெற்றது மதுரை என்றால்*
*பாலூட்டிப் பாராட்டிச் சீராட்டி வளர்த்தது யார்?*
*சங்கத்துச் சான்றோர் தானே?*

*நீ வித்தாக இருந்தாய்—உனக்கு*
*முத்தாக மழை பொழிந்து*
*சத்தான வளமூட்டிப்—பூங்*
*கொத்தாக விரிந்தது நம் புலவர் தானே?*

*நீ..........*
*நதி என்றால்*
*மடி தந்து தாங்கிய மலைச்சாரல் நம் சான்றோர்*
*ஒளி வீசும் மதி என்றால்*
*துலங்க வைத்த தினகரன் சங்கத்துப் புலவர்.*

*அரசனுக்கு ஆசானாய் நல் ஆலோசகனாய்*
*அறநெறி பகர்வதில் அமுதச் சுரப்பியாய்*
*மனைவழி வகுப்பதில்*
*விளங்கினரன்றோ நம் சான்றோர்.*

*வளம் தந்த கொண்டலாய்*
*வாழ்வளித்த அண்ணலாய்*
*வீசு தென்றலின் இனிய ஓசையாய்—வீறுகொண்டவர்*
*பேசும் பாஷையாய்ப் பிறந்தவர் அன்றோ நம்புலவர்.*

*சங்கம்—தமிழன்னைக்கோர் தலையங்கம்.*
*சங்கத்துச் சான்றோர் சரித்திரத்தில் என்றும் வாழ்ந்தோர்.*

## (ii) சங்க கால அரசர்கள்

*படை நிறைந்த நடை நிமிர்ந்த*
*தடை களைந்த—நம் அரசர்*
*மடை திறந்த கொடை அளந்த*
*மண் போற்றும் மன்னர்.*

*நீர் உப்பிட்டதால் தானே*
*கற்பனை உணவு ருசித்தது*
*களம் அமைத்ததால்தானே*
*கவிப் பயிரும் முளைத்தது.*

தமிழ் உம்மை வளர்த்தது—நீர்
அதன் மதலைகளை வளர்த்தீர்கள்
திருமகள் உமக்கு ஈர்ந்ததைக்
கலை மகளுக்கன்றோ தாரை வார்த்தீர்கள்.

உம் நாட்டில்
சம நீதி தழைத்ததால் தான்
சமர் மேகம் கலைந்து—சான்றோரின்
விழுமிய கருத்துக்களைக் கதிராகக் கொண்டு
எழும்பியது அருட் சூரியன்.

படியமைத்துக் கைப்பிடி கொடுத்து
மிடி எனும் கற்களை மிதித்து விட்டதால் தானே
பா எனும் பாதம் கொண்டு—நம்
பாவலர் நடை பயின்றார்கள்.

ஆம்
சங்க அரசரே
பொங்குக உமது புகழ்
தங்குக உலகம் முழுவதும்.

## (iii) சங்க காலம் தமிழின் பொற்காலம்

சகாராக்களிலும் தண்ணீர்ச் சுனைகள்
எதிர்காலம் ஏற்றம் பெற
பிறந்தது ஒரு காலம்
ஆம் சங்க காலம்!

தமிழன்னைக்கு—
தொல்காப்பியம் நீராட்டியது
திருக்குறள் பன்னீர் தெளித்தது
மஞ்சளிட்டுப் பொட்டு வைத்துப் பூச்சூடின
மணிமேகலையும் சிலப்பதிகாரமும்
களங்கம் ஒன்றின்றி
மங்கலமாய் வந்து நின்றாள் அன்னை.

மதுரை அவள் பிறந்தகமென்றால்
பார் முழுதும் அவள் புக்ககம்
அவள் ஈன்றெடுத்த குழந்தைகள் தானே
இன்றிருக்கும் இலக்கியம்.

கெஞ்சியவர் பெற்றனர்
கொஞ்சினவர் இன்புற்றனர்
அஞ்சினவர் அகமகிழ்ந்தனர்.

ஆம் தாயே
உனது பொற்காலம்
உலகிற்கொரு உயிர்நாடி.

## (iv) சூழலைப் பாதுகாப்போம்

நண்பா
தேசத்தாயிடமிருந்தோர் இரங்கல் மனு—தன்
நேசப் புதல்வனுக்கோர் விமர்சன மடல்!

ஓ......... மக்காள்
உங்கள் அபிமானத்தைப் பிரதிபலிக்க
எனக்கோர் கும்பாபிசேகம்—நீங்கள்
குளிர் காய்வதற்காக—மரத்தை
எனது போர்வையை அகற்றலாமா?

வானம் அழுவதை நிறுத்துவதற்கா
வனத்தை அழித்தீர்கள்—இங்கு
நான் கதறுகின்றேனே (கை) குட்டைகள் எங்கே?
மக்காள்.........
வீசும் காற்றிலே நஞ்சாம்
ஓசோன் படையில் ஓட்டையாம்
ஓட்டிவிடுங்கள் மரமெனும் சலவைக்காரனைக் கொண்டு.

ஆலைகள் அருகில் சோலை வளர்ப்பின்—கல்விச்
சாலைகள் தோறும் சுத்தம் படிப்பீர்
வீடுகள் எங்கினும் வளம் சேர்ப்பீர்
வீதிகள் எல்லாம் விளங்க வைப்பீர்.

மக்காள்..........
கடைசியாக ஒரு வார்த்தை
ஆரோக்கியம் உமது பைக்குள் சில்லறையாக இருப்பினும்
சுக நலக்கேடு ''நோட்டு''க்களாக மாற்றி விடாதீர்
சிதைந்தது சூழல் என்பதற்காக
புதைந்து போய் விடாதீர்
மீண்டும் பிறவுங்கள்
சூழலின் காவலனாய்........
நமோ.......... நமோ..........

---

'மன்யோசு காதற் காட்சிகள்' நூல் வெளியீட்டு விழாவில் பாராட்டுகளை வழங்கியமை எனது மனதை விட்டு நீங்காத நிகழ்வாக உள்ளது. கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பணிகளுக்குப் பாராட்டுகள்.

கு. சோமசுந்தரம்
பணிப்பாளர், தேசிய கல்வி நிறுவனம்,
கொழும்பு
27.12.1992

திருமுறை இலக்கிய ஆய்வுக் கட்டுரை

# திருமுறை இலக்கியங்களும், சங்க இலக்கிய மரபுகளும்


## செல்வி வயிரமுத்து விசயலட்சுமி,

ஆசிரியை, கார்மேல் பாத்திமாக் கல்லூரி, கல்முனை.


செந்தமிழ் வளங்கொழிக்கும் தமிழகம் காலத்துக்குக் காலம் பல்வேறு இலக்கியங்களைத் தந்து தமிழ் அணங்கை அலங்கரித்தது. ''கல் தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்த தமிழ்'' எனப் போற்றப்படும் முந்து தமிழ் வளர உதவிய இலக்கியங்களுள் சங்க இலக்கியங்கள் போற்றத் தகுந்தன. இறையனாரே முன்வந்து இயற்றிய நூல்களும் (இறையனார் அகப் பொருளுரை) பிறவும் எட்டுத்தொகை, பத்துப்பாட்டாய் இன்று வரை போற்றப்படுகின்றன. இவை அகத்துறை, புறத்துறை பற்றிக் கூறுவனவாக அமைந்தபோதிலும் அகம் கூறும் இலக்கியங்களே சிறந்து விளங்கின. இத்தகைய இலக்கியப் பண்புகள், மரபுகள் பல்லவர் காலத்திலும் அதற்குப் பின் வந்த காலத்திலும் எழுந்த திருமுறை இலக்கியங்களில் எடுத்தாளப்படுவது சங்க இலக்கிய மரபின் பெருமையினைப் பறை சாற்றுவதாக உள்ளது.

திருமுறை தெய்வத் தன்மை வாய்ந்த இலக்கியங்களாக, தமிழ் வேதமாகப் போற்றப் படுகின்றன. பன்னிரு திருமுறைகளும் இத்தன்மையைக் கொண்டுள்ளன. திருமுறை இலக்கியங்களைத் தந்த நூலாசிரியர்கள் பலர் வாழ்ந்த காலம் பல்லவர் காலமாகும். இவர்கள் தமிழ் இலக்கியம் புது வழியில் செல்லப் பாதை அமைத்தனர். பொது மக்கள் விரும்பும் இலக்கிய வடிவங்களில் தத்தம் இறையான்ம அனுபவத்தைக் கொண்டு வைதிக சமயம் வாழ வழி வகுத்தனர். சமயத் தொண்டர்களான நாயன்மார்கள் நில்லாதனவற்றை நிலையுள்ளனவென்றுணரும் புல்லறிவாளரைத் தெருட்டித் தங்கோளிற்கும், வாழ்விற்கும், மக்களையும், மன்னர்களையும் ஈர்ப்பதற்கு மேற்கொண்ட முயற்சியே (பல்லவர் கால) பக்தி இலக்கியங்களாகத் தமிழை வளம்படுத்தின. பொது மக்கள் அகப் பொருள் நூல்களைப் பெரிதும் விரும்பிக் கற்றனர். இவ்விதம் மக்கள் உலகியலைத் தனியே கூறும் அகப் பாடல்களில் ஈடுபட்டுப் பற்றுள்ள வாழ்க்கையை நடாத்தினர். சைவ, வைணவத் தலைவர்கள் மக்களைச் சிற்றின்பத்தின் நிலையாமையையும், சிறுமையையும், பேரின்பத்தின் அழியாமையையும், பெருமையையும் உணரச் செய்வதற்கு அவர்கள் விரும்பிய உலகியல் வாழ்க்கையைக் கூறும் இலக்கிய வடிவங்களைப் பயன்படுத்தினர். இதனால் பல்லவர் காலத்தில் எழுந்த பெரும்பாலான இலக்கியங்கள் நாட்டுப் பாடல் அமைப்பில் பொது மக்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் இயற்றப்பட்டன. பொது மக்களும் தாம் விரும்பும் இலக்கிய வடிவங்களில் வெல்லம் கலந்த மருந்து போலக் காணப்படும் சமயக் கருத்தின் மெய்ப் பொருளைச் சிறிது சிறிதாக அறியத் தொடங்கினர்.

இலக்கிய மரபினை எடுத்து நோக்கும்போது திருமுறை இலக்கியங்களுக்கும், சங்க கால அகத்திணைப் பாடல்களுக்கும் ஒற்றுமைகள் பல காணப்படுகின்றன. ஆனால் திருமுறை இலக்கியங்களிலே சங்ககால அகத்திணை மரபை முற்றாக ஏற்காது ஆங்காங்கு மாற்றியும் புதுக்கியும் கையாண்டனர். சங்க காலப் பாடல்கள் தனிப் பாடல்களாக விளங்குகின்றன. அவை அன்பினைந்திணையின் சிறப்பினை முதல், கரு, உரி ஆகிய முப்பொருளின் துணை கொண்டு உணர்த்துகின்றன. அவை தலைவனுடைய பெயர் சூட்டப்பட்டோ, அவனை அடையாளம் கண்டு கொள்ளக்கூடிய வருணனைப் பகுதி கொண்டோ விளங்குவதில்லை. ஒத்த அன்பான ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம், அக்கூடலின் பின்னர் அவ்விருவரும் ஒருவருக்கொருவர் தத்தமக்குப் புலனாக இவ்வாறு கூறப்படாததாய்,

யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறும் பொருளையே அகம் எனக் கருதினர். மேலும், அக்காலத்தில் ஆசிரியமும், வஞ்சியுமே யாப்பாகக் கொள்ளப்பட, பல்லவர் காலத்தில் இம்மரபு பலவகையில் வளர்ச்சியுற்றது. அவற்றுள் கோவை, உலா, அந்தாதி, தாண்டகம், மடல், பதிகம், பிள்ளைத் தமிழ் என்பன குறிப்பிடத்தக்கன. இவற்றில் இறைவன் பெயரினால் சுட்டப்பட்டான்.

''கோவை என்பது கூறும் காலை
மேவிய களவு கற்பெனுங் கிளவி
ஐந்திணை திரியா அகப் பொருள் தழீஇ
முந்திய கலித்துறை நானூறென்ப.''

எனப் பன்னிரு பாட்டியல் (221) கோவைப் பிரபந்தத்திற்கு இலக்கணம் கூறுகிறது. கோவைப் பிரபந்தம் அன்பினைந் திணையாகிய அகப் பொருள் மரபை ஒட்டிக் களவு, கற்பு ஆகிய ஈரொழுக்கங்கள் பற்றிய கிளவிகள் ஒழுங்குபடக் கூறுவன. அகப் பொருட் துறைகள் ஒழுங்காகக் கோக்கப்பட்டிருப்பதால் கோவை என்னும் பெயரைப் பெற்றது. ''பாவை பாடிய வாயால் கோவை பாடுக'' என்று தில்லைக் கூத்தன் மணிவாசகரை வேண்ட, அவ் விறைவனையே பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு திருக்கோவையார் என்னும் கோவைப் பிரபந்தத்தைப் பாடினார். இந்நூலில் களவு, கற்பு என்னும் இரு பாகுபாடுகளுடன், இயற்கைப் புணர்ச்சி பாங்காற் கூட்டம் தொடக்கம் பரத்தையிற் பிரிவு வரை இருபத்தைந்து விடயங்களை நானூறு கட்டளைக் கலித்துறைப் பாடல்களூடாகக் கூறப்படுகிறது.

நுகர்வோரைத் தவிர ஏனையோர்க்குப் புலனாகா அனுபவங்களைக் கோவை இலக்கியம் கூறுகின்றது. நுகர்ந்தோர் உணருந்தோறும் பெற்ற இன்ப வளர்ச்சி அதிகம் என்பது உலகியலில் தலைவன், தலைவி, அன்புக்கு அடையாளமான குறியீடுகள், பாங்கன், பாங்கி, நற்றாய், செவிலித்தாய் முதலிய அகப்பொருட் பண்புகள், மரபுகள் என்பவற்றை இறைவனுக்கும், ஆன்மாவுக்கும் நிகழும் பேரின்பக் காதலுக்கு அறிகுறியாகத் தலைவர் இறைவனோடு சம்பந்தப்பட்டு ஆள்கிறார். இரு பக்கத்திலுமுள்ள நெருங்கிய தொடர்பே இங்கு பாடப் பெறுகிறது.

''ஆரணங்காண் என்பர் அந்தணர் யோகிய ராகமத்தின்
காரணங்காண் என்பர் காமுகர் காமநன் னூலிதென்பர்
ஏரணங்காண் என்பர் எண்ணர் எழுத்தென்பர் இன்புலவோர்
சீரணங்காய சிற்றம்பலக் கோயைவைச் செப்பிடினே''

திருக்கோவையார் போன்ற அறிவுநூற் பொருள் மாணிக்கவாசகர் போன்ற உலக நிலையாமை கண்டு, முற்றத் துறந்து, மெய்யுணர்ந்து, அவாவறுத்துச் சிவானந்தச் செல்வர் ஆனோர்க்கே அனுபவமாய் அமையும்.

இந்நூல் பேரின்பச் சார்பான நூல். பக்தி முத்திக்குப் பெத்தம் பேரின்பத்துக்குச் சிற்றின்பம் உவமை என வைத்து, உடம்பை உடைய யோகிகள் உற்ற சிற்றின்பம் அடங்கத் தன் பேரின்பமாக, அன்பே சிவமாய் அருளே காரணமாய், சுத்தாவத்தையே நிலமாக, நாயகி பரம்பொருளாக, நாயகன் பக்குவான்மாவாக, தோழி திருவருளாக, தோழன் ஆன்ம போதமாக, நற்றாய் பரையாக, திரோதாயி செவிலித்தாயாக, மேலும் நாயகன் கூற்றெல்லாம் நாயகி கூற்றாகவும் நிகழ்ந்து வரும். ''நாயகியைச் சிற்றம்பலம் போல வருணிக்கையால் நாயகி பரம் பொருளாயிற்று''. பெறுவான் நாயகனும், பேறு நாயகியுமாக இருக்கின்றது எனச் சீர்காழித் தாண்டவராயர் இந்நூலின் ஞானக் கருத்தினைக் குறிப்பிடுகின்றார்.

''கோலத்தனிக் கொம்ப ரும்பர்புக்
கஃதே குறைப்பவர்தஞ்
சீலத்தன கொங்கை தேற்றகி
லேஞ்சிவன் தில்லை யன்னாள்
நூலொத்த நேரிடை நொய்ம்மை யெண்
ணாது நுண்தேன் நசையாற்
சாலத் தகாதுகண் டீர் வண்டு
காள்கெண்டை சார் வதுவே''

இப்பாடல் மருங்கணைதல் போன்று உலகியற் பாங்கில் அமைந்த போதிலும், திருவுருப் பரிவாற் பெருகும் சுகத்தைப் பெறுவதையே உண்மைப் பொருளாகக் கொண்டுள்ளது.

''வளருங் கறியறி யாமந்தி
தின்றுமம் மர்க்கிடமாய்.......

என வரும் பாடலில் தலைமகளது வருத்தத்தைத் தோழி கூறுவதாகப் பொருள் கொண் டாலும், சிவனது கருணையின் அளவெடுத்துரைப்பதாகவே பேரின்பப் பொருள் கொள் கின்றார் மாணிக்கவாசகர். இவ்விதம் சங்க இலக்கிய மரபுகளைத் திருமுறை இலக்கியங் களுள் ஒன்றான திருக்கோவையார் கொண்டுள்ள சிறப்பு எடுத்தாளப்பட்டது.

திருமுறை இலக்கியங்களில் பதினொன்றாவதாக அமைவது பன்னிருவர் பாடிய நாற்பது பிரபந்தங்களாகும். இவற்றுள் சேரமான் பெருமாள் நாயனாரது நூலும் குறிப்பிடத்தக்கது. ''திருக்கயிலாய ஞான உலா'' என்னும் இந்நூல் திருக்கைலாயத்திலே உள்ள சிவபுரத்தில் எழுந்தருளி இருக்கும் சிவன் தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கித் தம்மை ஒப்பனை செய்து உலா வருவதாக வருணிக்கிறது.

''பேதை முதலா எழுவகை மகளிர்கண்
டோங்கிய வகைநிலைக் குரியான் ஒருவனைக்
காதல்செய் தலின்வரும் கலிவெண் பாட்டே''

எனப் பன்னிரு பாட்டியல் (221) உலாவுக்கு வரைவிலக்கணம் கூறுகிறது. சங்க காலத்தில் தலைவனின் வீரம், பெருமைகளில் தலைவியர் காமுறுவதாகக் காணப்பட இங்கு இறைவன் மீது ஆன்மா கொண்டுள்ள காதல் ஞான உலாவாகக் காணப்படுகிறது.

ஒருவரின் உளப்பாங்கைப் பிறர் அறிய அன்னம் முதலிய பறவைகளையும், மனிதரை யும் அனுப்புவதாகப் பாடும் பிரபந்தம் தூது எனப்படும். திருமுறை இலக்கியங்களில் ஒன்றான தேவாரத்தில், குயிலைத் தூதனுப்பும் தலைவியாகத் திருநாவுக்கரசர் தம்மைக் கருதிப் பாடினார். தலைவன் தலைவியைக் கண்டதற்குப் பின் பிரிகின்றான். தலைவி களவொழுக்கத்திற்குப் பின் பிரிந்த தலைவனைக் காணாது வருந்துகின்றாள். அவள் உள்ளத்தில் ஏக்கம் குடி கொள்கிறது. தனது களவொழுக்கம் மணத்திலே முடியுமா? தலைவன் வாக்குறுதி தளர்வானோ? என்று ஐயுறுகின்றாள். அவன் குறிப்பிட்ட நாள்வரை பொறுத்து ஆறியிருக்கும் ஆற்றல் அவளிடம் இல்லை. அவனை முதலில் கண்டு கூடிய பொழி லுக்குச் சென்று பல நாட்கள் அவன் வரவை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள். அவர்கள் உறவை மானிடர் எவரும் காணவில்லை. அப்பொழில்களிடத் துறையுங் குயில்களே கண்ணுற் றன. இதனால் அக்குயில்களையே தனக்கு அலர் ஏற்படாமற் காப்பாற்றத் தலைவனிடந் தூதாகச் செல்லுமாறு வேண்டுகிறாள்.

''சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள் சொல்லீரே
பன்மாலை வரிவண்டு பண்மிழற்றும் பழனத்தான்
முன்மாலை நகுதிங்கள் முகிழ்விளங்கு முடிச்சென்னிப்
பொன்மாலை மார்பன்என் புதுநலமுண் டிகழ்வானோ''

திருஞானசம்பந்தரும், ''சிறையாரும் மடக்கிளியே இங்கேவா......
.........பிறையாளன் திருநாமம் எனக்கொருகால் பேசாயோ''

எனக் கிளியைத் தன் தலைவனிடம் தூதனுப்புகின்றார். திருமுறை இலக்கியங்களில் காணப்படும் இத்தகைய பண்புகள் சங்க இலக்கிய மரபுகளிலும் புலவர்களால் எடுத்தாளப் பட்டுள்ளது. தலைவி தலைவனிடம் தோழியைத் தூதாக அனுப்புவதுடன், அன்னம், நாரை போன்றவற்றையும் தூதாக அனுப்புவதை,

''அன்னச் சேவல்! அன்னச் சேவல்!
குமரியம் பெருந்துறை அயிரை மாந்தி
வடமலைப் பெயர்குவையாயின் இடையது.........''

எனவும்,

''நாராய்! நாராய்!
பனம்படு விதையின் கிழங்கு பிளந்தன்ன
பவளக் கூர்வாய்ச் செங்கால் நாராய்!''

எனவும்

சத்தி முத்தப் புலவர் போன்றோர் பாடிய பாடல்கள் காட்டுகின்றன.

பக்திப் பாடல்களை உள்ளடக்கிய திருமுறை இலக்கியங்கள் தோற்றம் பெற வித்திட்ட பெருமை சங்க இலக்கியங்களுள் ஒன்றான பரிபாடலுக்கு உரியது.

''குற்றம் நீ குணங்கள் நீ கூடலாய வாயிலாய்
..........முற்று நீ புகழ்ந்துமுன் உரைப்பது என் முகம்மனே''.

எனத் திருஞானசம்பந்தர் தேவாரத்தில் போற்றவும்.

''எல்லா உலகமும் ஆனாய் நீயே'',
''அப்பன் நீ அம்மைநீ அன்புடைய மாமனும் மாமியும் நீ''

என நாவுக்கரசர் இறைவனைப் பாடவும் பரிபாடல் செய்யுள் ஒன்றே காரணம் எனத் துணியலாம்.

''தீயினுள் தெறல்நீ பூவினுள் நாற்றநீ
கல்லினுள் மணியுநீ சொல்லினுள் வாய்மைநீ
அறத்தினுள் அன்புநீ மறத்தினுள் மைந்துநீ''.

எனக் கடவுட் தன்மை மிக நுணுக்கமாகப் பரிபாடலில் எடுத்து உரைக்கப்படுகிறது.

மனிதரைப் பாடுவதை விடுத்துத் தெய்வத்தைப் பாடுமாறு வழிப்படுத்திய — ஆற்றுப் படுத்திய — பெருமை நக்கீரருக்கும், அவர்தம் நூல்களுக்கும் உரியவை. இந்நூல்கள் பதினோராம் திருமுறையில் அமைவதுடன், சங்க காலத்தின் சங்க இலக்கிய மரபினையும், திருமுறை இலக்கிய மரபினையும் ஒருங்கிணைக்கும் பாலமாகவும் மிளிர்கின்றன.

திருமுறை இலக்கியங்களில் சம்பந்தர் தேவாரங்கள் முதன் மூன்று திருமுறைகளைக் கொண்டன. இவரது பாடல்களிலும் சங்க இலக்கிய மரபுகளில் பின்பற்றப்படும் தலைவன், தலைவி விடயங்கள் தெய்வீகப் பாங்கில் அமைகின்றன. தமக்குக் காதல் நோயைத் தந்த இறைவனார் தம் அகத்தைப் பசலை படர வைத்தார் என்பதை,

''நாதர் வந்தென் நலன் கொண்டார்; எவ்வஞ்
செய்தென் எழில் கொண்டார்'' எனவும்,
''இறையார் வந்தென் இல் புகுந்தென்
எழில் நலம் கொண்டார்'' எனவும்,
''என்னுள் வெந்நோய் செய்தார்'' எனவும்

குறிப்பிடுகின்றார். மேலும் நாயகன் பால் தாம் கொண்ட காதலையும், தம்மேனி பசலை படர்ந்தமையால் பொன்நிறமானதையும், தம் கைவளையல்கள் கழன்று போன தன்மையினையும் நினைத்துருகித் தம்மயலிலே திரிந்த வண்டு, மயில், குயில், கிளி, அன்னம் போன்றவற்றை இரந்து தலைவனிடம் தூதனுப்புகின்றாள். சங்க காலத்துக் காதல் மரபை விட உயர்ந்து காணப்படுகிறது சம்பந்தரின் பேரின்பக் காதல்.

திருமுறை இலக்கிய ஆசிரியர்களுள் அழுதழுது அடியடைந்த அன்பர் திருநாவுக்கரசர், தன் அனுபவ முறையில் நாயகன், நாயகி பாவனையில் ஞான நெறியினை நயமாக எடுத்துரைக்கின்றார்.

''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி ஆனாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே''.

பக்குவம் முற்றிப் பழுத்துச் சிவன் திருவடி நிழலைச் சேரும் ஆர்வம் பெருகி நின்ற தன்மையை இத்தேவாரம் உணர்த்துகின்றது. சங்ககால அகத்திணை மரபில் கூறப்படும் சிற்றின்பத்தையும் விட உயர்ந்தது இவரது பேரின்பக் காதல். தமிழுக்கு வாய்த்த பொருள் இலக்கணம் போல இன்னொரு மொழிக்கு வாய்க்கவில்லை எனக் கூறுவது பொருந்தும் என்று கூறுமளவுக்குத் திருமுறை இலக்கியங்கள் பக்திப் பரவசம் ஊட்டுகின்றன.

திருநாவுக்கரசர் தம்மைத் தலைவியாகப் பாவித்துத் தலைவனாய இறைவனிடம் இன்பம் துய்க்கும் பாடல்கள் திருமுறை இலக்கியங்களுள் அமைந்துள்ளன. தலைவி ஒருத்தி தலைவன்மீது கொள்ளும் காதலை, ஆன்மா இறைவன்மீது கொள்ளும் கடவுளுணர்வாகப் பற்றாகப் பாடிய மாண்பு அப்பர் தேவாரப் பாடல் அடிகள் தோறும் அமைந்துள்ளன. சங்ககால இலக்கியங்களுள் கலித்தொகை மானுட இயல்பில் அறத்தொடு நிற்கும் தன்மையைக் கூறுவது. இதனை அடியொற்றி, இதைவிட மிகையாக அகத்துறையில் ஏறக்குறைய நூற்றைம்பது பாடல்களை அப்பர் பாடியுள்ளார்.

சங்க இலக்கிய அகத்துறைப் பாடல் மரபுகளை ஏழாம் திருமுறையில் சுந்தரர் கையாள்வதைக் காணலாம். இறைவனின் அடியார்கள் நாயக, நாயகி பாவனையில் பெண்களாகிப் பெருமானைப் பார்த்துப் பலவிதமாக வினவுவதாகச் சில பாடல்கள் அமைகின்றன. இவ்விதம் காதல் உணர்வால் தவிக்கும் நாயகிகளின் பரிதாப நிலை கண்டு அன்னம், கிளி, வண்டு என்பவற்றைத் தூதாக்குகின்றார்.

''பறக்குமெங் கிள்ளைகாள் பாடுமெம் பூவைகாள்
அறக்கண் என்னத்தகும் அடிகளா ரூரரை
மறக்கஇல் லாமையும் வளைகள்நில் லாமையும்
உறக்கமில் லாமையும் உணர்த்தவல் லீர்களே''

தேவாரத்தில் சுந்தரின் பேரின்ப நிலை தெளிவாகின்றது.

தலைவன் பால் அன்பு கொண்ட தலைவியின் துயர்கண்டு செவிலித்தாய் அல்லது நற்றாய் இரங்கிக் கூறுவதாக அமையும் அகத்துறைப் பாடல் அமைப்பில் சேந்தனாரின் திருவிசைப்பாப் பாடல்கள் காணப்படுகின்றன.

மானேர் கலைவளையுங் கவர்ந்துளங்
கொள்ளை கொள்ள வழக்(கு) உண்டே?
தேனே! அமுதே! என் சித்திரமே!
சிவலோக நாயகச் செல்வமே!
ஆனேஅ லம்புபுனற் பொன்னி
அணியா வடுதுறை அன்பர்தம்
கோனே! நின் மெய்யடி யார்மனக்
கருத்தை முடித்திடுங் குன்றமே!

இவ்விதம் நற்றாய் உணர்த்துவதாக நயம்பட உரைப்பது பாவனையின் உச்சக் கட்டமாகும்.

கருவூர்த் தேவர் தனது திருவிசைப்பாப் பாடல்களிலும் அகத்துறை மரபினைப் பின் பற்றியுள்ளார். அநேக பாடல்கள் இம்மரபில் அமைந்தவை. திரைலோக்கிய சுந்தரப் பதிகத்தில் தலைவியின் கூற்றாகவும், தோழி தலைவனிடம் கூறுவதாகவும் பாடல்கள் அமைகின்றன.

'மைஞ்ஞின்ற குழலாள்தன்
மனந்தரவும் வளைதாரா
இஞ்ஞின்ற கோவணவன்
இவன்செய்த தியார்செய்தார்?

என்று தோழி தலைவனிடம் வினாவுகிறாள்.

இறைவன் தம்மை மயக்கிக் காதல் உண்டாக்கியதால் தமது உடல் மெலிந்ததையும், சந்திரன் தம் காதல் நோயை அதிகரிப்பதையும், சிவபெருமானால் அன்றித் தன் நோய் தீராது என்றும் திருவாலி அமுதனார் தமது திருவிசைப்பாவில் சங்க இலக்கிய மரபினைப் புகுத்தியுள்ளார்.

''அறிவும் மிக்கநல் நாணமும்
நிறைமையும் ஆசையும் இங்குள்ள
உறவும் பெற்றநற் றாயொடு
தந்தையும் உடன்பிறந் தவரோடும்
பிறிய விட்டுனை அடைந்தனன்
ஏன்றுகொள்; பெரும்பற்றப் புலியூரின்
மறைகள் நான்குங்கொண் டந்தணர்
ஏத்தநன் மாநடம் மகிழ்வானே''.

என நாணம், மன அடக்கம் என்பவற்றை நீக்கி உறவினர், தாய், தந்தை, உடன்பிறந்தோர் என்றிவர்களை எல்லாம் கைவிட்டு உன்னைக் காதலித்தேன். என்னை நீ ஏற்றுக்கொள். உன்னையே அடைக்கலமாக வந்தேன். ஏற்றுக் கொள்ள வேண்டிய அவசியத்தைப் பாடிப் பரவுகின்றார்.

சங்க இலக்கிய மரபில் காணப்படும் இரங்கல் தன்மை திருமுறை இலக்கியமாக அமையும் திருவிசைப் பாவில் காணப்படுகிறது. புருடோத்தம் நம்பி, தில்லையில் ஆடும் செல்வனை நோக்கித் தலைவி பாடுவதாக உள்ளத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

''அம்பலத் திரும்நடம் ஆடவேயும்
....................
எம்பெரும் பயலைமை தீரும்வண்ணம்
எழுந்தரு ளாய்எங்கள் வீதியூடே''.

இறைவன் திருநடனத்தைக் கண்ட தலைவிக்குக் காதல் மிகுந்து பசலை ஏற்பட்டதைத் தீர்க்கத், தமது வீதிக்கு எழுந்தருளுமாறு வேண்டுவதாக இப்பாடல் அமைகின்றது.

திருமுறை இலக்கியங்களுள் பத்தாவதாகப் போற்றப்படுவது திருமந்திரமாகும். இதில் இடம் பெறும் ஐந்தாம் தந்திரத்தில், இறைவனை நாயகனாகப் போற்றுதல், உடனுறைதல், அருகிருத்தல், அவருருப் பெறுதல், அவரோடு கலத்தல் ஆகிய முத்திப் பேறுகள் கூறப் படுகின்றன. சங்ககால அகத்திணை மரபு போன்று காணப்பட்டாலும் தெய்வீகப் பாணியில் பாடப்பட்டவையே திருமூலர் அருளிய திருமந்திரப் பாடல்கள்.

எண்குணத்தான் ஈசனைப் போற்றிப் பாடும் பெரிய புராணம் திருமுறை இலக்கியங் களுள் ஈற்றில் அமைவது. சேக்கிழார், சிவனடியார்களின் மெய்ப்பாடுகளில் ஒன்பது விதச் சுவைகளையும், அதிலும் காதல் என்னும் அகத்திணை மரபிலும் பாடியுள்ளார். பரவை யாரைக்,

''கற்பகத்தின் பூங்கொம்போ காலன்றன் பெருவாழ்வோ''
''ஓவியம் நான்முகன் எழுத ஒண்ணாமை உள்ளத்தால்
மேவியதன் வருத்தமுற விதித்த தொரு மணிவிளக்கோ''

என்றெல்லாம் புகழ்ந்து பாடுகின்றார்.

தமிழ்ப் புலவர்கள் உண்மை வாழ்வையும், உயர் வாழ்வையும் தங்கள் இலக்கியங்களில் பாடி வந்தமை திருமுறை இலக்கியங்களில் உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது. மனித சமுதாயம் உயர் நிலையடைய வேண்டும்; எல்லோரும் வாழ்தல் வேண்டும் என்று கருதி ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'' என்றும் ''தீதும் நன்றும் பிறர்தர வாரா'' என்றும் கூறியவர்கள் சங்க காலப் பெரியோர்கள். இத்தகைய குறிக்கோள், கொள்கை, கோட்பாடு கள் யாவும் திருமுறை ஆசிரியர்களிடம் பொங்கித் ததும்பிப் புதுப் புனல்போல் பிரகாசித்துப் பாய்ந்ததை அவர்களது சங்கம வழிபாடே சான்று பகரும்.

''நெறியாகவும் அளவாகவும் உரமாகவும் நாணயமாகவும் கற்பாகவும் காமக் கூறு களைச் செவ்வனம் காட்டும் ஓர் உலக இலக்கியம் தமிழில் தான் உண்டு'' என்று கலாநிதி சுப. மாணிக்கம் அவர்கள் கூறுவது சமயத்துக்கும் பொருந்தும். இத்தகைய மரபு தொல் காப்பியர் காலத்தில் அரும்பிச் சங்க காலத்தில் மலர்ந்து, பல்லவர் காலத்தில் பாரம்பரிய மாகப் பரிமளித்துத் தற்காலம் வரை தொடர்கின்றது.

சங்க இலக்கிய மரபில், பாத்திரங்களின் பெயர்களை விடுத்து அவர் தம் பண்புகளைப் பாடுதல் முக்கிய அம்சமாகும். அழகினைப் பாடும்போது இயற்கைச் சூழல், உவமை, உணர்ச்சி என்பவற்றைப் பயன்படுத்திப் பாடுவர். உவமை என்பது வெளிப்படையாகக் கூறமுடியாதவற்றை உள்ளுறையாகக் கூற அமைப்பதாகும். காதல் துறையைக் கூறும்போது இதனை இறைச்சி என்பர். இதனைத் தெய்வக் காதலில் பாவனை மூலம் பேரின்பத்தைக் கூறுவர். திருமுறைகளில் இப்பண்பு உச்சக் கட்டத்தை அடைந்துள்ளது.

பல்லவர்காலத் திருமுறை இலக்கியங்களில் முதலிடம் பெறும் கடவுள் சிவனே. இச்சிவ நெறிக்கு வித்திட்ட பெருமை சங்க இலக்கிய மரபுகளுக்குண்டு. 'தாழ்சடைப் பொலிந்த அருந்தவத்தோன், ஆலமர் செல்வன்' முதலிய நூற்றுக்கணக்கான தொடர்கள் சங்க இலக் கியங்களில் இடம் பெறுகின்றன. முப்புரங்களை எரித்தமை, இடபத்தை ஊர்தியாகக் கொண்டமை சங்க இலக்கியங்களிலும் பக்தி இலக்கியங்களிலும் கூறப்படும் செய்திகளாகும்.

திருமுறை இலக்கியங்களில் சங்க காலத்துச் சான்றோர்களும் புகழப்படுகின்றனர். சோழன் செங்கணான் என்பவரைப் புறநானூறு புகழும் மரபில் பின்வந்த பெரிய புராணமும் புகழ்கின்றது. ''பொய்மையடிமையில்லாத புலவர்களுக்கும் அடியேன்'' எனச் சுந்தரமூர்த்தி நாயனார் போற்றியவர்கள் சங்க காலப் புலவர்களே ஆவர் என அறிஞர் கருதுவர்.

செந்நெறி வழியொழுகிய கபிலர் முதலான பெரும் புலவர்கள் ''புலனழுக்கற்ற அந்தணாளர்'' எனப் போற்றப்பட்டனர். இவர் மெய்யுணர்வுக் கருத்துக்களைக் கொண்டு பாடும் போது அறத்தின் பயன் வீடுபேறு என்பர். இவரது மரபு திருமந்திரப் பாடல்களிலும் பின்பற்றப்படுகிறது.

பல்லவர் காலத்துத் திருமுறை இலக்கிய ஆசிரியர்கள் புராண, இதிகாசக் கதைகளைத் தமது தேவாரங்களில் கையாண்டுள்ளனர்.

''பனித்திங்கள் படர்சடை வைத்துப் பாங்குடை
மதனனைப் பொடியா வழித்தவன் வேண்ட'' எனவும்,

''பரிந்து நன்மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்தவற் கருளும்
செம்மையார் நம்மையா ளுடையார்'' என்றும்
''மாலொடயனறியாத வண்ணமும் உள்ளது நீறு'' எனவும்

புராண, இதிகாசக் கதைகளில் வரும் இறைவனின் பெருமைகள் சித்தரிக்கப்படுகின்றன. இத்தகைய மரபிற்குச் சங்க இலக்கிய மரபில் (அகநானூற்றுப் பாடல்களில்) காணப் படும் புலவர்கள் வழிகாட்டியாக அமைந்தனர்.

மாணிக்கவாசகர் திருவெம்பாவை பாடச் சங்க காலத்து நற்றிணைப் புலவர்கள் காரணமாக அமைந்தனர் என்று கூறுவது பொருத்தமாக அமையும். நற்றிணையில் தைத் திங்கள் நோன்பு, தை நீராடல் என்பன கூறப்பட மாணிக்கவாசகரோ மார்கழி நீராடலாகத்

திருவெம்பாவை பாடியுள்ளார். இரு காலங்களிலும் காணப்படும் இலக்கிய மரபுகளில் காணப்படும் ஒற்றுமை வியக்கத் தக்கது.

தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளையும், ஊர்களையும், மலைகளையும், ஆறுகளையும், காடுகளையும் பாடியருளும் சுந்தரமூர்த்தி நாயனார், அழகாக அவற்றைப் படம்பிடித்துக் காட்டுகின்றார். ஐவகை நிலங்களையும் அவர் பாட மறக்கவில்லை.

> ''மானும் மரையின மும்மயில் இனமும்கலந் தெங்கும்
> ........ .......
> தேமாம்பொழில் நீழல் துயில் சீபர்ப்பத மலையே''.

எனச் சீபருப்பதம் என்னும் மலைப் பிரதேசத்தைப் பாடுகிறார். இவ்வாறே இயற்கையைப் பாடும் திருஞானசம்பந்தர்,

> ''புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கியறிவழிந்து.....
> ............
> சிலமந்தி அலமந்து மரமேறி முகில் பார்க்கும் திருவையாறே''.

எனத் திருவையாற்றின் சிறப்பினைப் பாடுகிறார்.

பெரிய புராணம் தந்த சேக்கிழாரும் மருதநிலச் சிறப்பை விதந்துரைக்கின்றார். இம்மரபிற்குச் சங்க இலக்கிய மரபுகளும், அங்கு காணப்பட்ட ஐவகை நில அமைப்புகளும் அடிப்படையாக அமைந்தன எனக் கூறுவது சாலவும் பொருந்தும்.

திருமுறை இலக்கியங்கள் தோற்றம் பெறுவதற்குக் கோயில்களே ஆதாரமாக அமைந்தனவென்றால் அது மிகையாகாது. இவ்விதம் கோயில்கள் அமைவதற்கு அக்கால நாயன்மார்கள், அரசர்கள் என்போர் காரணமாக அமைந்தனர். இத்தகைய திருக்கோயில்கள் அமைத்துத் திருவுருவங்களை வைத்து வழிபடும் நிலை பண்டைத் தமிழ் மக்கள் வாழ்விலும் இடம் பெற்றது.

> ''மேவிய சிறப்பி னேனோர் படிமைய'' (தொல்காப்பியம்)
> ''படிவ நன்னகர்'' (பெரும்பாணாற்றுபடை)
> ''வேறுபல் லுருவிற் கடவுள்'' (குறிஞ்சிப் பாட்டு)

எனக் கடவுளின் பல்வேறு உருவங்கள் வழிபட்ட முறை கூறப்படுகிறது.

> ''பிறவாயாக்கைப் பெரியோன் கோயிலும்
> அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்''.

எனச் சிலப்பதிகாரம் சிவன், முருகனுக்குக் கோயில்கள் இருந்ததை எடுத்துரைக்கின்றது.

தொல்காப்பியம், சிவபெருமானை ''வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்'' எனக் கூறுகிறது. முனைவன் சிவபெருமானே என்பதைச் சைவத் திருமுறைகள் பாடுகின்றன. ''முனைவனே முதலந்தம் இல்லாமல்லற் கரைகாட்டி ஆட் கொண்டாய்'' என மணிவாசகர் பாடுவார். சங்க காலப் புலவர்கள் செய்த தமிழ் இலக்கியங்கள் கூறும் அறங்கள், நீதிகள் உலகத்துக்கே பொதுவானவை. ஆதலால் அவற்றை உண்மை நெறிகள் என்பர். புலவர்கள் சர்வ மக்களுக்கும் சன்மார்க்கம் சொல்லும் வகையில் தர்மத்தையே வற்புறுத்தியிருக்கிறார்கள்.

சங்க நூல்களில் இசைத்தமிழாலியன்ற பரிபாடலில் கடுவன் இளவெயினனார் பாடிய பாடலின் சாயல் மாணிக்கவாசகரது பாடல்களிலும் காணலாம். பொன், பொருள், போகம் முதலிய யாதும் வேண்டாது அன்பு, அருள், அறம் வேண்டும் பண்பட்ட உள்ளம், பரந்த நோக்கம் இவர்களது பா டல்களின் உள்ளடக்கமாம்.

''யாம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல. நின்பால்
அருளும், அன்பும், அறனும் மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலிதாரோயே''

—பரிபாடல்

உற்றாரை யான்வேண்டேன் ஊர்வேண்டேன் பேர்வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தாவுன் குரைகழற்கே,
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே''.

—திருவாசகம்

சங்க இலக்கியங்களைப் பாடிய அந்தணர் முதலான நான்கு குலத்தவரும் அறம், பொருள், இன்பம் என்பவற்றைப் பாடியதோடு வீட்டு நெறியையும் குறிப்பாகப் பாடியுள்ளார். ஆனால் திருமுறை இலக்கியங்களில் சைவ நாற்பாதங்களுக்கு முதன்மையளித்து அந்நெறி நின்று பாடி—வாழ்ந்த நாயன்மார்களைக் காண்கின்றோம்.

மேற்கூறியவாறு, திருமுறை இலக்கியங்களும், அவற்றின் இருபத்தேழு திருமுறை ஆசிரியர்களும், இன்றுவரை போற்றப்படுபவர்கள்; இனிமேலும் போற்றப்பட வேண்டியவர்கள். படிப்போரையும், கேட்போரையும் அருள் வழி செலுத்தும் திருமுறை இலக்கியங்கள் திருவருள் இலக்கில் செல்லத் தூண்டுவன. இத்தகைய திருமுறை இலக்கியங்களில் சங்க இலக்கிய மரபுகள் ஆங்காங்கே புதுக்கியும், மாற்றியும் கையாளப்பட்டுள்ளன. பெரும்பாலான திருமுறை இலக்கியங்களில் சங்ககால அகத்திணை மரபிற்கு எவ்வகையிலும் முரணாகா வண்ணம் பேரின்பக் காதல் எடுத்துரைக்கப்படுகின்றது. சங்க இலக்கிய மரபுகளே, திருமுறை இலக்கியங்களில் புதிய வகைப் பிரபந்தங்கள், யாப்புகள் இடம் பெறக் கருவாக அமைந்தன என்பது மறக்க முடியாத உண்மையாகும். மேலும், சங்க இலக்கியங்களுள் ஒன்றாக இறையனார் அகப் பொருளுரை இறைவனாலே அருளிச் செய்யப்பட்டது. ஆலவாய் அரனே முச்சங்கத்திலும் முன்னின்று தமிழை வளர்த்தார். அவ்வாறே திருமுறை இலக்கியங்களில் பல இறைவனால் அடி எடுத்துக் கொடுக்கப்பட்டதுடன், அவனே உள்ளின்று வழி நடாத்தித் தெய்வீகப் பனுவல்களாக உலகுக்களித்தான். இவ்வகையில் திருமுறை இலக்கியங்கள், சங்க இலக்கிய மரபுகள் தெய்வீகம் பொருந்தியவை எனக் கூறலாம். இவ்விரு இலக்கிய மரபுகளும் இன்றுவரை நிலைத்து, மக்கள் மத்தியில் நீங்காப் புகழ் பெறுகின்றன.

## உசாத்துணை நூல்கள்


1 இந்து நாகரிகம்—முதலாம் பாகம்—பகுதி இரண்டு—க. சி. குலரத்தினம்.
2 இந்து நாகரிகம்—முதலாம் பாகம்—பகுதி மூன்று—க. சி. குலரத்தினம்.
3 தமிழ் இலக்கிய வரலாறு—வி. செல்வநாயகம்.
4 திருக்கோவையார்—ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான்.
5 திருவிசைப்பா—(சைவ சித்தாந்த மகாசமாச வெளியீடு)—கே. எம். வேங்கடராமையா
6 இந்து சமய பாடம்—க.பொ.த. (சாதாரணம்).
7 பரிபாடல்திறன்—இரா. சாரங்கபாணி.

# மகாகவி பாரதியார் இலக்கியங்களும் சங்க இலக்கிய மரபுகளும்

**திருமதி இராதா ஞானரத்தினம்,**
ஆசிரியை, கார்மேல் பாத்திமாக் கல்லூரி, கல்முனை,

தமிழ் இலக்கிய இலக்கண வளமும் பழமையும் சிறப்பும் கொண்டு துலங்கும் மொழியாகும். இம் மொழியில் தோன்றிய இலக்கியங்களின் தோற்றம், வளர்ச்சி, வாழ்வு ஆகியன பற்றித் தமிழ் இலக்கிய நூல்கள் பல கூறுகின்றன. தமிழ் இலக்கியம் அன்று தொட்டு இன்று வரை சிறந்தும், நிறைந்தும், தாழ்ந்தும், உயர்ந்தும் வளர்ந்து வந்த நிலையினைச் சங்க காலம் முதல் தற்காலம் வரை காணக் கூடியதாக இருக்கிறது. தமிழ் இலக்கியம் தொன்மையானது; பண்பட்டது; வரலாற்றுச் சிறப்புடையது. என்று தோன்றி வளர்ந்தது என்று கூற முடியாதளவுக்குப் பழமையானது. பிற நாட்டினர் நாகரிக நிலையை எட்டாத காலத்திலேயே, தனக்கே உரிய கலப்பற்ற தூய இலக்கியப் போக்கினைக் கொண்டு இலங்கியது. எனவே, தமிழிலே காணக்கிடக்கும் பழம் பாடல்களில் அக்கால இயற்கை அழகின் இனிமையும், மக்கள் வாழ்க்கை நெறியின் செம்மையும் புலப்படுகின்றன. தமிழ் இலக்கியம் பற்றிப் பெஸ்கி பாதிரியார் 'தமிழ்ப் புலவர் ஆற்றல் சான்ற மொழியினைக் கையாண்டனர்; தமிழ்க் கவிதையில் சிறந்த பாட்டுக்கள் இறையுணர்வு பற்றியும் இயற்கையருள் பற்றியும் காணப்படுகின்றன' என்று கூறியுள்ளார்.

சங்ககாலத் தமிழ் இலக்கிய மரபை ஆய்வதற்கு முன், நாட்டினுடைய வரலாற்றையும், மக்களுடைய வரலாற்றையும் ஓரளவு காண வேண்டும். ஓவியம் பின்னணியைத் துறந்து எவ்வாறு வாழ இயலாதோ அவ்வாறு இலக்கிய மரபுகளும் மக்களின்றி இயங்காது. மக்கள் வாழ்க்கையினின்றும் முகிழ்ப்பதே இலக்கியம். எனவேதான் ''மொழி வாயிலாக வாழ்க்கையை உணர்த்துவதே இலக்கியம்'' என்று ஹட்சனும், ''கவிதை வாழ்க்கையின் ஆய்வு'' என்று மத்யூ அர்னால்டும் கூறியுள்ளனர். மொழியே மக்களின் மனதைப் பிரதிபலிக்கும் கண்ணாடி என்பர். மொழி வளம் பெறுவதும், வறுமையுறுவதும் அம்மொழி பேசும் மக்களின் மனவளத்தை ஒட்டியன. உலகில் எண்ணிறைந்த மொழிகள் தோன்றின; வளர்ந்தன. காலப்போக்கில் பல அழிந்தொழிந்தன. சிலவே இயன்றளவு நிலைத்து வாழும் பேற்றினைப் பெற்றிருக்கின்றன. இந்த அடிப்படையிலேயே சங்ககால இலக்கிய மரபுகளையும் பாரதியார் இலக்கியங்களையும் நோக்குவோம்.

''நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம்''

என்று இலக்கிய வழக்கைத் தொல்காப்பியர் கூறியுள்ளார். தொல்காப்பியர் வாழ்ந்த காலத்தில் வாழ்க்கையில் நிகழ்ந்தவற்றை நிகழ்ந்தவாறே கூறாமல் மக்களின் நடைமுறை ஒழுக்கங்களையும் நாடகத்தில் சித்திரிக்கப்பட்ட மக்கள் ஒழுக்கலாறுகளையும் ஆராய்ந்து அவற்றை அடிப்படையாகக் கொண்டு இலக்கியம் படைத்தனர்.

தமிழ் மக்களின் வாழ்க்கைக் குறிக்கோளும் அவர் வாழ்வு நடத்தும் நெறிகளும் சங்ககால இலக்கியத்தின் பொருளாக அமைந்தன. தமிழரின் காட்சிக்கு அகப்பட்டு நின்ற இயற்கை, முல்லை, குறிஞ்சி, பாலை, மருதம், நெய்தல் என ஐந்தாக வகுக்கப்பட்டது. இங்கே விலங்குகளும், மக்களும், பறவைகளும் கூடியிருந்து வாழ்வு நடத்தும் அழகு கவிஞரைக் கவர்ந்தது. இவ்வுயிர்களுள் மக்கள் ஆணும் பெண்ணுமாகக் கூடி இன்புற்றனர். இன்புற்று

வாழும் ஒழுக்கம் அகம் எனப்பட்டது. இன்பம் பெறுவதற்கு வாயிலாக நின்ற பொருள், தொழில், கல்வி, போர் முதலியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒழுக்கம் புற ஒழுக்கம் எனப்பட்டது.

அகமும் புறமுமே சங்க இலக்கியத்திற்குப் பொருளாக அமைந்தன. பழந் தமிழ் இலக்கியம் காதலையும் வீரத்தையும் அடிப்படையாகக் கொண்டு எழுந்தன. சங்க நூல்களிலே இடையிடையே சமயச் செய்திகளும் ஆரியக் கதைகளும் வந்தாலும் அவை கவிதைக்குப் பொருளாக அமையவில்லை.

சங்க இலக்கியம் பண்டைத் தமிழ் மக்களிடையே அவர்களுடைய வாழ்க்கையில் இயற்கையாக நிகழ்ந்த ஒழுக்கங்களைப் பாராட்டிச் சென்றன. பொது மக்கள் வாழ்க்கைக்கும் சங்க இலக்கியத்துக்கும் நெருங்கிய தொடர்புடைய மக்களின் சமுதாய வாழ்வின் எல்லாக் கூறுகளும் தெளிவாகவும் உண்மையாகவும் சங்க இலக்கியங்களிற் கூறப்படுகின்றன.

இதே போலப் பாரதியார் வாழ்ந்த காலச் சூழலும் எடுத்து நோக்கப்பட வேண்டியதொன்று. இருபதாம் நூற்றாண்டின் எழுச்சி மிக்க பெரும் பாவலர் பாரதியார் எல்லார்க்கும் புரிகின்ற எளிய தமிழில் எண்ணக் குவியல்களை எழுத்து வடிவாக்கி இனிய தமிழ்மொழிக்கு ஏற்றம் நல்கியவர்; இலக்கிய உலகின் எழுச்சி மிக்க புதிய பாதையை வகுத்துத் தந்தவர். இந்திய மக்களின்—உலக மக்களின்—துயர் கண்டு துடித்தெழுந்தார். புரட்சிப் படைப்புக்களைப் புவிவாழ வழங்கினார். காலத்திற்கேற்ற கருத்துக்களை வழங்கியதோடு நிற்கவில்லை, காலம் கடந்து நிற்கும் கருத்துக்களையும் வழங்கி அழியாப் புகழ் பெற்ற உலகக் கவிஞராகத் திகழ்கிறார்.

இன்று நாம் அறியும் பாரதியாரின் பாக்கள் பெரும்பான்மையும் அவர் அரசியற் களத்தில் நின்று கொண்டு நிகழ்த்திய இலக்கிய வேள்வியின் பயனாகக் கிடைத்த பாக்களே. ஆதலால் அவற்றில் அரசியல் உணர்வும் அரசியல் அடிப்படையிலான சமூகப் பண்பாட்டு உணர்வும் பெரிதும் இழையோடி நிற்கின்றன. அந்நியராட்சியில் அடிமைப்பட்ட காலம். அதற்காகப் பாரத சுதந்திர வேட்கை பாரதியார் கவிதைகளில் பரந்து நின்றது.

கற்பனை உலகில் சிறகடித்துப் பறப்பதைத், தம் கவிதையின் கருவாகக் கொண்ட பாரதியார் பெரிதும் காலத்தின் தேவைகளைக் கருப்பொருளாகக் கொண்டு கவி பாடினார். ''கவிதைகளில் தற்கால அரசியல் மற்றும் சமுதாய மெய்ம்மைகளை அறிமுகம் செய்து, இலக்கியத்துக்கும் சமுதாய அரசியற் சிந்தனைகளுக்கும், சிக்கல்களுக்கும், இடையில் அது வரை இருந்து வந்த தொடர்பு வகை இடைவெளியை நீக்கித் தமிழ்க் கவிதை வளர்ச்சியில் பாரதியார் இன்றியமையாத இடத்தைப் பெற்றார்.

இதே போலச் சங்க காலப் புலவர்களும் தெளிந்த அறிவிற்கு அப்பாற்பட்ட மயக்கப் பொருள்களில் தம் உள்ளத்தைச் செல்லவிட்டு மக்களைத் திகைக்க வைக்கவில்லை. மக்கள் வாழ்வில் பயன்படுத்துவன எவையோ அவற்றையே பாக்களில் அமைத்தனர். மக்களின் வாழ்வு இயற்கையோடு இயைபுடையதாக இருந்தமையினால், மக்கள் ஒழுக்கத்தைக் கூறுவதற்கு இயற்கைக் காட்சிகளை அழகுற வரைந்தார் புலவர். பொருளைத் தெளிவுறுத்துவதற்கு உவமையே சிறந்த கருவியாகையால் புலவர்கள் உவமை அணிகளையே கையாண்டனர். வெறும் அலங்காரங்களைக் கவிதைகளிற் புகுத்தவில்லை. அவர்கள் கையாண்ட உவமைகள் பொருளோடு ஒத்த தன்மையனவாய், நெருக்கமுடையனவாய் நின்று உள் உணர்வுக்கு இன்பமூட்டின. மேலும், அகப்பொருளைப் பாடும்போது புலவர் கருத்தினை உள்ளுறைப் பொருளாக அமைத்துக் குறிப்பினால் புலப்படுத்தினர். வெளிப்படையான பொருளைவிடக் குறிப்புப் பொருளே இன்பம் செய்வனவாகையால் தமிழ்ச் சங்கச் சான்றோர் பாக்களைப் பெரும்பாலும் குறிப்புப் பொருளை உடையனவாகப் பாடினர்.

அகப் பாடல்களில் பாத்திரங்களாகப் படைக்கப்படுபவரின் பெயர் குறிப்பிடப்படாமல் தலைவி, தலைவன், தோழி எனப் பாத்திரங்களைப் பொருளாக வழங்குவதே அக்கால மரபாக இருந்தது. சங்க காலத்திலே ஆடவரும் பெண்டிரும், அரசரும், அந்தணரும், வேளாளரும், வணிகரும், சோதிடரும், தொழில் துறைபோய மக்களும் கன்னல் சுவை வாய்ந்த கவிதைகளால் பாடியுள்ளனர்.

புலவர் பெருமக்கள் இயற்றிய சங்க இலக்கியங்கள் இயற்கை எழில் மிக்க இன்பக் கருவூலங்களாக விளங்கின. இதனால் சங்க காலம் தற்கால இலக்கிய வரலாற்றில் தலை சிறந்த 'பொற்காலம்' என அறிஞர்கள் போற்றிப் புகழ்ந்தனர். தாங்கள் இயற்றிய கவிதை களில் இயற்கைக் காட்சிகளின் எழிலை உவமைகளாக உருவகங்களாக வனப்பு மிக்க வருணனைகளாக வடித்தனர். இயற்கை வர்ணனை இல்லாத பாக்களைச் சங்க காலத்தில் காண்பது அரிது. இயற்கையை வர்ணிக்கும் திறமையில் சங்கக் கவிஞர்கள் அகப்பொருள் இலக்கியங்களுக்குரிய ''உள்ளுறை உவமத்தையும்'' அதற்குப் பின் ஓர் அரிய உட்கருத்தை யுணர்த்தும் ''இறைச்சி'' யையும் உள்ளடக்கி உரைத்தனர். இத்தகைய இலக்கியச் சிறப்பு சங்க காலத்தில் மாத்திரமே காணப்படும்

காதலையும் போரையும் பிரதான பொருளாகக் கொண்டதைச் சங்க காலத்தில் கவிதை களிற் காணலாம். காதல் வாழ்க்கையைச் சுவைத்த தமிழர், போரையும் அரசியலையும் மறந்து விடவில்லை. நாட்டையும், சமுதாயத்தையும், மன்னரையும் பாதுகாக்க அவர்கள் வீர வாழ்க்கையை மகிழ்வுடன் ஏற்றனர். சங்கக் கவிதைகளிற் காணும் வீர வாழ்க்கைச் சித்திரங்கள் மிகவும் சுவை மிகுந்தன. பொருள் அமைதியும் செய்யுள் நலமும் சிறந்து விளங்குகின்றன.

தமிழ்க் கவிதை ஒரு வரலாறு. அது சங்க காலம் முதல் இடைவிடாது ஓடிக் கொண்டு தான் வருகிறது. அது இடையிடையே வரண்டு குன்றியிருக்கலாம். ஆனால் அது மீண்டும் மீண்டும் புதிய வளம் பெற்றுப் பெருக்கெடுத்து வந்திருக்கிறது. பாரதியாருக்கு முன் அது அடியோடு வற்றிவிடும் தறுவாயில் இருந்தது. பாரதியார் வந்தார். அவர் உலக சக்தியின் கருவியாய் இருக்க இணங்கினார். தமிழ்க் கவிதை புத்துயிர் பெற்றது.

இலக்கியம் சமூகத்தின் ஒரு வெளிப்பாடு. குறித்த ஒரு காலத்தில் இலக்கியம் சமூகத்தின் நடைமுறை நிலையை அப்படியே அப்பட்டமாகப் படம் பிடித்துக் காட்டுகிறது. இதையே பாரதியாரும் காட்டுகிறார். இலக்கியம் வாழ்க்கையின் சமூகத்தின் ஒரு விளக்கம். உலக மக்கள் அதனில் இருந்து வாழ்க்கையைப் பற்றிய பல விடயங்களை அறியக்கூடிய வகையிலே தான் பாரதியார் தம் கவிதைகளை இயற்றினார். பாரதியார் கையாளும் உவமை, நயம் நிறைந்தது. ''கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கிடில் கைகொட்டிச் சிரியாரோ?'' என்பது அழகான உவமைக்கு உதாரணமாகும். பாரதியார் தம்முடைய படைப்புக்கள் ஒவ்வொன்றின் வழியாகவும் சாதாரண மக்களைத் தட்டியெழுப்பினார். அவர்களை எழுச்சி யுறச் செய்ய வேண்டும் என்ற உறுதியான எண்ணத்துடன் பாரதியார் தம் படைப்புக்களைப் படைத்தார். அந்த எண்ணமே அவர் தம் நடையின் எளிமைக்கு வழி வகுத்தது எனவும் கொள்ளலாம்.

பாரதியார் படைப்புக்கள் பண்டிதர் நடைக்கும் பாமரரின் பேச்சு நடைக்கும் இடைப் பட்ட ஓர் எளிய மொழிநடை ஆகும். சாதர்ரண மக்களிடை வழங்கும் சொல்லாட்சிகள், மரபுத் தொடர்கள், தொடர் அமைப்புக்கள் ஆகியவற்றைப் பாரதியார் போற்றிப் பயன் படுத்தியுள்ளார்.

கவிஞர்கள் இயற்கையின் குழந்தைகள். இயற்கையோடு ஒட்டி உறவாடுபவர்கள். இயற்கையின் நுட்பங்களை வகை வகையாகக் கண்டு மகிழ்ந்து தான் பெற்ற இன்பம் பெறுக

இவ்வையகம் என எண்ணி அவற்றைப் பாக்களில் உலகுக்கு வழங்கினார். இது சங்க காலப் புலவரிடையேயும் காணப்பட்டது. இந்த வரிசையில் பாரதியாரும் அடங்குவார். பாரதியார் தமது கருத்துப்படிவங்களைப் பெரும்பாலும் இயற்கையை ஆழ்ந்து நோக்கும் நோக்கி லிருந்தே பெற்றார். உற்று நோக்கி உய்த்து உணர்ந்த ''அழகின்'' தூய்மையான உண்மை யான வெளிப்பாட்டைப் பாரதியாரின் கவிதைகளிற் காணலாம். இதிலிருந்து சங்க காலக் கவிதைகளுக்கும் பாரதியாரின் கவிதைகளுக்கும் நெருங்கிய தொடர்பு காணப்படுவதை உணரலாம்.

இயற்கையை அணுகியதில், பண்டைக் காலப் புலவர் பெருமக்களுக்கும், பாரதியாருக் கும் ஒரு சிறு வேறுபாடு உண்டு. வேறுபாடு சிறிதெனினும் குறிப்பிடத்தக்கதொன்றே. பண்டைப் புலவர் பெருமக்கள் இயற்கையின் அமைதி நிலையை அழகை வியந்து பெரிதும் போற்றி நின்றனர். ஆனால் பாரதியோ இயற்கையின் கட்டுப்பாடற்ற கொந்தளிப்பான, சீற்றம் மிக்க கூற்றுக்களையே பெரிதும் கவிதைகளில் வடித்துள்ளார். இவ்வேறுபாட்டுக்குக் காரணம் பாரதியார் வாழ்ந்த சமூகச் சூழல்களேயெனலாம். சூழலின் சூழ்ச்சியிற் சிக்கிய பாரதி தம் உள்ள எழுச்சிகளை இயற்கையில் கண்டதில் வியப்பில்லையல்லவா?

பாரதியார் இந்திய நாட்டின்மீது தீவிர பற்றுக் கொண்டவர். பாரதியார் வாழ்ந்த காலம் ஆசிய எழுச்சியும் உலக ஒற்றுமையும் காண விழைந்த ஒல்காகுவாக்குசோ, டாக்டர் சன்யாட்டுசென், இரவீந்திரநாத் தாகூர், ஆனந்த குமாரசாமி முதலிய பெருமக்கள் வாழ்ந்த காலம். உலகம் மனிதனின் நலம் என்ற பரந்த இயற்கை நோக்கி உலகம் நடையிட்ட காலம். எனவே காலச் சூழலும் பாரதியாரின் கவிதை உலகிற்கு அடிப்படையாக அமைந்த காலமாகக் கொள்ளலாம். இந்திய நாட்டுப் பற்றை ஒரு ''நவீன மார்க்கம்'' என்றே கொண்டார். இதிலே இறைமையைக் கண்டார். அதிலே தம்மையும் இணைத்துக் கொண்டார். வேட்கை யால் உந்தப்பட்டுப் பாக்கள் பாடினார். பாரதியார் இலக்கிய வடிவை அறிஞர்கள் பாராட்டக் கூடியளவு முயற்சிகளைச் செய்துள்ளார். மொழி மற்றும் இலக்கிய அளவில் தமிழுக்கிருந்த தளைகளை நீக்கி, அதன் ஆக்கத்திற்கான புது வழியை வகுத்தவர் பாரதியார். இவருடைய கருத்துடன் ஒத்த கருத்துடைய முனைவர் கமில் சுவலபில் அவர்கள் புராண பிரபந்தத் தளையிலிருந்தும் தற்கால நடைமுறை உண்மைகளை வெளியிடுவதற்குத் தடையாக அமைந்த இடைக்கால இலக்கிய வகையிலிருந்தும் தமிழ் இலக்கியத்தைப் பாரதியார் விடுவித்தார். மேலும், அரசியல் கருத்துக்களின் வெளிப்பாடுகளுக்கு நாட்டுப்புற இலக்கியங் களைத் தேர்ந்து அவற்றிற்கு உயிரூட்டி மறுவாழ்வு அளித்தார்.

பாரதியார் இலக்கியத் தொண்டுகளில் கவிதைப் பணியைப் போலவே குறிப்பிடத்தக்க சிறப்பிடத்தைப் பெறுவது அவரது உரைநடைப் பகுதியாகும். பாரதியாரின் உரை நடை பல்வேறு வகைப்பட்டது; முதன்மைத் (Originality) தன்மை வாய்ந்தது. ஆனால் பாரதியாரின் கவிதைகளிலே புகழ்ந்த புகழ்ச்சி, அவர் உரை நடைக்கு ஆற்றியுள்ள தொண்டை மறக்குமாறு செய்து விட்டது. இன்று கூடப் பாரதி என்றாலே பலருக்கு அவருடைய கவிதைகளே முன்நிற்கின்றன. ஆனால் பாரதி பற்றிய எந்த ஆய்வும் அவருடைய உரை நடைகளையும் உள்ளடக்காமல் முழுமையடையாது என்பதை இன்றைய ஆய்வுலகம் நன்கு அறிந்துள்ளது. பாரதியாரது எண்ணக் குவியல்கள், சிந்தனைத் துளிகள், உணர்ச்சிப் பொறிகள், ஆசாபாசங்கள், முரண்பாடுகள் முதலியவற்றை அவரது வசனப் படைப்புக்களே தெளிவாகக் காட்டுகின்றன; காட்ட முடியும். எல்லா இலக்கிய வெளிப்பாடுகளுக்கும் தமிழைத் தகுதியுடையதாக்கிய பெருமை பாரதியாரையே சாரும்.

இதே போலச் சங்க காலத்தை எடுத்துக் கொண்டால் உலக இன்பத்திலே திளைத்து இயற்கையான வாழ்விலே சிந்தித்திருந்தனர் தமிழ் மக்கள். தமிழையே முழு மூச்சாகக் கொண்டு பாக்கள் இயற்றினர். பிறமொழிச் சொற்கள் மிக மிகக் குறைவு. நூற்றுக்கு இரண்டு மூன்று சங்கத பாகதச் சொற்கள் காண்பதே அருமை. இது சங்க இலக்கியத்துக்குரிய

ஒரு சிறந்த பண்பு ஆகும். ஆரியர் ஆதிக்கம் பரவாமையினால் ஆரியச் சொற்கள் சிறு பகுதியனவே தமிழிற் புகுந்தன. மேலும், ஆரியம் முதலிய பிற மொழிச் சொற்கள் பல எழுத்துக்களாலானவை. சங்க இலக்கியச் சொற்கள் மூன்று அல்லது நான்கு எழுத்துக் களாலேயே பெரும்பாலும் ஆக்கப்பட்டன. அத்துடன் சொற்கள் பல ஒன்றோடொன்று தொடர்ந்து செல்லும்போது உருபு விரியாது தொக்கு நின்றன.

தொகைகளைச் சங்க காலப் புலவர்கள் பெரிதும் கையாண்டனர். இதனால் இப்புலவர் கள் இயற்றிய பாக்கள் கருத்து முறிவின்றி ஒன்றன்பின் ஒன்றாகச் சென்று கொண்டிருந்தன. இதனால் பலருக்கு உரையின் உதவியில்லாது சங்க நூல்களை விளங்கிக் கொள்வது கடினமாக இருக்கக் கூடும். இக்கவிதைகளின் பொருள் முடிவு காண்பது மிகக் கடினம். அடிப்படை யான கருத்துக்களை உணர்ந்த பின்னரே பாட்டுக்களைத் தெளிவாக விளங்க முடியும். கருத்துக்கள் எச்சங்கங்களினால் தொடுக்கப்பட்டிருப்பதும் இதற்கு ஒரு காரணம். இக்காலப் பேச்சு வழக்கிலுள்ள சில சொற்களும், சொல்லுருவங்களும் சங்ககால நூல்களிற் காணப்படுகின்றன. பிற்காலத்தில் தமிழ் இலக்கியத்தில் இடம் பெற்றுள்ள வினையெச்ச வாய்ப்பாடுகள், பிறவினை, செயற்பாட்டுவினை, துணைவினை, நிகழ்காலம், பன்மை உணர்த்தும் கள் விகுதி முதலியவற்றைச் சங்க நூல்களிற் காண்பதரிது.

சங்க நூல்களில் காணப்பட்ட யாப்பு வகைகள் தமிழுக்கே சிறப்பாக உரியன. ஆசிரிய மும், வஞ்சியுமே அக்காலத்தில் வழக்கிலிருந்தன. சங்க நூல்களிற் சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, மலைபடு கடாம், அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறு நூறு ஆகிய பன்னிரண்டும் ஆசிரியத்தால் அமைந்தவை. பொருநராற்றுப்படை, மதுரைக் காஞ்சி, பட்டினப்பாலை ஆகிய மூன்று நூல்களிலும் ஆசிரியமும் வஞ்சியும் கலந்து வருகின் றன. பட்டினப்பாலையில் வஞ்சியடிகள் மிகுதியாகவரும். இதனால் அது வஞ்சி நெடும் பாட்டு எனவும் வழங்கப்படும். சங்க நூல்கள் ஆசிரியத்தால் அமைந்திருப்பதை நோக்கு மிடத்து, பெரும்புலவரால்—ஆசிரியரால்—இப்பா கையாளப்பட்டமையினால் இது ஆசிரி யம் என்ற பெயர் பெற்றது எனக் கூறலாம். அகவல் ஓசை உடையமையால் அகவலெனவும் இப்பா வழங்கும்.

ஆசிரியத்துக்கு ஈற்றயலடி முச்சீரடியாக இருக்க வேண்டுமெனத் தொல்காப்பியர் கூறுவர்.

''ஈற்றயல் அடியே ஆசிரிய மருங்கிற்
தோற்ற முச்சீர்த் தாகு மென்ப''.

என்பதிலிருந்து விளக்க முடியும். பத்துப்பாட்டிலுள்ள எல்லாப் பாக்களிலும் ஈற்றயலடி முச்சீரினாலானது. நற்றிணைப் பாக்கள் மூச்சீரராய ஈற்றயலடியைக் கொண்டன. எட்டுத் தொகை நூல்களிலும் பெரும்பாலானவை இவ்வாறு வருவனவே. சில பாக்களே ஈற்றயலடி நாற்சீரால் அமைந்திருக்கும். இத்தகைய பாக்கள் சங்க நூல்களில் ஏறக்குறைய நூற்றுக்கு ஆறு வீதமே உள்ளன.

பத்துப்பாட்டிலுள்ள எல்லாக் கவிதைகளும் ஏ என்ற எழுத்தையே இறுதியிலுடையன. சங்க காலத்திற்குரிய ஆறு எட்டுத்தொகை நூல்களுள் நற்றிணை, குறுந்தொகை, பதிற்றுப் பத்து ஆகிய நூல்களிலுள்ள எல்லாப் பாக்களும் ஏ எழுத்தையே இறுதியிலுடையன. அகநானூற்றிலும், புறநானூற்றிலும் ஓ இறுதியுடைய ஒவ்வொரு பாட்டைத் தவிர மற்றைய யாவும் ஏ இறுதியையே கொண்டவை. ஐங்குறு நூற்றிலுள்ள பாக்களில் தொண் ணூற்று நான்கு வீதம் ஏ இறுதியையுடையன. நான்கு வீதம் ஆய் இறுதியையுடையன. எனவே சங்க காலத்தில் ஆசிரியப்பா ஏ என்னும் எழுத்துடன் முடிவதே மரபாக இருந்திருக்க வேண்டும்.

கலிப்பாவில் தரவு தாழிசை தனிச்சொல் சுரிதகம ஆகிய உறுப்புகள் உள்ளன. பரிபாடலில் கொஞ்சம் அராகம், சுரிதகம், எழுத்து முதலிய உறுப்புக்கள் உள்ளன. எதுகை மோனை போன்ற ஒலிநயங்களில் புலவர்கள் கவனம் செலுத்தவில்லை.

ஆனால் பாரதியார் தம் முன்னோர் கையாண்ட வெண்பா, விருத்தம், சிந்து, கீர்த்தனை முதலாம் யாப்பு வடிவங்களைத் தனது கவிதைகளிற் கையாண்டனர். தேசவிடுதலை, சமூக விடுதலை முதலாய புதிய உள்ளடக்கங்களையும் தமிழ்க் கவிதையில் புகுத்தினர். தமிழ்க் கவிதை மரபில் இடம்பெற்ற தெய்வ பக்தி பாரதி காலத்தில் தேச பக்தியாக மாறியது. பாரத மாதாவைத் தெய்வமாகக் கொண்டார் பாரதி. தெய்வப் பாடல்களிலும் மனுக்குல விடுதலை ஒலித்தது. பழைய காப்பியத்திற்குப் பதிலாகப் பாஞ்சாலி சபதம் எனும் குலக்காவியத்தையும் படைத்தார்.

''தனி ஒருவனுக்குணவில்லை யெனில்
சகத்தினை அழித்திடுவோம்''

என்ற அடி பாரதியின் மார்க்சிய புரட்சியாகும். அதேவேளை இலக்கியப் புரட்சியுமாகும். தமிழ்மொழிப் பற்று, பெண் விடுதலை, தொழிலாளர் விடுதலை, திராவிட நாட்டுக் கோரிக்கை முதலியன இவர் கவிதைக்குரிய பிரத்தியோகக் கவிப் பொருளாக அமைந்தன. தனிக் கவிதை மாத்திரமன்றிக், குறுங் காவியங்கள், கவிதை நாடகங்கள் முதலியனவும் பாரதியார் புனைந்தார். யாப்பு வகைக் கவிதை மட்டுமன்றி வசனத்தில் கவிதையெனத் தக்க இறுக்கமும் நயமும் வாய்ந்த சில படைப்புக்களையும் எழுதி இலக்கியம் படைத்துள்ளார்.

வரிவடிவில் நூல் எழுதும் வழக்கம் படிந்த தமிழர் காலம் முதல இருந்தது. 'எழுத்து' என்ற தமிழ்ச் சொல் 'எழுது' என்ற வினையடியாகப் பெறப்பட்டது. எழுது என்றால் வரை என்று பொருள். இச்சொல் சங்க இலக்கியங்களிற் பல இடங்களில் வருகிறது. நுண் பெருங்கலையாகிய வானநூலும் சங்க காலத்தில் ஒப்புயர்வற்ற நிலையிலிருந்தது.

'வானின் கண் மின்னுவன யாவும் மீன்கள்''
''வானத்தின் கண்ணுள்ள மீன்''
''வானம் பல மீனைப் பூக்கும்''

எனப் புறநானூறு கூறுவதிலிருந்து அறியலாம்.

சங்க காலத்தில் நடனம், இசை, கூத்து, ஆடல் என்பன சமயச் சடங்குகளில் முக்கியம் பெற்றன. பண்டைய தமிழ் மக்கள் வாழ்வுடன் இசை இரண்டறக் கலந்திருந்தது. ஓரறிவு படைத்த உயிர் முதல் ஆறறிவு படைத்த உயிர் வரை இசை வசப்படுத்தும் என்பதை அவர்கள் அறிந்திருந்தனர்.

இன்னிசையியக்கிப் பேய்களை வெருட்டிக் கலைத்தனர் மக்கள். போர்வீரன் ஒருவன் போர்முனையில் மார்பில் புண்பட்டுக் கிடக்க அப்புண்ணை உண்ண வரும் பேய்களைத் தடுக்கும் நோக்குடன் காஞ்சிப் பண்ணைப் பாடி யாழையும் குழலையும் இயக்குவோமெனத் தலைவி பாடியதாகப் புறநானூறு கூறுகிறது.

நான்கு அடிப்படைப் பண்கள் சங்க நூல்களில் காணப்படுகின்றன. மருதம், செவ்வழி, பாலை, குறிஞ்சி என்பன அவை. மருதம் மருத நிலத்திற்குரிய காலைப்பண். பண் மூலம் இருளை அகற்றி ஒளியை வரவழைக்க முடியுமென நம்பினர். மருதத்தை வாசிக்க இருள் மாய்ந்து கதிர் விரியும், விடியற் காலம் தோன்றும் என்பதை

''சீரினிது கொண்டு நரம்பினி தியக்கி
யாழோர் மருதம் பண்ண''

என மதுரைக் காஞ்சி கூறுகிறது. இதே போலச் செவ்வழி, நெய்தல் முல்லை நிலங்களுக்குரிய மாலைப் பண்ணாகக் கருதப்பட்டது. இவ்வாறு சங்க கால இலக்கியத்தில் பண் இடம் பெற்றதாகக் கூறப்படுகிறது.

அரசியல் எழுச்சிக்குரிய சிந்தனைகளுடனும் சமுதாய மறுமலர்ச்சிக்குரிய சிந்தனையுடனும் காலத்திற்கு ஏற்பக் கருத்துடைய கருப் பொருளாகக் கொண்டு இலக்கிய உலகிலே சிறப்பிடம் பெறுபவர் மகாகவி பாரதியார். இவர் இலக்கிய வடிவில் செய்த முயற்சிகள் பாராட்டிற்குரியன. இவ்வாறு மகாகவி பாரதியார் இலக்கியங்களையும் சங்ககால இலக்கியங்களையும் ஒப்பிட்டுப் பார்க்க முடிகின்றது. புராண, பிரபந்தத் தளைகளில் இருந்து தற்கால நடைமுறை உண்மைகளை வெளியிடத் தடையாக இருந்த இலக்கிய வகையிலிருந்து தமிழ் இலக்கியத்தை விடுவித்த பெருமை பாரதியையே சாரும். இவ்வாறு இயற்கையின் படைப்புகளான கவிஞர்கள் முதல் தற்காலம் வரை இலக்கிய உலகுக்கு அரும் பணியாற்றியுள்ளார். அகமும் புறமும் சங்க இலக்கியத்துக்குப் பொருளாக அமைந்தன. ஆனால் ''பொருள்'' தமிழர் இலக்கியத்துக்கே சிறப்பாக உரியன

சங்கம் இருந்து தமிழ் வளர்த்த காலமுதல் தற்காலம் வரை உள்ள இலக்கிய மரபுகள் இன்னும் தொடர்ந்து நடைமுறையில் வளர்ந்து வருகின்றன சங்ககாலப் புலவர் தொடக்கி வைத்த அகம் புறம் போன்ற கருத்துக்கள் பாரதியார் இலக்கியங்களிலும் பிரதிபலிப்பதைக் காண முடிகிறது. இலக்கியத்தில் ஒருவருடைய கல்வி, மரபு, முன்னோர், சாதி, இனம் முதலிய சிறப்புக்களே அவனுடைய பண்பாட்டு இலக்கத்தில் இலக்கியப் பண்பான மரபு வெளிப்படும். சங்ககாலப் புலவர்களால் தோற்றுவிக்கப்பட்ட கல்வி, இலக்கிய மரபுகள், சமூக பாகுபாடு என்பன 20 ஆம் நூற்றாண்டு வரை தொடர்கிறது. பாரதியார் பல புதுமைகளைக் கவிதை உலகில் இலக்கிய மரபில் புகுத்தியுள்ளார். சாதிக் கொடுமையைத் தகர்தெறிய வேண்டுமென்றும், பாகுபாடு என்பது இல்லையென்பதையும் பாக்கள் மூலம் பாரத பூமியில் பாடிவைத்த இலக்கியங்கள் சான்று பகிர்கின்றன

மேலுள்ளவற்றைத் தொகுத்து நோக்கும்போது சங்ககால இலக்கிய மரபுகளுக்கும் பாரதியார் இலக்கியங்களுக்கிடையிலுள்ள தொடர்புகள் சான்றாகவுள்ளன. சங்ககால இலக்கிய மரபை ஆராய்ந்து அறிவதன் மூலம் பாரதியார் இலக்கியங்களில் அதன் பண்பு, சாயல் என்பன மிளிர்வதை உணர முடியுமென்பதில் ஐயமில்லை.

**உசாத்துணை நூல்கள்**


1. தமிழர் சால்பு—பேராசிரியர் சு. வித்தியானந்தன்.
2 தமிழ் இலக்கிய வரலாறு—வி. செல்வநாயகம்.
3 இலக்கியமும் திறனாய்வும்—ப. கோதண்டராமன், எம்.ஏ., பி.எல்.
4. இலக்கிய ஆய்வில் புதிய பார்வைகள்—பேராசிரியர் டாக்டர் கு. மோகனராசு, பி. எஸ்சி, எம்.ஏ., பிஎச். டி.
5 தமிழ் இலக்கிய வரலாறு—டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட்., பிஎச். டி.

# சங்ககால அகத்திணை புறத்திணை மரபுகளில் உள்ள பண்பாட்டு இயல்புகள்

திருமதி க. லோகிதராசா
*ஆசிரியை, கார்மேல் பாத்திமாக் கல்லூரி, கல்முனை.*

×—×

**ப**ண்டைக் காலத்தில் ஒலியைக் குறிக்கும் வரி வடிவமான எழுத்துக்களை ஆக்கி மொழியைப் படைத்து, அதற்குச் செம்மையான இலக்கணத்தையும் உருவாக்கிச் சிறப்புப் பெற்றவர்கள் தமிழர்கள். தமிழ் மொழி—எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐந்திலக்கணம் உடையது. எழுத்தும், சொல்லும், யாப்பும், அணியும் தமிழ் மொழியின் செம்மையைக் கூறுவன. பொருள் இலக்கணம் தமிழர் வாழ்ந்த உயர்ந்த பெருவாழ்விற்கு இலக்கணமாய் அமைந்தது. உலகில் எந்த மொழியும் பொருள் இலக்கணத்தைப் படைத்தில. தமிழின் சொத்தாக அமைந்தது பொருளிலக்கணம்.

பொருள் இலக்கணம் அகமும் புறமும் பற்றியது. அகத்தில் ஒரு ஆணும் பெண்ணும் இணைந்த வாழ்க்கையைக் கைக்கிளை, பெருந்திணை, ஐந்திணை எனப் பேசினர். அவர்கள் வாழ்ந்த நிலங்களின் அமைப்பைக் கொண்டு, அதனோடு மனிதருடைய ஒழுக்கத்தையும் பிணைத்துக் குறிஞ்சித்திணை, முல்லைத்திணை, நெய்தற்றிணை, மருதத்திணை, பாலைத் திணை என வகுத்தனர். திணை என்பது ஒழுக்கமாகும். அதன்படியே குறிஞ்சிக்குப் புணர்தல், முல்லைக்கு இருத்தல், மருதத்திற்கு ஊடல், நெய்தலுக்கு இரங்கல், பாலைக்குப் பிரிதல் என்று அமைத்தனர்.

புறத்திணையில்; மனிதன் புற உலகில் ஈடுபட்டு, வாழ்க்கையின் பல்வேறு பிரச்சினை களைப் பற்றி அறிய முற்பட்டனவும், அவன் அனுபவங்களும் பற்றிக் கூறப்படுகின்றன.

அக ஒழுக்கம் அல்லது அகத்திணையில் காதலும், களவும், கற்பும், ஓதல், தூது, பகை, பொருள் வயப்பட்டுப் பிரிதல், மடலேறல், அலர் கூறல் போன்றவையும் இருக்கின்றன. புற ஒழுக்கத்தில் போர் வாழ்வு, சாவு, குற்றம், நன்மை, புகழ், தீமை, கடவுள் போன்றன பற்றிய செய்திகள் உண்டு. உள்ளத்தால் ஒன்றிய ஆணும் பெண்ணும் தாமே மணப்பதும் பெற்றோர் இசைந்து திருமணம் செய்வதும் உண்டு. திருமணத்தின் பின் இருவரும் கற்பு ஒழுக்கத்தில் தலைப்படுவர். அரசர், அந்தணர், வணிகர், வேளாளர் எனும் இனப் பாகுபாடு அப்போது இருந்தது.

மன்னன் ஒருவன் வேற்று நாட்டின் மீது படையெடுக்க எண்ணினால், முதன் முதலாக அந்த நாட்டின் பசுக்களைக் கவர்ந்து விடப் போர் மூளும். போர் முடிவடையும் வரை அப்போரின் செயல்கள் பலவும் பலவாறு பெயர் உடையன. அவை வெட்சி, கரந்தை, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண் என்பனவாகும். அறத்தின் அடிப்படையில் அப்போரில் வீரர்கள் போராடினார்கள். ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் அவ்வப் பூக்களைச் சூடினார்கள். மறத்தையும் நற்றமிழ் மக்கள் அறத்தினால் ஆண்டனர்.

இவ்வாறு வாழ்ந்த தமிழர் வாழ்க்கைக்கு உயர்ந்த இலக்கணமாய் அமைந்தது தொல் காப்பியம். இலக்கியம் கண்டே இலக்கணம் இயற்றிய தொன்மைத் தமிழர் தொல்காப்பி யத்தை ஆக்குதற்குமுன் பல தொன்மையான இல்க்கியங்களை உருவாக்கியதைத் தொல் காப்பியர் கூறியிருக்கிறார். நூல் நவில் புலவர், தொன்னெறிப் புலவர், உரைத்தனர்,

புலமையோர், அறிந்திசினோர், என்மனார், தெரிந்தனர், அறைந்தனர், யாத்தனர், நெறிப் படுத்தினர் என்றெல்லாம் தொல்காப்பியர் தம் முன்னோடிகள் பலரைப் பற்றிக் கூறியிருக் கிறார். இதனால் தொல்காப்பியத்திற்கு முன் பல வகை நூல்கள் தமிழில் இருந்திருக்க வேண்டும். அவைகளில் சிறந்த இலக்கியங்கள் இருந்திருக்கும்.

தமது சிறப்புப் பாயிரத்தில் ''முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி'' என்கிறார். அவர் தம் காலத்திற்கு முந்திய நூல்களை ஆராய்ந்திருக்க வேண்டும். அவை தமிழர் தம் வாழ்வையும் வளத்தையும் கூறும் இலக்கியங்களாக இருக்க வேண்டும்.

தொல்காப்பியம், நன்னூல், நம்பியகப் பொருள், புறப்பொருள் வெண்பா மாலை, யாப்பருங் கலக்காரிகை, தண்டியலங்காரம் ஆகியன யாவும் இன்னும் பல இலக்கணங்களும் மேற்போந்த பொருள் இலக்கணம் பற்றிச் சுவையான செய்தி படைத்தன.

பொருள் என்பது இடமும், அதில் வாழும் வாழ்க்கையையும் ஆகும். இப்பொருள் அகப்பொருள், புறப்பொருள் என இரண்டாகும். அகப்பொருள், ஒத்த அன்பான ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் ஆகும். அவ்வின்பம் இவ்விருவரும் ''யாண்டும் உள்ளத்துணர்வே நுகர்ந்து இன்பமுறுவதோர் பொரு''ளாதலினால் அதனை அகம் என்றார் இலக்கணகாரர். இது அகத்தே நிகழ்கின்ற இன்பமாகும்.

திருமணத்தின் முன் தலைவனும் தலைவியும் சந்தித்து வாழ்வது களவு எனவும், மணம் புரிந்தபின் வாழ்வது கற்பு வாழ்க்கை எனவும் கூறப்பட்டன. இவை பற்றிக் கூறும் களவியலும், கற்பியலும் பல துறைகளை உடையன. அகப்பொருளானது கைக்கிளை, ஐந்திணை, பெருந்திணை என மூவகைப்படும். ஐந்திணை — குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் திணைகளாய் விரியும். எனவே அகப்பொருள் கைக்கிளை ஒன்றும், ஐந்திணை ஐந்தும், பெருந்திணை ஒன்றுமாக ஏழு திணைகள் உடையது.

''கைக்கிளை முதலாப் பெருந்திணை யிறுவாய்
முற்படக் கிளந்த எழுதிணை யென்ப''.

எனத் தொல்காப்பியரும்;

''மலர்தலை உலகத்துப் புலவோர் ஆய்ந்த
அருந்தமிழ் அகப்பொருள் கைக்கிளை ஐந்திணை
பெருந்திணை என எழு பெற்றிதாகும்''.

என நம்பி அகப்பொருளாரும் கூறுகின்றனர்.

கைக்கிளை என்பது—சிறிய தனித்த உறவு என்கிறார், டாக்டர் வ. சுப. மாணிக்கம்.

தொல்காப்பியர்

''காமஞ் சாலா இளமை யோள்வயின்
ஏமம் சாலா இடும்மை எய்தி
நன்மையும் தீமையும் என்றிரு திறத்தால்
தன்னொடும் அவளொடும் தருக்கிய புணர்த்துச்
சொல்லெதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே''.

என்று, இதனை ஒரு பக்கக் காதல் என்கிறார். பருவப் பெண்ணை ஆண் மகன் விரும்பிக் காம நோயால் பிதற்றுவது என்று விரிவாகக் கூறும் இச் செய்யுளில் ஆண் மகன் மட்டும் பெண் மகளை விரும்புவது கைக்கிளையாகும் என்று கூறப்படுகிறது. இது தவிர ஆண் மகளை முதலில் மென்மையான பெண் மகள் விரும்புவது கைக்கிளை ஆகாது என்பதும் புலனாகிறது. தமிழர் பண்பாட்டிற்கு அவ்வாறு விரும்புவது அக்கால மரபன்று. ஒருதலைக் காம வெளிப் பாடு அக்கால மகளிர் தம் பெண்ணீர்மைக்குப் பொருந்தியதல்ல என்றும் தெளிவாகிறது. காதலுக்கு முன் உள்ள நிலைகள் இருவரும் ஒரே நேரத்தில் விரும்புவதாகும். இப்படி ''ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப'' (தொல் 1038) தன்னையே இலக்கணகாரர் கூறி யுள்ளனர்.

**ஐந்திணை —**

ஒத்த குலமும், குணமும், செல்வமும், ஒழுக்கமும், இளமையும், அன்பும் உடைய ஒருவனும் ஒருத்தியும் காதலித்து நுகரும் இன்பமே ஐந்திணையாகும். இதுவே அன்புடைக் காமமாகும். இவ்வன்புடைக் காமம் பல்வேறு ஒழுக்க நிலைகளில் பிரிக்கப்பட்டு, ஒவ்வொன் றிற்கும் அந்நிலத்தின் பெயரையே இட்டு ஐந்திணையை வரையறை செய்தனர். அவை குறிஞ்சித்திணை, பாலைத்திணை, முல்லைத்திணை, மருதத்திணை, நெய்தல்திணை ஆவன.

''ஐந்திணை உடையது அன்புடைக்காமம்''
''குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம்
நெய்தல் ஐந்திணைக்கு எய்திய பெயரே''.

—நம்பி அகப்பொருள்.

**பெருந்திணை** என்பது பொருந்தாக் காமம். இளமைப் பருவமுடைய பெண் மகள் முது மகனை மணத்தலும், முதியவளானவளை இளமைப் பருவத்தான் மணம் புரிவதும், வழிமாறி ஒருத்தன் ஒருத்தியோடும், ஒருத்தி இன்னொருத்தனோடு தொடர்பு கொள்வதும், விரும்பாத பெண்ணை வலிந்து கூடுவதும், பொருள் கொடுத்து மகளிரைப் புணர்தலும் போன்ற அன்பில்லாத ஒழுக்கங்கள் பெருந்திணைக்குள் வருவனவாம்.

''ஏறிய மடற்றிறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே''.

(தொல் 996)

சங்க காலத்தில் இவ்வொழுக்கம் சிறப்பாக மதிக்கப்படவில்லை. பொருந்தாது என்றே அதன் சிறப்பற்ற சமுக நிலையைக் கூறினர். ''பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்''.

—நம்பியகப்பொருள்— 5.

**ஐந்திணை ஒழுக்கம்:**

ஐந்திணை களவு, கற்பு என இருவகைத்தது

'அளவில் இன்பத் தைந்திணை மருங்கில்
களவுகற் பெனவிரு கைகோள் வழங்கும்''.

என நம்பியகப் பொருள் கூறுகின்றது.

பிறப்பு, குடிமை, ஆண்மை, ஆண்டு, உருவு, பருவம், நிறை, அருள், உணர்வு, திரு, எனும் பத்து இயல்புகளில் ஒத்திருக்கின்ற தலைவனும் தலைவியும் ஊழினால் கண்டு, காதலித்துப் பிறர் அறியாமல் சந்தித்துக் கூடி, இன்புறுவதே களவாகும். பொதுவாகப் பிறர் காணாமல் செய்யும் ஒன்றைக் களவு என்பது வழக்கம்.

**களவு நிகழும் இடங்கள்:-**

பகற் காலத்திலும் இரவிலும் களவுப் புணர்ச்சி இடம் பெறும். பகலில் இல்லத்தின் எல்லைக்கு அப்பால் உள்ள இடங்களிலும், இரவில் இல்லத்தின் எல்லைக்குள்ளும் இருவரும் சந்தித்துக் கூடுகின்றனர். பகலில் கூடும் இடத்தைப் பகற்குறி எனவும் இரவில் சேரும் இடத்தை இரவுக்குறி எனவும் பகர்வர்.

''இல்வரை யிகந்தது பகற்குறி; இரவுக்குறி
இல்வரை யிகவா இயல்பிற்றாகும்''

என நம்பி அகப்பொருள் (38) கூறுகிறது. இதனால் புணர்ச்சி நிகழிடம் குறி என்பதாயிற்று.

இப்படிச் சந்தித்து தலைவனிடம் சேர்கின்ற கன்னி பசலை நோயினால் வருந்துகிறாள். களவொழுக்கத்தை ஊரார் அறிந்துவிடுவாரோ என அஞ்சுகிறாள்; மெலிகிறாள். இவளுடைய மெலிவிற்கு அவளுடைய நற்றாய், செவிலித்தாய் ஆகியோர் உண்மைக் காரணம் தெரியாமல் கவலைப்பட்டுத் தெய்வம் கோபித்ததோ என்று அஞ்சி, முருக பூசை செய்யத் துணிகின்றனர். முருகனுக்குப் பூசை செய்பவனை வேலன் என்பர். இவ்வேலன் நடு இரவில் நெய்யில் ஆட்டிய தினையை எறிந்து பூசையை ஆரம்பிப்பான். வெறி வந்தவனாய் ஆவேசத்துடன் முருகனைக் கூவி அழைப்பான். தலைவியின் நோய்க்கு முருகனே காரணம் எனக் கூறுவான். இதுவே வெறியாட்டு எனப்படும்.

**அறத்தொடு நிற்றல்:-** இவர் இருவரும் ஒருவரை ஒருவர் விரும்புவது முறையானது. நேரானது. ஆனால் இக்களவு வெளிப்பட முன் உரியவர்க்கு வெளிப்படுத்துதல் மிகவும் தேவையானது. அப்படி உரியவர்க்கு, உரிய வார்த்தைகளால் பக்குவமாக, தீங்கிழைக்காது, நிலை தாழ்ந்திடாது களவினை வெளிப்படுத்துவர். இப்படி முறையான வழியில் வெளிப்படுத்துதல் அறத்தொடு நிற்றலாகும். களவு வாழ்வில் இன்பம் துய்ப்பதைச் சங்க கால மக்கள் ஏற்றுக் கொண்டனர். இக்களவு திருமணம் புரிந்தபின் 'களவும் கற்றுமற'வென முடிவடையும். இக்களவைத் தொல்காப்பியர்

''பிறப்பே குடிமை ஆண்மை ஆண்டொடு
உருவு நிறுத்த காம வாயில்
நிறைவே அருளே உணர்வொடு திருவென
முறையுறக்கிளந்த ஒப்பினது வகையே'' என்கிறார்.

**களவில் நிகழும் புணர்சி வகை:-**

களவில் தலைவனும் தலைவியும் ஊழால் எதிர்பட்டுத் தாமே கூடுவது இயற்கைப் புணர்ச்சியாகும். இதன்பின் அவள் மேல் அன்பு கொண்டு மறுநாளும் அதே இடத்தில் சந்தித்து அவளைக் கூடுவான். இது இடந்தலைப்பாடு என்பதாம். பாங்கன் மூலமாகத் தலைவியைச் சந்தித்து அவளுடன் கூடுவான். இது பாங்கற் கூட்டமாகும். பாங்கி கூட்டி வைக்கக் கூடுவான். இதனைப் பாங்கியிற் கூட்டம் என்பர். இதனையே

''இயற்கைப் புணர்ச்சி இடந்தலைப்பாடு
பாங்கற்கூட்டம் பாங்கியிற்கூட்டமென்
றுணர்த்திய களவிற் புணர்ச்சிநால் வகைத்ததே''

(நம்பிஅகப்பொருள் 27).

எனப் புலவர் கூறுவர்.

**இயற்கைப் புணர்ச்சி:-** தலைவனும் தலைவியும் தற்செயலாகச் சந்திக்கும்போது நிகழ்வது. தலைவி தினைப்புனங் காக்கும் போதோ வேழம் துரத்த வெருண்ட போதோ, புன்னை மர நிழலிற் சிறு தேர் உருட்டி ஆடும் போதோ, சுனையில் நீராடிவிட்டுக் கூந்தலை ஆற்றும் போதோ இச் சந்திப்பு நிகழலாம். இவ்வியற்கைச் சந்திப்பில் நிகழும் புணர்ச்சி தெய்வத்தாலோ அல்லது தலைவியாலோ நிகழும்;

''தெய்வந் தன்னின் எய்தவுங் கிழத்தியின்
எய்தவும் படூஉம் இயற்கைப் புணர்ச்சி''

(நம்பி அகப்பொருள் 32)

தலைவி தோழிக்கும், தோழி செவிலிக்கும் (வளர்ப்புத் தாய்), செவிலி நற்றாய்க்கும், நற்றாய் தந்தைக்கும் தனயர்க்கும் அறத்தோடு நிற்பர்.

''தலைவி பாங்கிக் கறத்தோடு நிற்கும்
பாங்கி செவிலிக் கறத்தொடு நிற்கும்
செவிலி நற்றாய்க்கு கறத்தொடு நிற்கும்
நற்றாய் தந்தை தனையர்க் கறத்தொடு
நிற்கும் என்ப நெறியுணர்ந் தோரே''

(நம்பி அகப்பொருள் 48)

அறத்தொடு நிற்கும் காரணங்கள் பல. இவர்கள் சந்திப்பதை ஊர் அலர் சொல்லும், உடனே தலைவியை வெளியே செல்லாமல் இச்செறிப்புச் செய்வர். இதனால் காதல் அடங்காமல் தோன்றும். இக்களவின்போது தலைவிக்கு வேறு ஒருவனோடு திருமணம் பேசுவர். தலைவியின் பெற்றோர் மறுத்துவிடுவர். தலைவன் தலைவியைக் களவில் சந்திப்பதில் ஏற்படுகின்ற ஆபத்துக்கள் அவளுக்கு அச்சம் தரும். இப்படியான பலவற்றால் தலைவனைத் தலைவி திருமணம் விரைவில் செய்யுமாறு வற்புறுத்துவாள். களவினை வெளிக்காட்ட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உந்தப்படுவாள். இதுவே அறத்தொடு நிற்றலாகும்.

''காப்புக் கைமிக்குக் காமம் பெருகினும்
நொதுமலர் வரையும் பருவமாயினும்
வரைவெதிர் கொள்ளாது தமரவண் மறுப்பினும்
அவனூ றஞ்சுங் காலமாயினும்
அந்நா லிடத்து மெய்ந்நா ணொரீஇ
யறத்தொடு நிற்றல் தோழிக் குரித்தே''

(இறையனார் அகப்பொருள்)

தலைவனும் தலைவியும் களவில் விளைப்பதற்கு உதவும் தோழி, தலைவியைத் தன் விருப்பப்படினே நெறிப்படுத்துவாள். இருவரும் சந்திக்க, உதவி, பகற்குறி, இராக்குறி

என்பனவற்றை ஒழுங்கு செய்து தலைவனைத் தலைவி காணப்பண்ணுவாள். தலைவியைச் சந்திக்க முடியாதவிடத்துத் தான் மடல் ஏறுவதாகத் தலைவன் கூறுவதும் உண்டு. தனது தலைவியை அவள் பெற்றோர் மணம் செய்வதற்கு மறுத்தாராயின், தரமுடியாது என்பராயின் அப்போதும் தலைவன் மடல் ஏறப் போவதாகச் சொல்வான்.

மடல் என்பது கருக்குடைய பனை மட்டையால் செய்யப்பட்ட குதிரையாகும். இக்குதிரைக்கு அலங்காரம் செய்து ஆவாரம் பூமாலை சூடி, தலைவியின் உருவத்தை வரைந்து அதன் முகப்பில் தொங்க வைத்துக் கொள்வான் தலைவன். பின்னர் நீறு பூசிய உடம்பினனாய், எருக்கம் பூ, எலும்பு மாலைகளை அணிந்து மடல் மேல் ஆரோகணம் செய்து தெருவில் வருவான். இக் குதிரையைத் தெருவில் இழுத்துக் கொண்டு செல்வர். பனங்கருக்கு அவன் மேனியைக் கீறிப் புண்ணாக்கும். இதனைக் கண்ட ஊரார் பெற்றோரைப் பழிப்பர். இப்படிக் கொடுமையான மடல் ஏறாத வண்ணம் திருமணம் செய்யப் பெற்றோர் இசைவர்.

''மடல்'' ஏறாத நிலையை ஐந்திணை வழக்கில் காணலாம். ''மடல்மா கூறும் இடனுமார் உண்டே'' என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

மடல் ஏறுவது நிகழ்ந்து விட்டால் அது பெருந்திணையாகும்.

''ஏறிய மடல்திறம், இளமை தீர்திறம்,
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்,
மிக்க காமத்து மிடல்''

நான்கையும் தொல்காப்பியர் பெருந்திணைவாய்ப்பட்டன எனப் புகன்றார். சங்க காலத்தின் பிந்திய காலங்களிலும் மடல் பற்றிப் பேசப்படுகிறது. ஆண் மடலும் பெண் மடலும் நிகழ்ந்திருக்கின்றன. இதனால் சங்ககாலப் பண்பாட்டின் ஏற்றம், மகளிர் கேண்மை விளங்கும்.

**உடன்போக்கு:—**

ஊரார் பலவாறாக இவர்களைப் பற்றி 'அலர்' தூற்றுவர். இதனை அறிந்து தோழி தலைவியிடம் அநுதாபத்தோடு வருந்துவாள். 'அலர்' கேட்டு இற்செறிப்பு நிகழ்ந்துவிடும். வெறியாட்டும் நடைபெறும். வேறு ஒருவனுக்குத் திருமணமும் நடைபெறும். இதனால் தோழி தலைவனையும் தலைவியையும் வேறு ஒரு ஊருக்குக் போகச் செய்வாள். வேறு ஊர் என்பது, தலைவனின் ஊரராகவும் இருக்கக் கூடும். 'அலர் சுமந்த' ஊரைச் சீறிப் பழித்து அதனை விட்டு நீங்கத் தலைவி எண்ணுவாள். சங்ககாலத்தில் உடன் போக்கு சிறப்பாக நூல்களில் கூறப்பட்டதால், அக்காலச் சமூக அமைப்பில் அது ஏற்றுக்கொள்ளப் பட்டிருந்தது.

களவுக்குப் பின்னால் கற்பு நடைபெறும்.

''கற்பெனப்படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே''.

(தொல் 1087)

தலைவனும் தலைவியும் முறையோடு திருமணம் புரிந்து வாழ்க்கை நடத்துகின்றதே கற்பெனக் கொள்ளப்பட்டது. இக் கற்பு களவு வெளிப்படா முன்னும், வெளிப்பட்ட பின்னும்

நிகழலாம். இதனைக் களவின் வழி வராக் கற்பு, களவு வழி வந்த கற்பென இரண்டு வகைப்படுத்தினர்.

களவு வழிக் கற்பிலே பெற்றோர், உறவினர் ஆகியவர்கள் இசைந்து திருமணம் செய்யத் தலைவனும் தலைவியும் வாழ்கின்றனர்.

களவு வழி வந்த கற்பில், காதல் களவின் வழி வந்தது. களவுப் புணர்ச்சியின் பின், இருவரும் தாமே திருமணம் செய்தோ அல்லது களவிற்குப் பின் பெற்றோர் ஒப்புதலோடோ இல்லற வாழ்வை நடத்துவதாகும்.

வாழ்வில், சிறப்புடன் களவின் வழி வந்த நட்பே அக்கால மரபிற்குப் பொருத்தமா யிருந்தது. பெரியோர் கூட்டி வைக்காமல் தாமே தலைப்பட்டுத் தேடிக் கொண்ட காதல் வாழ்க்கை தமிழர் வாழ்வில் சிறப்புடைத்தது.

**கற்பில் நிகழ்ந்த பிரிவுகள்:-** இல்லறத்தில் ஈடுபட்ட தலைவன் தலைவியை ஆறு காரணங்கட்காகப் பிரிந்து செல்லல் அக்கால வழக்காயிற்று.

பரத்தையிடம் செல்வதற்காகப் பிரிவது அக்காலத்தில் சாதாரணமாயிருந்தது. பரத்தை யிடம் சென்றாலும், பிரியாமல் இருக்க வேண்டிய முக்கியமான வேளையைத் தொல் காப்பியர்,

''பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்
நீத்தகன் றுறையார் ரென்மனார் புலவர்
பரத்தையிற் பிரிந்த காலை யான்'' என்கிறார்.

(1132)

மகளிர் மாதவிலக்குக்கு நீராடி முடிந்ததின் பின்வரும் பன்னிரண்டு நாளிலும் பரத்தையிடம் இருக்காமல் தலைவன் தனது தலைவியுடன் தங்க வேண்டும் என்பதைக் கூடத் தமிழர் தம் வாழ்வில் நெறியாகப் பேணினர்.

அடுத்தது கல்வி கற்பதற்காகவும், வேந்தனுக்கு உதவும் பொருட்டுத் தூது போவ தாலும், பொருள் தேடவேனும் தலைவன் பிரிய நேரிடும். இத்துடன் காவற் பிரிவும் உண்டு. பிரிவதற்கு, கல்விக்கு மூன்றாண்டு காலவரை உண்டு. பரத்தைப் பிரிவும் காவல் பிரிவும் அந்நாட்டிலே நிகழ்வதால் காலவரையறையின்று.

**ஊடல்:** கற்பு வாழ்விலே, தலைவனும் தலைவியும் இன்பம் துய்த்து வளமாய் வாழ்க் கையில் பிணக்குகள் தோன்றுவதும் உண்டு ''ஊடுதல் காமத்திற் கின்பம்'' பயப்பதால் வாழ்வில் தொடர்ச்சியான இன்பத்திற்குச் சிறிய சிறிய பிணக்குகள் வேண்டப்பட்டன. மருத நிலத்தில் பரத்தையரிடம் சென்ற தலைவனும் ஊடுவது மகளிர் பண்பு. பெரும்பாலும் மகளிரே ஊடலை ஏற்படுத்துவார். ஊடல் ஏற்பட்டதும் விறலியும், தோழியும், பாணனும் அதனைத் தீர்க்க முற்படுவர். சில சமயம் தலைவியின் சீறடி தொழுது, அவளைச் சமாதானப் படுத்தும் தலைவனிடம் தலைவி, ''நீர் இவ்வாறு செய்யற்க, உமது காமக்கிழத்தியர் இதனை அறிந்து உம்மை இகழ்வாரே'' என்பாள். இப்படி ஊடலிலும் தன் தலைவற்கு இழிவு வரக் கூடாதே என்று தம்மையும் அவனையும் காத்துக் கொள்வர் அக்கால மகளிர். இல்லறம் நல்லறமாவதற்கு விருந்து, விறலியர், தோழியர் போன்ற பலர் பல்லாற்றும் உதவினர். இவர்களைத் தமிழ் இலக்கிய, இலக்கணங்கள் ''வாயில்கள்'' என்பன. வழி திறக்கின்றது என்பதற்குப் பொருளாக ''வாயில்கள்'' அமைந்திருக்க வேண்டும். ''ஊடல் மருந்தாய்த் தீர்க்கும் வாயில்கள்'' தோழியரே.

பாலையில் **பிரிதலும்** அதற்கான நிமித்தங்களும் ஒழுக்கங்களாகக் கொள்ளப்பட்டன. பிரிதல் திடீரென ஏற்படும். ஓதலுக்காகவும், பகையின் நிமித்தம் வேற்று மன்னனிடம் தூது செல்லவும், பொருளீட்டவும் போருக்கும் எனத் தலைவியைத் தலைவன் பிரிந்து செல்கிறான். பிரிதலை அடிப்படையாகக் கொண்டு உடன் போக்கும் நிகழ்கிறது. பிரிதல் என்பது தலைவனுக்குரிய நிகழ்ச்சியேயாகும். இதனால் பெண்கள் பிரிவதில்லை என்பதில் ஒருவனுக்கு ஒருத்தி என்ற வாழ்வும், பொருளீட்டவும், கல்விக்காகவும், அரசியலுக்காகவும் ஆண்களே உழைத்தனர் என்பது புலனாகிறது.

முல்லைநில ஒழுக்கம் இருத்தலாகும். அவன் வருவேனென்ற பருவ காலம் வரையும் தலைவி, அவனைப் பிரிந்த துன்பத்தைத் தாங்கிக் கொண்டு இல்லத்தில் உறைகிறாள். தலைவிக்குத் தலைவன் நிகழப்போகும் பிரிவு பற்றிக் கூறுவதும், அவள் உடன்படுவதும், உடன்படாமல் இரங்குதலும் இருத்தலில் உண்டு. அவன் வருவேனென்ற காலத்திலே வராமை கண்டு அவள் புலம்புவதும் உண்டு. 'வருவார் எனத் திறந்தும் வரார் என அடைத்தும்' அவள் கதவின் கடையாணியே தேய்ந்து விடுகிறது. இவ்விருவரின் துயரைப் பாகனும், தோழியும் பகிர்வதுபோல இயற்கையில் மேகமும், வண்டும், சங்கும் கலங்குவதும் மகிழ்தலும் ஆகிய நிமித்தங்கள் உண்டு.

நெய்தல் திணையில் தலைவன் மீண்டும் வருவது எப்போது என்று தலைவி இரங்குகிறாள். ஊடலும் இருத்தலும் இரங்கலும் பெண் மக்களின் பண்புகளாகும். வாழ்விலே இவை துன்பம் பயப்பனவாகத் தோன்றினாலும், இவற்றைத் தொடர்ந்து இன்பமே விளைகின்றது.

இவ்வாறு அன்புடைக் காமமானது முதற் பொருள், உரிப் பொருள், கருப் பொருள் என்ற மூன்று பொருட்களையுடையது.

முதற் பொருளாவது நிலமும் பொழுதும் ஆகும். வாழ்வின் களமாய் அமையும் நிலமும், அதன் அசைவை உணர்த்தும் காலமும் இங்கு கூறப்படுகின்றன. குறிஞ்சிக்கு மலைநாடும், முல்லைக்குக் காடும், மருதத்திற்கு வயலிடமும், நெய்தற்குக் கடலிடமும் நிலமாய் அமைந்தது. பாலையில் வெளியானதும், மணலும் உண்டு. அதைக் குறிக்கவே பாலையில் சுரமும் சுரம் சார்ந்த இடமும் இருந்தன என்பர். பொழுது இரண்டு வகைப்படும். பெரும் பொழுதில் பருவ காலங்கள் ஆறும், சிறு பொழுதில் நாளின் அலகுகளும் ஆவன. உதாரணமாய்: காலை, யாமம், வைகறை, மாலை, நண்பகல், ஏற்பாடு போன்றன. இவற்றில் மூன்று சிறு பொழுதுகள் இரவிற்கும், ஆறு பகலுக்குமாவன. நிலங்கட்குரிய பெரும் பொழுதும் சிறு பொழுதும் வேறுபட்டன. அவை:—

| (1) நிலம் | (2) பெரும் பொழுது | (3) சிறு பொழுது |
|---|---|---|
| குறிஞ்சி | கூதிர், முன்பனி | யாமம் |
| முல்லை | கார் | மாலை |
| மருதம் | கார், கூதிர்; முன்பனி, பின்பனி; இளவேனில், முதுவேனில் | வைகறை |
| நெய்தல் | பெரும் பொழுது ஆறும் | ஏற்பாடு |
| பாலை | வேனில், பின்பனி | நண்பகல் |

**கருப்பொருள்**

முதற் பொருளான நிலத்திலும் பொழுதிலும் தோன்றுவன கருப்பொருள். அவையுள் தெய்வம், சான்றோர், கீழோர், பறவை, விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண் தொழில் என்பன அமையும்.

## உரிப்பொருள்

உரிப் பொருளானது உணர்வோடு சம்பந்தமுடையது. இவை ஒவ்வொரு நிலத்திற்கும் பிரத்தியேகமானவை. குறிஞ்சிக்குப் புணர்தலும், முல்லைக்கு இருத்தலும், பாலைக்குப் பிரிதலும், மருதத்திற்கு ஊடலும், நெய்தற்கு இரங்கலும் உரிப்பொருளாவன

''புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் என்றிவை'' என்றார் தொல்காப்பியர்.

இந்த நெறிமுறைகளுடைய அக வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட அக இலக்கியங்களே, பொருள் இலக்கணத்திற்குச் சான்றாய் அமைந்தன. அகத்திணையுள் தாம் எடுத்துக் கொண்ட கருத்துக்களை விளக்க இரண்டு முறைகளுண்டு. அவை உள்ளுறை உவமமும், நேராகக் கருத்தை விளக்குவதுமாகும். உள்ளுறை உவமம் அகப்பொருட்டுறைகளில் வரும். அகவாழ்வில் எண்ணங்களை மறைத்து நாகரீகமாகக் கூறுவதற்கு உதவும். தெய்வம் ஒழிந்த ஏனைய கருப் பொருட்கள் மூலம் இவை காட்டப்படும்.

''உள்ளுறுத்து இதனோடு ஒத்துப் பொருள் முடிகென
உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்''.

அகப்பாடல்களில் இறைச்சி, உள்ளுறை உவமம் போலத் தெய்வம் ஒழிந்த ஏனைய கருப் பொருட்களில் வரும். உள்ளுறையில் உவமானம் மட்டும் உண்டு. அதிலிருந்து உவமேயம் எடுக்கப்பட்டதும் எஞ்சி அதனோடு தொடர்பாக இறைச்சி (தங்குதல்) தங்கியிருக்கும்.

''பல்கோட் பலவின் சாரல் அவர்நாட்டு
நின்கிளை மருங்கின் சேறி யாயின்
அம்மலை கிழவோர்க்கு உரைமதி இம்மலைக்
கானக் குறவர் மடமகள்
ஏனல் காவல் ஆயினள் எனவே''—(நற். 102)

குறிஞ்சி நிலத்தில் காதல் நடைபெறுகிறது. தலைவன் பகல், இராக் குறிகளில் சந்திக்கிறான். திடீரெனச் சந்திப்பு நிற்றலும் தலைவி கவலையுடன் கிளியைத் தூதாக்கிறாள்.

''கிளியே, பலாமரங்கள் நிறைந்த மலைச்சாரலையுடைய
என்தலைவன் நாட்டிற்கு, உன் சுற்றத்தவர்களைக்
காணச் சென்றாயேல், அம்மலையானிடம் இம்மலைக்
குறவருடைய இளமைமிக்கமகள் தினைப்புனம் காக்கிறாள்
என்று சொல்'' என்கிறாள்.

தலைவனுடைய நாட்டில் 'பல்கோட் பலவின்' புதிய காய்களைப் போலத் தலைவியின் புதிய வாழ்வும் தொடங்குவது என்று கூறுவது உள்ளுறையாகும். கைவிட்ட கொடுமையான் தன்னைமறந்த தலைவனுடைய மலையிலும் பிறர்க்குதவும் வண்ணம் பலாக்கள் காய்கின்றது வியப்பில்லையா? என்பது உள்ளுறைக்கு அப்பால் எஞ்சியிருக்கும் இறைச்சியாகும். பலா மரங்கள் பயன்தரக் காய்ப்பதிலிருந்து அவன் அன்புடையவன், தன்னை விரைவில் மணம் செய்வான் என்ற நம்பிக்கையும் இழையோடுகிறது. உள்ளுறையும் இறைச்சியும் நயமூட்டுவன; இன்பம் தருவன. அன்பினைந்திணை வாழ்வின் இன்பத்தை உணர்த்துவன.

இலக்கணங்கள் நுட்பமாகப் புகலும் யாவும் தமிழர் வாழ்க்கை பற்றிய செய்திகளே. ''ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன'' என்ற தொல்காப்பியர் கூற்றிலிருந்து கல்வியும்

தூது செல்லலும் உயர்ந்தவர் மாட்டு என்பது புலனாகும். சாலவும் கூறின், அறிஞர் கல்விக் காகவும், தூது செல்வதற்காகவும் பிரிவர் என்று கூறுதல் பொருந்தும். அக்கால வழக்கி லிருந்து கல்வியார்க்குரியது என அறியலாம்.

சங்ககால மகளிர் பொற்புடையவர்களாக இருந்தனர் என்பதைக் கூறும் செய்தி தொல்காப்பியத்தில் உண்டு.

''எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேற்
பொற்புடை நெறிமை இன்மை யான'' என்பது

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் மகளிர் மடல் ஏறுவதில்லை என்பதாம். அப்படி ஏறியவள் பெண்ணீர்மை இல்லாள் என்பதாகும்.

அன்பின் ஐந்திணையுள் யாருடைய பெயரும் சுட்டிக் கூறப்படவில்லை. அங்கு தலைவனும், தலைவியும், பாங்கியும், பாங்கனும், தோழியும், செவிலியும், நற்றாயும் தந்தையுமென்றே பாத்திரங்கள் கூறப்படுவன. அகத்திணை யாவருக்கும் பொதுவானதென்பதாலும் பெயர் சுட்டாமலிருக்கலாம். பெயர் சுட்டுவது, பிறர்க்கு ஒருவனும் ஒருத்தியும் சந்தித்து வாழ்ந்து, இன்பம் துய்த்தவற்றை அம்பலப்படுத்தாமைக்காகவும் இருக்கலாம். இப்படி வாழ்க்கையின் அத்திவாரமான காதல் வாழ்க்கையை, இல்லறத்தை, அதனால் அடைந்த இன்பத்தை அகப்பொருள் கூறுகின்றது

**புறப்பொருள்:** புறம் கூறும் நூல்கள் யாவும் பெயர் குறித்து நிற்பன. புகழ் படைத்த வேந்தர்கள், வள்ளல்கள், புலவர்கள், சான்றோர்கள் பற்றியும் அவர்கள் வாழ்வு, செயல்கள் பற்றியது. புறம் ஒத்த அன்புடையார் மட்டுமன்றி எல்லோராலும் உணரக்கூடிய அறமும், பொருளும் பற்றிப் புறத்தே நிகழும் ஒழுக்கம் புறப் பொருளாகும். புறப் பொருளுக்கும் ஏழு திணைகள் உண்டு. பிற்காலத்தில் புறத்திணைகள் பன்னிரண்டாயின. இவை வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, உழிஞை, நொச்சி, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்பனவாம். வெட்சி பதினொரு துறையுடையது.

''வெட்சி தானே குறிஞ்சியது புறனே
உட்குவரத் தோன்றும் ஈரேழ் துறைத்தே''

எனத் தொல்காப்பியர் (1001) கூறுகிறார்.

**வெட்சித்திணை:** போருக்கு முன்னால் பகையரசனின் ஆநிரையைக் கவர்தலே ''வெட்சி'' யாகும். இப்பசுக்களைக் கவர்வதற்கு மறவர் செல்கின்ற ஆரவாரம் 'வெட்சி அரவம்' எனப்பட்டது. ஆநிரை கவரச் செல்கையில் மாலையில் வீரர்பால் நல்ல சொற்களைக் கூறினர். இதுவே 'விரிச்சி'யாகும். விரிச்சி கேட்டு, வெட்சி மறவர் மலைகளை உடைய காடுகளில் செல்லல் 'செலவு' எனப்பட்டது. பகைவரின் பசுக்களின் இடத்தை அண்மித்தபின், இவ்வீரர்கள் உளவிற்காகத் தம் ஒற்றரை விடுப்பர். அவர்கள் திரும்பி வந்து, தாம் அறிந்தவற்றைக் கூறுதல் 'வேய்' ஆகும். உடனே அக்காட்டினை வளைத்து, உள்ளே இருப்போரை வெளியே செல்லவிடாமற் தடுப்பர். இதுவே 'புறத்திறை'யாம். அடுத்துப், பகைவருடைய அரண்களை அழிப்பர். இது 'ஊர்க் கொலை' யாகும். பின்னர் வெட்சியரவத்தோடு நுழைந்து ஆவினம், கன்றுகள் ஆகியவற்றைக் களவாடுவார்கள். அதனை எதிர்க்கும் உடமையாளரைக் கொல்வர். பூசல் இல்லாமல் செய்வர். இதற்குப் 'பூசல் மாற்று' என்று பெயராம். பிடித்த பசுக்களைப் பாதுகாப்பாகக் சாட்டின் வழியே ஓட்டிச் செல்வர். இது 'கரந்துய்த்தலாம்'.

பசுக்களைக் கொண்டு வருகின்ற சேதி கேட்டு உறவினர் மகிழ்தல் 'தலைத்தோற்றம்' எனப்படும். ஆநிரைகளை ஊர் அம்பலத்தே கொண்டு சேர்ப்பது 'தந்து நிறை'யாகும். இதன்பின் சேனைத் தலைவன் கொண்டுவந்தவர்களின் தகுதிக்கேற்பப் பசுக்களை அவர் கட்குக் கொடுப்பான். இதனைப் 'பாதீடு' எனச் சொல்வர். இப்படிப் பகுக்கையில், இந்த வெற்றிக்கு 'ஒற்று' சிறந்த காரணமாக அமைந்ததால்; ஒற்றர்க்கே சிறப்பாகக் கொடுப்பான். அடுத்து, நிமித்தம் கூறியவர்களான புலவர்கள் பசுக்களைப் பெறுவர். ஒற்றர் பெறுவதைப் 'புலனறி சிறப்பு' எனவும், புலவர் பெறுவதைப் 'பிள்ளை வழக்கு' எனவும் வழங்கினர்.

பின்னர் வெற்றிப் பெருமிதத்தால் கள் அருந்தி மகிழ்வர். இந்த 'உண்டாட்டு'க்குப் பின், தாம் கவர்ந்த பசுக்களை விரும்பியோர்க்குக் 'கொடை'யாகக் கொடுப்பர். மறவர்கள் சேர்ந்து துடி கொட்டுபவன் பண்பைத் 'துடிநிலை'யில் பாராட்டி, 'கொற்றவை நிலை'யில் கொற்றவையின் அருட்சிறப்பைப் புகழ்ந்து பாடுவர். கொற்றவை நிலைக்குப்பின் வீரரும் அவர்தம் மறக்குடி மகளிரும் தம் தொழில் விருத்திக்காக வேலனின் வேலைக் கொண்டு ஆடும் வள்ளிக்கூத்து 'வெறியாட்டு' ஆகும். இப்படி வெட்சித் திணையின் நிகழ்வு அனைத்தை யும் தொல்காப்பியம் 1003 இல் பின்வருமாறு கூறுகிறது.

''படையியங் கரவம் பாக்கத்து விரிச்சி
புடைகெடப் போகிய செலவே புடைகெட
ஒற்றின் ஆகிய வேயே வேய்ப்புறம்
முற்றின் ஆகிய புறத்திறை முற்றிய
ஊர்கொலை ஆகோள் பூசல் மாற்றே
நோயின் றுய்த்தல் நுவலுழித் தோற்றம்
தந்துநிறை பாதீ டுண்டாட்டுக் கொடையென
வந்த ஈரேழ் வகையிற் றாகும்''

வெட்சிக்குப் புறநடையாகவே தொல்காப்பியர் 'துடிநிலை' யையும் கொற்றவைநிலையை யும் கொண்டார்.

**கரந்தைத் திணை:-** வெட்சி வீரர் கவர்ந்ததை அந்நாட்டு வீரர் மீட்டுச் செல்லல் 'கரந்தை'யாகும். ஆநிரை கவரப்பட்டது அறிந்து ஆரவாரித்துக் 'கரந்தை வீரர்' 'கரந்தை அரவத்துடன்' ஓரிடத்தில் கூடுவர். வெட்சியார் கவர்ந்து சென்ற வழியில் தொடர்ந்து செல்வது 'அதரிடைச் செலவா'கும். தொடரும் காலை வெட்சி மறவரை வளைத்துப் போர் செய்தலைப் 'போர் மலைதல்' என்பர். போரிட்ட கரந்தை வீரன் ஒருவன் வெட்சி மறவனால் தாக்கப்பட்டு விழுப்புண்ணோடு திரும்புவதைப் 'புண்ணோடு வருதல்' என்றும், வெட்சி வீரரால் தாக்குற்று இறப்பதைப் 'போர்க்களத்து ஒழிதல்' என்றும் கூறுவர். வெட்சி வீரரைத் தாக்குப் பிடிக்காது கரந்தை வீரர் புறமுதுகு காட்டுவரேல் அவர்களில் ஒருவன், அவர்களைத் தடுத்து மேற்செல்ல விடாது, வெட்சி மறவரைக் கொன்று ஒழிப்பான். இதுவே 'ஆளெறி பிள்ளை'யாகும். இதனைக் கண்டு விழுப் புண்பட்ட கரந்தையர் 'துடி' எனும் இசைக் கருவியை முழங்கிக் கூத்தாடுவார்கள். இதனைப்'பிள்ளைத் தெளி' வென்பர். வெட்சி வீரருடைய குடலைப் பறித்து மாலையாக வேலிற் சூட்டி ஆடும் கரந்தையார் ஆட்டு, 'பிள்ளை வெறியாட்'டெனப்படும்.

வாட்போரிலே ஒரு கரந்தை மறவன் இறந்தபோது அவனால் ஆதரிக்கப்பட்ட பாணர் 'கையறு நிலை' பாடுவார். இறவாது, பகையைக் கொன்று குவித்த கரந்தை வீரன் தனது மன்னனிடம் தன்னுடைய வீரப் பிரதாபங்களைக் கூறுதல் 'நெடுமொழி'யாகும். இந்த 'நெடுமொழி' கேட்டு, வென்ற வீரனுக்கு மன்னன் பல வளங்களைப் 'பிள்ளைப் பெயர்ச்சி''யாக அளித்துச் சிறப்புச் செய்வான். பின்னர் வீரப் பெருமக்கள் தம் மன்னனைப்

பாடும் 'வேத்தியல் மலிபும்', குடிப் பெருமை கூறும் 'குடி நிலை' யும் இடம் பெறும். தொல் காப்பியர் கரந்தைத் துறைகளை எழுமூன்றென்கிறார்.

**வஞ்சித் திணையானது:-** ஒரு வேந்தன் பகையரசனுடைய நாட்டைக் கைப்பற்ற எண்ணுவதாகும். ''வட்கார் மேற் செல்லும்'' வஞ்சியைத் தொல்காப்பியர் ''எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன் அஞ்சுதகத் தலைச்சென்றடல் குறித்தன்றே'' (1007) என்றார். இதன் நிகழ்ச்சிகள் பதின்மூன்று ஆகும். கைப்பற்ற எண்ணிய திறத்தார் 'வஞ்சி யரவம்' கொண்டு ஆரவாரித்து எழும்புவர். மன்னவனுடைய வெண்கொற்றக் குடையை நல்ல நேரத்தில் முன்னர் செல்ல விடுவர். இது ''குடைநிலை''யாகும். இதனோடு நல்ல நேரத்தில் மன்னனுடைய வாளும் புறப்படும். இது 'வாள் நிலை' யாகும். வஞ்சி வேந்தன் கொற்றவையைப் பாடி போர் மறவரின் சிறந்த பேராண்மையைப் போற்றுவது யாவும் 'கொற்றவை நிலை' யெனப்படும். வஞ்சிப் போரிலே வாட்போரினால் பெறும் வெற்றி 'கொற்ற வஞ்சி' யெனவும், வஞ்சி வேந்தனின் புகழைக் கூறுகையில் பகையரசனுக்கு இரங்குதற்குக்'கொற்ற வள்ளை' எனவும் கூறுவர். பகையரசரைத் தோற்கடித்த வஞ்சி வீரரை மன்னன் சிறப்புச் செய்வது 'பேராண் வஞ்சி'யாம். பேராண் வஞ்சியின் கண்ணே வஞ்சி வேந்தனின் சினம் தணிந்துபோவதும் கூறப்படுகின்றது. பேராண்மையாளரைப் பிறர் பேசிக் கௌரவிப்பது 'மாராய வஞ்சி'யாகும். ஒரு வஞ்சி மறவன் பகைவர் முன்னால் தன் திறம் உரைப்பது 'நெடுமொழி வஞ்சி' யாகும். முன்னோர்களால் ஏற்றப்படுவது'முதுமொழி வஞ்சி' யாகும்'. சினம் கொண்ட வஞ்சி வேந்தன் பகைநாட்டைக் கொழுத்துவது 'வஞ்சி உழபுலம்' எனவும், கொள்ளையிடுவது 'மழபுல வஞ்சி'யெனவும் கூறப்பட்டது. புலவர்கள் வெற்றி பெற்ற வஞ்சி மன்னனைப் பாடுவதும் பரிசில் பெறுவதும் 'கொடை வஞ்சி'யின் பாலாகும். வஞ்சி வேந்தனை எதிர்த்துப் போரிட முடியாமல் 'திறை' கொடுத்துப் பகையை நிறுத்திக் குடிமக்களைக் காப்பதும் வஞ்சி வேந்தன் பாசறையைப் போற்றுவதும் 'குறவஞ்சி'யாம். போரிலே தனித்துத் தாக்குப் பிடிக்கும் நிலையை வஞ்சியில் 'தனி நிலை'யென்பர். புற முதுகு காட்டி ஓடும் ஒரு பகைவனைத் தாக்குவது அறமன்று என்று கருதுதல் 'தழிஞ்சி' யாகும். வஞ்சி மன்னன் தனது போரின் பின்னும் சினம் தணியாமல் பாசறையிலிருத்தல் 'பாசறை நிலை'யாகும். 'உழபுல வஞ்சி'க்குப் பின்னரும் 'பாசறை நிலை'யில் பகையர சனைத் தீயிட்டு அழித்து அவன் நாட்டை அழித்தல் 'பெருவஞ்சி' எனவும், படைவீரர்க்குச் சோறு அளித்தல் 'பெருஞ் சோற்று வஞ்சி' எனவும், வஞ்சி வேந்தன் புகழ் பாடுதல் 'நல்லிசை வஞ்சி'யெனவும் படும்.

**காஞ்சித் திணை:-** பகை வீரரை, அதாவது வஞ்சி மன்னனை எதிர் கொண்டு போராடுவது காஞ்சித் திணையாகும். வஞ்சி மன்னனை எதிர்ப்பவன் காஞ்சிப் பூவைச் சூடி எதிர்த்தலே 'காஞ்சி'யாகும். 'உட்காது எதிருன்றல் காஞ்சி' எனப் பழம் புலவர்கள் கூறினர். காஞ்சி வீரர் வஞ்சி வீரரை எதிர்கொளல் 'காஞ்சியெதிர்வு'மாம். வஞ்சிப்படை வீரரைத் தம் நாட்டினுள் புகவிடாமை 'தழிஞ்சி'யாகும். காஞ்சி மன்னன் பகை வெல்லுதற் குத் தன் வீரர்க்குப் படைக்கலம் வழங்குதல் 'படை வழக்'காகும். தன்னாட்டின் பகைவரை இழித்துப் பேசித் தன் திறம் உரைப்பது 'பெருங் காஞ்சி'யாகும். ''வாள் செலவி''ல் காஞ்சி மன்னனின் வாள் நல் நிமித்தத்தில் போருக்குச் செல்லும். அது போன்றே 'குடைச் செல'வில் வெண் கொற்றக் குடை செல்லும். காஞ்சி வேந்தன் பகைவனை வெல்லுவதாகச் சூளுரைத்தல் 'சூளுரை காஞ்சி'யாம். இது 'வஞ்சினக் காஞ்சி' எனப்படும். சூளுரைத்தபின் போருக்கு முதல், காஞ்சிப் பூவை மன்னன் தன் வீரர்க்கு வழங்குதல் 'பூக்கொள் நிலை' யாகும்.

போரில் வீழ்ந்த மறவனை, அவன் தலையைப் பாராட்டுதல் 'தலைக் காஞ்சி' எனவும், அவன் தலையை மன்னனிடம் கொணர்ந்து பரிசில் பெறல் 'தலை மாராயம்' எனவும் பெயர் பெறும். போரிலே இறந்தவனுடைய தலையை அவன் மனைவி கண்டு மார்புறத் தழுவி உச்சிமோந்து உயிர் துறப்பது 'தலையோடு முடிதலா'கும். இறந்துபட்ட

மறவரின் உடல்களை உண்பதற்காக விலங்குகள் இழுத்துச் செல்வது 'மறக்காஞ்சி' யாகும். போர்க்களத்தே வீழ்ந்த மறவனைப் பேய் ஒன்று காவல் காக்கும். இது 'பேய் நிலை' எனப் படும். அப்பேயோ வீழ்ந்து கிடக்கும் ஏனைய மறவர்களை அஞ்சச் செய்தல் பேய்க் காஞ்சி யாகும். விழுப்புண்பட்ட மறவனை அவன் இல்லம் கொண்டு சென்றதும் ஒரு பேய் அவன் புண்ணைத் தொட்டு அவனை இறக்கச் செய்யும். இது 'தொட்ட காஞ்சி' யாகும். அவ னைத் தொடச் சென்ற பேய், தொட அஞ்சித் தொடாமலே திரும்பிச் செல்லும். இது 'தொடாக் காஞ்சி'' யாகும். போரிலே பட்டவீரனைப் புகழ்வது 'மன்னைக் காஞ்சி'. போரிடுவார்க்குப் போர்க்களத்தே கள் தருவது கட்காஞ்சி'. கணவன் போரிலே இறந்துபடத் தானும் இறந்த சற்புடை மகளிரைப் போற்றுவது 'ஆஞ்சிக் காஞ்சி' யாகும். போரிலே மாண்ட கணவனின் வீர வேலால் தன் உயிரைப் போக்கிக் கொள்வதும் ஆஞ்சிக்காஞ்சி வயப்பட்டதே. காஞ்சி வேந்தன் மகளை வஞ்சி வேந்தன் பெண் கேட்டு, மாறுபாடு ஏற் படுதல் 'மகட்பாற் சாஞ்சி' யாகும். இறுதியில் காஞ்சி வேந்தன் வஞ்சி மன்னன் படையைப் புறமுதுகு காட்டச் செய்வனேல் அதனை 'முனைகடி முன்னிருப்பு' என்பர். இப்படிக் காஞ்சித்திணை பல்வகைத் துறைகளை உடையது.

மருத நிலத்தில் வாழும் மக்களுக்கு நொச்சித் திணையும் உழிஞைத் திணையும் புறத் திணைகளாகக் கொள்ளப்பட்டன. நொச்சித்திணை என்பது பகைவர் நாட்டினுள் நுளைந்த பின்னர் கோட்டையைக் காத்து நிற்றலே. இச்சமயம் வீரர்கள் நொச்சிப் பூச் சூடுவர். வீரத்தோடு அவர்கள் போரிட அது நொச்சித்திணையில் 'ஊர்ச் செரு' என அழைக்கப்படும். புறன் கொடாது நொச்சிவீரர் வீர மரணம் அடைவது மறனுடைய 'பாசி' யாகும். அரண் காத்தற் பொருட்டு நொச்சிவீரர் வெல்வது 'செருவிடை வீழ்த்த' லாகும். குதிரைகள் போரிலே தீரம் புரிதல் 'குதிரைமறம்' எனவும், நொச்சியான் மார்பிலே புண்பட்ட வண்ணம் போர் செய்தல் 'எயிற்போர்' எனவும், பல நொச்சிவீரர் மாண்ட பின்னர், அவர்கட்காகப் பிற வேறு நொச்சிவீரர் பொருதல் 'அழிபடை தாங்கல்' எனவும் கொள்ளப்பட்டது. உழிஞை அரசன் நொச்சி மன்னன் மகளைக் கேட்டு, அவன் மறுத்தல் 'மகள் மறுத்து மொழித' தலாகும்.

காஞ்சித் திணையுள் வந்த 'மகட்பாற் காஞ்சியும்' நொச்சித் திணையிலுள்ள 'மகள் மறுத்து மொழித' லும், ஒரே மாதிரியானவை. இப்படிப் பல துறைகள் அமைந்துள்ள நொச்சித்திணையைப் புலவர் 'எயில் காத்தல் நொச்சி' என்றார்.

**உழிஞைத்திணை:-** உழிஞைப் பூச்சூடி பகைவனின் கோட்டையை வளைத்துப் போரிடு தல் உழிஞைத்திணை என வழங்கிற்று. இதற்காகத் தன் கொற்றக் குடையையும் வாளையும் புறத்தே செல்ல உழிஞை மன்னன் ஒரு நல்ல நாள் பார்த்து விடுவான். இது முறையே 'குடை நாட்கோள்', 'வாள் நாட்கோள்' என்பதாகும். உழிஞை வேந்தின் முரசின் இயல்பு கூறல் 'முரச உழிஞை' யாம். உழிஞை வேந்தன் படை திரட்டல் 'கொற்ற உழிஞை' எனப்படும். வீரனான இம்மன்னனுடைய கையில் அகப்படாத அரண்கள் இல்லை எனலாம். இதுவே 'அரச உழிஞை'. இம்மன்னனைப் புகழ்தல் 'கந்தழி' யாகும். முப்புரங்களையும் எரித்த சிவனார் சூடுவது 'உழிஞை' என்பர். இம்மாலையை 'முற்று உழிஞை' எனப் புகழ்வர். முருகன் சூரசங்காரத்தில் காந்தள் அணிந்தது போல, உழிஞை மலரை இவர்கள் பெருமை யோடு சூடினர்.

முற்றுகையிடச் செல்லும் உழிஞை வீரர் பகைவனின் அரண்புறத்தே தங்குதல், 'புறத்திறை' எனவும், அப்போது பகை வீரர் தம்முடைய அரணின் பெலத்தைக் கூறுதல் 'ஆரெயில் உழிஞை' எனவும் பெயர் பெறும். கிடுகு என்ற போர்க் கருவி 'தோல் உழிஞை' எனப் பாராட்டுப் பெறும். பகைவர் தம்மதிவில் உழிஞை வேந்தன் தனியே நின்று போரிடுவது 'முற்றுகை' யாம். இவர்கள் அகழிக் கரையில் தங்குதல் 'புறத்துழிஞை' யாகும் உழிஞை

மன்னின் அடங்காத சினம் 'முற்று முதிர்வு' ஆகும். இவ்விரு சாராரும் ஓடங்கள் தோணிகள் கொண்டு போரிடுதல் 'பாசி நிலை'யாகும். உழிஞை வீரர் ஏணிகளின் உதவியோடு மதில் மேல் ஏறுதல் 'எயிற் பாசி' யாகும். மதில்மேல் ஏறிய உழிஞைப் படையினர் மதிலின் மேலிருந்து கோட்டையில் குதித்தல் 'முது உழிஞை'யாம். அங்கு நடைபெறும் போர் 'அகத்துழிஞை'யாகும். வெற்றி பெற்ற மன்னன் தோற்றவனின் மகளை மணம் புரியக் கேட்டல் 'மகட் பால் இகலா'கும். வெற்றி பெற்ற உழிஞையர் பகைவனின் யானைகள், காவல் படைகள் யாவற்றையும் கைப்பற்றுதல் ''யானை கைக்கோள்'' எனப்படும். தோற்ற வேந்தனுக்கு உதவ வேற்று வேந்தர் படையுடன் வருதல் 'வேற்றுப்படை வர'வாம். வென்ற பின்னும் பகைவனின் கோட்டை, அரண்மனை ஆகியவற்றை இடித்து, கழுதைகள் பூட்டி ஏரால் உழுது விதைகளை இடுவான். இதனை 'உழுது வித்திடல்' என்பர். பின்னர் வெற்றியளித்த வாளை நீராலும் பூவாலும் திருமுழுக் காட்டுதல் 'வாள்மண்ணு நிலை'யாம். மன்னன் பின்னர் மங்கல நீராடுவான். இது 'மண்ணு மங்கலமா'கும். போரை வெல்ல முடியாதென்று உழிஞையர்க்குத் திறை கொடுத்துப் பகைவன் பணிந்து போதல் ''திறை கொடுத்துப் பெயர்த''லாம் பகைவன் திறை கொடுத்துப் பணியாவிடில் உழிஞை வேந்தன் அவனை வெல்லுவதற்காகப் பாசறையில் நீண்ட காலம் தங்குவான். இது 'அடிபட இருத்லா'கும். இந்தப் போரில் வென்றபோது, ஏனைய பகை மன்னர்கள் கூடித் தொகையாக வந்து மன்னன் அடியினை எய்துதல் 'தொகைநிலை'யாம். இப்படியான கருத்துக்கள் நிறைந்த உழிஞையைத் தொல்காப்பியர் (1012)

''கொள்ளார் தேஎம் குறித்த கொற்றமும்
உள்ளியது முடிக்கும் வேந்தனது சிறப்பும்
தொல்எயிற்று இவர்தலும் தோலின் பெருக்கமும்
அகத்தோன் செல்வமும் அன்றி முரணிய
புறத்தோன் அணங்கிய பக்கமும் திறம்பட
ஒருதான் மண்டிய குறுமையும் உடன்றோர்
வருபகை பேணார் ஆரெயில் உள்படச்
சொல்லிப் பட்ட நாலிரு வகைத்தே'' எனப் புகன்றார்.

**தும்பைத்திணை ;-** கோட்டையை அடைந்த பகைவீரர் நாட்டு வீரருடன் போராடுவதற்குத் தும்பைப் பூவைச் சூடிப் பொருதுவர். இதுவே புலவரால் 'அதிரப் பொருதுவது தும்பை' என வர்ணிக்கப்படுகிறது. போருக்காகத் தும்பை சூடிய மன்னன் தன்னுடைய படை வீரர்க்கு, அவருடைய தரத்திற்கேற்ப நாடு, விழுப் பொருட்களை வழங்கி மகிழ் வித்தலே 'தும்பையரவமா'கும். வீரம் மிக்க இருத்திறத்தாரின் பேராண்மை 'தானை மறம்' எனப்படும். தும்பை மன்னனின் ஆற்றல் மிக்க யானையின் வீரத்தைக் கூறுவது 'யானை மறம்' ஆகும். அதுபோலக் 'குதிரை மறமும்' அமையும். ஒரு மறவன் தனியே தூசிப்படையைத் தடுக்க முனைவது 'தார் நிலை'யாகும். குதிரைமறம் யானைமறம் போலவே 'தேர்மறமும்' ஆகும். இரு திறத்தைச் சேர்ந்த படை வீரர்களும் களத்திலே வீரத்துடன் விழுவதைப் பாணர் யாழிசைத்துப் புகழ்பாடுதல் ''பாண்பாட்டு'' ஆகும். பாண்பாட்டு ஒரு வகைச் பாட்டு ஆகும். வெற்றி தோல்வியின்றி இரு திறத்துப் பகை மன்னர்கள் இறப்பது ''இருவரும் தபுநிலை''யாகும். எதிரியை ஒருவன் மட்டும் தாக்குப்பிடிக்க எண்ணுகிறான். ஏனையோர் புறமுதுகிட்டு ஓடுகையில் அவன் தனித்து நிற்பதே ''எருமை மறமாகும்''. ஒரு போர் மறவன் யானையைக் கொல்வதை 'ஏம எருமை' எனவும், பகைவனைக் கொன்ற வெற்றிக் களிப்பினால் ஆடுவதை 'நூழில்' எனவும் கூறுவர். மேலும் தன் கைவேலெல்லாம் தீர்ந்தபின், தன்னுடலை வருத்திக் குத்திக் கொண்டிருக்கும் வேலைப் பிடுங்கிப் பகைவன் மேல் எறிதல் 'நூழில் ஆட்டு' ஆகும்.

வெற்றி பெற்ற தும்மை மறவர் தம் மன்னனின் தேர் முன்னர் ஆடுவர். அப்பொழுது அதற்குத் தகத் தேர்க்கொடியும் ஆடும். ''முன் தேர்க் குரவை'' என இது அழைக்கப்படும். தேரின் பின் மறவரும் நடன மாதரும் ஆடுதல் 'பின்தேர்க் குரவை'யாகும். தேரின் முன்னும், பின்னும் மேவிப் பேய்கள் ஆடுவது 'பேய்க்குரவை' எனப்படும். பகைவனை யானை வீழ்த்து வது 'களிற்றுடனிலை' எனப்படும். தும்பை மறவர் தமது வீரவாளைச் சுழற்றிக் கொண்டு பகை மன்னனைச் சூழ ஆடுவர். இதுவே ''ஒளி வாள் நிலை''யாகும். ''தானை நிலையில்'' இரு பக்கத்திலும் சிறப்படைந்த வீரன் புகழ் பேசப்படும். அம்புகளினால் சல்லடையாக்கப் பட்டும் கீழே விழாதவாறு போர் செய்தல் 'வெருவரு நிலை'யாகும். போர்க்களத்தே வீழ்ந்த கணவன் உடலைத் தழுவும் 'சிருங்காரநிலையும்' அவனுடைய மார்பு விழுப் புண்ணைக் கண்டு மகிழ்தல் 'உவகைக் கலுழ்ச்சி'யும், வேறும் இரு நிலைகளாம். தன்னுடைய வேந்தன் போரிலே மடிந்ததைக் கேட்டுத் தன்னுயிரை ஒரு வீரன் போக்கிக் கொள்வதும், களத்தில் மாண்டவனைக் காண அவன் மனைவி வருவதும் 'தன்னை வேட்ட'லாகும். இப்போரிலே மன்னர்கள் இருவரும் அவர் படைகள், யானைகள், யாவும் வீர மரணம் எய்துவது 'தொகைநிலை' எனப்படும். இவ்வாறு பன்னிரு துறை கொண்டது தும்பைத் திணை.

**வாகைத்திணை**

தொல் (1020) காப்பியர், வாகைத்திணைக்குப் பின்வருமாறு சிறப்பிலக்கணம் சொல் கிறார்.

''அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்
ஐவகை மரபின் அரசர் பக்கமும்
இருமூன்று மரபின் ஏனோர் பக்கமும்
மறுவில் செய்தி மூவகைக் காலமும்
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்
நாலிரு வழக்கிற் றாபதப் பக்கமும்
பாலறி மரபிற் பொருநர் கண்ணும்
அனைநிலை வகையோ டாங்கெழு வகையிற்
தொகைநிலை பெற்ற தென்மனார் புலவர்''.

'என்மனார் புலவர்' என்பதிலிருந்து இக்கருத்தை மூத்த புலவர்கள் கூறினர் என்பது புலப் படுகிறது. அகத்தியரை மட்டுமன்றி அவருடைய முன்னோடிகளான இலக்கியகாரரின் கூற் றாகவும் இது அமையும்.

**வாகைத்திணை:**— போர் நடைபெறில் இரு திறத்தார் வெற்றி பெறுவது வாகைத் திணையாம். போர்க்களத்திக்குச் செருவெல்வதை வாகையென, வென்று வாகை, மலரைச் சூடுவர். வெற்றி ஆரவாரத்தை 'வாகை அரவம்' என்பர். வென்ற மன்னனின் இயல்பினைக் கூறுதல், முரசின் சிறப்பை மொழிதல் முறையே 'அரசவாகை', 'முரசுவாகை' எனப்படும். போர் செய்யும் மன்னனை உழு தொழில் செய்யும் உழவனாகப் பாடுவர். இது போன்ற செய்திகள் பல இலக்கியங்களில் உண்டு. களத்தில் பட்டவர்களின் ஊனைப் பேய்க்கு மன்னன் கொடுத்தல் 'களவேள்வி'யாகும். வாகை சூடிய மன்னனின் தேர்முன் பேய்கள் ஆடுவது 'முன்தேர்க்குரவை'. இதனைப்போல வீரரும் விறலியரும் பின் தேர்ப்பக்கம் 'பின்தேர்க் குரவை' யாடுவர். பார்ப்பனர், வணிகர், வேளாளர் என்பவர்கள் சிறப்புரைப்பது 'பார்ப்பனர் வாகை', 'வணிகர் வாகை', 'வேளாளர் வாகை' என்பனவாம். பிற மன்னரை இகழேல் என்பதைப் 'பொருத வாகை'யும், முக்காலம் உணர்த்தும் அறிவன் பற்றிய 'அறிவன் வாகையும்', தவத்தின் மேலார் பற்றிய 'தாபத வாகை'யும் இதனுட்படும்.

கூதிர்காலத்து இச்சையை நீக்கிப் போரைப் பற்றியே எண்ணியவனாய் மன்னன் பாசறையில் இருத்தல் 'கூதிர்ப்பாசறை'யாகும். இக்காலத்தில் உடலை வருத்தும் வாடைக்காற்றைப் பற்றியது 'வாடைப் பாசறை'. பகையை வெல்லும் அரச இயல்பு 'அரச முல்லை'யாகும். பகை மன்னரிடையே நடுநிலைமை எடுத்துரைப்பது 'பார்ப்பன முல்லை'. அறங்கூறும் அவயத்துச் சான்றோர் இயல்பை 'அவைய முல்லை' என்பர். காலக்கணியன் மகளிர் மாண்பு கூறும் 'கணியன் முல்லையும்', 'மூதின் முல்லை'யும் உண்டு. மூதின் முல்லையில் மறக்குடி மகளிர் பற்றிய செய்திகள் உண்டு. வீர மரணம் அடைந்த குடிப் பெருமை 'ஏறாண் முல்லையில்' கூறப்பட்டுள்ளது. மறக்குடி மகளிரைப் போல மறவனின் புகழைக் கூறும் 'வல்லாண் முல்லை'யும், செம்மை வேந்தனின் காவல் திறத்தைக் 'காவல் முல்லை'யும், அவன் ஆண்மையைப் 'பேராண் முல்லை'யும் கூறும். பகைவரின்பால் மறம் கூறப்படுவது 'மற முல்லை'யாகும். வெற்றி வேந்தரின் கொற்றக் குடையைக் 'குடை முல்லை' சிறப்பித்துக் கூறும்.

பகை வென்றபின் அரசர் பகை இல்லை எனத் துயில் கொள்வான். இது 'கண்படை நிலை'யாம். மறவர் செஞ்சோற்றுக் கடன் கழிக்கத் தம்முயிரைக் கொடுத்தல்' அவிப்பலி' யாகும். சான்றோர் இயல்பைச் 'சால்பு முல்லை' கூறும். பறை கொட்டுபவர் உழவனைப் புகழ்ந்து 'கிணை நிலை'யில் கூறுவர். இவை யாவற்றிற்கும் பின்னே கால வெள்ளத்தால் அழிந்து போகும் இவைகளைப் பற்றிக் கூறி, அறமே உண்மையெனக் கூறும் 'பொருளொடு புகறலும்' பாசம் அறுத்து ஆசை நீக்கி வாழ்வதைச் சொற்களால் கூறும் 'அருளொடு நீங்கலும்' பற்றியும் வாகைத்திணை கூறுகிறது. இவ்வாறான நிகழ்வுகள் வாகைத் திணையில் உண்டு.

**பாடாண் திணை:-** இங்கே மன்னன் புகழ், சிறப்பு யாவும் பாடப்படுவதாம். புலவனால் பாடாண் திணை பாடப்பெறும். புலவன் 'வாயில் நிலை'யில் தன் வரவைக் காவலன் மூலம் அரசனுக்குத் தெரியப்படுத்துவான். அரசனுடைய குலதெய்வத்தைக் 'கடவுள் வாழ்த்திலும்' அவனைக் கண்ணனுக்கு ஒப்பிடுவது 'பூவை நிலை'யிலும் உண்டு. இரவலன் வேந்தனிடம் யானையைப் பரிசிலாகக் கேட்பது 'பரிசில் துறை'யாகும் பல வள்ளல்களைக் கூறி அதனைப் போலத் தமக்கும் தருக என்பது 'இயல் மொழி வாழ்த்து' ஆகும். மன்னன் துயிலைக் 'கண்படை நிலையி'லும் அவனைத் துயிலெழுப்புவது 'துயிலெடை நிலையி'லும் உண்டு. துயில் நீங்கிய மன்னன் முன், மங்கலம் கூறுதல் 'மங்கல நிலையா'ம். அரண்மனைத் திருவிளக்கை வலஞ் சுழன்று ஒளிர்ந்து நன்மை தந்ததிற்காகப் போற்றுவது' விளக்கு நிலை' யாம். அரசன் களவேள்வியின் அறம் போற்றுவது 'வேள்வி நிலை'யாம். செங்கோன்மைக்கு உண்மையில் உதவும் வெள்ளிக் கிரகத்தையும், நாட்டின் இயற்கை அரணை வளத்தையும், புகழ்ந்து முறையே 'வெள்ளி நிலையிலும்' நாடு வாழ்த்திலும் கூறுவர்.

தடாரிப்பறையன் தனது பரிசின் வளத்தைக் 'கிண நிலை'யில் கூறுவான். மன்னன் போரில் பெற்ற செல்வத்தைப் பாணர் 'களவழி வாழ்த்தில்' கூறுவர். வெற்றியடைந்த மன்னனின் ஒப்பற்றமையை 'வீற்றினிதிருந்த பெருமங்கலத்'திலும், அவன் பகைவனின் முடியைக் கவர்வதைப் 'குடுமி களைந்த புகழ்சாற்று நிலையி'லும் பாணர் கூறுவர். மன்னன் மகளிரை மணம் செய்வதை 'மணமங்கலத்திலும்', 'புதல்வனைப் பெறுதலைப் 'பொலிவு மங்கலத்திலும்', அரசன் பிறந்த நாளைப் போற்றி 'நாள் மங்கலத்திலும்' பாடுவர். பாணர் பரிசில் பெற்று விடை பெறுவதைப் 'பரிசில் நிலையிலும்' விடை நிலையிலும் காணலாம். மன்னனின் விருந்தோம்புதலை 'ஆள் வினைவேள்வி'யிலும், வேறொரு பாணனைப் பரிசிற்கு ஆற்றுப்படுத்தலைப் 'பாணாற்றுப்படையி'லும் கூத்தரை ஆற்றுப்படுத்துவது 'கூத்தராற்றுப்படையிலும்' உண்டு. இதுபோன்றதே 'பொருநராற்றுப்படையும்', 'விறலியாற்றுப்படையுமாம். சான்றாண்மையால் பெறும் நற்பயன் பற்றி 'வாயுறை வாழ்த்தும்', நிலை பேறு கூறும் 'செவியறிவுறுவும்' மன்னற்குக் கூறுவதாம். 'குடை மங்கலம்', 'வாள் மங்கலம்','மண்ணு மங்கலம்', 'கந்தழி', 'கொடிநிலை', 'வள்ளி' யாவும் முன்கூறிய திணைப்

களில் அமைந்தவாறே. புலவனைப், புலவன் இறைவன் பால் ஆற்றுப்படுத்தல் ''புலவராற்று, படை''யெனவும், பெறு பேற்றிற்காக இறைவனை வேண்டல்' புகழ்ந்தனர்ப் பரவல்' எனவும் உலக இன்பங்களை இறைவனிடம் வேண்டல் ''பழிச்சினர்ப் பணிதல்'' எனவும் கூறுவர்.

காதல் கொண்ட ஒருத்தி தலைவனுடைய மாலையை விரும்புவது 'கைக்கிளை' எனவும், தானே அவனிடம் இரவில் செல்வது 'பெருந்திணை' எனவும் கொள்ளப்படும். உடலில் தலைவனைத் தழுவ விழையும் தலைவி கூறுவதைப் 'புலவி பொருளாத் தோன்றிய பாட்டென்'பர். தேவ மகளிர் இறைவனை விரும்புவது 'கடவுள் மாட்டு கடவுட் பெண்டிர் நயந்த பக்கத்தி'லாகும். மானிட மகளிர் இறைவனை விரும்புதல் 'கடவுள் மாட்டு மானிடப் பெண்கள் நயந்த பக்கத்தி'லாகும். பாட்டுடைத் தலைவனைக் குழவியாகக் கருதி மங்கையர் விரும்புதல் 'குழவிக்கண் தோன்றிய காமப் பகுதி'யாகும். காதல் மகளிரும் இளைஞரும் கூடல் செய்யும் ஊரைப் புகழ்தல் ''ஊரின் கண் தோன்றிய காமப்பகுதி''யாம். இப்படிப் பல துறை விளக்கங்கள் பாடாண் திணையில் உண்டு. தமிழர் வாழ்வின் முக்கியமான அகத்திணையும், புறத்திணையும் பல இன்பம் பயக்கும் பண்பாட்டுக்கான செய்திகளைத் தாங்கியுள்ளதைப் பொருள் இலக்கணம் கூறுகிறது. ஒவ்வொரு அகத்திணைக்கும் ஒவ்வொரு புறத்திணை அமைந்துள்ளது. குறிஞ்சிக்கு வெட்சியும் கரந்தையும் போல, முல்லைக்கு வஞ்சி அமைவதாயிற்று. மருதம், உழிஞைத் திணையையும் நொச்சித் திணையையும் உடையது. நெய்தல் தும்பைக்கும், பாலை வாகைக்கும், பெருந்திணை காஞ்சிக்கும், கைக்கிளை பாடாண்டிணைக்கும் அமைந்தன. இவை எவ்வாறு என்பது சுவையானது.

**குறிஞ்சிக்கு வெட்சி எவ்வாறு புறமாயமைந்தது?**

ஆநிரை கவர்தல் குறிஞ்சி நிலத்தில் நடைபெறும். இவ்வெட்சியைக் களவு என்பர். தலைவனும் தலைவியும் களவில் ஈடுபடுவதைக் குறிஞ்சி நிலத்திற்கே கூறிச் செல்வர் புலவர். குறிஞ்சியின் உரிப்பொருளான புணர்ச்சியும் களவேயாகும். இவை யிரண்டு களவும் இரவில் நடைபெறும். வெட்சி ஒரு குறிஞ்சி நிலமலராகும். இதனால்

''வெட்சி தானே குறிஞ்சியது புறனே'' என்றார்.

(தொல் பொருள்—59)

''வஞ்சிதானே முல்லையது புறனே'' எனத் தொல்காப்பியம் (பொருள் 64) கூறுகிறது. கார்காலப் பொழுதுடைய முல்லை—உணவு, நிழல், குளிர்ச்சி கொடுத்துப் பகைவனை நாடும் வஞ்சி வீரர்க்குத் துணையாகும். முல்லையின் கருப்பொருளில் ஒன்றான வஞ்சிப் பூவைப் போர்வீரர் அணிவர். முல்லையின் உணர்வுப் பொருள் (உரி) இருத்தலாகும். தலைவி தலைவனைப் பிரிந்து இருத்தலும், தலைவன் பாசறையில் தலைவியைப் பிரிந்து இருத்தலும் ஒன்றே. முல்லையின் முதல், உரி, கருப் பொருட்கள் வஞ்சியைப் போன்றதால், முல்லைக்கு வஞ்சி புறமாயமைந்தது.

தொல்காப்பியர், உழிஞைத் திணையைப் பொருந்தும் புறமாய் மருதத்திற்கு அமைத்து ''உழிஞை தானே மருதத்துப் புறனே'' என்றார். முல்லை நிலத்தில் விளைந்த வஞ்சி வேந்தனோடு ஆகிய போரை ஆற்றாது பகைவீரர் கோட்டையில் புகுவர். கோட்டை மருத நிலத்தில் அமைந்தது. மருதத் திணை ஒழுக்கம் ஊடலாகும். ஊடிய தலைவி தாழ்ப்பாள் போடுவாள். வேந்தன் போரிலே கோட்டையுள் செல்ல எத்தனிப்பது போல, தலைவனும் தாழ்ப்பாளை நீக்க முயல்வது ஒத்ததாகும். கோட்டையை எதிர்க்கும் வீரரும், உள்விடாமல் உள்ளிருந்து போராடும் வீரரும்/தலைவன் தலைவி ஊடிக் கொள்வது போன்றதே. மருதத்தின் உரிப்பொருள் ஊடலை இரண்டிற்கும் பொதுவாக்கினர். மருதத்திற்குச்

சிறு பொழுது காலமாய்மையும். இதற்கும் உழிஞைக்கும் பெரும் பொழுது வரையறை அற்றது.

**நெய்தலுக்குத் தும்பை புறமாவது:—**

''தும்பைதானே நெய்தலது புறனே'' (தொல்—பொருள் 70)

வேந்தர்கள் இருவர் போர்க்களத்தில் சமர் செய்வது தும்பையாம். போர்க்களம் விரிந்த, பரந்த, வெளியான இடம். அதற்கு ஏற்றது நெய்தலே. நெய்தற்கு உரி, இரங்கலாம். தலைவனைப் பிரிந்து, தலைவி இரங்குவாள். எப்போது வருவான் என்பது அவள் கவலை. இதே போன்று போர்க்களத்தே இறந்த வீரரைக்—கணவரை எண்ணி மனைவியர் இரங்குவர். வீரர்கள் ஒருவர்க்கொருவர் இரங்குவர். கண்டவர் போரில் பலர் இறப்பதற்கு இரங்குவர் நெய்தலில் கடல் ஆரவாரிப்பது போலப் போரில் ஆரவாரிப்பர். புலம்புகின்ற தலைவியும் ஆரவாரிக்கிறாள். கார்காலத்தில் போர் முடிவது போலத் தலைவனும் கார் வந்ததும் வருகிறான். பொழுது, சிறு பொழுது இரண்டிற்கும் பொது.

பாலையும் வாகையும்—''வாகைதானே பாலைக்குப் புறன்'' எனப் பொருளதிகாரம் (தொல்) கூறுகிறது.

பாலைக்குத் தனிநிலம் கிடையாது. இயற்கை மாற்றத்தினால் நிலங்கள் யாவும் பாலையாகின்றன. ஆற்றல், அறிவு, ஆண்மை, பெருமை, புகழ் யாவும் யாவர்க்கும் பொது. அன்பினால் இணைந்த தலைவனும் தலைவியும் ஒருவர் சிறப்பை மற்றவர் கூறுவர். போரிலும் இரு திறத்தாரின் பேராண்மையை யாவரும் மேன்மையாய்ப் பேசுவர். பொருளீட்டத் தலைவன் தலைவியைப் பிரிவது போலச் சுற்றம், சுகம், மனைவி யாவரையும் பிரிந்து, போர்புரியச் செல்கிறான் வீரன். இங்கு மரணமும் பிரிவே. பிரிதல் எனும் பாலை ஒழுக்கம் எல்லா நிலத்திலும் நிகழும்.

**பெருந்திணையும் காஞ்சியும்:**—காஞ்சியே பெருந்திணைக்குப் புறமாம். பெருந்திணை துன்பமானது. அன்பினைந்திணைக்குப் புறம்பானது. அதனால் இத்துன்பம் ஐந்திணைக்குப் புலனாயிற்று.

இதுபோல வாழ்வின் நிலையாமையான காஞ்சியும் ஏனைய புறத்திணைக்குப் புறம்பாகிப் புறனாயிற்று.

உள்ளத்தைக் கட்டுப்படுத்தாமல், உணர்ச்சியை அடக்காமல் இன்பம் துய்ப்பது பெருந்திணை. தன்னை அடக்காது, பெரியோர் சொற் கேளாமல் வாழ்ந்து வாழ்வில் எதுவும் நிலைக்காது என்று வாழ்வது காஞ்சியாம். இவற்றிடம் இடம், காலம் என்ற வரையறை இல்லை.

**கைக்கிளைக்குப் பாடாண்திணை புறனாவது:**—ஒருதலைக் காமமான கைக்கிளைக்கு நிலம் இல்லை. யாவும் பொதுப் பயன் கருதி ஒருவரை ஒருவரால் பாடப் பெறுவது பாடாண் திணை. தமக்கென ஒரு தனிநிலைபெறா. முல்லைக் கைக்கிளை, மருதக் கைக்கிளை முதலியன போல, வெட்சிப் பாடாண், வஞ்சிப் பாடாண் என்பன எல்லாத் திணையோடும் பொருந்திவரும்.

ஒருவர் மட்டும் விரும்பும் கைக்கிளை போலப் பாடப்பெறுபவன் தன்னைப் பரவிப் பாடலை விரும்புகிறான். ஒருவன் ஒருத்தியுடன் தொடர்படுவது போல, பாடாண்திணை

யில் புலவர் பாடல் பெறும் தலைவரோடு தன்னைப் பொருத்திப் பாடுகிறார். கைக்கிளை யும், பாடாண்திணையும் மகிழ்ச்சியையே அடிப்படையாகக் கொண்டவை. நிலமும் பொழு தும் இவற்றிற்கு வரையறை இல்லை.

**திணை மயங்கல்**

தமிழர் மரபில் ஒவ்வொரு திணைக்கும் உரிய முதல் கரு, உரி என்பன. அவ்வத் திணைக்கு வருதல் சிறப்பு. முதல், கரு, உரி என்பன வேறு திணைக்குள் சென்றும் விடும். இதை வழு எனாது, இலக்கணகாரர் மயக்கத்தினால் இது ஏற்படும் என்பர். திணை மயங்கல் இயற்கையாகும். அசைகின்ற மக்கட் கூட்டம், போக்குவரத்துச் செய்த போது இந்நிலைக் குட்பட்டிருக்கலாம்.

மேற்படி அகமும் புறமுமாய் அமைந்த தமிழர் வாழ்வு காலத்தால் அழியாத, பண் பாட்டுக் களஞ்சியமாகும். தமிழர் தம் வாழ்வியல் நூலான தொல்காப்பியத்திலும் அதனைப் பின்பற்றி எழுந்த பல்லாயிரம் இலக்கணங்களிலும் தமிழர் சால்பு வெளிப்படுத்தப்படுகின்றது. தமிழர் ஐவகை நிலத்திற்கும் தெய்வங்களை வைத்து வணங்கினர்.

''மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்''

(தொல்காப்பியம்—950).

என்று இதனைப் புலப்படுத்துகிறது. இதனால் பௌத்தமோ, சமணமோ தமிழ் நாட்டில் இருக்கவில்லை என்றும், முருகன், திருமால் போன்ற தெய்வங்களே இருந்தன என்பதும் புலனாகிறது. தெய்வத்தை வணங்குவது என்பது வாழ்வின் அடிப்படைச் செயல்களில் ஒன்று. சங்க காலத்தில்

''வால்வளை மேனி வாலியோன் கோயிலும்,
நீலமேனி நெடியோன் கோவிலும்'' (புறம்)

எனத் திருமாலும் பலராமனும் சேவித்த செய்தியுண்டு.

குடும்ப வாழ்வில் தலைவனும் தலைவியும் திருமணம் செய்யாமல் இணைந்து வாழ்ந் தனர். இது பண்டையக் காலம். இப்படி வாழ்ந்த இவர்களுள் பொய், குற்றம் போன்றன மலிந்து இல்லம் சீர் கெடலாயிற்று. ஆன்றோர்கள் இதனாலே திருமணம் என்ற முறையைக் கைக் கொள்ளச் செய்தனர். இதனால் தலைவனும் தலைவியும் பிரிதலே கூடாது என்று ஒப்பந்தச் சடங்குத் திருமணத்தைத் தமிழர் வாழ்வில் அமைத்தனர். இதனையே பொரு ளதிகாரம் (தொல். 143)

''பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் காரணம் என்ப'' என்கிறது.

களவியலுக்குப் பின் கற்பியல்; அதாவது முறையான திருமணத்தையே அக்காலச் சமூகம் ஏற்றுக்கொண்டது.

கல்வியில் சிறந்த சான்றோரை, புலவரை, பெருமக்களை அரசர்கள் போற்றினர். பழ மரங்களை நாடிச் செல்லும் பறவைகள் போல வள்ளலாய் உள்ளவர்களை நாடிச் சென்றனர் புலவர்கள். அநீதி செய்த அரசர்களைக் கண்டித்துத் திருத்தும் புலவர்கள் வாழ்ந்த காலம் அது. உண்மை வீரமும் உறுதியின் விலகாமையும் பண்டைப் புலவர்களின் பண்பாகும். 'மோசி பாடிய ஆயும்' 'ஔவை பாடிய அஞ்சியும்' புலவரால் போற்றப் பட்டவர்களே.

கடனறிந்து ஒளியாமலுதவும் செல்வர்கள், இரந்தவர்க்கு அளித்த கொடை பற்றிய சரித்திரங்கள் புறப்பாட்டுக்களில் உண்டு. எந்நில மக்களும் தத் தம் குல ஒழுக்கங்களில் சிறந்திருந்த செய்திகளைத் தொல்காப்பியம் அன்ன நூல்கள் கூறுகின்றன.

இனிப் பொதுவான சில வழக்க ஒழுக்கங்கள் பண்பாட்டைப் பேணும் மரபுடையன என்பதைக் காண்போம். பெண்கள் நெற்றிக்கு இடுவது, மாலையில் மணிவிளக்கேற்றுவது, மேன் மக்கள் தாம்பூலந் தரிப்பது, மகப்பேறு மரணம் போன்ற காலங்களில் 'வாலாமை' என்ற தீட்டுக் காப்பது போன்ற செய்திகளும் உண்டு. கணவனை இழந்த மகளிர் முதலில் கைவளை ஒடித்தெறிந்த செய்திகளும் உள்ளன.

பண்பாடு என்பது ஒரு சமுகத்தின் பழக்க வழக்கங்கள், பாங்குகள், கலைகள், கலா சாரங்கள் யாவற்றையும் உள்ளடக்கியது. தமிழரின் இத்தகைய பண்பாட்டு மரபுகளையே அகத்திணை, புறத்திணை இலக்கணங்கள் கூறுகின்றன.

கால ஓட்டத்தினால், பழையன கழிதலும் புதியன புகுதலும் உண்டெனினும், தமிழர் பண்பாடு தொடர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும், சிறப்புக்கும் இலக்கணமானது என்பதில் ஐய மில்லை. இவை யாவும் தமிழர் வாழ்விலிருந்து அறியக் கூடியன.

உசாத்துணை நூல்கள்


1. தொல்காப்பியம்.
2. அகப் பொருள் விளக்கம்.
3. தமிழர் சால்பு—டாக்டர் சு. வித்தியானந்தன்.
4. அகநானூறு.
5. புறநானூறு.


---

வரலாற்றுப் புகழ் கொண்ட கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் பொன் விழாவில் முதற் சொற்பொழிவை நிகழ்த்த எனக்கமைந்த வாய்ப்பை என்றும் மறவேன். 'தமிழ் வளர்ந்தால் தருமம் வளரும்'' என்னும் பாரதியின் வாக்கிற்கு ஓர் இலக்கியமாய் விளங்கும் தமிழ்ச் சங்கம் வாழ்க; வளர்க.

பெ. சு. மணி
சென்னை
11.08.1992

# பண்டைத் தமிழ்ச் சங்கங்களும் இலங்கையும்

பண்டைய புராண இதிகாசங்களிலும் இலக்கியங்களிலும் இலங்கையின் பெயர் குறிப்பிடப் பெற்றுள்ளது. கடல் கொண்ட பண்டைத் தமிழகத்தின் எஞ்சிய பகுதி இலங்கை என அறிஞர் பலர் தெரிவித்துள்ளனர். பண்டைத் தமிழகச் சங்கங்களிற் பரந்திருந்த தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்த தமிழ்ப் புலவர்கள் பங்கு கொண்டமை போல் இலங்கையில் இருந்த தமிழ்ப் புலவர்கள் பங்கு பற்றினர் எனவும் முதற் சங்கத்தில் முரஞ்சியூர் முடிநாகராயரும் கடைச் சங்கத்தில் ஈழத்துப் பூதத்தேவனாரும் எடுத்துக்காட்டாக உள்ளனர் எனவும் இவர்களைப் போல இங்குள்ள வேறு தமிழ்ப் புலவர்களும் பங்கு பற்றி இருக்கலாம் எனவும் அவர்களின் பாடல்கள் அழிந்திருக்கலாம் எனவும் அறிஞர்கள் தெரிவித்துள்ளனர்.

''திருவளர் மதுரைத் தென்றமிழ்ச் சங்கப்
புலவருள் ஒருவராய்ப் புவிமிசை நாட்டிய
பூதந் தேவனார் முதலிய சான்றோர்
தோன்றுதற் கிடமாம் தொன்றுசேர் சீர்த்தித்
திரைவளை ஈழத்து வடபால்''

என ''ஈழத்துத் தமிழ்ப் புலவர் சரித்திரம்'' நூலின் ஆசிரியர் மகா வித்துவான் சி. கணேசையர் குறிப்பிட்டுள்ளார்.

முரஞ்சியூர் முடிநாாகராயர் பாடிய பாடல்களேனும் அவரைப் பற்றிய குறிப்புகளேனும் இல்லை. ஆயின் ஈழத்துப் பூதந்தேவனார் பாடல்கள் அகநானூறு, குறுந்தொகை முதலிய தொகை நூல்களில் உள்ளன. இவர் பசும்பூட் பாண்டியனைத் தம் செய்யுளிற் குறிப்பிட்டுள்ளார். இவ்வரசனைப் பரணர், நக்கீரர் ஆகிய புலவர்களும் பாடியுள்ளமையால் இம் மூவரும் ஒரே காலத்தவர் ஆவர்.

இவரின் தந்தை பெயர் பூதன்; இவர் பெயர் தேவனார் எனவும், இவர் சில காலம் மதுரையில் இருந்ததினால் மதுரை ஈழத்துப் பூதந்தேவனார் எனப் பெயர் பெற்றார் எனவும் இவர் காலம் கடைச் சங்கத்தின் பிற்பகுதி எனவும் இவர் பாடிய பாடல்கள் ஏழு உள்ளன எனவும் இலங்கைச் சாகித்திய மண்டலம் வெளியிட்ட ''ஈழத்துக் கவிதைக் களஞ்சியம்'' நூலிற் குறிப்பிடப் பெற்றுள்ளன.

ஈழத்துப் பூதந்தேவனார் பற்றியும் இவரது பாடல்கள் பற்றியும் யாழ் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை ''தொடக்ககால ஈழத்து இலக்கியங்களும் அவற்றின் வரலாற்றுப் பின்னணியும்'' என்னும் நூலில் விரிவாக ஆராய்ந்து பூதந்தேவனார் ஒருவரே எனத் தெளிவாகக் கூறியுள்ளதோடு ஈழத்துப் பூதந்தேவனார் சிறப்புக்களையும் எடுத்துக் காட்டியுள்ளார். ஈழத்துத் தமிழ் இலக்கிய மரபுத் தொடக்கம் ஈழத்துப் பூதந் தேவனாரிலே காணப்படுகிறது என்பது மறுக்க முடியாத உண்மை எனவும் கூறியுள்ளார்.

இலங்கைக்குத் தமிழ் இலக்கிய வகையாற் பெரும் சிறப்புப் பெற்றுத் தந்த ஈழத்துப் பூதந்தேவனார் பெயரிலே கொழும்புத் தமிழ்ச் சங்கம் தலைமைத் தமிழ் ஆய்வு நிலையத்தை நிறுவும்.

கடல் கொண்ட தமிழகத்திற்கும் இலங்கைக்கும் தொடர்பு உண்டு என்பதை அறிவுறுத்துவதற்காகப் 'பனைநாடு' என்னும் வரலாற்று நாவலை மாதகல் அறிஞர் மரியதாசன் அவர்கள் எழுதியுள்ளார் (1953) இடைச்சங்க கால நிகழ்வுகளும் அச்சங்கம் இருந்த நாடும் இலங்கையொடு தொடர்புறுத்தப் பெற்றுள்ளன.

— **தமிழவேள்**

# கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் வரலாறும் பணிகளும்

## முன்னுரை

பண்டைக் காலம் முதல் தமிழ்ச் சங்கங்களுக்கும் இலங்கைக்கும் மிக்க தொடர்புண்டு. முதற் தமிழ்ச் சங்கத்தில் இருந்த முரஞ்சியூர் முடிநாகராயரும், மூன்றாம் சங்கத்தில் இருந்த ஈழத்துப் பூதந்தேவனாரும் இலங்கை நாட்டவர் ஆவர். மூன்றாம் தமிழ்ச் சங்கம் நிலை குலைந்த பின் வலுவுள்ள தமிழ்ச் சங்கம் ஒன்றை நிறுவி வளர்த்தவர்கள் யாழ்ப்பாண அரசர்களே ஆவர். ஐரோப்பிய ஆட்சியாளர் வருகையினால் யாழ்ப்பாண அரசு வீழ்ச்சி யடைய அவர்கள் நிறுவிய தமிழ்ச் சங்கமும் நிலைகுலைந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் உலகின் தேசிய பண்பாட்டு உணர்வு வளர்ந்தது. இவ்வுணர்வு தமிழ்மக்கள் மத்தியிலும் வளர்ந்தது. இதனால் பண்டைத் தமிழ்ச்சங்க வழியில் இந்நூற்றாண்டுத் தொடக்கத்தில் மதுரையிலும் யாழ்ப்பாணத்திலும் தமிழ்ச் சங்கங்கள் உருவாகின. யாழ்ப்பாணத்தில் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம் உருவாகியது,

ஆங்கிலேயர் ஆட்சியினால் இலங்கையின் தென்மேல் பகுதி பெருந்தோட்டப் பயிர்ச் செய்கையிலும் வெளிநாட்டு—உள்நாட்டு வணிகத்திலும் அரசு ஆட்சித்துறையிலும் மிக வளர்ச்சி அடைந்தது. இவற்றால் தமிழ் மக்கள் தலைநகரான கொழும்பிலும், தென்மேல் பகுதிகளிலும் வாழ்ந்தனர். தமிழகத்திலும், யாழ்ப்பாணத்திலும் தோன்றிய பண்பாட்டுப் பணிகள் கொழும்புப் பகுதித் தமிழறிஞர்களுக்கு ஊக்கந் தந்தது.

### வெள்ளவத்தைத் திருக்குறட் பயிற்சிக் கழகம்

கொழும்பில் வாழ்ந்த தமிழறிஞர்கள் 1924 ஆம் ஆண்டில் தமிழ் மக்கள் அதிகமாக உள்ள வெள்ளவத்தையில் 'திருக்குறட் பயிற்சிக் கழகம்' என்னும் சங்கத்தை நிறுவினர். விபுலாநந்த அடிகள், சுவாமி சங்கர சுப்பிரமணியர், சச்சிதானந்தயோகி ஆகியவர்கள் ஆசியும் ஆதரவும் வழங்கினர். சேர் அ. மகாதேவா காப்பாளராகவும், திரு. இ. தம்பிராசா தலைவராகவும், திரு. மு. வயிரவப்பிள்ளை செயலாளராகவும் பொறுப்பேற்றனர். இக் கழகத்தின் மாதக் கூட்டங்கள் தலைவரது இல்லத்திலும், ஆண்டுக் கூட்டங்கள் வெள்ள வத்தைச் சம்மாங்கோட்டார் ஆலயத்திலும் நடைபெற்றன. இக்கழகம் திருக்குறள் வகுப்பை வாரந்தோறும் நடத்தியும், சொற்பொழிவுகளை ஒழுங்கு செய்தும், கலைமகள் என்னும் ஆண்டுச் சஞ்சிகையை வெளியிட்டும், 'முருகன் பெருமை' என்னும் நூலைப் பதிப்பித்தும் தமிழ்ப் பணி புரிந்தது. நவநீத கிருட்ண பாரதியார், பொ. கனகசபாபதி ஐயர், வண்ணை க. வைத்திலிங்கம் ஆகிய தமிழ்ப் பேரறிஞர்களின் கட்டுரைகளும் கவிதைகளும் இக்கழகக் கலைமகள் சஞ்சிகையில் வெளிவந்தன.

இக்கழகத்தின் முதலாம் ஆண்டறிக்கையில் பின்வரும் பகுதி உள்ளது. ''மேல்நாட்டுப் போலி நாகரிகத்தினால் மயக்குண்டு தெய்வத் தன்மை பொருந்திய இனிய செந்தமிழ் மொழியை அலட்சியம் செய்து மாயாவாத நெறிக்கண் சென்று கொண்டிருக்கிறோம் என்பதை உணர்ந்து தமிழைப் பயிற்சி செய்வதனாலும், நல்ல சங்கச் சேர்க்கையினாலுமே யாம் சிறப்பு வாய்ந்து பண்டைக் கீர்த்தி எய்தி இன்புறலாமெனக் கருதி இப்பெருமை வாய்ந்த சங்கம் நிருமாணிக்கப் பெற்றது''. இதிலிருந்து இக்கழகத்தை நிறுவியவர்களின் உயரிய தமிழ்ப் பற்றும் தமிழ்ப் பண்பாட்டு உணர்வும் புலனாகின்றன.

இக்கழகத்தை முன்னின்று வழிநடத்திய தமிழறிஞர்கள் இடமாற்றத்திற்கு உள்ளாகி வேறிடம் சென்றமையினால் இக்கழகம் 1936 ஆம் ஆண்டின் பின் வலுவற்றது ஆகியது. எனினும் இக்கழகத் தமிழறிஞர்களின் தமிழ் உணர்வும் பற்றும் குறையவில்லை. இடமாற்றத்தினால் வேறிடங்கள் சென்ற இக்கழக அறிஞர்கள் மீண்டும் தலைநகருக்கு வந்தனர். வேறு அறிஞர்களும் இவர்க்குத் துணையாயினர். ஆகவே திருக்குறட் பயிற்சிக் கழகத்திற்குப் பதிலாகக் 'கொழும்புத் தமிழர் முன்னேற்றக் கழகம்' என்னும் சங்கத்தை 1942 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 22 ஆம் நாள் நிறுவினர்.

**கொழும்புத் தமிழர் முன்னேற்றக் கழகம்**

இச்சங்கத்தின் தலைவராக முதலியார் சு. பொன்னம்பலம் அவர்களும், துணைத் தலைவர்களாக திரு. இ. தம்பிராசா, திரு. மு. வைரவப்பிள்ளை ஆகிய இருவரும் பொறுப் பேற்றனர். இம்மூவரும் இச்சங்கத்தை நிறுவ முன்னோடிகளாக இருந்தனர். இச்சங்கம் வளரப் பல ஆண்டுகள் துணை புரிந்தவர்களும் ஆவர்.

முதலியார் சு. பொன்னம்பலம் அவர்கள் இரண்டாம் உலகப் பெரும் போர் நடந்த காலத்தில் அரச சேவையில் மிக உயர்ந்ததும், முக்கியமானதுமான சிறந்த பதவியைத் தலைநகரில் வகித்து அக்கால அரசினரதும் மக்களினதும் அன்பையும் மதிப்பையும் பெற்றவர். இவர் யாழ்ப்பாணத்துக் கொழும்புத்துறைக்கும் நல்லூருக்கும் உரியவர். அரச சேவையில் நீங்கிய பின் தமிழுக்கும் மக்களுக்கும் தம்மாலான பல பணிகளைச் செய்து வந்துள்ளார். தமிழினதும், தமிழ் மக்களதும் நலனுக்காகப் 'பனைநூறு' என்னும்அரிய நூலை எழுதி யுள்ளார்.

திரு. இ. தம்பிராசா அவர்கள் திருக்குறட் பயிற்சிக் கழகத் தலைவராக விளங்கியவர். நீதிமன்ற மொழிபெயர்ப்பாளராக இருந்தவர். திரு. மு. வயிரவப்பிள்ளை அவர்கள் திருக்குறட் பயிற்சிக் கழக செயலாளராகவும், அக்கழகச் சஞ்சிகையின் ஆசிரியராகவும் இருந்தவர். கணக்காய்வுப் பகுதியிற் பணிபுரிந்து பிரதிக் கணக்காய்வாளராக விளங்கிய இவர் உலகு நீக்கும்வரை தமிழ்ச் சங்கத்தின் வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாய்ப் பல ஆண்டுகள் துணைத் தலைவராகவும், சில ஆண்டுகள் தலைவராகவும் பின்பு காப்பாள ராகவும் இருந்தவர். இவரது இல்லம் சில ஆண்டுகள் சங்க அலுவலகமாக இருந்தது.

கி.பி. 1901 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் ஆரம்பமான இரண்டாவது தமிழ்ச் சங்கம், கி.பி. 1924 ஆம் ஆண்டில் கொழும்பில் ஆரம்பமான திருக்குறட் பயிற்சிக் கழகம், கொழும்பில் 1942 ஆம் ஆண்டில் ஆரம்பமான தமிழ் முன்னேற்றக் கழகம் ஆகியவைகளுக்கு ஒரு வகைத் தொடர்பு இருப்பதை உணரலாம்.

**கொழும்புத் தமிழ்க் கழகம்**

கொழும்புத் தமிழ் முன்னேற்றக் கழகம் ஆரம்பமானதும் தமிழ் உணர்வும், ஆர்வமும் உள்ள அறிஞர் பலர் இச்சங்கத்தில் உறுப்பினர் ஆயினர். அதனால் அவ்வாண்டு ஆகத்து மாதத்தில் பொதுக் கூட்டம் ஒன்று நிகழ்ந்தது. கொழும்புத் தமிழ் முன்னேற்றக் கழகம் என்னும் பெயர் 'கொழும்புத் தமிழ்க் கழகம்' என ஆயிற்று. இலங்கைப் புகையிரதப் பகுதிப் பிரதம கணக்காளராக இருந்த திரு. அ. சபாரத்தினம் அவர்கள் தலைவராகவும் திரு. சே.ச. சண்முகம்பிள்ளை அவர்கள் செயலாளராகவும் திரு. சி. வேலுப்பிள்ளை பொரு ளாளராகவும் தெரிவு செய்யப் பெற்றனர். பதினாறு பேர் ஆட்சிக் குழுவில் இருந்தனர். பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை அவர்களும் உதவி ஆணையாளராக இருந்த அ. வி. மயில்வாகனம் அவர்களும் ஆட்சிக் குழுவில் அங்கம் வகித்தனர். 1945 ஆம் ஆண்டில் கொழும்புத் தமிழ்க் கழகம் என்னும் பெயர் 'கொழும்புத் தமிழ்ச் சங்கம்' என ஆயிற்று.

கொழும்பு 6, காலி வீதியில் வாடகையாகப் பெற்ற 292 ஆம் இலக்க இல்லத்தில் சங்க அலுவலகம் இருந்தது. இங்கு வாரந்தோறும் கருத்தரங்குகள் நடைபெற்றன. இங்கு பத்திரிகைப் படிப்பகம் இருந்தது. இலங்கையிலும் இந்தியாவிலும் வெளிவந்த சிறந்த தமிழ்ச் சஞ்சிகைகள் இப்படிப்பகத்தில் இருந்தன. உணவு விடுதியை நடத்தி அதன் வருவாயைச் சங்கத்திற்கு உதவினர். வாடகை தொடர்ந்து கொடுக்க இயலாமையால் சங்க உறுப்பினர்க்கு உரிய கொழும்பு 6, 32 ஆம் ஒழுங்கை. இல. 18, சென்ற் லோறன்ஸ் வீதி, இல. 50, பெரேரா ஒழுங்கை இல. 51 ஆகிய இல்லங்கள் அலுவலகமாக இருந்தன.

சாதாரண உறுப்புரிமை 5 ரூபா. ஆயுள் உறுப்புரிமை 25 ரூபா. முதலாண்டு ஆயுள் உறுப்பினர்கள் நால்வர். கு. பாலசிங்கம், தி. உருத்திரா, என். எம். எம். மொகிதீன், நாகூர் மீரா முகமட் கனிபா ஆகியவர்களே அவர்கள். சாதாரண உறுப்பினர் 192.

பொதுக் கூட்டங்கள் சைவ மங்கையர் கழகத்தில் நடைபெற்றன. சங்க நிதிக்காகக் 'கண்ணகி', 'அரிச்சந்திரா', 'மங்கம்மா சபதம்' ஆகிய திரைப்படங்களை எல்பின்ஸ்டன், பிளாசா ஆகிய படமாளிகைகளில் ஒழுங்கு செய்தனர்.

முதன் முதலாகக் 'கலித்தொகை மகாநாடு' சிறப்பாக நடைபெற்றது. வாரந்தோறும் தொடர் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. நூலகம் ஒன்றும் இருந்தது. செட்டி நாட்டு அரசர் சேர் அண்ணாமலைச் செட்டியார் 101 ரூபா முதலிற் கொடுத்து வாழ்த்துரை வழங்கினார். பத்திரிகைப் படிப்பகத்தைப் பிரதிக் கணக்காளர் நாயகமாக இருந்த க. கனகரத்தினம் தொடக்கி வைத்தார். தமிழறிஞர் ஈ. எல். தம்பிமுத்து எழுதிய 'திராவிடர் வரலாறு' சைமன் காசிச் செட்டி எழுதிய 'புளூராச்' ஆகிய நூல்கள் சங்க ஆதரவில் வெளிவந்தன. நூலகத்தில் 60 நூல்கள் இருந்தன.

தமிழ்ப் பாலபண்டித வகுப்பைச் சைவ மங்கையர் கழகத்தில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் நடாத்தி உதவினார். இலக்கிய விழாக்களிலும் ஆண்டுக் கூட்டங் களிலும் இசை, நாடக நிகழ்ச்சிகள் நிகழ்ந்தன. தேசீய மொழிகளை அரச மொழிகள் ஆக்கும்படி அரச தேசீய மொழி ஆணைக் குழுவுக்குச் சிறந்த அறிக்கையைச் சங்கம் கொடுத்தது.

மூன்று பெரும் பணிகளை இவர்கள் செய்தனர். இவையே இச்சங்கம் நிலைப்பதற்கும் வளர்வதற்கும் ஏதுவாயின. அவை:—

(1) சங்கத்திற்குச் சிறந்த யாப்பு ஒன்றை வகுத்தமை.

(2) சங்கத்தைச் சங்கங்களுக்கான அரசின் சட்டத்தின்படி பதிவு செய்தமை (1950).

(3) சங்கத்திற்குச் சொந்தமாக 42 பேர்ச் நிலத்தைக் கொழும்பு 6, 57 ஆம் ஒழுங்கை, 7 ஆம் இலக்கத்தில் விலையாகப் பெற்றமை (1950).

இதற்காகக் கொழும்பு 4, கின்றோஸ் அவெனியுவில் 'களியாட்ட விழாவும் பொருட் காட்சியும்' நடத்தினர். இந்தியத் தூதுவர் வி. வி. கிரி, பீ. சரவணமுத்து, எஸ். ஜே. வி. செல்வநாயகம், ஆர். எல். டி மெல், திவான் பகதூர், ஐ. எக்ஸ். பெரேரா ஆகிய பெரியார்கள் இப்பொருட்காட்சியைத் தொடக்கி வைத்தனர்.

நிலத்தை வாங்குவதற்குக் க. மதியாபரணம் அவர்கள் பணத்தைக் கொடுத்து உதவி புரிந்தார்.

சேர் ஏ. கார்டினர், நீதியரசர் ந. நடராசா ஆகியோர்கள் காப்பாளர்களாகவும், திரு.அ. சபாரத்தினம், க. அருணந்தி ஆகியவர்கள் தலைவர்களாகவும் குல.சபாநாதன், வைத்திய கலாநிதி த. நல்லைநாதன், மாநகர முதல்வராக இருந்த தி. உருத்திரா, எஸ். இரத்தினநாதர், வ. பொன்னையா, சோம சரவணபவன், கே. பி. ஹரன் ஆகிய அறிஞர்கள் ஆட்சிக் குழு உறுப்பினராகவும் இருந்தனர். க. அருணந்தி அவர்கள் இலங்கை முழுவதற்கும் கல்வி அதிபராக இருந்தவர். இவர் ஆறு ஆண்டுகள் தலைவராக இருந்தார். பிரதான பணிகள் நிறைவு பெற இவர் உதவினார். தமது தலைமை உரையைப் பாவாக அமைத்துச் சங்கத்தை வளர்க்கும் அறிவுரைகளைத் தெரிவித்துள்ளார். அ. சபாரத்தினம் இலங்கைப் புகையிரதப் பகுதிப் பிரதம கணக்காளராக இருந்தார்.

டாக்டர் சி. பொன்னம்பலம், சே. க. சண்முகம்பிள்ளை, சோ. நடராசா, மு. கணபதிப்பிள்ளை, வித்துவான் வ. மு. கனகசுந்தரம் ஆகியவர்கள் செயலாளர்களாக இருந்தனர். வித்துவான் வ. மு. கனகசுந்தரம் அவர்கள் பல ஆண்டுகள் செயலாளராக இருந்தவர். சிறந்த இலக்கிய விழாக்களையும் நிகழ்ச்சிகளையும் ஒழுங்கு செய்து சங்கம் வளர்ச்சிக்கு உதவினார்.

**1951—61**

இக்காலப் பகுதியில் சங்கம் மிக வளர்ச்சி அடைந்தது. ஆயுள் உறுப்புரிமை 100 ரூபா ஆயிற்று. ஆயுள் உறுப்பினர் 77, சாதாரண உறுப்பினர் 692. உறுப்பினர் தொகை அதிகமாக இருந்த காலம் இது. சில ஆண்டுகள் சங்க அலுவலகம் கொழும்பு 6, 33 ஆம் ஒழுங்கை 21 ஆம் இலக்க இல்லத்தில் இருந்தது. சங்க நிலம் 1950 ஆம் ஆண்டு விலையாகப் பெற்றாலும் அங்கிருந்தவர் விலகாமையால் 1957 ஆம் ஆண்டில் இருந்து அலுவலமாக அமைந்தது. இங்கு செயற் குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. பொதுக் கூட்டங்களும் விழாக்களும் சொற்பொழிவுகளும் சைவமங்கையர் கழகத்திலும் நடைபெற்றன.

பத்துப் பாட்டு மகாநாடு, எட்டுத் தொகை மகாநாடு, சிலப்பதிகார விழா, வள்ளுவர் விழா முதலான பத்துக்கு மேற்பட்ட இலக்கிய விழாக்களும் சிறந்த சொற்பொழிவுகளும் பட்டிமன்றம் கவியரங்கு பெரியார்கள் விழா என்பனவும் நடைபெற்றன. தமிழகத்திலும் இலங்கையிலும் உள்ள அறிஞர்கள் இவைகளிற் பங்கு பற்றினர். இந்நிகழ்ச்சிகள் இந் நாட்டிலும் தமிழகத்திலும் இச்சங்கத்திற்குப் பெரும் புகழ் பெறச் செய்தன. புலவர் சிவங் கருணாலய பாண்டியனார் பாலபண்டித வகுப்புகளையும் இலக்கண இலக்கிய வகுப்புகளை யும் நடத்தி உதவினார். முதன் முதல் அனைத்திலங்கை வகையாக நாவன்மைத் தேர்வு நடைபெற்றது. பிற்காலத்தில் புகழ்பெற்ற நால்வர் இத்தேர்வில் முதற் பரிசில் பெற்றனர். 'முருகு' என்னும் சிறந்த சஞ்சிகை வெளியிடப்பெற்றது. நூற் காட்சியும் நடைபெற்றது.

தக்க அறிஞர்களை நியமித்துச் சொல்லாக்கப் பணியிலும் பாடநூல்களை மொழி பெயர்ப்புச் செய்வதிலும் சங்கம் ஈடுபட்டது. தமிழைப் பயன்படுத்தல் தொடர்பாகப் பல்கலைக் கழக ஆணைக் குழுவுக்குச் சிறந்த அறிக்கையைச் சங்கம் கொடுத்தது. இலங்கை வானொலி, சாகித்திய மண்டலம் ஆகியவற்றிற்குத் தமிழ்மொழி தொடர்பாக அறிவுரை களை வழங்கியது. அரசுத் திணைக்களங்களும் தனியார் நிறுவனங்களும் சங்க முயற்சி களுக்குப் பெரும் ஆதரவு வழங்கின.

1957 ஆம் ஆண்டு புது டெல்லியில் நடைபெற்ற கீழைத்தேய மொழியியல் மகா நாட்டிலும் 1960 ஆம் ஆண்டு மொஸ்கோவில் நடைபெற்ற விஞ்ஞானக் கழக மகா நாட்டிலும் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் சங்கத்தின் பிரதிநிதியாகப் பங்கு பற்றினார். இவர் புது டெல்லி மகாநாட்டில் தெரிவித்த ஆலோசனையே உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடு அமைய ஏதுவாயிற்று.

சங்கச் செயலகத்தில் நூலகத்தைச் சேர். க. வைத்தியநாதன் அவர்கள் தொடக்கி வைத்தார். அறிஞர்கள் சிலர் நூல்களையும் அலுமாரிகளையும் உதவினர். திருவாவடுதுறை ஆதீனம் பல நூல்களை அன்பளிப்பாக உதவியது.

சங்க நிலத்தில் புதிய கட்டிடத்தை அமைக்க 1957 ஆம் ஆண்டு முயற்சி மேற்கொள்ளப் பெற்றது. நிதிச் சீட்டுகளை வழங்கியும் திரைப்படக் காட்சிகளை ஒழுங்கு செய்தும் நிதி சேர்த்தனர். கலாசார அமைச்சிடம் சங்கப் பணிகளுக்கு நிதி உதவி பெற முயற்சி செய்யப் பெற்றது. கட்டிட நிதிக்காகத் தேசிய சேமிப்பு வங்கியில் கணக்கு ஆரம்பிக்கப் பெற்றது.

சங்க விழாக்களில் இசை, நாடக நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. இசை, நாடகக் கலைஞர்களை ஊக்குவித்தனர். தமிழிசை வகுப்பும் சங்க ஆதரவில் நடைபெற்றது.

சங்கம் சமுதாயப் பணியிலும் ஈடுபட்டது. 1952, 1958 ஆம் ஆண்டுகளில் வெள்ளத்தினாலும், 1958 ஆம் ஆண்டு கலவரத்தினாலும் பாதிப்புகள் ஏற்பட்டபோது உணவு, உடை, நிதி சேர்த்து உதவியது. இதற்கான பொதுக் கூட்டத்தில் பீட்டர் கெனமன், எம். எச். மொகமட், கொல்வின் ஆர். டி சில்வா, டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்க, ஏ. எம். ஏ. அசீஸ், சி. உருத்திரா ஆகியவர்கள் உரை நிகழ்த்தினர். பலதுறைப் பணிகளில் பல துணைக் குழுக்கள் செயலாற்றின.

இக்காலப் பகுதியில் சேர் க. வைத்தியநாதன் காப்பாளராகவும், வே. அ. கந்தையா, க. மதியாபரணம், கா.பொ. இரத்தினம், கோ. ஆழ்வாப்பிள்ளை ஆகியவர்கள் தலைவர்கள் ஆகவும், வித்துவான் வ. மு. கனகசுந்தரம், க. வைரமுத்து, வே. கனகசபாபதி, வே. கணபதிப்பிள்ளை, வ. யேசுரத்தினம், ஆ. கந்தையா ஆகியவர்கள் செயலாளர்களாகவும் பல்வேறு அரசுத் திணைக்களங்களிலும், தனியார் நிறுவனங்களிலும் கல்வி நிலையங்களிலும் பணி புரிந்த அறிஞர்களும் தமிழ் ஆர்வலர்களும் ஆட்சிக் குழு உறுப்பினர்களாகவும் இருந்தனர். இவர்கள் அனைவரும் சங்க வளர்ச்சிக்கும் பணிகளுக்கும் நற்பணி புரிந்தவர்கள் ஆவர்.

இக்காலப் பகுதியில் கொழும்பு விவேகானந்த சபை, அகில இலங்கை இந்து மாமன்றம், அகில இலங்கைத் தமிழ்மறைக் கழகம், இலங்கைத் தமிழ் எழுத்தாளர் சங்கம், கொழும்பு சைவ மங்கையர் கழகம், வெள்ளவத்தை இசைக்கலை மன்றம், யாழ் முத்தமிழ் கழகம் ஆகியவை இச்சங்க முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கின.

**1961—70**

இக்காலப் பகுதியில் முன்போல இலக்கியச் சொற்பொழிவுகளும் பாரதி விழா, நாவலர் விழா, திருக்குறள் விழா, பெரியார்கள் விழா முதலிய விழாக்களும், பட்டிமன்றம் கருத்தரங்கு என்பனவும் சைவ மங்கையர் கழகத்திலும், சரசுவதி மண்டபத்திலும் நிகழ்ந்தன. புலவர் சிவங் கருணாலய பாண்டியனார் இலக்கிய—இலக்கண வகுப்புகளைத் தொடர்ந்து நடத்தி வந்தார். அறிஞர் பலர் இவரிடம் கற்று நல்ல தமிழறிஞர் ஆயினர். தமிழகப் புலவர் குழுவில் இச்சங்கத்தைத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் இடம் பெற்றார். 1963 ஆம் ஆண்டு புதுடில்லியில் நிகழ்ந்த உலகத் தமிழாராய்ச்சி மகாநாடு தொடர்ந்து நடைபெற வேண்டுமென வற்புறுத்தினார். கோலாலம்பூர், பாரிசு, சென்னை ஆகிய இடங்களில் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாடுகளில் இச்சங்கத்து அறிஞர்கள் பங்குபற்றி ஆராய்ச்சிக் கட்டுரைகளைப் படித்தனர். இசை, நாடக நிகழ்ச்சிகளும் இயற்றமிழ் விழாக்களில் இடம் பெற்றன.

உறுப்பினர்களின் கருத்து வேறுபாடு இடையில் சிறிது தளர்வு இருந்தது. எனினும் பணிகள் தொடர்ந்து நிகழ்ந்தன. நூலகத்தை வளர்க்கும் முயற்சி மேற்கொள்ளப் பெற்றது.

கொழும்பு இசிப்பத்தன மகா வித்தியாலய ஆசிரியர் க. கந்தசுவாமி 1964 ஆம் ஆண்டு நூலகப் பொறுப்பாளர் ஆனார். இவர் இப்பொறுப்பை ஏற்கும்போது 300 நூல்களும் 3 அலுமாரிகளும் இருந்தன. நூல்களை வகைப்படுத்திப் பதிவேட்டில் பதிந்து அன்பளிப் பாகவும் விலையாகவும் நூல்களைப் பெற்றார். தமிழறிஞர் க. பொன்னம்பலம் அவர்களின் சிறந்த வடமொழி ஆங்கில 100 நூல்களும், தமிழறிஞர் க. வைத்திலிங்கம் அவர்களின் அரிய நூல்களும் பாமன்கடவை ஓய்வுபெற்ற க. நாகரத்தினம் ஆசிரியரின் 300 நூல்களும் சங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கப்பெற்றன. நூலகத்தைப் பலர் பயன்படுத்தினர். இன்று இந்நூலகம் அடைந்துள்ள வளர்ச்சிக்கு இவரது முயற்சியே காரணம்.

ஆசிரியர் க. கந்தசுவாமி அவர்கள் சங்க நிலையத்தில் இடைநிலை வகுப்பு மாணவர்க் குத் தமிழ் மொழி, கணிதம், சமூகக் கல்வி, சமயம் ஆகிய பாடங்களைப் பயன்கருதாது கற்பிக்கும் பணியை மேற்கொண்டார். இவர்து முயற்சி அனைவரதும் நன்மதிப்பைப் பெற்றது. இவரது இம்முயற்சி இந்நிலையத்தில் உயர் வகுப்பு மாணவர்க்கான கற்பித்தல் தொடங்க ஏதுவாயிற்று.

உயர் கல்விப் போதனா மொழி மாற்றத்தினால் அறிவியற் பாடங்களைத் தாய் மொழியில் கற்பித்தல் 1967 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. இதனை நிறைவு செய்வதில் கல்வி நிலையங்களுக்கும் ஆசிரியர்களுக்கும் பெரும் இடர்ப்பாடுகள் இருந்தன. அதனாற் பெற்றோர்களின் விருப்பத்தின்படி சங்கத்தில் உயர் வகுப்பு அறிவியற் பாட போதனை தொடங்கியது. பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் அவர்கள் 1968 ஆம் ஆண்டு இதனைத் தொடக்கி வைத்தார். பேராசிரியர் அவர்கள் ஓராண்டு காலம் பயன் கருதாது பௌதிக இயலைக் கற்பித்து உதவினார். இப்பணி இச்சங்கத்திற்குப் பெரும் பாராட்டைப் பெற்றுக் கொடுத்தது. அறிவியல் வகுப்புகள் இந்நிலையத்தில் தொடங்குவதற்கு வழி வகுத்தவர் பொதுச் செயலாளராக இருந்த திரு. ச. சரவணமுத்து அவர்கள். கொழும்பு புனித பீற்றர் கல்லூரி ஆசிரியர் திரு. கனகரத்தினம் உதவியாக இருந்தார்.

இலங்கைத் தமிழர் வரலாற்றை எழுதுவதற்கு குழு நியமிக்கப் பெற்றது. தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைத்தல், நாவலர் சிலை நிறுவுதல், விபுலாநந்தர் சிலை நிறுவுதல் ஆகிய முயற்சிகளுக்குச் சங்கம் ஆதரவு வழங்கியது. பேராசிரியர் அ. சின்னத்தம்பி அவர்கள் எழுதிய 'மகப்பேற்று மருத்துவம்', மட்டுநகர் பண்டிதர் வி. சி. கந்தையா எழுதிய 'மட்டக்களப்புத் தமிழகம்' ஆகிய நூல்களின் வெளியீட்டு விழாக்கள் சங்க ஆதரவில் நடைபெற்றன.

புதிய கட்டிடத்தை அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பெற்றது. கட்டிடக் கலைஞர் வி. எஸ். துரைராசா அவர்கள் கட்டிட வரை படத்தை அமைத்துத் தந்தார். மாநகர சபை அனுமதி வழங்கியது. கட்டிடத்திற்கு 1968 ஆம் ஆண்டு அரசு வரி விலக்கு அனுமதி வழங்கியது. 5.9.1970 ஆம் நாள் கட்டிடக் கால்கோள் விழா நிகழ்ந்தது. தமிழ்ப் பெருந் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் முதலாய பெரியார்கள் பலர் இதிற் பங்குபற்றினர். தற்காலிகமாகச் சங்கக் கட்டிடப் பிற்பகுதியில் இருந்தவர் வெளியேற மறுத்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்ததினால் இக்கட்டிடப் பணி உடன் நிறைவு பெறவில்லை.

திரு. இரா சபாநாயகம் அவர்கள் காப்பாளராகவும், மு. வயிரவப்பிள்ளை, வ. அருளம்பலம், கு. பாலசிங்கம், எச். டபிள்யு. தம்பையா கியூ. சி. ஆகியவர்கள் தலைவர்களா கவும், க. வைரமுத்து, செ. வேலாயுதபிள்ளை, ச. சரவணமுத்து ஆகியவர்கள் பொதுச் செயலாளர்களாகவும் தமிழ் அறிஞர்கள் ஆர்வலர் பலர் ஆட்சிக் குழு உறுப்பினர்களாகவும் இருந்தனர்.

இக்காலப் பகுதியில் சாதாரண உறுப்புரிமை 10 ரூபா ஆகவும் ஆயுள் உறுப்புரிமை 200 ரூபாவாகவும் ஆயிற்று. சாதாரண உறுப்பினர் தொகை குறைந்து ஆயுள் உறுப்பினர் தொகை கூடியது. அறிஞர் பலரின் சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. மெய்கண்டார் ஆதீனப் பரமாசாரிய சுவாமிகளது தொடர் சொற்பொழிவு இருவார காலம் நடைபெற்றது. சிறப்புச் சொற்பொழிவுகள் சரசுவதி மண்டபத்தில் நடைபெற்றன.

இக்காலத்தில் ஆய்வரங்கு, கவியரங்கு, கருத்தரங்கு, தமிழ்த் தேர்வு, நூற் பதிப்பு ஆகிய பல வகைகளில் சங்கப் பணிகள் நிகழ்ந்தன. ஆய்வரங்கு வாரந்தோறும் நிகழ்ந்தது. கலாநிதி க. செ நடராசா, தமிழறிஞர் இ. இரத்தினம் ஆகிய இருவரும் இதற்குப் பொறுப்பாக இருந்தனர். அறிஞர்கள், ஆர்வலர், எழுத்தாளர் ஆகிய பலர் இதிற் பங்குபற்றினர். வரலாறு, மொழியியல், இலக்கணம், இலக்கியம், சிறு கதை, நாவல், கட்டிடக்கலை ஆகிய பல துறை சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் வாசிக்கப்பெற்றன. சிறந்த ஆய்வுக் கட்டுரைகளுக்குப் பரிசில் வழங்கப்பெற்றது.

தைத்திருநாள், புத்தாண்டுக் கவியரங்குகளும் வேறு சிறப்புக் கவியரங்குகளும் நிகழ்ந்தன. இலக்கியத்துறைத் தலைவர் கலாநிதி க. செ. நடராசா அவர்கள் இவைகளை ஒழுங்கு செய்தார். இலக்கியத்துறைச் செயலாளர் த. கனகரத்தினம் அவர்கள் இவற்றுக்கு உறு துணையாக இருந்தார். இந்நாட்டின் சிறந்த கவிஞர்கள் இக்கவியரங்குகளிற் பங்கு பற்றினர். இவர்களுக்குப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பெற்றன.

தமிழ்மொழி ஆற்றலை மாணவர் மத்தியில் வளர்ப்பதற்காகத் தமிழ்மொழித் தேர்வு கொழும்பு மாவட்டத்தில் நிகழ்ந்தது. இத்தேர்வு கல்வி நிலையங்களின் ஆதரவைப் பெற்றது. முதற் தமிழ்ப் பல்கலைக் கழகத்தை நிறுவித் தமிழுக்கும் தமிழுலகிற்கும் தமிழருக்கும் பெரும் பணிசெய்த செட்டிநாட் அரசர் சேர் அண்ணாமலைச் செட்டியார் நூற்றாண்டு விழாவைக் கொழும்பு செட்டிநாட் கோப்பரேசன், அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் உதவியோடு இச்சங்கம் தலைநகரில் சிறப்பாக நடத்தியது.

அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாடு யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்தபோது இச்சங்கம் நிதி உதவியும் ஆதரவும் வழங்கியது. இம்மகாநாட்டிற் பங்குபற்றிய வெளிநாட்டு அறிஞர்களுக்கு இச்சங்கம் தலைநகரில் சிறந்த வரவேற்பு வழங்கியது. அனைத்துலக இசுலாமியத் தமிழாராய்ச்சி மகாநாடு கொழும்பில் நடைபெற்றபோது இச்சங்கம் ஆதரவு வழங்கியது. இம்மகாநாட்டிற் பங்குபற்றிய தமிழக இசுலாமியத் தமிழறிஞர்களுக்கு இச்சங்கம் சிறப்பு வரவேற்பு வழங்கியது. மதுரை உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டிற்கு மலேசியாவில் இருந்து கொழும்பு வந்த மலேசியத் தொழிலாளர் இளைஞர் காங்கிரசுப் பிரதிநிதிகளுக்கும் கொழும்பு மாணிக்கக்கல் மாநாட்டிற்கு வந்த கொங்கொங், பர்மா இசுலாமியத் தமிழ் அறிஞர்களுக்கும் இச்சங்கம் வரவேற்பு வழங்கியது. தமிழறிஞர்களதும் தமிழ்க்கலை இலக்கிய அமைப்புகளதும் தமிழ்ப் பணிகளுக்கு உதவி வழங்கியது. இவர்கள் தலைநகரில் வெளியீட்டு விழா நடத்தவும் கருத்தரங்குகளை நடத்தவும் இச்சங்கம் சங்க மண்டபத்தைப் பயன்கருதாது கொடுத்து உதவியது. முற்போக்கு எழுத்தாளர் சங்கம், கலை இலக்கிய வட்டம், இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை நூல் வெளியீட்டுச் சபை ஆகியன நிகழ்ச்சிகளை இச்சங்கத்தில் நிகழ்த்தச் சங்கம் உதவியது.

நூலகம் வளர்ந்தது. அன்பளிப்பாகவும் விலையாகவும் நூல்கள் பெறப் பெற்றன. அரசுத் திணைக்களங்கள், கல்வி நிலையங்கள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றின் அறிஞர்களும் ஆசிரியர்களும் மாணவர்களும் இந்நூலகத்தைப் பயன்படுத்தினர். வட கிழக்குப் பகுதிகளில்

உள்ளவர்களும் இந்நூலகத்தைப் பயன்படுத்தினர். அரிய தமிழ் நூல்கள் இந்நூலகத்தில் இருந்தன. தமிழ்ப் பேரறிஞர் தனிநாயக அடிகளார், மெய்கண்டார் ஆதீனப் பரமாசாரிய சுவாமிகள், கல்விப் பணிப்பாளர் கி. இலக்குமண ஐயர் ஆகியவர்கள் இந்நூலகத்தைப் பாராட்டினர். தேசிய நூலகச் சபைத்துணை இயக்குநர் எஸ். எம். கமால்தீன் அவர்கள் இந்நூலகத்திற்கு உதவிகள் புரிந்ததோடு இந்நூலகம் ஆய்வு நூலகமாக விளங்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

பேராசிரியர் அ. சின்னத்தம்பி அவர்களின் முயற்சியினால் அரிய தமிழ் நூல்களைப் பதிப்பித்து வெளியிடும் பணியைச் சங்கம் மேற்கொண்டது. இதன்படி பேரறிஞர் ஆர்னல்ட் எழுதிய பாவலர் சரித்திர தீபகம் நூல், கலாநிதி பொ. பூலோகசிங்கம் அவர்களின் ஆய்வுக் குறிப்புகளோடு வெளியிடும் முயற்சி தொடங்கியது. இதன் முதற் பகுதி 1975 ஆம் ஆண்டிலும் இரண்டாம் பாகம் 1980 ஆம் ஆண்டிலும் வெளியாயின. தமிழ்ப் பாடநூல் எழுத்தாளர் திரு. த. கனகரத்தினம் அவர்கள் சிறந்த சிங்கள எழுத்தாளர் பன்னிருவர் சிங்கள மொழியில் எழுதிய சிறு கதைகளைத் தமிழில் மொழிபெயர்த்து எழுதிய 'சேது பந்தனம்' என்னும் நூல் சங்க வெளியீடாக வெளிவந்தது.

தமிழ் இலக்கிய வகுப்புகளைக் கலாநிதி க. செ. நடராசா அவர்கள் சங்க நிலையத்தில் வாரந்தோறும் நடத்தினார். சிறு வயதினர்க்கான தமிழ் மொழி வகுப்புகளும் வாரந்தோறும் நடைபெற்றன. பயன் கருதாது இவ்வகுப்புகள் நடைபெற்றன. ஆர்வலர்களும் மாணவர்களும் இவ்வகுப்புகளிற் கற்றுப் பயன் பெற்றனர்.

இக்காலப் பகுதியில் கல்விப் பணி மிக வளர்ந்தது. தொழில்சார் பயிற்சி நெறிகள் வெளிநாட்டுத் தேர்வுகளுக்கான பாடநெறிகள், சட்ட இயல் வகுப்புகள், கல்விக் கருத்தரங்குகள் சிறப்பாக நடைபெற்றன. கட்டுப்பத்தைப் பல்கலைக் கழகப் பதிவாளராக இருந்த து. தருமராசா அவர்கள் கல்வித்துறைத் தலைவராகவும் இந்தியன் வங்கியிற் பணியாற்றிய வ. செல்லையா கல்விச் செயலாளராகவும் பொறுப்பேற்றுக் கல்விப் பணியை ஒழுங்குபடுத்தி உதவினர். ஆசிரியர் இ. விக்கினராசா, திரு. சபா செயராசா, திரு. சி. சிவராசா ஆகியவர்கள் கல்விப்பணி வளர்ச்சிக்கு உதவினர். கல்வித்துறை ஆசிரியர்களும் மாணவர்களும் சங்கத்தின் ஏனைய பணிகளுக்கும் உதவிகள் புரிந்தனர்.

1975 ஆம் ஆண்டு சங்க வளர்ச்சியில் சிறப்பு இடத்தை வகிக்கிறது. ஆட்சிக் குழு சங்க முன்பக்க நிலத்தில் அனுமதி பெற்ற புதிய கட்டிடத்தின் முன்பகுதிக் கட்டிடத்தை அமைக்கும் பணியை இவ்வாண்டு மேற்கொண்டது. பொருளாளராக இருந்த இ. விக்கினராசா, கல்விச் செயலாளராக இருந்த வ. செல்லையா ஆகிய இருவரதும் உறுதியும் ஆர்வமும் கல்வித்துறை ஆசிரியர் மாணவர் உதவிகளும் முற்பகுதிக் கட்டிடம் நிறைவுபெற ஏதுவாயின. சங்கத்தின் நிதி நிலை போதியதாக இருக்கவில்லை. கப்பித்தாவத்தை செல்வ விநாயகர் கோவில் பிரதம குரு ஸ்ரீ பா. சண்முகரத்தின சர்மா, சங்கத் தலைவர் மு. வயிரவப்பிள்ளை, கட்டிட அறிஞர் வி. எஸ். துரைராசா ஆகியவர்கள் இக்கட்டிடப் பணியைத் தொடங்கி வைத்தனர். தலைவரும் ஏனயோரும் நிதி சேர்த்து உதவினர். 'கப்பலோட்டிய தமிழன்' என்னும் திரைப்படக் காட்சியினாலும் அதிட்டச்சீட்டு வகையிலும் நிதி கிடைத்தது. ஆர்வலர் பலர் தாமாக நிதி சேர்த்து உதவினர். வெள்ளவத்தை நெசவு ஆலையில் கடமையாற்றியவர்கள் இவ்வகையிற் குறிப்பிடத்தக்கவர்கள். சில இடர்ப்பாடுகளுக்கு மத்தியில் கட்டிட ஒப்பந்தகாரர் லாபீர் அவர்கள் ஆர்வத்தோடு இதில் ஈடுபட்டார். முதலிரு மாடிகளும் ஈராண்டில் நிறைவு பெற்றன. 1980 ஆம் ஆண்டில் மூன்றாவது மாடி நிறைவு பெற்றது. தலைவராக இருந்த கலாநிதி க. செ. நடராசா அவர்கள் பலரிடம் நிதி பெற்று உதவினார். திரு. எஸ். இராமதாஸ் குழுவினரின் 'கிறேசி கோமாளிகள்' நாடகத்தை ஒழுங்கு செய்து நிதி பெறுதற்கும் உதவினார்.

புதிய கட்டிடம் அமைந்ததனால் சங்கப் பணிகள் பெரிதும் வளர்ந்தன. சங்கத்திற்கு நாட்டில் நன்மதிப்புக் கிடைத்தது. சங்கக் கட்டிடம் அமைத்தபின் சங்கத்தின் இலக்கிய நிகழ்ச்சிகள் சங்க நிலையத்தில் நடைபெற்று வருகின்றன. 1957 ஆம் ஆண்டு தொடங்கிய இப்பணி பல இடர்ப்பாடுகளுக்கு மத்தியில் பல இலட்ச ரூபா நிதி பெற்று நிறைவு பெற்றது. சங்க வரலாற்றில் பெரும் சாதனை ஆகும். 1975 ஆம் ஆண்டு ஒரு பைக்கற் சீமெந்து 16 ரூபா. 1980 ஆம் ஆண்டு ஒரு பைக்கற் சீமெந்து 60 ரூபா.

சங்கம் இலக்கிய கல்விப் பணிகளோடு சமுதாயப் பணிகளிலும் ஈடுபட்டது. புயல், வெள்ளம் நாட்டில் ஏற்பட்டபோது நிதி உதவி வழங்கியது. மலையகத் தோட்டப் பாட சாலை மாணவர் கல்வி வளர்ச்சிக்குச் சிறுவர் கதைகளை அன்பளிப்பாக உதவியது. சங்கத்திற்குத் தொலைபேசி உபயோகம் கிடைத்தது. சங்கப் பணிகள் வளர இதுபெரும் உதவி அளித்தது.

கொழும்பு அல்லது தென்மேல் பகுதிக்கு என அமைந்த இதன் பணிகள் நாடு முழு வதற்குமாக அமைந்தன. அதனால் நாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள தமிழ்ப் பேசும் மக்கள் சமூக இன பிரதேச வேறுபாடுகள் இல்லாமல் இச்சங்கத்தில் உறுப்பினராகும் நிலையும் சங்கப் பணிகளில் பங்குபற்றும் நிலையும் உருவானது. நாடளாவிய முறையில் பல பணிகள் தொடங்கி வளர்ந்தன. உலக நாடுகளின் பண்பாட்டுத் தாபனங்களொடு தொடர்பு கொண்டு உலகளாவிய நிலையிலும் சங்கம் வளர்ந்தது.

மதுரையில் நிகழ்ந்த உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் இச்சங்கத்தவர் பலர் பங்கு பற்றினர். கலாநிதி க. செ. நடராசா, த. கனகரத்தினம், சபா செயராசா, கு. சண்முக நாதன் ஆய்வுக்கட்டுரைகள் வாசித்தனர். மதுரைத் தமிழ் மகாநாட்டில் ஆய்வுக் கட்டுரைகள் படித்த இலங்கை அறிஞர்களின் கட்டுரைகள் இச்சங்க நிலையத்தில் வாசித்ததற்குச் சங்கம் ஒழுங்கு செய்தது. இது ஓராண்டு காலமாக நிகழ்ந்தது.

இக்காலப் பகுதியில் இரா. சபாநாயகம் அவர்கள் காப்பாளராகவும், மு. வயிரவப் பிள்ளை, கலாநிதி க. செ. நடராசாஆகியோர் தலைவர்களாகவும், ச. சரவணமுத்து, சி. ஆ. கந்தையா, க. குமாரசிங்கம், க. கந்தசுவாமி ஆகியவர்கள் பொதுச் செயலாளர்கள் ஆகவும் அறிஞர்கள் ஆர்வலர் பலர் ஆட்சிக்குழு உறுப்பினர்களாகவும் இருந்து பணி புரிந்தனர். தமிழ்த் தேர்வுகளுக்குப் பரிசில்கள் வழங்க முதல் முதல் நிதி உதவி வழங்கி யவர்கள் கொழும்பு மதுரநாயகம் வைத்தியசாலை உரிமையாளர் டாக்டர் மதுரநாயகம் அவர்களும், கொழும்பு தேவ் அன் சிறி • என்ரபிறைஸ் உரிமையாளர் எம். ஏ. ஹமீத் அவர்களும் ஆவர்.

**1981—92**

இக்காலப் பகுதியில் சங்க விதிகளில் சில திருத்தங்கள் செய்யப் பெற்றன. சாதாரண உறுப்புரிமை 20 ரூபா, 25 ரூபா, 50 ரூபா ஆக மாற்றம் அடைந்தது. ஆயுள் உறுப்புரிமை 250 ரூபா, 500 ரூபா, 1,000 ரூபா ஆக மாற்றம் அடைந்தது.

இளம் வயதினர் தமிழாற்றல் வளர்தற்காக நாவன்மை, தமிழ்த்திறன் எழுத்துத் தேர்வு, கவிதை எழுத்துத் தேர்வு என்பனவும் வளர்ந்தவர்களின் தமிழாற்றல் வளர்தற் காக ஆய்வுக் கட்டுரைகள் நூலாக்கம் ஆகிய தேர்வுகளும் ஆண்டுதோறும் அனைத் திலங்கை வகையாக ஒழுங்கு செய்யப்பெற்றுத் தக்க நிதிகளும் நூல்களும் சான்றிதழும் வழங்கப்பெற்றன. இப்பரிசில்களை வழங்குதற்காகத் தமிழறிஞர்களின் நிரந்தர நிதியங் கள் வங்கியில் வைப்புச் செய்யப் பெற்றுள்ளன. வட்டியாக வரும் பணம் பரிசில்கள்

வழங்கப் பயன்படுத்தப்படுகின்றது. இப்போது 15 நிரந்தரப் பரிசில் நிதியங்கள் உள்ளன. இத்தேர்வுகளில் நாட்டின் பல பகுதிகளில் உள்ள கல்வி நிலையங்கள் பங்கு பற்றுகின்றன. அறிஞர் பலர் பிரதேசத் தேர்வுப் பொறுப்பாளராக உதவுகின்றனர்.

இந்நாட்டின் சிறந்த ஆர்வலர்களும் அறிஞர்களும் ஆய்வுக் கட்டுரைப் பரிசில்களையும், நூற் பரிசில்களையும் பெற்றுள்ளனர்.

கல்வித் திறமையும் பொருள் வாய்ப்பின்மையும் உள்ள மாணவர் சிலரைப் பிரதேச வகையாகத் தெரிவுசெய்து இடைநிலை வகுப்பில் இருந்து கல்விப் புலமை நிதி உதவியைச் சங்கம் வழங்கிவருகிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள மாணவர் பதின்மர் இவ் நிதி உதவி பெறுகின்றனர். இந்நிதி இச்சங்கத்தின் கல்விப் பணி நிதியில் இருந்து வழங்கப் பெறுகிறது. கொழும்பு மஸ்கன்ஸ் நிறுவனம் மாணவர் ஒருவருக்கு இந்நிதி உதவி வழங்கு தற்காகப் பத்தாயிரம் ரூபாவை வழங்கியுள்ளது. இந்நிதி வங்கியில் நிரந்தர வைப்பாக உள்ளது.

'ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி', 'பாரதி பிள்ளைத்தமிழ்', 'பாலர் மலர்', 'பேராசிரியர் அ. சின்னத்தம்பி', 'சாதகக் கதைகள்', பேராசிரியர் சு. வித்தியானந்தன் காட்டும் ஈழத்துத் தமிழர் சால்புக் கோலங்கள்' 'புலவர் பாண்டியனார் வாழ்வும் பணிகளும்' 'ஈழத்துத் திறனாய்வு முன்னோடி பேராசிரியர் செல்வநாயகம், 'நாம் தமிழர்', 'சிறுவர் பாடல்கள்', 'யப்பானிய மொழியும் தமிழ் மொழியும் ஒப்பீடு', 'விபுலாநந்தம்', 'மன்யோசு காதற் காட்சிகள்', 'கொஞ்சும் தமிழ்' ஆகிய நூல்கள் வெளியிடப் பெற்றன. 'மன்யோசு காதற் காட்சி' நூற்பதிப்புக்கு யப்பானிய நிதி நிறுவனம் 92 ஆயிரம் ரூபா உதவியுள்ளது.

சங்க நூல்கம் மிக வளர்ச்சி அடைந்தது. தனியான மண்டபத்தில் அமைந்துள்ளது. சங்கத்தின் வேண்டுதலை ஏற்று மாண்புமிகு எம். ஜி. ஆர். தமிழக அரசு ஓரிலட்ச ரூபாவுக்குச் சிறந்த தமிழ் நூல்களை இந் நூலகத்திற்கு வழங்கியது. இந்நூல்களை இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் சங்கத்திடம் வழங்கினார். சிறந்த நூல்களைத் தெரிவு செய்து உதவுதற்காகப் பொதுச் செயலாளர் தமிழ்நாடு பொது நூலகத்துறைக்கும் தமிழ்நாடு பதிப்பகங்களுக்கும் பல்கலைக் கழகங்களுக்கும் ஆதீனங்களுக்கும் சென்றார். ஆய்வுப் பணி களுக்குத் தேவையான பல்துறை நூல்கள் இந்நூலகத்தில் உள்ளன, இதனால் இந்நாட்டில் சிறந்த ஆய்வு நூலகமாக நாட்டில் உள்ள அனைவருக்கும் அரசுத் திணைக்களங்களுக்கும் பல்கலைக் கழகங்களுக்கும் உதவுகிறது. அறிஞர் பலர் நூல்களை அன்பளிப்பாக வழங்கினர். இப்போது 15 ஆயிரம் நூல்கள் உள. சிறந்த உலோக அலுமாரிகளில் இந்நூல்கள் உள்ளன. நூலகத்தில் இருவர் பணி புரிகின்றனர். தமிழ்மொழி நூல்களோடு சிறந்த வட மொழி, ஆங்கில நூல்களும் உள. சிறந்த சஞ்சிகைத் தொகுதிகளும் உள. அனைத்துத் துறைகளுக்கும் மொழிகளுக்கும் உரிய நூல்கள் அனைத்தும் இந்நூலகத்தில் இருப்பதற்குச் சங்கம் ஆவன செய்யும். நூல்களைப் பலர் பயன்படுத்தற்கு உரிய வாய்ப்புகளையும் சங்கம் செய்யும். வெளிநாட்டு அறிஞர்களும் இந்நூலகத்தினைப் பயன்படுத்துகின்றனர். திருவாவடுதுறை ஆதீனமும் இந்து சமய கலாசார இராசாங்க அமைச்சும் சிறந்த பல நூல்களை அன்பளிப் பாக வழங்கியுள்ளன.

சங்கக் கல்வி நிலையம் இந்நாட்டின் பெரும் பணி செய்து வருகிறது. பல சமூகத்தவர் இனத்தவர் சமயத்தவர் பிரதேசத்தவர் இங்கு பல்துறைக் கல்வியைப் பெறுகின்றனர். சிறந்த அறிஞர்கள் விரிவுரையாளராக உள்ளனர். மொழித்துறை, தொழில்நுட்பவியல், சட்ட இயல், பொது நிருவாக இயல் முதலிய பயன் உள்ள பலதுறைப் பாடநெறிகள் இங்கு இடம் பெறுகின்றன. இலண்டன் மின்னியற் கழகம் நடத்தும் தேர்வுக்கு இச்சங்கம் இந் நாட்டில் அக்கழகத்தின் அனுமதி பெற்ற அமைப்பாகப் பணி புரிகிறது. இளங்கலை முதலாய தமிழ்த்துறை நெறிகளும் இங்கு உள்ளன. இங்கு கற்பவர்கள் நல்ல அறிவாற்ற லொடு நல்ல பண்பாட்டையும் பெறுகின்றனர், இந்நாட்டிலும் வெளிநாடுகளிலும் வேலை

வாய்ப்புப் பெற இச்சங்கக் கல்வி நிலையம் உதவுகிறது. கல்வித் துறைச் செயலாளர் திரு. சு. பேராசிரியன் அவர்களின் தன்னலமற்ற நன் முயற்சிகள் கல்விப் பணி சிறந்து உயர்ந்து விளங்குவதற்குக் காரணம் ஆகும். இவரின் பணியினால் சங்கத்தின் ஏனைய பணிகளும் உயர்ந்து விளங்குகின்றன. தமிழ் இலக்கிய இலக்கண வகுப்புகள் பொதுச் செயலாளர் பொறுப்பில் நடை பெறுகின்றன. பிரதேச அமைச்சுத் தமிழ்ப் பணிப்பாளரான திரு. இராசநாயகம், புலவர் த. கனகரத்தினம் ஆகியவர்கள் உதவி புரிந்தனர். இங்கு தமிழ் கற்றவர்கள் சிறந்த தமிழ் அறிவு பெற்று விளங்குகின்றனர். இளம் வயதினர்க்கு வேறாகவும் வளர்ந்தவர்களுக்கு வேறாகவும் வகுப்புகள் நடைபெறுகின்றன. பயன்கருதாத பணியாக இப்பணி பல ஆண்டுகளாகத் தொடர்ந்து வருகிறது.

மகாகவி பாரதி நூற்றாண்டுக்காகப் பல சிறப்பு நிகழ்ச்சிகள் ஓராண்டு காலத்திற்கு ஒழுங்கு செய்யப்பெற்றன. தமிழ்த்திறன், நாவன்மை, கவிதை, ஆய்வுக் கட்டுரை, நூலாக்கம் ஆகியவை அனைத்திலங்கை வகையாக மகாகவி பாரதியின் பலதுறைப் பணிகளைக் கருவாகக் கொண்டு நிகழ்ந்தன. இவைக்காகச் சிறந்த பரிசில்கள் மாணவர்களுக்கும் அறிஞர் களுக்கும் வழங்கப்பெற்றன. 'பாரதி பிள்ளைத் தமிழ்' என்னும் நூல் சங்கத்தின் முயற்சியால் ஆக்கப் பெற்றது. மகாகவி பாரதியைப் பாட்டுடைத் தலைவனாக வைத்துத் தமிழ் உலகில் வெளிவந்த நூல் இதுவாகும். இதனை ஆக்கிய புலவர் க. த. ஞானப்பிரகாசம் அவர்களுக்குச் சங்கம் பெரும் பரிசில் வழங்கியது. இந்நூல் சங்கப் பதிப்பாக வெளிவந்தது. இந்நூற்றாண்டுக் காகப் பிரதேச அபிவிருத்தி அமைச்சர் மாண்புமிகு செ. இராசதுரை அவர்களின் அழைப்பை ஏற்று இலங்கை வந்த தமிழக அரசு அமைச்சர் மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் சங்கத்தில் சிறந்த சிறப்புரையை நிகழ்த்தினார். தமிழ்நாடு அரசு நூல்கள் இச்சங்கத்திற்குக் கிடைத்ததற்கு இவர் துணை புரிந்தவர் ஆவர்.

மலேசியத் தலைநகரில் நடைபெற்ற ஆறாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டில் பொதுச் செயலாளர், துணைச் செயலாளர், ஆட்சிக் குழு உறுப்பினர் திரு. இ. ஹரி ஆகியவர்கள் பங்குபற்றினர். துணைச் செயலாளர் த. கனகரத்தினம், இ. ஸ்ரீ ஹரி ஆகிய இருவரும் சிறந்த ஆய்வுக் கட்டுரைகளை வழங்கினர். மலேசியத் தமிழ் ஆய்வு நிலையத்திற்குப் பொதுச் செயலாளர் சிறு தொகை நிதியை வழங்கினார். பொதுச் செயலாளர் இம்மகா நாட்டிற்குச் செல்வதற்கான விமானப் பயணச் சீட்டைப் பிரதேச அபிவிருத்தி அமைச்சு வழங்கியது. மலேசியத் தமிழ் எழுத்தாளர் சங்கம் இச்சங்கப் பொதுச் செயலாளருக்கும் கல்கின்னத் தமிழ்மன்றச் செயலாளர் எஸ். எம். ஹனிபா அவர்களுக்கும் வரவேற்பு உபசாரம் வழங்கியது.

1989 ஆம் ஆண்டு மொறிசியசு நாட்டில் உலகத் தமிழாராய்ச்சி ஏழாம் மகாநாடு நடைபேற்றபோது அன்றைய நிலையில் இந்நாட்டில் இருந்து எவரும் அங்கு செல்லாத நிலை இருந்தது. தமிழுலகில் அங்கமாக உள்ள மொறிசியசு வாழ் தமிழர்களின் முயற்சிக்கு இலங்கைத் தமிழ் மக்கள் ஆதரவு வழங்குதல் கடமை என்பதை உணர்ந்து கொழும்புத் தமிழ் தமிழ்ச் சங்கத் தலைவர், பொதுச் செயலாளர், துணைச் செயலாளர் ஆகியவர்கள் தம் பொருட் செலவில் அம்மகாநாட்டில் இந்நாட்டின் சார்பில் பங்குபற்றினர். பொதுச் செய லாளரும் துணைச் செயலாளரும் ஆய்வுக் கட்டுரைகள் வழங்கினர்.

சங்கத்தின் பல்வேறு பணிகளுக்கும் அனைத்துலகத் தொடர்புள்ள தலைமை நிலையத் தைக் கடைச் சங்க காலத்தில் இலங்கையில் இருந்த 'ஈழத்துப் பூதத்தேவனார்' பெயரில் நிறுவச் சங்கம் முன்வந்தது. சங்கத் தலைவராக இருந்த திரு. து. தருமராசா அவர் களின் முயற்சியால் மாங்குளத்தில் பெரியார் திரு. சி. இ. செந்தில்நாதன் அவர்களின் 24 ஏக்கர் நிலம் குறைந்த விலையில் கிடைத்தது. மேலும் அங்கு 6 ஏக்கர் நிலத்தைச் செந்தில்நாதன் தம்பதிகள் சங்கத்திற்கு அன்பளிப்பாக வழங்கினர். இங்கு அமைய உள்ள தலைமையகம், நூலகம், புலவர் கல்லூரி, அச்சகம், தொழிற் பயிற்சி

நிலையம், பயிர்ச் செய்கை, மந்தை வளர்ப்பு, வதிவிடங்கள், பூங்கா, விளையாட்டரங்கு, விருந்தினர் விடுதி, உணவகம் ஆகிய பல்வேறு அமைப்புகளுக்கு உரிய வரை படங்களைக் கட்டுப்பத்தைக் கட்டிட நிருமாணத்துறை விரிவுரையாளர் திரு. த. அ. தேவதாசன் வரைந்து உதவினார். ஆயின் அமைதியற்ற நிலையிலே இப்பணி தொடரவில்லை.

பத்திரிகைப் படிப்பகம் தனியான இடத்தில் அமைந்துள்ளது. இலங்கையில் வெளிவரும் நாளிதழ்களும், இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வெளிவரும் சிறந்த இலக்கிய சஞ்சிகை களும் வெளிநாட்டுத் தூதுவரகங்கள் உதவும் சஞ்சிகைகளும் உலகச் சூழல் நிறுவன வெளி யீடுகளும் இப்படிப்பகத்தில் உள்ளன. மாணவர்கள் ஆர்வலர்கள் உறுப்பினர்கள் இப் படிப்பகத்தைப் பயன்படுத்துகின்றனர்.

அச்சகம் ஒன்று நிறுவச் சங்கம் முயற்சி செய்தது. தமிழ்மொழி அமுலாக்கல் மாண்புமிகு அமைச்சர் செ. இராசதுரை அவர்கள் இதற்காக 50 ஆயிரம் ரூபா வழங்கியுள்ளார். மாநகர அபிவிருத்திச் சபை, சங்க நிலையத்தில் அச்சகம் அமைக்க அனுமதி வழங்காததால் இம்முயற்சி நிறைவுபெறவில்ால.

1991 ஆம் ஆண்டு இந்நாட்டுத் தமிழ்ப் பேரறிஞர் விபுலாநந்த அடிகளாரின் நூற்றாண் டுக்காக ஓராண்டு காலத்திற்குச் சிறப்புச் சொற்பொழிவுகளையும் அனைத்திலங்கைவகையாக நாவன்மை, மொழித்திறன், கவிதை, இசை, நாடகம், ஆய்வுக் கட்டுரை ஆகிய தேர்வுகளை யும் சங்கம் ஒழுங்கு செய்தது. தேர்வுகள் பிரதேச வகையாகவும் நிறைநிலை வகையாகவும் நிகழ்ந்தன. சிறப்பு நினைவு விழாவில் அறிஞர்களதும் பரிசில் பெற்றவர்களதும் கட்டுரைகள் கவிதைகள் அடிகளார் அறிவுரைகள் உள்ள 'விபுலாநந்தம்' என்னும் சிறப்பு வெளியீடு வெளியிடப் பெற்றது.

சங்கம் சமுதாயப் பணிகளிலும் ஈடுபட்டு வருகிறது. தமிழர் அறிஞர்களதும் தமிழிலக்கிய அமைப்புக்களதும் தமிழ் இலக்கியப் பணிகளுக்கு மண்டபத்தைக் கொடுத்து உதவுகிறது. 1981 ஆம் ஆண்டு சேதமுற்ற யாழ் நூலகத்தை மீள அமைப்பதற்கு நிதியும் நூல்களும் கொடுத்து உதவியதோடு தலைநகரில் நூல்கள் சேகரிக்கும் பணிகளுக்குச் சங்க ஆட்சிக் குழு உறுப்பினர் செ. குமாரசாமி அவர்களும் பொதுச் செயலாளரும் உதவி புரிந்தனர்.

இலண்டனில் நிறுவப்பெற்ற பொதுநல நாடுகளின் பொது நூலகத்திற்கு இலங்கை அரசின் அறிவித்தலை ஏற்றுச் சிறந்த தமிழ் நூல்களை உதவியது. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக நூலகத்திற்கு இலங்கை நூல்களை உதவியது. மொறிசியசு நாட்டுத் தமிழ் வளர்ச்சிக்காக 100 நூல்களை அந்நாட்டுக் கல்வி அமைச்சரிடம் மகாநாட்டின்போது கொடுத்துள்ளது. பீக்கிங் வானொலித் தமிழ்ப் பகுதி அதிபரின் அறிவித்தலை ஏற்று அந்நிலையத் தமிழ்ப் பகுதி உபயோகத்திற்காகச் சில சிறந்த நூல்களைச் சங்கம் உதவியது. ஜேர்மனி, ஒல்லாந்து நாடுகளுக்கும் தமிழ்க் கல்வி வளர்ச்சிக்கு நூல்களை உதவியது. இந்நாட்டில் முந்தல் சனசமூக நிலையம், கம்பளை சாகிராக் கல்லூரி, திருகோணமலை முற்போக்குச் சனசமூக நிலையம், அம்பாறைக் கோவில் நூலகம், இறக்குவானைத் தோட்டப் பாடசாலை, கற்றன் இந்து மகாசபை ஆகியவற்றின் அறிவித்தலை ஏற்றுத் தகுந்த நூல்களைச் சங்கம் உதவியது. டி. எஸ். சேனநாயக்க மகா வித்தியாலயம், சைவ மங்கையர் வித்தியாலயம் ஆகியவற்றின் பொருட்காட்சிகளுக்குத் தமிழ்ப் பெரியார் படங்களைக் கொடுத்து உதவியது. இந்து சமய கலாசார அமைச்சின் பணிகளுக்கும் உதவி வருகிறது.

முற்போக்கு எழுத்தாளர் சங்கம், கலை இலக்கிய நண்பர் அமைப்பு, மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஆகியவைகளின் பணிகளுக்கு மண்டபத்தைக் கொடுத்து உதவியது. தமிழர் பலரின் நூல் அறிமுக விழாக்களைச் சங்கம் நடத்தி உதவியது. புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி, இலங்கைத் தமிழர் வரலாறும் இடப் பெயர்

ஆய்வும், நெடும்பா 3 'பாலைக்கலி உரை' போன்ற நூல்களின் அறிமுக விழாக்கள் சங்கத்தில் நிகழ்ந்தன. புலவர் நா. சிவபாதசுந்தரனாருக்குப் பொன்னாடை போர்த்தும் வரவேற்பு இதழ் படித்தும் போற்றுதற்குச் சங்கம் உதவியது.

சங்கத்தில் தற்காலிகமாக இருந்தவர் சங்கத்திற்கு எதிராகத் தொடர்ந்த வழக்கு மாவட்ட நீதிமன்றத்தில் இருந்து மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கும் உயர் நீதிமன்றத் திற்கும் சென்றது. வாடகைச் சபை நீதிமன்றத்திற்கும் சென்றது. மேன்முறையீட்டு நீதிமன்றம் உயர் நீதிமன்றம் வாடகைச் சபை நீதிமன்றம் ஆகியவற்றின் தீர்ப்புகள் சங்கத்திற்குச் சார்பாக வெளி வந்தன. சட்ட வல்லுநர் சி. இரங்கநாதன், கியூ.சி., சோ. நடேசன், கியூ.சி., க. கனகேசுவரன், நேசதுரை, பகீரதன், விமலச்சந்திரன் ஆகியவர்களின் முயற்சிகள் சங்கத்திற்கு உதவியாயின. நீதிமன்றத் தீர்ப்புகளின் பின்பும் இவர் சங்கத்தில் இருந்து வெளியேறாமல் சங்க முயற்சிகளுக்குத் தடையாக இருந் தார். இருபது ஆண்டுகளுக்கு மேலாக இவர் சங்க முயற்சிகளுக்கும் வளர்ச்சிக்கும் இடையூறாக இருந்தார். இந்த இடையீடு இல்லையேல் இருபது ஆண்டுகளின் முன்பே சங் கக் கட்டிடங்கள் குறைந்த நிதியோடு நிறைவுபெற்றிருக்கும். சங்கத்தின் பணமும் காலமும் வீணாகி இரா. பல பணிகள் வளர்ந்திருக்கும். சங்க நிலத்தைச் சொந்தமாக்க முயன்ற இவர் திருவருள் துணையால் இருபக்கச் சட்ட வல்லுநர்களதும் சட்டத்தரணி க. நீலகண்டன் அவர்களதும் முயற்சியினால் சங்கத்திலிருந்து வெளியேறினார். இவர் வெளியேறியதும் பிற்பக்க நிலமும் கட்டிடமும் தூய்மையாக்கப் பெற்றுச் சங்கப் பணிகளுக்குப் பயன்படுத்தப் பெறுகின்றன. பிற்பக்கத்திலும், முற்பக்கத்திலும் உயர் மதில்கள் அமைக்கப் பெற்றன.

சங்கத்தின் நாலாம் மாடி 1990 ஆண்டில் சங்க நிதியினால் நிறைவு பெற்றுள்ளது. சங்கத்தின் இன்றுள்ள பல பணிகளுக்கு முன்னைய பிற்பக்கக் கட்டிட அமைப்புப் போதிய தாக இல்லாமையால் அதில் தேவையான திருத்தங்களைச் செய்ய ஆட்சிக் குழு தீர்மானித் தது. திருத்தங்களை மாநகரக் கட்டிடச் சபை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆதலின் இன்றுள்ள மாநகரக் கட்டிட அமைப்பு விதிகளின்படி கட்டிட வரைபடத்தைக் கொடுத்து மாநகர சபையின் அனுமதி பெறச் சங்கம் முயற்சி செய்கிறது. அனுமதி கிடைத்ததும் பிற்பக்கத்தில் முற்பக்கம் போல 4 மாடிகளும் நடுவில் இரு மாடிகளும் அமையும். சங்கத்தின் பல பணிகள் நன்கு நிகழ இக்கட்டிட அமைப்புகள் உதவியாகும்.

1983 ஆம் ஆண்டு எதிர்பாராத வகையில் தலைநகரில் குழப்பநிலை ஏற்பட்டபோது கட்டிடங்களும் பொருள்களும் சேதமுற்றன. அப்போது சங்க நிலையம் திருவருட் துணை யால் பாதுகாப்பாக இருந்தது. சங்கத்தை மேலாக மதித்த பொதுச் செயலாளர் இடையூறு களைப் பொருட்படுத்தாது சங்கத்தில் தங்கியிருந்து அன்பர் சிலரின் உதவியோடு சங்க நிலையத்தைப் பாதுகாத்துச் சங்கப் பணிகளையும் தொடர்ந்தார். சங்கத்தை நாடிய சங்க மாணவர்களுக்கும் ஏனையவர்களுக்கும் பயன் கருதாது உதவினார்.

இச்சங்கம் தேசிய நிலை கடந்து உலக நிலையில் உயர்வு பெறுதற்காகவும் உலகில் தமிழ்மொழி பரந்து உயர்ந்து விளங்குதற்காகவும் உலகப் பண்பாட்டுத் தாபனங்களோடு தொடர்பு கொண்டு அவற்றின் பணிகளுக்கு ஆதரவு வழங்குகிறது. அவற்றின் பணிகளையும் பயன்களையும் இந்நாட்டவர் பெறுதற்காக அவற்றின் முயற்சிகளை இந்நாட்டிற் பரப்பும் பணியில் இச்சங்கம் பல ஆண்டுகளாக ஈடுபட்டு வருகிறது. இந்நாட்டு, வெளிநாட்டுப் பண்பாட்டு அமைப்புகளின் தொடர்பு நிலையமாகப் பணி புரிய விரும்புகிறது. இதனாலேயே பல வெளிநாட்டுப் பண்பாட்டுத் தாபனங்கள் இச்சங்கத்தொடு தொடர்பு கொள்கின்றன. பாரதி நூற்றாண்டு விழாவுக்குக் கல்கத்தா பாரதி நூற்றாண்டுச் சபை இச்சங்கத்திற்கு அழைப்பு விடுத்தது. இதேபோலப் பல வெளிநாட்டுத் தாபனங்கள் இச்சங்கத்தொடு தொடர்பு கொண்டு உதவுகின்றன.

உலகச் சூழற் காப்பு நிறுவனத்தோடும் அதன் உலகக் கிளை அமைப்புகளுடனும் இச்சங்கம் தொடர்பு கொண்டுள்ளது. இன்றுள்ள நிலையில் சூழற்காப்பு மக்கட் சமுகத்திற்கு இன்றியமையாதது. இயற்கையைக் காத்தலும் இயற்கையொடு வாழ்தலும் பண்டைத் தமிழர் நெறி. ஆதலின் இச்சங்கம் உலகச் சூழற்காப்பு நிறுவனத்தில் ஓர் உறுப்பினராக இருக்கிறது. பெறுமதி உள்ள வெளியீடுகளை உலகச் சூழற்காப்பு அமைப்புகள் இச்சங்கத்திற்கு உதவுகின்றன. உலகச் சூழற் காப்பு மகாநாடுகளுக்கு அழைப்புகள் வருகின்றன. நிதி வளம் இன்மையால் இம்மகாநாடுகளிற் பங்குபற்றுவதில்லை. ஆண்டுதோறும் சூழல் தொடர்பான கட்டுரை கவிதைத் தேர்வு நடத்திப் பரிசில் வழங்குகிறது. நாட்டின் சூழற் காப்பு முயற்சிகளுக்குச் சங்கம் ஆதரது வழங்குகிறது. இதனால் இச்சங்கம் உலக நிலையில் உயர்ந்து விளங்குகிறது.

சங்கத்தின் ஐம்பது ஆண்டு நிறைவுக்காக் ஓராண்டு காலம் சொற்பொழிவுகள் நிகழ்ந்தன. நாவன்மை, மொழித்திறன், கவிதை, இசை, ஆய்வுக் கட்டுரை, நூலாக்கம் ஆகிய தேர்வுகள் அனைத்திலங்கைவகையாக நடைபெற்றன. நிறைவு விழாவில் பரிசில்கள் வழங்கப்பெறும். சிறப்பு நூல் வெளியிடப்பெறும். சிறப்பு விழாவும் நிகழும்.

இக்காலப் பகுதியில் பேரறிஞர் பலர் காப்பாளராகவும் கலாநிதி க. செ. நடராசா, பொ. சங்கரப்பிள்ளை, து. தருமராசா, நா. மாணிக்க இடைக்காடர், வ. மு. தியாகராசா ஆகியவர்கள் தலைவர்களாகவும் இருந்து சங்க வளர்ச்சிக்குப் பணி செய்துள்ளனர். பொ. சங்கரப்பிள்ளை அவர்கள் சங்கக் கணக்குகள் திருத்தமாக வைத்தற்கும், நிதி சேர்ப்பதற்கும் பரிசில் நிதியங்கள் ஏற்படுவதற்கும் வழி வகுத்தவர் ஆவர். வெளிநாடு சென்றாலும் சங்க வளர்ச்சியில் அதிக கருத்துக் கொண்டிருந்தார். இவரது வழிகாட்டலினால் இவரது பிள்ளைகள் சங்க வளர்ச்சிக்கும் பணிகளுக்கும் உதவுபவர்களாக இருக்கின்றனர். திரு. வ. மு. தியாகராசா அவர்கள் சங்கப் பணிகள் அனைத்திற்கும் பேருதவி புரிந்தார். தம்மை அதிகம் வெளிப்படுத்தாமல் உறுதியாகவும் நேர்மையாகவும் பெருமை விரும்பாமலும் அடக்கமாக இருந்து பல உதவிகள் புரிந்தார். சங்க முற்பக்கக் கட்டிடம் அமைப்பதில் இவர் பெரும் பங்களிப்புச் செய்துள்ளார். இப்போது தலைவராக இருப்பவர் திரு. செ. குணரத்தினம். இவர் அமைச்சுச் செயலாளராக இருந்தவர். சிறந்த தமிழறிஞரும் பெரும் கவிஞரும் ஆவர். பலதுறைப் பணிகளுக்கும் உதவி வருகிறார். பெறுமதியுள்ள பொருள்களும் நூல்களும் நிதியும் உதவியுள்ளார். ஆசிரியர் க. இ. க. கந்தசுவாமி அவர்கள் தொடர்ந்து பொதுச் செயலாளராக முழு நாளும் சங்கத்திற்குப் பணி புரிந்து வருகிறார்.

## நிறைவுரை

சங்கத்தின் பாதுகாப்புக்கும் வளர்ச்சிக்குமாக முழுமையான அறக் கட்டளை நிலையமாகவும் பண்பாட்டுக் கல்வி நிலையமாகவும் விளங்கவும் கல்விப் பரிசில் நிதிகளுக்கு வரிவிலக்கு அனுமதி பெறவும் சங்கம் முயற்சி செய்கிறது. இவற்றால் சங்கம் மேலும் வளர்ச்சி பெறும். என்றும் நிலைத்து நிற்கும்.

உலகத் தமிழுக்காக உலகத் தமிழ்க் கவிதைத் தேர்வும் மலையக மாணவர்களுக்காக நாவன்மை, கட்டுரை, கவிதைத் தேர்வுகளும் உலகச் சமய மன்றின் நூற்றாண்டுக்காகக் கவிதைத் தேர்வும் நடத்தச் சங்கம் ஒழுங்கு செய்துள்ளது. ஆர்வம் உள்ள மாணவர் பல்கலைக்கழகத் த்மிழ்ச் சிறப்புத்துறையில் கற்கவும் புலவர் கல்லூரியில் கற்கவும் சங்கம் உதவும். இதற்கு அறிஞர் சிலர் உதவ முன்வந்துள்ளனர். இதேபோலச் சங்கத்தின் பல பணிகளுக்கு உதவ அறிஞர் பலர் விருப்பம் தெரிவித்துள்ளனர். அனைத்துப் பணிகளுக்குமாகச் சங்க நிதியம் ஒன்று தொடங்கப்பெறும். பத்து ரூபா முதல் பத்தாயிரம் ரூபா வரை எவரும் உதவலாம்.

சங்கம் செய்தவை சில. செய்ய வேண்டுமென பல. பொதுத் தாபனங்களில் உள்ளவர்கள் நேர்மையும், தூய்மையும், உறுதியும் அத்தாபனத்தின் பணிகள் பற்றிய உணர்வும் உள்ளவர்களாதல் வேண்டும். இங்ஙனம் இருப்பின் அத்தாபனம் தானே வளரும். காலங் கடந்து நிலைபெறும். மொழியும் இறைவனைப் போன்றது. நாத நிலையில் நின்று உதவுவது, மொழியைக் காத்தல் உயர்ந்த பணி; இறையருட் பணி.

இலக்கியச் சஞ்சிகை வெளியிடுதல், அச்சகம் அமைத்தல், புலவர் கல்லூரி அமைத்தல் நூல்களை வெளியிடல், நூலகத்தை வளர்த்தல் முதலாய பல பணிகள் செய்வதற்கு உள.

வருக பொற்காலம். வளர்க தமிழ். உயர்க உலகு.

'எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்'

(மகாகவி பாரதி)

**க. இ. க. கந்தசுவாமி**
**—பொதுச் செயலாளர்**

---

தமிழ்ச் சங்கம் செய்யும் பெரும் பணிகளை நாம் எப்போதும் அறிவோம். தமிழ்த் தாயை வளர்த்து தமிழ் மொழியை எங்கும் பரப்புவதே எமது பணி. தமிழ்த் தாய் வளர்க. தமிழ்ச் சங்கம் வாழ்க.

எச். டபிள்யூ. தம்பையா, கியூ.சி.
கொழும்பு 3.
**28.12.1980** முன்னாள் உயர் நீதிமன்ற நீதியரசர்.

---

பொறுமைநெறி தமிழ்நெறி
பொறுமையே சர்வோதயமும் ஆகும்
தமிழ்ச் சங்கம் தமிழ் நெறியைப்
போற்றிப் பாதுகாப்பதாக.

தமிழ்நாடு **29—4—1964** குன்றக்குடி அடிகளார்

---

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## முதலாம் ஆண்டு

**1942 மார்ச்சு — 1942 ஒகத்து**

| | |
|---|---|
| தலைவர்: | முதலியார் சு. பொன்னம்பலம் |
| காரியதரிசி: | டாக்டர் சி. பொன்னம்பலம் |
| தனாதிகாரி: | |
| துணைத்தலைவர்கள் | திரு. இ. தம்பிராசா |
| | திரு. மு. வயிரவப்பிள்ளை |

## முதலாம் ஆண்டு

**1942 ஆகத்து — 1943 ஆகத்து**

| | |
|---|---|
| தலைவர்: | திரு. அ. சபாரத்தினம் |
| காரியதரிசி: | திரு. சே. க. சண்முகம்பிள்ளை |
| உப காரியதரிசி: | திரு. சோ. நடராசன் |
| தனாதிகாரி: | திரு. சி. வேலுப்பிள்ளை |
| உப தனாதிகாரி: | திரு.ச. கதிர்காமநாதன் |
| | திரு. வி. விசயரத்தினம் |

**உறுப்பினர்:**

| | |
|---|---|
| திரு. சு. பொன்னம்பலம் | டாக்டர் க. கணபதிப்பிள்ளை |
| திரு. எம். சீவரத்தினம் | திரு. த. அருளானந்தம் |
| திரு. பெ. கணபதிப்பிள்ளை | திரு. சோ. கணேசரத்தினம் |
| திரு. இ. புலேந்திரன் | திரு. அ. வி. மயில்வாகனம் |

| | |
|---|---|
| கணக்குப் பரிசோதகர்: | திரு. சு. கணபதிப்பிள்ளை |
| | திரு. வி. நல்லசேகரம்பிள்ளை |

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## 1944 – 1945 ஆம் ஆண்டுச் செயலாளரும் உறுப்பினரும்

போஷகர்: திரு. என். நடராசா, கியூ.சி.

தலைவர்: திரு. அ. சபாரத்தினம்

### உப தலைவர்கள்:

டாக்டர் த. நல்லைநாதன்
திரு. க. கனகரத்தினம்
திரு. ஏ. கார்டினர்
திரு. எஸ். இரத்தினநாதர்
திரு. க. மதியாபரணம்

| | |
|---|---|
| காரியதரிசி: | திரு. மு. கணபதிப்பிள்ளை |
| உப காரியதரிசி: | திரு. வ. ந. மாணிக்கவாசகர் |
| தனாதிகாரி: | திரு. அ. வ. இரத்தினராசா |
| உப தனாதிகாரி: | திரு. சி. வேல்முருகு |
| நூல் நிலையப் பொறுப்பாளர்: | திரு. இ. காத்தமுத்து |
| இல்ல அமைச்சர்: | திரு. ப. செ. நடராசா |
| அக்கத்துவக் காரியதரிசிகள்: | திரு. இ. சிவராசா |
| | திரு. ந. பாலசுப்பிரமணியம் |
| கணக்குப் பரிசோதகர்: | திரு. வி. நல்லசேகரம்பிள்ளை |

### நிருவாக சபை உறுப்பினர்:

1. திரு. குல. சபாநாதன்
2. திரு. மு. வயிரவப்பிள்ளை
3. திரு. ஆ. பொ. கந்தசாமி
4. திரு. இ. புலேந்திரன்
5. திரு. சோ. நடராஜன்
6. திரு. கே. ச. சண்முகம்பிள்ளை
7. திரு. பெ. கணபதிப்பிள்ளை
8. திரு. சி. சண்முகநாதன்
9. திரு. ஈ. எல். தம்பிமுத்து
10. திரு. என். எம். ஹனிபா
11. திரு. கா. பொ. இரத்தினம்

### சீவியகால உறுப்பினர்:

1. திரு. சீ. பாலசிங்கம்
2. திரு. தி. உருத்திரா
3. திரு. என். எம். முகமது ஹனிபா
4. திரு. ச. மதியாபரணம்

### கௌரவ உறுப்பினர்:

திருவாளர்கள்:

1. சுவாமி விபுலாநந்தர்
2. வித்துவான் சி. கணேச ஐயர்
3. சிவங். கருணாலய பாண்டியப் புலவர்
4. நவாலியூர் க. சோமசுந்தரப் புலவர்
5. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்
6. திக்கம் சி. செல்லையாபிள்ளை
7. பண்டிதர் மு. சதிரேசன் செட்டியார்
8. நாவலர் எஸ். சோமசுந்தர பாரதியார்
9. ஆர். கே. சண்முகம் செட்டியார்
10. சி. இராசகோபாலாச்சாரியார்

தமிழ்த்தாய் துணை

# கொழும்புத் தமிழ்ச்சங்கம்

## மூன்றாம் ஆண்டு அறிக்கை

## (1944 சித்திரை — 1945 பங்குனி)

தமிழ்த்தாய் வாழ்த்து

''பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையாளமும் துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்,
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே''

1. **முன்னுரை:—** கொழும்புத் தமிழ்க் கழகத்தின் மூன்றாம் ஆண்டு அறிக்கையும் வரவு செலவுக் கணக்கு விபரங்களும் இங்கு தரப்படுகின்றன.

இக்கழகத்தின் 1 ஆம், 2 ஆம் ஆண்டு அறிக்கைகள் அச்சிட்டு வெளியிடப்படாத காரணத்தால் இக்கழக ஆரம்பத்தைப் பற்றிய சில விபரங்களையும் இங்கு சேர்த்திருக்கின்றோம். கொழும்பில், தமிழ்மொழி வளர்ச்சிக்காக உழைப்பதற்கு ஒரு கழகம் ஏற்படுத்த வேண்டுமென்ற பெரிய அவாவானது பல்லாண்டுகளுக்கு முன்னதாகவே தமிழன்பர்கள் பலரிடையே இருந்து வந்தது. எனினும், பல்வேறு காரணங்களினால் ஒரு கழகத்தினை ஏற்படுத்திக் கொள்ள வசதி ஏற்படவில்லை. பின்னர், தமிழன்பர் சிலரது இடையறா முயற்சியினால் இக்கழகம் 1942 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 22 ஆம் திகதியன்று கொழும்பிலே நிறுவப்பெற்றது. இது, சாதி சமயம் பற்றிய பிணக்குகளைப் பொருட்படுத்தாது தமிழ்மொழி வளர்ச்சியொன்றையே நோக்கமாகவுடையது. இக்கழகம் தொடங்கி மூன்றாண்டுகளே சென்றதாயினும், இதன் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் மிகவும் முன்னேறியிருக்கிறதென்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிடுகின்றோம்.

2. **உறுப்பினர்கள்:—** இவ்வாண்டுத் தொடக்கத்தில் 194 சாதாரண உறுப்பினர்களும் 4 சீவியகால உறுப்பினர்களும் இருந்தார்கள். கழகத்தினரின் உழைப்பினால் இவ்வாண்டிலே 89 புதிய சாதாரண உறுப்பினர்சள் சேர்ந்துள்ளார்கள். ஆகவே, இப்பொழுது 285 அங்கத்தவர்கள் இருக்கின்றார்கள். அடுத்த ஆண்டு விழாவுக்குமுன் உறுப்பினர்களின் தொகை 500 ஆக வேண்டுமென்பது எங்கள் நோக்கம். இந்நோக்கம் கைகூடுதற்குத் தமிழன்பர்களின் ஆதரவை மிகவும் வேண்டுகிறோம்.

3. **இவ்வாண்டில் நடைபெற்ற சொற்பொழிவுகள்: —**

| திகதி | பொருள் | விரிவுரையாளர் |
| --- | --- | --- |
| 18.06.44 | தமிழின் பெருமை | வித்துவான் திரு. வ. மு. கனகசுந்தரம் |
| 01.07.44 | சீவக சிந்தாமணி | வித்துவான் திரு. ஆ. சி. நாகலிங்கபிள்ளை |
| 09.07.44 | தமிழனும் அவன் மனைவியும் | திரு. கி. இலக்குமண ஐயர் (பி.ஏ. ஒனர்ஸ்) |

| | | |
|---|---|---|
| 16.07.44 | கவிஞனே சிறந்த ஓவியன் | திரு. மு. கணபதிப்பிள்ளை |
| 23.07.44 | திருவள்ளுவர் | பண்டிதர் திரு. க. சிவசம்பு |
| 30.07.44 | தமிழும் வருங்காலமும் | திரு. சே. க. சண்முகம்பிள்ளை |
| 20.08.44 | தனிப்பாடல் | திரு. க. ச. அருணந்தி (எம்.எஸ்சி) |
| 27.08.44 | இராமாயணத்தின் வீரச்சுவை | முதலியார் செ. சின்னத்தம்பி |
| 17.09.44 | வாழ்க்கையில் மறுமலர்ச்சி | வித்துவான் ஏ. பெரியதம்பிப்பிள்ளை |
| 15.10.44 | மறைந்த தமிழ் நூல்கள் | வித்துவான் பண்டிதர் திரு. கா. பொ. |
| 04.02.45 | கல்வியும் தமிழகமும் | இரத்தினம் (பீ.ஓ.எல்.) |

5. **கலித்தொகை மாநாடு**:— இம் மாநாடு 03.12.44 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணி தொடங்கி வெள்ளவத்தை, சைவ மங்கையர் கழக மண்டபத்தில் திரு. க. ச. அருணந்தி (எம்.எஸ்சி) அவர்கள் தலைமையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. பின்வரும் அறிஞர்கள் சொற்பொழிவாற்றினார்கள்: . .

| பொருள் | சொற்பொழிவாளர் |
|---|---|
| பாலைக்கலி | திரு. வி. செல்வநாயகம் (எம்.ஏ.) |
| முல்லைக்கலி | திரு. கி. இலக்குமண ஐயர், பீ.ஏ. (ஒனர்ஸ்) |
| மருதக்கலி | திரு. திக்கம் சி. செல்லையாபிள்ளை |
| குறிஞ்சிக்கலி | வித்துவான் பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் (பீ.ஓ.ஐ.) |
| நெய்தற்கலி | திரு. மு. கணபதிப்பிள்ளை |

5. **படக்காட்சி**:— கழக நிதிக்காக 1944 ஆம் ஆண்டு புரட்டாசி மாதம் 3 ஆம் திகதி வெள்ளவத்தை ''பிளாஸா'' பேசும் படமாளிகையில் (பரகதி) ''ஹரிச்சந்திரா'' என்னும் படம் காண்பிக்கப்பட்டது. மேற்படி படத்தைக் கழக நிதிக்காக உதவிய திரு. ஏ. கார்டினர் அவர்களுக்கும், திரு. எஸ். இரத்தினநாதர் அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

6. **தமிழ்ப் பாட வகுப்பு**:— யாழ்ப்பாணம், ஆரிய திராவிட பாஷாபி விருத்திச் சங்கத்தாரால் நடத்தப்படும் பிரவேச பண்டித பரீட்சைக்குக் கழக அங்கத்தவர்களில் விரும்புவோரைக் கற்பிப்பதற்காகக் கழகத்தால் ஒரு வகுப்பு 04.02.45 தொடக்கம் நடத்தப் பட்டு வருகிறது. இவ்வகுப்புக்குப் பண்டிதர் வித்துவான் திரு. கா. பொ. இரத்தினம் (பீ.ஓ.எல்.) அவர்கள் ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றார். இப்பொழுது வகுப்பில் மாணவர் இருபத்து மூவர் கல்வி பயில்கின்றனர்.

7. **வாசிகசாலையும் நூல்நிலையமும்**:— ஏறக்குறைய இரு வருடங்களுக்கு முன் ஒரு சிறிய நூல் நிலையத்தையும் வாசிகசாலையையும் திரு. க. கனகரத்தினம் அவர்கள் தமிழ்க் கழக இல்லத்தே திறந்து வைத்தார்கள். 'ஆனந்த விகடன்', 'சக்தி', 'குமரி மலர்', 'சுதேச மித்திரன்', 'கலைமகள்', 'வசந்தம்', 'கல்கி' ஆகிய சிறந்த தமிழ் வெளியீடுகளும் 'இந்து சாதனம்', (' '), 'இந்துஸ்தான்', 'ஹனுமான்', ஆகிய வார வெளியீடுகளும் இப்பொழுது வாசிகசாலைக்கு வரவழைக்கப்படுகின்றன.

நூல் நிலையத்தில் இவ்வாண்டுத் தொடக்கத்தில் 47 நூல்கள் இருந்தன. நூல் நிலையத்தைப் பெருப்பிப்பதற்காக ரூபா 600 கழகத்தாரால் ஒதுக்கி வைக்கப்பட்டது. தமிழ் நூல்கள் இந்நாட்களிற் கிடைப்பது அரிதாகியமையினாலும் இந்தியாவிலிருந்து பெறுவது கஷ்டமானபடியினாலும் 15 நூல்களே புதிதாகச் சேர்க்கப்பட்டன.

**8. நூல் அச்சேற்றல்:—** திராவிட மக்களின் பூர்வீக வரலாற்றைப் பற்றிய நூலொன்று ''DRAVIDA'' எனப் பெயருடையது கழக உறுப்பினருள் ஒருவராகிய திரு. ஈ. எல். தம்பிமுத்து அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பெற்று அச்சிடப்படுகின்றது. விரைவில் வெளி வந்துவிடும்.

**9. வேண்டுகோள்:—** ஒரு சாதியினரின் பெருமைக்கும் சிறப்புக்கும் காரணமாயுள்ளது அவர்களுடைய மொழியே என்பது அறிஞர்கள் கண்ட பேருண்மையாகும். தமிழர்கள் முன்னேற்றம் தமிழ் மொழியின் வளர்ச்சியிலேயே தங்கியிருக்கிறது. எமது தாய்மொழியைப் போற்றி வளர்க்க வேண்டியது ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் பொறுத்த கடனாகும். ஆகவே, ''தமிழ் மொழியை வளர்க்க இயன்றதைச் செய்யுங்கள்'' என்று தமிழ்ச் சகோதரர்களுக்கு நாங்கள் கூறவேண்டியதில்லை. எனினும், தமிழை வளர்க்கும் நோக்கத்துடன் தாபிக்கப்பட்ட தமிழ்க் கழகம் சிறந்தோங்கித் தமிழுக்கும் தமிழ் மக்களுக்கும் பணி புரிய வேண்டும். வேண்டிய உதவிகளைச் செய்யுமாறு சிறப்பாகக் கொழும்பிலிருக்கும் தமிழ் மக்களையும், பொதுவாக இலங்கையின் மற்றைய பகுதிகளிலிருக்கும் தமிழன்பர்களையும் தாழ்மையுடன் வேண்டுகின்றோம். எமது கழகத்தின் நோக்கங்களை நிறைவேற்றப் பொருள் மிகப் படைத்த வர்கள் பொருளைக் கொடுமின்; அறிவு படைத்தவர்கள் அருஞ் சொற்பொழிவுகளை நிகழ்த்துமின்; கழக உறுப்பினராக இன்னும் சேராதவர்கள் உடனே சேர்ந்துழைமின்; கழகத்தில் நடக்கும் சொற்பொழிவுகள், தமிழ் வகுப்புகள் எல்லாம் சிறப்புடன் நடை பெறுவது தமிழ் மக்கள் தரும் ஆதரவினாலேயே என்பதை யாம் கூற வேண்டுவதில்லை.

*தமிழ் வாழ்க!*

நிருவாக சபையின் உத்தரவுப்படி,
**மு. கணபதிப்பிள்ளை**
கௌரவ காரியதரிசி
கொழும்புத் தமிழ்க் கழகம்.

292, காலி வீதி,
வெள்ளவத்தை,

---

கொழும்புத் தமிழ்ச் சங்கம் தமிழ்ப் பணியோடு அமைந்துவிடாமல், தேவை நோக்கிச் சமூகப் பணிகளையும் செய்து வருகிறது. உலக நாடுகளில் பண்பாட்டு அமைப்புகளோடு தொடர்பு கொண்டு உலகப் பண்பாட்டு வளர்ச்சிக்கும் உதவுகின்றது. இவ்வகையில் இச் சங்கம் உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கோயிலாக விளங்குகின்றது.

ஆசிரியர்,
''தமிழ் மாருதம்'',
செப்டெம்பர், 1992.

மதுரை.

# கொழும்புத் தமிழ்ச் சங்க நான்காவதாண்டு விழாவில்

## கழகத் தலைவர்

## திரு. க. ச. அருணந்தி அவர்கள் நிகழ்த்திய

# தலைமையுரை

தனியுயர்த் தமிழ்மொழித் தாயவள் ஈன்ற
பனிமொழி யவர்க்கும் மைந்தராம் அவர்க்கும்
வந்தனம் கொழும்பு வண்டமிழ்க் கழகம்
தந்தனம் உவந்து, தந்தனன் யானும்,
இதுமர பாதலின் ஏற்றனன் வரவு;
பொதுநலத் தொண்டு புரிவதற் கெண்ணி
ஒருமனத் தவராய் ஒருங்கெழுந் தனமால்,
திருவுடைத் தாயின் ஒருவயிற் றுதித்தவென்
உடன்பிறந் தோரே! உற்றுயாம் பார்க்கில்
இடம்படு வேற்றுமை இனியெமக் கெங்கே!
ஏற்பவர் என்றும் எமக்குள் எவரும்
ஏற்கப் படுமவர் என்றுமிங் கிலையே.
ஆண்டுநான் கின்றோ டாயவிக் கழகம்
வேண்டுவ எவையென விளம்பிடும் ஆதியில்
விளம்பரப் படுத்திய உளங்கவர் நோக்குகள்
வளம்பெரும் அவைதாம் வந்துதா மாக முன்
எட்டவே எட்டா எமக்கொரு காலும்.
பட்டவை போதும் ''பாவித் தமிழர்'';
பண்டுள புகழெனும் பஞ்சணை மீதில்
பண்டமர் இலங்கைப் பதியவன் தம்பியை
ஒத்துயாம் ஓயா துறங்குதல் நன்றோ!
எத்தனை சிறுவர்—எழிலுடை மனத்தார்,
புத்தியும் சித்தமும் புலன்களின் நுட்பமும்
மெத்திய பண்பினர்—மேவுகின் றாரவர்
இளமையில் வறுமையால் இடர்வாய்ப் பட்டு
உளமெலி வுற்றுநின் றுயர்கலை என்பதைக்
கண்ணிலும் காணார், மண்ணினுட் புதைந் தாங்கு
ஒண்கதிர் மழுங்கிய ஒப்பிலா மணிபோல்.
நாய்போற் குணமுடை நலமிலாப் பலர்பண
வாலொன் றிருப்பதால் வளஞ்சார் கல்விக்
கழகம் புக்குக் கற்றும் கற்றிலாத்
தளுக்குடை நடையோ டிழுக்குற என்றும்
இன்னலே எவர்க்கும் இழைத்துநின் றுறுமப்
பொன்போன் றவர்கள் புன்கணுற் றிருத் தல்
புகழோ எமக்கு இகழோ சொல்லீர்!
தகவுடை யோர்தம் ''தாலந் துகள்'' வீண்
போகவிட் டுறங்குமெம் சாகியத் தார்முன்
ஏறுதல் எவ்வழி? இலவசக் கல்வியும்,
தாய்மொழி உயர்ச்சியும், சார்புடை ஆட்சி யும்
வாய்ந்தவிக் காலம் வருந்துதல் இங்ஙனம்
பேதமை எனச்சிலர் பேசுதல் உண்டெனில்
ஏதமில் மொழியில் எடுத்தவர்க் குரைமின்;
உணவுடை புத்தகம் உறைவிடம் ஆதிய
பணமிலார்க் கின்றெனில் பயன்றரக் கூடிய
இலவசக் கல்விதான் எத்துணைப் பயன்றரும் என்றும்,
பலகலை யறிவைப் பயக்கும் நூல்கள்
தமிழிற் குறைவெனில் தாய்மொழிக் குயர் ச்சி
தமிழிற் பிரதம தரத்திற் கல்வியை
ஊட்டுத லாலே உறுவதெவ் வளவுதான் என்றும்,
ஆட்சியெம் சார்புள தாயினும் அதனால்
எய்துவ தளவிலெம் எத்தனத் ததென்றுமே
இனியாம்
செய்வன இவையெனச் செப்புவன் கேண்
ஆண்டுபன் னிரண்டில் ஐந்தெனும் வகுப்பு
தாண்டுமா ணாக்கருள் தக்கநல் விவேகிகள்
மிடியினாற் படிப்பினை மேலுஞ் சிறக்கப்
படிப்பதற் கியலாப் பரிதப நிலையில்
எத்தனை பேருளர் எனினும் தவறாது
அத்தனை பேரும் அவசியம் கற்றிடல்;
இதற்கொரு நிதியெமக் கின்னே வேண்டும்,
உதவுதல் எங்கடன், ஒழுங்குகள் வகுப் போம்,
உள்ளதைக் கொடுப்போம், ஒய்விலா துழைப்போம்,

எள்ளிடை தானும் இனிப்பின் றில்லோம்,
மற்றது,
''அமிழ்தினும் இனிய தமிழ்மொழி''
என்றும்,
''தமிழொப் புயர்விலாத் தனிமொழி''
என்றும்,
பலவித மாகப் பகர்ந்தவள் பெருமையை
அலகுளை வெடுக்கும் அளவுமோ யாது
போற்றுதல் போதும் போதும் இனிமேல்
ஆற்றுவம் தொண்டு, அரியநன் னூல்களை
ஆக்கமுன் வருபவர்க் காதர வளிப்போம்,
ஆக்கிய பின்னவர்க் களிப்போம் பரிசில்,
எத்துறை புக்கவர் ஈடுபட் டாலும்
முத்தமிழ் அவ்வழி முந்துறு மேயெனில்
முற்றுற அவர்பணி உற்றன செய்வோம்,
நற்கலை விருத்திமேல் நாட்டினில் அதிகம்
பிறமொழிப் பயிற்சி பெறாதவர்க் கக்கலைத்
திறமையும் ஆய்தல் முறைகளும் வறிதாம்,
ஆதலின் ஆங்கிலம் ஆதிய மொழியில்
மேதையர் ஆக்கிய ஏதமில் நூல்களை
எந்தமிழ் மொழியினில் இழுக்கிலா முறை
யினில்
தந்திடப் பெயர்த்துத் தக்கவர் தம்மையும்
ஊக்குவோம், பணத்தை உதவுவோம்,
அச்சிட
ஆக்குவோம் துணிந்தோர் அச்சுக் கூடம்.
மற்றது,
அரசிளம் குமரர் அடம்பன் கொடியும்
திரண்டால் மிடுக்கெனத் தேரா திருக்கச்
சோமசன் மாவேனும் தோமில் அமைச்சன்
கோமகார் உறுதியைத் தாமறிந் தொழுகச்
செய்தொரு தந்திரம் உய்வழி காட்டினன்;
நையுமெம் சாதியும் நானிலத் தோங்கிமற்
றோங்கிய சாதிகள் உடனோர் ஆசனத்து
ஆங்கிருப் பதற்கும் அஃதே ஆம்வழி;
எழுமின்! எழுமின்!! வழுவா தெல்லாக்
கொழும்புவாழ் தமிழரும் குழுமியிக் கழ
கத்து
அங்கத் தவராய் ஆகுதல் வேண்டும்
திங்களொன் றேகுமுன் திண்ணமாய் என்ற
தீர்ப்புடன் எழுமின்! ஊர்ப்பறை சாற்று
மின்!
ஆர்த்தெழுந் தாற்றுமின் அரியவித்
தொண்டை.
இன்னும்,
திறமைமிக் கவர்வரை தேய்ந்திடும் எவர்க்
கும்
உடலுளம் இரண்டும் ஊக்கமாய் அவற்றை
இடையிடை ஆயினும் ஏற்றநல் வழியில்
பண்படுத் தாவிடில்; படிப்படி அவரவர்
பண்பினுக் கேற்ற பான்மைய தாகக்
கல்வியை யூட்டும் கழகமொன் றமைத்து
நல்வழி நின்றவர் அவ்வழி தவிர்க்க
நல்லார் இணக்கமும் நவைதீர் சூழலும்
எல்லா வளனும் இசைந்தாங் கொளிரச்
செய்தலெம் கடனே; சீர்பெற ஈண்டிதை
நிறுவுதற் கொருபெரு நிலையம் தேடி
அறுதியாய் விலைக்கோ அன்றிவா டகை
க்கோ
எடுத்ததில் பலவெளி யீடுகள் சேர்ந்தவை
யுடன்புது நூல்கள் உயர்தொல் ஏட்டுப்
பிரதிகள் ஆதிய இரந்தெடுத் தாகிலும்
நிரப்பிவைப் போமுயர் தரத்தது வாக
வோர்
வாசக சாலையை; தேசநற் றொண்டர்,
மாசறு கலைநூல் வல்லுநர், புலமைசால்
கவிஞரென் றின்னோர் கலந்துரை ஆடவும்
தவநிறை வுடையோர் சமுகந் தந்தருட்
பார்வையால் எம்முளப் பண்பினைப் பெருக்
கவும்
ஆர்வமாய் வசதிகள் அவர்க்களித் திடு
வோம்,
வளம்பல பெருக்குவோம், மறம்பல போக்கு
வோம்
உளச்சார் பெவர்க்கும் உயரிய நோக்கின்
வழியினிற் செல்ல வாழ்வினை வகுப்போம்,
இதனால்,
கழிபெருஞ் சிறப்பும் கவின்பெறு நிலையும்
எய்தும் எமக்கினி என்றிறு மாப்புடன்
உய்வழி செல்வோம் உடன்பிறந் தோரே!
வாழிய தமிழ்மொழி, வாழிய தமிழர்,
வாழிய இலங்கை, வாழிய உலகே.

# COLOMBO TAMIL KALAGAM

**The Secretary to the Select Committee**
**on Official Languages**

Pursuant to the Public request made by you for suggestion in connection with the proposal to use Tamil and Singhalese as languages of the administration, we venture to submit the following memorandum for your consideration:

In the first place it should be appreciated that the Public service may be conservative in their approach to the new proposal and may not take kindly to the consequent departure from the present routine to which they have long been accustomed. Resistance may be offered from various sources to the introduction of this necessary step of conducting the affairs of the Government in the language of the people. This consideration makes it imperative that the Government should adopt firm methods in ensuring the implementation of these proposals To this end, in our opinion, A central Translation Bureau with the present translation staff incorporated in it, should be organised forthwith, with the object of helping various Departments to effect a switch over and of ensuring that it is in fact done with the least possible delay.

The present machinery for translation work is not only inadequate but also not well co-ordinated. The Central Translation Bureau should be made responsible for the following functions:

(*a*) Providing each Department with an expert translater (temporarily, if necessary) in each of the languages, who will at once set up the machinery of routine correspondence etc. and refer any difficulties to the Central Translation Bureau for advice.

(*b*) Formulate a course of oral instruction to Government Officers to be held during office hours. This course of instruction must be of brief duration and should cover the field of ordinary routine correspondence etc.

(*c*) Prepare another scheme of postal correspondence course for all Government Servants including Heads of Departments.

(*d*) To issue a letter writing manual containing specimen letters of every type of correspondence which is dealt with ordinarily in Departments, and which will also contain a glossary of terms necessary for such purposes.

(*e*) Exploring the possibility of adopting a suitable shorthand system, taking into consideration the work that has already been done up to date; and of organising classes for training Stenographers in batches in the system finally agreed upon.

(*f*) Undertaking translation of important documents, such as, manuals of standing orders. Public Service Regulations, important notifications of Departments etc; and giving any further advice which Departments might require in this connection.

(*g*) Collecting all available glossary of technical terms (mainly administrative and judicial) that are in current use and coining new words that are necessary for a work-a-day basic language. For this purpose a committee of experts drawn from people of various walks of life should be formed.

(*h*) Organise a course of Radio lessons.

The function of this Central Translation Bureau will, of course, be confined to enabling the personal already in Service to be acclematised to the new system. We shall also have to consider the question of preparing students in schools and professional institutions for this system when they come into Government Service. This, of course will not arise if the medium of instruction at every stage from Kindergarden to the University becomes Tamil and Singhalese. Since it may take some time to effect this change completely, in the mean time, we suggest that a part of the syllabus in Tamil and Singhalese should be devoted to basic language. This will no doubt necessitate the formulation of a course of studies in this subject. This task should be entrusted to a competent committee of Board.

With regard to Law Courts it may be urged that clients may not have the best legal assistance if the introduction of the system is enforced immediately. We admit that there is some substance in this contention, but we are of the opinion that administration of justice will not suffer if the adoption of the system is enforced immediately in the lower courts. Village Tribunals, Municipal Courts and Magistrates' Courts should therefore immediately adopt this system. If the Magistrates now in service are incapable of using the national languages they should be given a stupulated period to acquire the knowledge of the languages. In the case of the higher courts, a reasonable time limit should be given to enable all lawyers and judges to prepare themselves for this scheme during which time every facility should be provided for this purpose by the Central, Translation Bureau.

After the stipulated period the system should be made compulsory in all the courts. Continued delay and half-hearted attempt tend to relapse into the old system. History clearly shows that a radical measure of this type cannot be introduced piecemeal and the Government should discountenance any argument about the impracticability of the Scheme. Inadequacy of suitable terms can never be an argument and then necessity is keenly felt we shall not lack in our ingenuity to coin new terms and ways of expression. It can be said of the Tamil Language that within the last two decades that the necessity for expressing in Tamil has been so keenly felt by politicions and writers that we today have evolved a work-a-day simple tamil that has come to stay. Moreover we find Councillors and Ministers of State blooming literary figures.

It is a well known fact that lawyers with extremely scanty knowledge of their mother tongue acquire a splendid knowledge of their language within a short time they decide to contest an election.

Well begun is half done.

We shall be glad to send pur representatives if and when required to discuss any points arising from this memorandum.

On behalf of the Committee of Management
of the COLOMBO TAMIL KALAGAM.

(*Sgd*). **A Sabaratnam**
President

(*Sgd*) S. **Nadarajah**
Hony. Secretary.

292, Galle Road,
Wellawatte,
October 31, 1945.

---

## தமிழ்ச் சங்க வாழ்த்து

செழுமதுரைச் சங்கத்தில் தமிழா ராய்ந்த
சீர்க்கவிஞர் தமிழீழப் பூதந் தேவர்
தொழுதகையர் அன்னவரின் அடியை ஒற்றித்
துய்தமிழ்ச் செய்ய பொருள் விரிக்கும் நோக்கில்
கொழும்பு நகர் அறிஞர்தமிழ்ச் சங்கத் தன்னை
குறித்தைம்ப தாண்டின்முன் நிறுவி னாரால்
பழுதிலது விரிவுற்றுப் பசுமை பூத்துப்
பரிணமித்து மேலோங்கப் பணிசெய் வோமோ

பிள்ளைக்கவி **வ. சிவராசசிங்கம்**
உதவி ஆணையாளர்,
அரசகரும மொழித் திணைக்களம்.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## இச்சங்கத் தமிழ் தேர்வுகளுக்கான நிரந்தர வைப்புப் பரிசில் நிதியங்களும்

## இவைகள் வழங்குவதற்கான பரிசிற் துறைகளும்

1. முல்லைத்தீவு ஆ. கனகசபாபதி முதலியார் நினைவுப் பரிசில்—
—நாவன்மை இடைநிலை முதற் பரிசில்
2. சங்கப் புலவர் க. மதியாபரணம் நினைவுப் பரிசில்—
—நாவன்மை உயர்நிலை முதற் பரிசில்
3. சங்க முதற் தலைவர் அ. சபாரத்தினம் நினைவுப் பரிசில்—
—உரைநடை இலக்கியப் நூற் பரிசில்
4. புலவர் சிவங் கருணாலய பாண்டியனார் நினைவுப் பரிசில்—
—செய்யுள் இலக்கிய நூற் பரிசில்
5. சங்கப் புலவர் பொ. சங்கரப்பிள்ளை நினைவுப் பரிசில்—
—வரலாற்று நாவல் இலக்கிய நூற் பரிசில்
6. தமிழறிஞர் இ. இரத்தினம் நினைவுப் பரிசில்—
—நாடக இலக்கிய நூற் பரிசில்
7. பேராசிரியர் க. கைலாசபதி நினைவுப் பரிசில்—
—பாரதி இலக்கிய ஆய்வுக் கட்டுரைப் பரிசில்
8. சைவப் பெரியார் சு. சிவசுப்பிரமணியம் நினைவுப் பரிசில்—
—திருமறை இலக்கிய ஆய்வுக் கட்டுரை
9. சட்ட வல்லுநர் சி. அம்பலவாணர் நினைவுப் பரிசில்—
—சட்ட இயல் ஆய்வுக் கட்டுரைப் பரிசில்
10. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சி. கதிரைவேற்பிள்ளை நினைவுப் பரிசில்
—கவிதை உயர்நிலைப் பரிசில்
11. கொழும்பு மஸ்கன்ஸ் நிறுவன நிறுவுநர் பெரியார் எஸ். சுப்பிரமணியம் நினைவுப் பரிசில். —கல்விப் புலமைப் பரிசில்
12. மறவன்புலவு காந்தளகம் மு. கணபதிப்பிள்ளை அதிபர் பரிசில்
—கவிதை முதனிலைப் பரிசில்
13. அ.ஐ. நாடு திருமதி மனோன்மணி சங்கரப்பிள்ளை பரிசில்
—தமிழ்மொழித் திறன் உயர்நிலை எழுத்துத் தேர்வுப் பரிசில்
14. அ.ஐ. நாடு டாக்டர் அசோகன் சங்கரப்பிள்ளை பரிசில்
—தமிழ்மொழித் திறன் இடைநிலை எழுத்துத் தேர்வுப் பரிசில்
15. சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி பரிசில்—இலக்கண ஆய்வுக் கட்டுரை

## சங்கத்தினால் அறிமுக விழாக்கள் நடத்தப்பெற்றுப் பாராட்டுப்பெற்ற நூல்கள்

| | | |
|---|---|---|
| திராவிடர் வரலாறு | — | (ஈ. எஸ். தம்பிமுத்து) |
| புளூராச் | — | (சைமன் காசிச் செட்டி) |
| மட்டக்களப்புத் தமிழகம் | — | (பண்டிதர் வீ. சி. கந்தையா) |
| பதிற்றுப்பத்து ஆராய்ச்சி | — | (பண்டிதர் க. அருளம்பலவனார்) |
| பகவத்கீதை வெண்பா | — | (புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை) |
| இளைஞர் விருந்து | — | (முது தமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி) |
| சட்டமும் தமிழும் | — | (கு. பூரணானந்தா) |
| மகப் பேற்று மருத்துவம் | — | (பேராசிரியர் அ. சின்னத்தம்பி) |
| ஒப்பியல் சொல் அகராதி | — | (வண. பிதா தாவீது அடிகள்) |
| சிறு கதை மஞ்சரி | — | (காவலூரர் எஸ். செகநாதன்), 1980 |
| கம்பராமாயணக் காட்சிகள் | — | (இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை), 1980 |
| நெடும்பா 3 | — | (சொக்கன்) |
| பாலைக்கலி | — | (புலவர்மணி ச. பெரியதம்பிப்பிள்ளை) |

## சங்க ஆதரவில் நடைபெற்ற நாடகங்கள்

| | | |
|---|---|---|
| 'அமர கவி' | | ஈழக்கலை மன்றம் (1961) |
| 'நாடகமே உலகம்' | — | ஈ. இராசரத்தினம் (1957) |
| 'சத்தியவான் சாவித்திரி' | — | க. நா. நவரத்தினம் (1963) |
| 'ஆத்ம திருப்தி' | — | வரணியூரான் |
| 'இப்படியும் நடக்குமா' | — | இராம்சுந்தர் |
| 'புதிய கிறேசி கோமாளிகள்' | — | எஸ். இராமதாஸ் |

## சங்க நிதிக்காக நடைபெற்ற திரைப்படக் காட்சிகள்

| | | |
|---|---|---|
| 'மங்கம்மா சபதம்' | — | (எல்பின்ஸ்டன்—மருதானை) 1947 |
| 'அரிச்சந்திரா' | — | (பிளாசா—வெள்ளவத்தை) 1949 |
| 'கப்பல் ஓட்டிய தமிழன்' | — | (சபையர்—வெள்ளவத்தை) 1975 |

பொருட்காட்சியும், களியாட்ட விழாவும் 'கொழும்பு அழைக்கிறது'—1947

இந்திய திரைப்படக் காட்சி (இந்திய தூதுவரகம் உதவியது)—1963

அமெரிக்கத் திரைப்படக் காட்சி (அ.ஐ.நா. தூதரகம் உதவியது)—1959

## சங்கத்தினாற் பாராட்டப்பெற்ற அறிஞர்கள்

| | |
|---|---|
| 03.11.45 | திராவிட வரலாற்று நூல் ஆசிரியர் திரு. ஈ. எல். தம்பிமுத்து, பண்டிதர் க. அருளம்பலனார், முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி, புலவர்மணி ஏ. பெரியதம்பியார். |
| 27.05.62 | திருக்குறளைச் சிங்களத்தில் மொழிபெயர்த்த செல்வி மிசிகாமி. |
| 06.08.66 | சிலம்புச் செல்வர் ம.பொ.சி. 60 ஆண்டு நிறைவு. |
| 02.06.66 | திருக்குறளைச் சிங்களத்தில் மொழிபெயர்த்த சாள்ல்ஸ் டீ சில்வா. |
| 10.02.68 | சென்னையில் நிகழ்ந்த உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் கவிதைப் பரிசுகள் பெற்ற ஈழத்துக் கவிஞர்கள் இ. அம்பிகைபாகன், திரு. நாகராசன், ஆய்வுக் கட்டுரைகள் வாசித்த திரு. ஜேம்ஸ் இரத்தினம், ஜே. ஆர். சின்னத்தம்பி, திரு. நா. சுப்பிரமணியம். |

29.08.68 உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டு அமைப்பாளர் திரு. வ. சுப்பையாபிள்ளை வி. எஸ். தியாகராசச் செட்டியார்.

12.11.68 தமிழகப் புலவர் மதுரை மரைக்காயர்.

06.09.69 தமிழகச் சட்டச்சபைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன்.

10.10.69 இலங்கைச் சாகித்திய மண்டல விருதுபெற்ற வித்துவான் ந. சுப்பையாபிள்ளை இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை.

07.07.70 தமிழகக் கவிஞர் அல்ஹாஜ் ஜீ. எம். எல். ஸிராஜ் பாகவி.

18.08.70 பாரிசில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் ஆய்வுக் கட்டுரை வழங்கிய இலங்கை அறிஞர்கள் கலாநிதி எச். டபிள்யு. தம்பையா, கலாநிதி க. கைலாசபதி, ஜனாப் எஸ். எம். கமால்தீன், பேராசிரியர் சு. வித்தியானந்தன்.

31.06.71 புலவர் சிவங். கருணாலய பாண்டியனார்.

13.01.74 யாழ்ப்பாணத்தில் உகலத் தமிழாராய்ச்சி மகாநாட்டிற்கு வருகை தந்த தமிழக அறிஞர்கள் கலாநிதிசாலை இளந்திரையன், பேராசிரியர் நயினார் முகம்மது, மோ ஞர் வாசுகி அம்மையார்.

04.07.79 கொழும்பில் நடைபெற்ற இஸ்லாமியத் தமிழ் மகாநாட்டிற் பங்குபற்ற வந்த தமிழக இசுலாமிய அறிஞர்கள் எச். எம். கே. செய்யது அஹமது மௌலவி அப்துல் வஹாப்.

05.07.80 சங்கப் பணிகளுக்கு உதவிய திரு. இ. விக்கினராச தம்பதிகள்.

28.12.80 மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டிற் பங்கு பற்ற வந்த மலேசியத் தமிழ்க் குழுவினர்.

22.02.81 தமிழக அறிஞர்கள் பண்மொழிப் புலவர் மு. கு. செகநாதராசா கவிஞர் கொ. மா. கோதாண்டம்.

21.12.81 தமிழ்நாடு நிதி அமைச்சர் மாண்புமிகு இரா நெடுஞ்செழியன்.

06.02.82 கொங்கொங் தமிழ்ப் பண்பாட்டுக் கழகத் துணைத் தலைவர் அல்ஹாஜ் பீ. எஸ். இலியாஸ்.

30.05.82 முதுபெரும் மலையகத் தமிழ் எழுத்தாளர் சி. வி. வேலுப்பிள்ளை.

03.06.82 தஞ்சைப் பல்கலைக்கழக விரி தமிழ்த்துறை இயக்குநர் கலாநிதி நம்பியாரூரன்.

27.07.86 இலண்டன் றோயல் வானவியற் கழகத்தில் உலக வானவியல் விருதுபெற்ற இலங்கை வானவியற் பேரறிஞர் அலன் ஆபிரகாம் அம்பலவாணர்.

27.07.86 சிலைச் சிற்பக் கலைஞர் புல்லுமலை பெ. நல்லரத்தினம்.

23.03.81 மதுரை உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டில் ஆய்வுக் கட்டுரை வாசித்த இலங்கை அறிஞர்கள் திரு. த. சண்முகரத்தினம், நா. சுப்பிரமணிய ஐயர், கலாநிதி கே. டி. சேவியர், ச. ஸ்ரீகாந்தா, வி. டி. நாணயக்கார, க. கணேசலிங்கம்.

92 புலவர் நா, சிவபாதசுந்தரனார், தொல்புரம்

## சங்கப் பதிப்பு நூல்கள்

03.11.48 திராவிட வரலாறு—ஈ. எல். தம்பிமுத்து.

06.04.75 பாவலர் சரித்திர தீபகம், பகுதி 1—ஆர்னல்ட் சதாசிவம்பிள்ளை, கலாநிதி பொ. பூலோகசிங்கம் அவர்களின் ஆய்வுக் குறிப்புகள்.

15.07.79 சிறுவர் கதைகள்—தமிழவேள்.

02.05.80 சேது பந்தனம்—திரு. த. கனகரத்தினம்.
28.12.80 வையா பாடல்—கலாநிதி க. செ. நடராசா,
பாவலர் சரித்திர தீபகம்' பகுதி 11.
01.04.80 அபிவிருத்திப் புவியியல்—திரு. சபா செயராசா.
14.03.82 பாலர் மலர்—தமிழவேள்.
12.03.83 ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி—கலாநிதி க. செ. நடராசா.
28.08.85 பாரதி பிள்ளைத் தமிழ்—புலவர் க. த. ஞானப்பிரகாசம்.
15.12.86 என் நோக்கில் பாராளுமன்றம்—திரு. செ. நடராசா.
87 பேராசிரியர் அ. சின்னத்தம்பி—பேராசிரியர் சு. வித்தியானந்தன்.
87 சாதகக் கதைகள்—திரு. த. கனகரத்தினம்.
89 புலவர் பாண்டியனார் பணிகள்—பேராசிரியர் சு. வித்தியானந்தன்.
89 பேராசிரியர் சு. வித்தியானந்தன் காட்டும் ஈழத்துத் தமிழர் சால்புக் கோலங்கள் —பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை.
90 ஈழத்துத் திறனாய்வு முன்னோடி பேராசிரியர் வி. செல்வநாயகம்—பேராசிரியர் அ. சண்முகதாஸ்.
90 யப்பானிய—தமிழ் மொழி ஒப்பீடு—பேராசிரியர் அ. சண்முகதாஸ்.
91 நாம் தமிழர் —தமிழறிஞர் பொ. சங்கரப்பிள்ளை.
92 விபுலாநந்தம்—விபுலாநந்தர் நூற்றாண்டு வெளியீடு.
92 மன்யோசுக் காதற் காட்சிகள்—பேராசிரியை மனோண்மணி சண்முகதாஸ்
92 கொஞ்சும் தமிழ்—கவிஞர் அம்பி.

## —— நன்கொடைகள் ——

### (அ) பொருள் நன்கொடைகள்

நீதியரசர் ந. நடராசா—நூலக அலுமாரி
சிற்பக்கலைஞர் பெ. நல்லரத்தினம்—பாரதி சிலை
ஆறுமுக நாவலர் சபை—நாவலர் சிலை
ஆசிரியர் பொ. கனகரத்தினம், கொழும்பு புனித பீற்றர் கல்லூரி—மணிக்கூடு
கொழும்பு மஸ்கன்ஸ் நிறுவனம்—50 பைக்கற் சீமெந்து
கொழும்பு ஞானம் அன் சன்ஸ்—25 உருக்குக் கதிரைகள்
க. குமாரசிங்கம், கொழும்பு 4—மேசை
றொபேட் ஏஜன்சி நிறுவனம், கொழும்பு 11—ஒலிபரப்பிக் கருவி
சி. இ. செந்தில்நாதன் தம்பதிகள்—6 ஏக்கர் நிலம்
வே. சண்முகநாதன், உரும்பராய்—எவர் சில்வர் குடம்
கலாநிதி க. செ. நடராசா—தஞ்சாவூர்க் குடம்
செ. குணரத்தினம், தமிழ்ச் சங்கத் தலைவர்—மணிக்கூடு, வானொலிக் கருவி

### (ஆ) படங்கள்

சேர். க. வைத்தியநாதன் படம்—இவரது மனைவி
அ. சபாரத்தினம் படம்—இவரது மனைவி
இ. இரத்தினம் படம்—இவரது மனைவி

கோ. ஆழ்வாப்பிள்ளை படம்—இவரது மனைவி
நா. மாணிக்க இடைக்காடர் படம்—இவரது மனைவி
மு. வயிரவப்பிள்ளை படம்—இவரது மகன்
சேர் ஏ. கார்டினர் படம்—இவரது மகன்
தனிநாயக அடிகளார் படம்—திருமதி புனிதம் திருச்செல்வம்
வே. அ. கந்தையா படம்—செ. மு. விக்கினராசன், கொழும்பு மாநகர சபை
புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை—இவரது பிள்ளைகள்
இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை—ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம்
அலன் ஆபிரகாம்—சி. த. பூபாலபிள்ளை, காரைநகர்
செ. மு. சகாப்தீன், ஜே.பி.—கல்கின்னத் தமிழ் மன்றம்
பொ. சங்கரப்பிள்ளை—இவரது பிள்ளைகள்
க. ச. அருணந்தி—இவரது மகள்
சிவங் கருணாலய பாண்டியனார்—இவரது பிள்ளைகள்

### (இ) பெரும் எண்ணிக்கையான நூல்களை வழங்கியவர்கள்

வே. அ. கந்தையா, சட்டவல்லுநர் (15)
பண்டிதர் ஆ. கி. நாகலிங்கம் (10)
ந. சி. கந்தையாபிள்ளை (20)
பண்டிதர் க. அருளம்பலவனார்
க. வை. சோமசுந்தரம் (110)
திருவாவடுதுறை ஆதீனம் (70)
க. பொன்னம்பலம், கீரிமலை (897)
எஸ். நாகரத்தினம், ஆசிரியர், கொழும்பு 6 (300)
சி. ஆ. கந்தையா, கொழும்பு 6 (150)
கலாநிதி க. செ. நடராசா (60)
வே. முருகேசு, கொழும்பு 6 (180)
அ. ஐ. நாடு தூதரகம் (25)
கனடா தூதரகம் (25)
த. கனகரத்தினம், கொழும்பு 6 (30)
கு. பாலசிங்கம், கொழும்பு 6 (125)
இ. ஸ்ரீஹரி, கொழும்பு 5 (75)
பிரித்தானிய தூதுவரகம் (20)
தமிழ்நாடு அரசு (5000)
இந்திய தூதுவரகம் (10)
செ. குணரத்தினம் (தலைவர், தமிழ்ச் சங்கம்) (200)
எச். டபிள்யு. தம்பையா, கியூ.சி. (150)
பொ. சங்கரப்பிள்ளை, கொழும்பு 6 (100)
திருமதி இரா. பொன்னுத்துரை (75)
இ. இரத்தினம், கொழும்பு 4 (65)
புலவர் கருணாலய பாண்டியனார் (250)
செ. வேலாயுதபிள்ளை, கொழும்பு 13 (26)
திருமதி மகாதேவி இராசையா (56)
செல்வி இராசேசுவரி இராசசிங்கம், கொழும்பு 6 (100)
எஸ். முத்துலிங்க சுவாமி, கொழும்பு 3 (500)

ஈ) அதிக அளவு நிதி உதவியவர்கள்

பொ. அரியநாயகம், கொழும்பு 3— ரூபா 25,000
தி. இராசதுரை, கொழும்பு—ரூபா 10,000
மஸ்கன்ஸ் நிறுவனம்—ரூபா 10,000
என். வைத்திலிங்கம் அன் கோ.—ரூபா 10.000
செ. குணரத்தினம், கொழும்பு 4—ரூபா 10,000
திருமதி ஞா. இரத்தினம், கொழும்பு 4—ரூபா 10,000
திருமதி சண்முகநாயகம், கொழும்பு 12—ரூபா 15,000
அ. சபாரத்தினம் அவர்களின் பிள்ளைகள்—ரூபா 10,000
பொ. சங்கரப்பிள்ளை அவர்களின் பிள்ளைகள்—ரூபா 10,000
க. மதியாபரணம் அவர்களின் பிள்ளைகள்—ரூபா 10,000

## சங்கக் கவிதைப் பரிசில் பெற்ற கவிஞர்கள்

1. அனைத்திலங்கை நாவன்மைத் தேர்வு—1957
   ஏ. எச். முகம்மது யூசுபு—காலி
   செ. இராமநாதன்—மட்டக்களப்பு
   வே. க. கந்தசாமி—யாழ்ப்பாணம்
   கு. பெனடிக்ற்—கோப்பாய்
   சி. வள்ளிநாயகி—காங்கேசன்துறை

2. அனைத்திலங்கை அறிஞர் கவிதைத் தேர்வு—1976
   நா. சண்முகநாதபிள்ளை—நயினாதீவு
   க. த. ஞானப்பிரகாசம்—அல்வாய்
   பொ. கணபதிப்பிள்ளை—பொலிகண்டி
   அக்கரைச் சத்தி—அக்கரைப்பற்று

3. கவிதைத் தேர்வு—வயது 16—24
   செல்வன் க. இராமச்சந்திரன்—இரத்தினபுரி
   செல்வன் இராசகுரு இமானுவேல் புட்பராசன்—புத்தளம்
   செல்வி க. யோகேசுவரி—சாவகச்சேரி
   செல்வி எஸ். கார்த்தியாயினி—நீர்வேலி

4. கவிதைத் தேர்வு—வயது 15—21
   செல்வி சுகந்தி சுப்பிரமணியம்—மட்டக்களப்பு
   செல்வன் கா. சிவஞானம்—தலவாக்கொல்லை
   செல்வன் த. பேரின்பம்—அக்கரைப்பற்று

5. கவிதைத் தேர்வு—21 வயதுக்கு மேல்
   சு. சி. கதிரவேலு—வவுனியா
   சி. கருணானந்தராசா—தம்பிலுவில்
   ஜனாபா எம். எம். பரீதா—காத்தான்குடி
   நா. சச்சிதானந்தன்—யாழ்ப்பாணம்

6. கவியரங்குப் பரிசில்கள்
   கவிஞர் வே. ஐயாததுரை—யாழ்ப்பாணம்
   கவிஞர் வி. விசுவலிங்கம்—மட்டக்களப்பு
   கவிஞர் க. தங்கராசா—மூதூர்
   கவிஞர் மு. கந்தப்பு—கரவெட்டி

7. கவிதை உயர்நிலைப் பரிசில்—1988

தா. சிவானந்தன்—கிண்ணியா
செ. குணரத்தினம்—மட்டக்களப்பு
டாக்டர் ஏ. யே. செரிபுதீன்—கொழும்பு

8. புத்தாண்டுக் கவிதைப் பரிசில்

த. கனகரத்தினம்—கொழும்பு

9. பாரதி பிரபந்தப் பரிசில்—1981

(1) பாரதி பிள்ளைத் தமிழ்—புலவர் க. த. ஞானப்பிரகாசம், அல்வாய்
(2) பாரதி பிள்ளைத் தமிழ்—வித்துவான் சி. ஆறுமுகம், யாழ்ப்பாணம்
(3) பாரதி அந்தாதி—புலவர் வி. விசுவலிங்கம், மட்டக்களப்பு

## சங்கப் பரிசில் பெற்ற நூல்கள்

சாவித்திரி சபதம்—புலவர் வே. கனகசபாபதி, சண்டிலிப்பாய்
காத்தவராயன் நாடகம்—கலாநிதி இ. பாலசுந்தரம், யாழ். பல்கலைக்கழகம் (1988)
தமிழ் இலக்கண இயல்புகள்—பேராசிரியர் அ. சண்முகதாஸ். யாழ். பல்கலைக்கழகம்
சாகுந்தல காவியம்—க. தி. சம்பந்தன், திருநெல்வேலி (1988)
திருக்கேதீசர மான்மியம்—பண்டிதர் மு. கந்தையா, ஏழாலை (1989)
அசீசும் தமிழும்—ஏ. எம். நகியா, கொழும்பு 4
முத்துநகை—டாக்டர் ஏ. யே. செரிபுதீன், தெகிவளை (1989)
செந்தமிழ் வளர்த்த செம்மல்கள்—க. சி. குலரத்தினம், யாழ்ப்பாணம் (1989)
சைவ சித்தாந்தமும் விஞ்ஞானமும்—திரு. தனபாக்கியம் குணபாலசிங்கம், மட்டக்களப்பு
சேரன் செங்குட்டுவன்—புலவர் வி. விசுவலிங்கம், மட்டக்களப்பு
புறப்பொருள் வெண்பாமாலை ஆராய்ச்சி—புலவர் நா. சிவபாதசுந்தரனார்
கந்த கோட்டம்—செங்கை ஆழியான், யாழ்ப்பாணம்
புத்தளம் வரலாறும் மரபுகளும்—அல்ஹாஜ் ஏ. என். எம். ஷாஜகான், புத்தளம்
நகுலேசுரர் திருவந்தாதி—இலக்கண வித்தகர் இ. நமசிவாய தேசிகர்
விபுலாநந்தர் நான் மணிமாலை—புலவர் க. சிற்றம்பலம், அளவெட்டி (1991)

## ஆய்வுக் கட்டுரைப் பரிசில்கள்

செல்வி புவனேஸ்வரி சுப்பிரமணியம், பருத்தித்துறை (திருமுறை இலக்கிய ஆய்வு)
செல்வி யசோதா விக்கினேசுவரன், மானிப்பாய் (பாரதி இலக்கிய ஆய்வு)
திருமதி கனகலட்சுமி மாசிலாமணி, நாவலப்பிட்டி (இலக்கண ஆய்வு)
ஆ. வ. க. நீலகண்டன், கொழும்பு (சட்ட இயல் ஆய்வு)
வி. புவனேசுவரன், மட்டக்களப்பு (பொருளியல் ஆய்வு)
செல்வி காத்தியாயினி நடராசா, யாழ். பல்கலைக்கழகம் (பாரதி இலக்கியம்)
திருமதி பீ. ஜே. வயலெற், மட்டக்களப்பு (சட்ட இயல்)
க. நாகேசுவரன், யாழ் பல்கலைக்கழகம் (பாரதி இலக்கியம்)
சி. சிவான்ந்தராசா, பண்ணாகம் (விபுலானந்தர் இலக்கியம்)
செல்வி வாணி நவரத்தினம், மட்டக்களப்பு (பாரதி இலக்கியம்)
திருமதி எஸ். எஸ். ஹரிதாஸ், மட்டக்களப்பு (சூழற் காப்பு)
செல்வி சர்வாம்பிகை வயிரமுத்து, தெல்லிப்பளை (சூழற் காப்பு)

# தமிழ்ச் சங்கத்தில் சிறப்புரை நிகழ்த்திய தமிழக அறிஞர்கள்

பேராசிரியர் க. வச்சிரவேலு முதலியார், 1943
வித்துவான் கோ. சுப்பிரமணியபிள்ளை, 1945, 1957
ஏ. கே. செட்டியார் (குமரிமலர் ஆசிரியர்), 1945
திருமதி காஞ்சனமாலை அம்மையார், 1946
சொ. முருகப்பா (குமரன் ஆசிரியர்), 1954
கி. மகாலிங்கம் (பகீரதன்), (கல்கி துணை ஆசிரியர்), 1956
க. பெருமாள் (சென்னை அரசினர் கலைக் கல்லூரி), 1957
எஸ். கே. இராமன் (மாயாவி), 1957
ஆர். ஸ்ரீநிவாசன் (ரசவாதி), 1957
வித்துவான் சொ. சிங்காரவேலனார், 1957
அ. ச. ஞானசம்பந்தம், 1959, 1965
வித்துவான் தி. கி. சுந்தரமூர்த்தி, 1950
ச. சிவகுமாரன் (சென்னை), 1960
பேராசிரியர் சாலை இளந்திரையன், 1962, 1974
வித்துவான் ஐயன் பெருமாள் கோனார், 1962
வித்துவான் க. வெள்ளைவரணார், 1966
வே. இராமநாதன் செட்டியார், 1968
முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதன், 1968
நுண்கலைச் செல்வன் அ. இராகவன், 1969
இரா. அரங்கசாமி, 1973
புலவர் இராசு, 1974
பேராசிரியர் சி. நயினார் முகம்மது, 1974
பேராசிரியர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், 1976
ஜனாப் ஹாபீஸ். எம். கே. செய்யது முகமது, 1979
மௌலவி அப்துல் வஹாப் (பிறை ஆசிரியர்), 1979
கலாநிதி ஆறு அழகப்பன்
கலாநிதி ஜீ. வேணுகோபால், 1982
கலாநிதி மு. அருணாசலம், 1982
பேராசிரியர் செல்வக் கணபதி

சேர். பி. டி. ராஜன், 1945, 1957
செல்வி எம். ஏ. சார்தாம்பாள், 1945
செல்வி எம். ஏ. சாரதா, 1946
நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை, 1947
சிதம்பரரகுநாதன் (சாந்தி ஆசிரியர்), 1956
குன்றக்குடி அடிகளார், 1957
ம. பொ. சிவஞானம், 1957, 1966, 1969
கே. ஆர். கல்யாணராமன் (மகரம்), 1957
சி. ஆர். பழனியாண்டி (அன்புப்பழம்), 1957
பண்டிதர் நா. பார்த்தசாரதி, 1957, 1966
அழ. வள்ளியப்பா, 1959
பன்மொழிப்புலவர் கா. அப்பாத்துரை, 1959
இளங்கீரன் (மரகதம் ஆசிரியர்), 1960
திருவாட்டி கனகசுந்தரி இளந்திரையன், 1962
வித்துவான் கி. வா. ஜெகநாதன், 1963, 1967
சி. பாலசுப்பிரமணியம், 1966
கவியோகி சுத்தானந்தர், 1968
புலவர் கா. கோவிந்தன், 1969
ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள், 1972
கலாநிதி மோசூர் வாசுகி அம்மையார், 1974
பேராசிரியர் எஸ். இராசமாணிக்கம், 1974
நீதியரசர் எம். எம். இஸ்மெயில், 1976
சோ. சிவபாதசுந்தரம், 1978
பேராசிரியர் பஜுலு முகிதீன், 1979
ஜனாப் செய்யது முகம்மது ஹசன், 1979
பேராசிரியர் வ. பெருமாள், 1981
கலாநிதி கே. என். சரசுவதி, 1982
மாண்புமிகு இரா. நெடுஞ்செழியன், 1981
பெருங்கவிஞர் வா. மு. சேதுராமன்

அரு. கோபாலன்
அல்ஹாஜ் பீ. எம். இலியாஸ் (கொங்கொங்), 1982
திரு. ஈ. வி. சிங்கம் (சிங்கப்பூர்), 1982
புலவர் ந. ர. முருகவேள், 1982
கலாநிதி சு. பாலசுந்தரம், 1983
கவிஞர் கோ. நல்லாசிரியர் இளஞ்சேரனார், 1983
சுவாமி லோகேசுவரானந்தா (கல்கத்தா), 1991
சிலம்பொலி செல்லப்பன், 1992
பி. டி. இராகவன் சுவாமிகள், 1992

கவிஞர் பார் பரா (ருசியா)
அல்ஹாஜ் செ. முகம்மது யூனூஸ் (பர்மா), 1982
திருமதி சாரதா தம்பியாரூரன், 1982
கலாநிதி தி. முருகரத்தினம், 1982
நீதிபதி எஸ். மோகன், 1983
கே. சி. சங்கர நாராயணன் (கேரளம்), 1989
கலாநிதி ஐ. ஆனந்த நடராச தீட்சிதர், 1991
திருமதி சூடாமணி சடகோபன், 1992
கவியரசர் இளந்தேவன், 1992

## இலங்கை அறிஞர்கள்

கலாநிதி க. கணபதிப்பிள்ளை, 1943, 1944, 1958
ஏ. எம். கே. குமாரசாமி, 1943
வித்துவான் ஆ. சி. நாகலிங்கம்பிள்ளை, 1944
வித்துவான் வ. மு. கனகசுந்தரம், 1944
பண்டிதர் க. சிவசம்பு, 1944
கே. எஸ். அருள்நந்தி, 1944, 1959
சோ. நடராசா, 1944, 1945
திரு. வி. செல்வநாயகம், 1944
தமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி,
வித்துவான் க. வேந்தனார், 1945
பண்டிதர் சி. சேதுகாவலர், 1956, 1957
திருமதி மகேஸ்வரி பாலகிருஷ்ணன், 1957, 1959
திருமதி மகேஸ்வர் மகாதேவா, 1957
வித்துவான் பொ. முத்துக்குமரன், 1957
பண்டிதர் க. வீரகத்தி, 1957
கலாநிதி அ. சின்னத்தம்பி, 1957, 1963
கு. வி. செல்லத்துரை, 1957, 1958, 1959, 1966
ஏ. அசீஸ், 1958
கொல்வின் ஆர். டி. சில்வா, 1958
எஸ். தொண்டமான், 1958, 1982, 1985, 1986
பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, 1958

சு. நவநீத கிருட்ண பாரதியார், 1943, 1945
ஜே. தி. சதாசிவ ஐயர், 1943
கி. இலக்குமண ஐயர், 1944, 1957, 1958, 1959, 1979, 1980
சே. க. சண்முகம்பிள்ளை, 1944
மு. கணபதிப்பிள்ளை, 1944, 1965
சோ. சிவபாதசுந்தரம், 1944
சு. நடேசபிள்ளை, 1944
பண்டிதர் கா. பொ. இரத்தினம், 1944, 1945, 1946, 1957, 1960, 1966
கலாநிதி ஆ. கந்தையா (பேராசிரியர்), 1945
செ. இராசதுரை (பா.உ.), 1956, 1959, 1965, 1969, 1981, 1982, 1983, 1985
நீ. மீ. யோ. வேதநாயகம், 1957, 1958, 1959, 1960
பண்டிதர் க. மயில்வாகனம், 1957, 1958
எஸ். எம். கமால்தீன், 1957, 1966, 1975, 1980
கே. பி. ஹரன், 1957
பண்டிதர் க. அருளம்பலம், 1957
எம். எச். மொகமட், 1958
ரி. உருத்திரா, 1958
டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்க, 1958
சு. பூரணானந்தா, 1957, 1959

செ. வேலாயுதபிள்ளை, 1958
வித்துவான் சி. சகநாதன், 1958
வித்துவான் சி. சுப்பிரமணியம், 1959
திருவாட்டி ஞானம் இரத்தினம், 1959, 1984
இ. சிவகுருநாதன் (தினகரன்), 1969, 1981, 1984, 1985, 1986
கோ. பெ. சாமி, க. இராசலிங்கம், ஈழவாணன், 1959
ஈழவேந்தன், 1959, 1960, 1962, 1965
எம். கே. எம். அபூபக்கர், 1959
செல்வி ஞானா சிவசுப்பிரமணியம், 1961, 1962
வ. ஆறுமுகம், பீ.ஏ., 1961, 1962, 1978
த. கனகரத்தினம், பீ.ஏ., 1962, 1978, 1980, 1981, 1984 1985, 1986
கலாநிதி க. செ. நடராசா, 1933, 1981
செல்வி சொரூபவதி நாதன், 1963, 1965, 1966
இரா. சிவலிங்கம், 1963, 1981, 1982
இ. முருகையன், 1963
க. சி. சண்முகம், 1964
ஆ. கந்தையா, 1964, 1966
வித்துவான் வி. சி. கந்தையா, 1964
நா. முத்தையா, 1965
க. துரைரத்தினம், 1965
சார்ல்ஸ் டி சில்வா, 1966
மு. பொன்னம்பலம், 1966
சில்லையூர் செல்வராசன், 1966, 1984
இ. சங்கர், 1966
க. நவசோதி, 1966, 1980
க. குணராசா, பீ.ஏ., 1966
நீதியரசர் வி. சிவசுப்பிரமணியம், 1968
கலாநிதி எஸ். சிவானந்தன், 1969
ஆ. செ. நடராசா, 1974
கலாநிதி சு. வித்தியானந்தன், 1964, 1975, 1984, 1986
பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளை, 1976
கலாநிதி க. சுந்தரலிங்கம், 1977

திருவாட்டி புவனேசுவரி சச்சிதானர் ·ம், 1952
அ. வி. மயில்வாகனம், 1959
க. கைலாசபதி, 1959, 1960
வித்துவான் இ. சி. சோதிநாதன், 1959, 1960, 1966
கா. சிவத்தம்பி, 1959, 1962, 1975
வித்துவான் சி. செகநாதன், 1959
அ. அமிர்தலிங்கம் (பா.உ.), 1959
பேராசிரியர் அ. சின்னத்தம்பி, 1959
கலாநிதி ஆ. சதாசிவம், 1959, 1980
திருமதி நேசமலர் வேலாயுதபிள்ளை, 1961, 1962, 1964
செல்வி ரூபராணி யோசெப், 1961
மு. சோமசுந்தரம், 1962
செல்வி மிசிகாமி, 1962
சு. ஸ்ரீபாஸ்கரன், 1963
இ. அம்பிகைபாகர், 1963, 1979, 1980
ஆ. வி. மயில்வாகனம், 1963
திருமதி மீனாட்சி பொன்னுத்துரை, 1963
செல்வி யோகா வல்லிபுரம், 1964
கலாநிதி எம். எம். உவைஸ், 1964, 1984
புலவர்மணி ஏ. பெரியதம்பிப்பிள்ளை, 1944, 1965
இ. இரத்தினம், 1965, 1979, 1980
நீதியரசர் பொ. ஸ்ரீஸ்கந்தராசா, 1965
சக்தி அ. பாலையா, 1966
அ. கைலாயநாதன், 1966
பா. சத்தியசீலன், 1966
அ. இராசையா, 1966
எஸ். பொன்னுத்துரை, 1966, 1976
மு. ஆலாலசுந்தரம், 1966
மு. சிவசிதம்பரம், பர.உ., 1968
வே. க. கந்தசாமி, 1963
கலாநிதி எச். டபிள்யு. தம்பையா, 1974, 1981, 1984, 1985
பண்டிதர் சு. வேலுப்பிள்ளை, 1975, 1980
கலாநிதி சி. பத்மநாதன், 1976,1992
கலாநிதி பொ. பூலோகசிங்கம், 1978, 1985

கு. சண்முகநாதன், 1978
நா. மகேசன், 1979
எஸ். வைத்தியலிங்கம், 1980
கலாநிதி இ. பாலசுந்தரம், 1980, 1985
காவலூரர் எஸ். செகநாதன்,
கவிஞர் வே. ஐயாத்துரை (கிண்ணியா), 1980
கவிஞர் வி. விசுவலிங்கம் (களுவாஞ்சிக்குடி), 1980
அ. பஞ்சாட்சரம், 1980, 1984, 1985
ஏ. பாஸ்கரதாஸ், 1980
ஆ. குணநாயகம், 1981, 1985
வேல் அமுதன், 1981
சி. சிவராசா, 1981
சச்சிதானந்தா ஸ்ரீகாந்தா, 1981
கலாநிதி ஜே. ரி. சேவியர், 1981
தி. மாணிக்கவாசகர் (கல்வி அதிபர்), 1981
திருமதி பத்மா சோமசுந்தரன், 1981
க. சொக்கலிங்கம், எம்.ஏ., 1982, 1984
இராகவன் பிளிப்புப்பிள்ளை, 1980
சோ. வைத்தியநாதன், 1982
ஏ. ஆர். ஏ. மன்சூர், அமைச்சர்
பீ. பீ. தேவராஜ், இராசாங்க அமைச்சர்
திரு. சீ. வி. வேலுப்பிள்ளை, 1982
மாண்புமிகு பாகீர் மார்க்கார், 1983
பேராசிரியர் ம. மு. உரைஸ், 1984
ஜனாப் எம். என். அமீன், 1984
திரு. ஆர். டி. இராசன், 1984
திரு. த. கனகரத்தினம், 1984, 1985, 1986
திரு. இ. சுந்தரலிங்கம், 1985
வித்துவான் அடைக்கமுத்து, 1985
திரு. வி. ரி. வி. தெய்வநாயகம்பிள்ளை, 1985, 1986
மாண்புமிகு டி. என். தீக்சித், 1985
திரு. ஆ. சின்னத்தம்பி, 1985
டபிள்யு. எஸ். கிருபாரத்தினம், 1985
திரு. பெ. நல்லரத்தினம், 1986

இ. க. குலசேகரம், 1979
ஜனாபா எஸ். ஏ. நுஃபாயில், 1979
ஜனாப் எஸ். எம். ரி. பைஸ்தீன், 1980
டீ. டீ. நாணயக்கார, 1980, 1981, 1984
காசி விசுவநாதன் செட்டியார், 1980
கவிஞர் க. தங்கராசா (கிண்ணியா), 1980
திருமதி செல்வநாயகி ஸ்ரீதாஸ். 1980
க. அருள் சுப்பிரமணியம் (திருமலை), 1980
வ. சிவராசசிங்கம், 1981
சோ. க. தம்பிப்பிள்ளை, 1981
க. குமாரசாமி, 1981
சபா செயராசா, 1981, 1984
நா. சுப்பிரமணிய ஐயர், 1981
த. சண்முகசுந்தரம், 1981
திரு. க. விசயன்,
எம். எஸ். ஷாஜகான், 1981, 1984
திருமதி த. நாகராசா, 1980
என். சபாரத்தினம், 1980, 1984
செல்வி ப. கந்தையா, 1959
க. தயாபரன், அமைச்சின் செயலாளர்
எம். எஸ். செல்லச்சாமி, இராசாங்க அமைச்சர்
திரு. பிரேம்ஜீ ஞானசுந்தரம், 1982, 1986
திரு. கே. ஜீ. அமரதாசா, 1984
திரு. ஆ. சிவநேசச்செல்வன், 1984
திருமதி யோகா பாலச்சந்திரன், 1984
திரு. சண். சுபாஸ் சந்திரபோஸ், 1984
ஆயர் கலாநிதி வண. தியோகுப்பிள்ளை, 1985
திரு. சு. சிவவிநாயகமூர்த்தி, 1985
திரு. பீ. எஸ். பற்றிக், 1985
திரு. நா. மாணிக்க இடைக்காடர், 1985.
திரு. க. இராசபுவனீசுவரன், 1985
திரு. அ. பஞ்சாட்சரம், 1985
கலாநிதி எஸ். இராமகிருஷ்ணன், 1986
திரு. த. நீதிராசா, 1986

திரு. வி. பாலசுப்பிரமணியம், 1986
திரு. செ. நடராசா, 1986
திரு. கோ. பத்மநாதன், 1986
பேராசிரியர் அ. சண்முகதாஸ், 1991
செல்வி சந்திரிகா சோமசுந்தரம், 1991
க. சி. குலரத்தினம், 1990
கு. சோமசுந்தரம், 1992

கலாநிதி ச. குகராசன், 1986
திருவாட்டி கிருகாம்பிகை பர்னாந்து, 1986
ஜனாப் எம். எஸ். ஏ. மஜீத், 1986
வி. ஏ. திருஞானசுந்தரம், 1991
திருமதி எஸ். திருச்சந்திரன், 1992
புலவர் நா. சிவபாதசுந்தரனார், 1992
பேராசிரியர் சி. தில்லைநாதன், 1992
அல்ஹாஜ், எஸ். எம். ஹனிபா, 1990, 1991, 1992

---

மலேசியத் திருநாட்டிலிருந்து தமிழ் நாட்டில் சங்கத்தமிழ் வளர்த்த மதுரை மாநகரில் நடைபெறும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டிற்குச் செல்லும் வழியிலே ஈழத் தமிழரைச் சந்திக்க வேண்டும் என்ற ஆசையில் இரண்டு நாட்கள் கழிக்க வந்த எங்களை வரவேற்று உபசரித்த கொழும்புத் தமிழ்ச் சங்கத்திற்கு எங்கள் வாழ்த்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

வி. எம். தேவதாஸ்
தலைவர். சிலங்கூர் மாநில இளைஞர் காங்கிரஸ்,
மலேசியா
28.12.80

தமிழ் வாழ்க. தமிழ்ச் சங்கம் வளர்க.

இலியாஸ்
தமிழ்ப் பண்பாட்டுக் கழகம், கொங்கொங்
06.02.82

அமிழ்தினும் இனியது தமிழ். தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செய்ய வளர்ப்பது எமது கடமை.

செ. முஹம்மது யூனூஸ்,
தமிழ்க் கழகம், பர்மா
29.03.1982

# சங்கத் தேர்வுகளிற் பங்குபற்றிய கல்வி நிலையங்கள்

டி. எஸ். சேனநாயக்க ம.வி. (1978)
விவேகானந்த ம.வி., கொழும்பு (1978).
இந்துக் கல்லூரி, இரத்மலானை (1978)
தெகிவளை அரசினர் தமிழ் வித்தியாலயம் (1978)
உவெஸ்லிக் கல்லூரி, கொழும்பு (1978)
சென் லோறன்ஸ் மகளிர் வித்தியாலயம், கொழும்பு (1978)
இந்துக் கல்லூரி, பம்பலப்பிட்டி (1978, 1982, 1992)
ஹமீத் ஹுசைன் ம.வி., கொழும்பு (1978)
றோயல் கல்லூரி (1978)
இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு 4
சென் பிறிட்சஸ் மகளிர் கல்லூரி, கொழும்பு
நல்லாயன் மகளிர் கல்லூரி, கொழும்பு,
புனித கிளேயர் மகளிர் கல்லூரி, கொழும்பு
சைவ மங்கையர் கழகம், கொழும்பு
சண்முகநாத வித்தியாலயம், ஊர்காவற்துறை
திருக்குடும்பக் கன்னியர் மடக் கல்லூரி, கொழும்பு 4
வின்சென்ற் மகளிர் கல்லூரி, மட்டக்களப்பு
புனித மைக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு
புனித சிசிலியா மகளிர் கல்லூரி, மட்டக்களப்பு
பட்டிருப்புத் தமிழ் வித்தியாலயம்
அலிகார் மகா வித்தியாலயம், ஏறாவூர்
விபுலாநந்த மகா வித்தியாலயம், காரைதீவு
சிவானந்த மகா வித்தியாலயம், மட்டக்களப்பு
ஆனைப்பந்தி இராம கிருட்ண மகளிர் வித்தியாலயம், மட்டக்களப்பு
வந்தாறுமூலை ம.ம.வி., வாழைச்சேனை
இந்துக் கல்லூரி, மட்டக்களப்பு
தம்பிலுவில் தமிழ் மகா வித்தியாலயம்
சண்முக வித்தியாலயம், திருகோணமலை
இந்துக் கல்லூரி, திருகோணமலை
உவர்மலைத் தமிழ் மகா வித்தியால்யம், திருகோணமலை
இந்து கனிட்ட மகா வித்தியாலயம், குருநாகல்
விவேகானந்த வித்தியாலயம், அநுராதபுரம்
பாத்திமா மகளிர் கல்லூரி, புத்தளம்
தமிழ் மகா வித்தியாலயம், நுகேகொடை
பேராதனைத் தமிழ் மகா வித்தியாலயம்
நாவலப்பிட்டி கதிரேசன் குமார மகா வித்தியாலயம்
திம்புல்ல அரசினர் தமிழ் வித்தியாலயம், பத்தனை
முத்து மாரியம்மன் தமிழ் வித்தியாலயம், நாவலப்பிட்டி
கற்றன் கைலண்ட் கல்லூரி
நல்லாயன் மகளிர் கல்லூரி, நுவரெலியா
புனித சேவியர் கல்லூரி, நுவரெலியா
இராசவெல தமிழ் மகா வித்தியாலயம், கெல்கல்ல
மாத்தளை பாக்கியம் வித்தியாசாலை
பதுளை சரசுவதி வித்தியாலயம்
மத்திய மகா வித்தியாலயம், வவுனியா
இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்
கனிட்ட தமிழ் வித்தியாலயம், கிளிநொச்சி
வித்தியானந்தக் கல்லூரி, முள்ளியவளை
இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்
மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி
இராமநாதன் மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்
வட இந்து மகளிர் கல்லூரி, கரவெட்டி
நடேசுவராக் கல்லூரி, காங்கேசன்துறை
யூனியன் கல்லூரி, தெல்லிப்பளை
இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி
காட்லிக் கல்லூரி, பருத்தித்துறை
மெதடிஸ்த மகளிர் கல்லூரி, பருத்தித்துறை
இந்துக் கல்லூரி, வட்டுக்கோட்டை
யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை
யாழ்றன் கல்லூரி, காரைநகர்
பராசத்தி வித்தியாலயம், அல்லைப்பிட்டி
தமிழ் மகா வித்தியாலயம், தலவாக்கொல்லை
முஸ்லீம் மகா வித்தியாலயம், சம்மாந்துறை
இராம கிருட்ண மிசன் ஞாயிறு பாடசாலை கொழும்பு
தமிழ் மகா வித்தியாலயம், தம்பலகாமம்
பிஷப் கல்லூரி, கொழும்பு
புனித மைக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு
புனித தோமையர் கனிட்ட கல்லூரி, கொழும்பு
புனித அன்னம்மாள் கல்லூரி, வத்தளை

## பொன் விழா ஆண்டு-பிரதேசத் தமிழ்த் தேர்வுகளுக்குப் பொறுப்பாளராக உதவியவர்கள்

(1) வட கிழக்கு மாகாண சபைக் கல்வி கலாசாரத்துறை உதவிப் பணிப்பாளர் திரு. எஸ். எதிர்மனசிங்கம்.
(2) ஆனைப்பந்தி இராமகிருட்ண மிசன் மகளிர் மகா வித்தியாலய அதிபர் திரு. வி. த. குமாரசாமி.
(3) கல்முனை இராமகிருட்ண மிசன் வித்தியாலய அதிபர் திருமதி விசயரத்தினம்.
(4) பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. வே. சண்முகரத்தினம்.
(5) வவுனியாக் கோட்டக் கல்வி அதிகாரி திரு. ச. அருளானந்தம்.
(6) இலக்கிய கலாநிதி சி. கணபதிப்பிள்ளை நூற்பதிப்புக் கழகச் செயலாளர் திரு. அ. பஞ்சாட்சரம்.
(7) தமிழ்ச் சங்கத் துணைச் செயலாளர் புலவர் த. கனகரத்தினம்.

### பிரதேசத் தேர்வு நிலையங்களாக உதவியவை

(1) திருகோணமலைச் சண்முக வித்தியாலயம்.
(2) ஆனைப்பந்தி இராம கிருட்ண மிசன் மகளிர் மகா வித்தியாலயம்.
(3) கல்முனை பாத்திமாக் கல்லூரி
(4) நாவலப்பிட்டி கதிரேசன் குமார வித்தியாலயம்.
(5) வவுனியா இந்து தமிழ் வித்தியாலயம்.
(6) யாழ் இந்துக் கல்லூரி.
(7) கொழும்புத் தமிழ்ச் சங்கம்.


---

**விண்ணுயர்க சங்கவளம்**

பண்டைத் தமிழ்த்தொண்டின் பாங்கிற் புதுமைசுடர்
வண்தொண்டு தாங்கி விழுப்பமிக—ஒண்டமிழின்
வண்மை உலகெல்லாம் வீறொளிரச் செய்தவத்தால்
விண்ணுயர்க சங்க வளம்.

**கவிஞர் பெ. தருமலிங்கம்**
பொருளாளர், கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

21.12.1992.



கொழும்புத் தமிழ்ச் சங்கம் - தலைமை அலுவலகம்

அச்சுப்பதிவு: ஸ்ரார்லைன் பிரின்றேர்ஸ், 2.3, கிராண்ட்பாஸ